2027

வரவுசெலவுத்திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க,
பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின்
49 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சு, இலங்கை

2026 நவம்பர் 12



வரவுசெலவுத்திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை - 2027

அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்,
இலங்கை

2026 நவம்பர் 12

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் வெளியிடப்பட்டது.

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தால் தொகுக்கப்பட்டு இல. 118, கலாநிதி டாக்டர் டானிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு 08 இல் அமைந்துள்ள அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு, இலங்கை, கொழும்பு 01, செயலகத்தில் அமைந்துள்ள நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்டது.

உள்ளடக்கம்

		பக்கம்
முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள்		vii
2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள்		viii
இணக்கம் – 2026		x
பகுதி I		
01. நடுத்தரகால அரசிறை மூலோபாயம்		
1.1	மேன்நோக்கு	5
1.2	பேரினப் பொருளாதார அரசிறை செயலாற்றுகை	9
1.3	நடுத்தரகால அரசிறை மூலோபாயம்	11
பகுதி II		
02. அரசிறை அபிவிருத்தி, திறைசேரித் தொழிற்பாடு மற்றும் வெளிநாட்டு நிதியிடல்		
2.1	மேன்நோக்கு	25
2.2	அரசாங்க வருமானம்	29
2.3	அரசாங்க செலவினம்	44
2.4	பொது திறைசேரியின் காசுப் பாய்ச்சல் செயலாற்றுகை	47
2.5	அரசாங்க படுகடன் முகாமைத்துவம்	49
2.6	வெளிநாட்டு நிதியளிப்பு	49
03. பொருளாதார நோக்குகள்		
3.1	மேன்நோக்கு	55
3.2	பொருளாதார வளர்ச்சி	57
3.3	நாணயத் துறை அபிவிருத்திகள்	66
3.4	பங்குச் சந்தை	69
3.5	வெளிவாரித் துறையின் அபிவிருத்திகள்	70
3.6	உலகலாவிய பொருளாதார முன்னோக்கு	74
04. அரசுடமைத் தொழில் முயற்சிகளின் செயலாற்றுகை		
4.1	மேன்நோக்கு	81
4.2	பிரதான பத்து அரசுடமை வணிகத் தொழில் முயற்சிகள் பற்றிய மீளாய்வு	81
05. 2027 வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க பயன்படுத்தப்பட்ட அடிப்படை		
5.1	மேன்நோக்கு	91
5.2	மொத்த உள்நாட்டு உற்பத்தி	91
5.3	நுகர்வோர் விலைகள்	91
5.4	வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை	91
5.5	வெளிநாட்டுத் துறை	92
5.6	நாணயத் திரட்டுக்கள்	92
5.7	வருமானம்	92
5.8	செலவினம்	92
5.9	கடன் பெறுகைகள்	93
5.10	மதிப்பீடுகளுக்கான உணர்திறன்	94

அட்டவணைகள்

பகுதி I

அட்டவணை 1.1	நடுத்தரக்கால அரசிறைச் சட்டகம் : 2026 - 2031	16

பகுதி II

அட்டவணை 2.1	அரசிறைச்செயற்பாடுகளின் சுருக்கம்	25
அட்டவணை 2.2	மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - 2026	28
அட்டவணை 2.3	அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம் - 2026	31
அட்டவணை 2.4	வருமான வரியின் செயலாற்றுகை	32
அட்டவணை 2.5	பெறுமதி சேர் வரியின் செயலாற்றுகை	32
அட்டவணை 2.6	உற்பத்தித் தீர்வை மற்றும் மதுவரியின் செயலாற்றுகை	33
அட்டவணை 2.7	மோட்டார் வாகன இறக்குமதிகள்	34
அட்டவணை 2.8	சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி/ இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பெறுமதி	35
அட்டவணை 2.9	சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம்	35
அட்டவணை 2.10	அரசாங்க வருமானத்தின் மாறுபாட்டுப் பகுப்பாய்வு	36
அட்டவணை 2.11	அரசாங்க செலவின செயலாற்றுகை	45
அட்டவணை 2.12	நலன்புரி செலவினம்	46
அட்டவணை 2.13	அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் மீதான கூற்று	48
அட்டவணை 2.14	அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு : 2025 - 2026	48
அட்டவணை 2.15	மொத்த உள்நாட்டு கடன்பெறுதல்கள் (2026 சனவரி – ஆகஸ்ட்)	49
அட்டவணை 2.16	2026 சனவரி 01 தொடக்கம் ஆகஸ்ட் 31 வரை வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்புகள்	50
அட்டவணை 3.1	நிலையான விலைகளின் அடிப்படையில் (2015) மொத்த உள்நாட்டு உற்பத்தி	57
அட்டவணை 3.2	சேவைத்துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்	63
அட்டவணை 3.3	சுற்றுலாத்துறையின் செயலாற்றுகை	65
அட்டவணை 3.4	மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறைரீதியான பகிர்வு (%)	67
அட்டவணை 3.5	நுகர்வோர் விலைப் பணவீக்கம் (அடிப்படை : 2021 = 100)	69
அட்டவணை 3.6	மூலதனச் சந்தை அசைவுகள்	70
அட்டவணை 3.7	வெளிநாட்டு வர்த்தகம்	73
அட்டவணை 3.8	உலக பொருளாதாரத்தின் பிரதான குறிகாட்டிகள் - 2026 (கணிப்பு)	77
அட்டவணை 4.1	மின் உற்பத்தி மற்றும் திறன் கட்டமைப்பு	83
அட்டவணை 4.2	அரசுடமைத் தொழில்முயற்சிகள் 52 இன் வரிக்கு முன்னரான இலாபம்	86
அட்டவணை 4.3	அரசுடமைத் தொழில்முயற்சிகளிலிருந்தான அறவீடு / பங்கிலாப வருமானம்	87

வரைபுகள்

பகுதி I

வரைபு 1.1	வட்டிக் கொடுப்பனவுகள்	7
வரைபு 1.2	முக்கிய அரசிறைத் திரட்டுகள் 2023 - 2025	11

பகுதி II

வரைபு 2.1	மொத்த வருமானத்தின் வகுதிகள் : சனவரி - ஆகஸ்ட் 2026 (%)	30
வரைபு 2.2	மூலங்கள் அடிப்படையில் வரி வருமானம் சனவரி - ஆகஸ்ட்- 2026 (%)	31
வரைபு 2.3	உற்பத்தித் தீர்வை மற்றும் மதுவரியின் செயலாற்றுகை : 2025 சனவரி - ஆகஸ்ட் 2026	33
வரைபு 2.4	அபிவிருத்திப் பங்காளர்கள் மூலமான பகிர்ந்தளிப்புகள் 2026 சனவரி - ஆகஸ்ட் (ஐ.அ.டொ. மில்லியன்)	51
வரைபு 2.5	நோக்கம் வாரியான பகிர்ந்தளிப்புகள் (2026 சனவரி - ஆகஸ்ட்) (ஐ.அ.டொ. மில்லியன்)	51
வரைபு 3.1	நெருக்கடியிலிருந்து மீண்டெழுதல் - முக்கிய குறிகாட்டிகள், 2022 மற்றும் 2025	55
வரைபு 3.2	மொ.உ.உ. வளர்ச்சி	56
வரைபு 3.3	மொ.உ.உற்பத்தி வகுதி - 2026 இன் முதல் அரையாண்டு	56
வரைபு 3.4	விவசாயத்துறை வகுதி - 2026 இன் முதல் அரையாண்டு	59
வரைபு 3.5	கைத்தொழில்த் துறை வகுதி - 2026 இன் முதல் அரையாண்டு	61
வரைபு 3.6	தயாரிப்புத் துறை வகுதி - 2026 இன் முதல் அரையாண்டு	62
வரைபு 3.7	சேவைத் துறை வகுதி - 2026 இன் முதல் அரையாண்டு	64
வரைபு 3.8	தொழிலாளர் பங்கேற்பு விகிதம் மற்றும் வேலையின்மை விகிதம்	66
வரைபு 3.9	விளைவு வீதங்கள், நாணய திரட்டுக்கள், தனியார்த்துறை கடன் வளர்ச்சி	67
வரைபு 3.10	முதன்மைப் பணவீக்கம், மைய பணவீக்கம், உணவுப் பணவீக்க அசைவுகள்	68
வரைபு 3.11	வர்த்தக மீதி மற்றும் நாணய மாற்று வீத அசைவு	70
வரைபு 3.12	ஏற்றுமதிகளின் வகுதி	72
வரைபு 3.13	இறக்குமதிகளின் வகுதி	72

கட்டங்கள்

கட்டம் 2.1	பிரதான அரசிறை நடவடிக்கைகள் ஜனவரி –செப்டெம்பர் 2026	39

இணைப்புகள்

இணைப்பு I	2026.08.31 வரையில் பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட திறைசேரி உத்தரவாதங்கள் மற்றும் உத்தரவாதக் கடிதங்கள் பற்றிய நிலுவை விபரப்பட்டியல்	95
இணைப்பு II	பேரினப் பொருளாதார குறிகாட்டிகள்	97
இணைப்பு III	வருமான மதிப்பீடுகளுக்கான அனுமானங்கள் - 2027	104

முக்கிய பொருளாதாரக் குறிகாட்டிகள்

குறிகாட்டி	காலம்	அலகு	பெறுமதி	
			2025	2026
மெய்த் துறை				
பொருளாதார வளர்ச்சி	முதல் அரையாண்டு	%	4.8	4.7
விவசாயம்	முதல் அரையாண்டு	%	0.6	-0.6
கைத்தொழில்	முதல் அரையாண்டு	%	7.9	7.2
சேவைகள்	முதல் அரையாண்டு	%	3.3	3.1
பணவீக்கம் (ஆண்டுக்காண்டு) – CCPI (2021=100)	ஒக் இறுதி	%	2.1	8.3
பணவீக்கம் (சராசரி) – CCPI (2021=100)	ஒக் இறுதி	%	-1.2	5.0
வேலையின்மை வீதம்	இரண்டாம் காலாண்டு	%	3.8	4.0
தொழிற்படைப் பங்கேற்பு வீதம்	இரண்டாம் காலாண்டு	%	49.3	50.0
அரசிறைத் துறை				
வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை	சன - ஆக	ரூபா. பில்.	-411	35
மொத்த வருமானம்	சன - ஆக	ரூபா. பில்.	3,295	3,998
வரி வருமானம்	சன - ஆக	ரூபா. பில்.	3,068	3,684
வரியல்லாத வருமானம்	சன - ஆக	ரூபா. பில்.	226	315
மொத்த செலவினம்	சன - ஆக	ரூபா. பில்.	3,712	3,967
மீண்டெழும் செலவினம்	சன - ஆக	ரூபா. பில்.	3,381	3,531
அரசாங்க முதலீடு	சன - ஆக	ரூபா. பில்.	339	446
அரசாங்க படுகடன்	யூன் இறுதி	ரூபா. பில்.	29,635	31,278
வெளிநாட்டுத் துறை				
ஏற்றுமதிகள்	சன -செப்	ஐ.அ.டொ.மில்	10,215	10,754
விவசாய ஏற்றுமதிகள்	சன -செப்	ஐ.அ.டொ.மில்	2,324	2,317
கைத்தொழில் ஏற்றுமதிகள்	சன -செப்	ஐ.அ.டொ.மில்	7,854	8,398
புடவை மற்றும் ஆடைகள்	சன -செப்	ஐ.அ.டொ.மில்	4,021	3,797
ஏனையவை	சன -செப்	ஐ.அ.டொ.மில்	3,833	4,601
இறக்குமதிகள்	சன -செப்	ஐ.அ.டொ.மில்	15,390	18,666
நுகர்வுப் பொருட்கள்	சன -செப்	ஐ.அ.டொ.மில்	3,816	4,485
இடைநிலைப் பொருட்கள்	சன -செப்	ஐ.அ.டொ.மில்	8,617	10,456
அதில் பெற்றோலிய உற்பத்திகள்	சன -செப்	ஐ.அ.டொ.மில்	2,961	4,487
முதலீட்டுப் பொருட்கள்	சன -செப்	ஐ.அ.டொ.மில்	2,956	3,725
வர்த்தக மீதி	சன -செப்	ஐ.அ.டொ.மில்	-5,174	-7,912
சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை	சன -செப்	எண்.	1,725,494	1,693,679
சுற்றுலாத்துறை சம்பாத்தியங்கள்	சன -செப்	ஐ.அ.டொ.மில்	2,473	2,245
தொழிலாளர்களின் பணவனுப்பல்கள்	சன -செப்	ஐ.அ.டொ.மில்	5,812	6,865
முதலீட்டுப் பங்குகள் (தேறிய)	யூன் இறுதி	ஐ.அ.டொ.மில்	526	450
மொத்த சென்மதி நிலுவை	சன - யூன்	ஐ.அ.டொ.மில்	522	136
மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்	ஆக இறுதி	ஐ.அ.டொ.மில்	6,178	6,929
நாணயமாற்று விகிதம் (இறுதி மாதம்)	ஒக் இறுதி	டொலர் ஒன்றிற்கான ரூபா	304.42	332.61
நாணயமாற்று விகிதம் (மாதாந்த சராசரி)	ஒக்டோபர்	டொலர் ஒன்றிற்கான ரூபா	303.13	331.42
நாணயத்துறை				
துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR)	செப் இறுதி	%	7.25	8.25
துணைநில் கடன் வசதி வீதம் (SLFR)	செப் இறுதி	%	8.25	9.25
நியதிச்சட்ட ஒதுக்க தேவைப்பாடு (SRR)	செப் இறுதி	%	2.00	2.00
வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் - வாராந்தம் (AWPR)	செப் இறுதி	%	8.10	11.04
திறைசேரி உண்டியல் விளைவு வீதம் (91 நாட்கள்)	செப் இறுதி	%	7.57	9.25
திறைசேரி உண்டியல் விளைவு வீதம் (364 நாட்கள்)	செப் இறுதி	%	8.02	9.95
நாணய வழங்கல் வளர்ச்சி (M_{2b})	ஆகஸ்ட்2025/ ஆகஸ்ட் 2026	%	10.7	11.5
தனியார துறை கடன் வளர்ச்சி	ஆகஸ்ட்2025/ ஆகஸ்ட் 2026	%	20.5	24.5

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள்

பிரிவு	தேவைப்பாடு	நோக்கம்	இணக்கம்
பிரிவு 11	நிதிச் செயல்நுணுக்கக் கூற்றினைச் சமர்ப்பித்தல்*	அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயம் பற்றிய முறையான கூற்றொன்றை பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் வழங்குதல், எதிர்வரும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்திற்கான மூலோபாய வழிகாட்டலை வழங்குதல், அரசிறைச் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையொன்றை நிறுவுதல், அரசாங்கத்தின் அரசிறை மூலோபாயத்திற்கு எதிரான செயலாற்றுகை பற்றிய பாராளுமன்ற மேற்பார்வையை வலுப்படுத்தல் மற்றும் பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 11(4) இன் பிரகாரம் அரசிறை வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் மேம்படுத்தல்.	அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் யூன் முப்பதாம் நாளன்று அல்லது அதற்கு முன்பாக நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்படும். நிதிச் செயல்நுணுக்கக் கூற்று நிதி அமைச்சரின் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும்.
பிரிவு 49	வரவு செலவுத்திட்ட பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை அறிக்கையை சமர்ப்பித்தல்*	பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 49 (2) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கம் உட்பட அரசாங்கத்தின் நிதி மற்றும் பொருளாதார நிலைமையில் பொருள் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து அரசாங்க முடிவுகள் மற்றும் அனைத்து பிற சூழ்நிலைகளையும் பற்றிய தகவல்களை வழங்குதல்.	ஒவ்வொரு ஆண்டிலும் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டுக்காக நிர்ணயிக்கப்பட்ட தினத்தன்று நிதி அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் நிதி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அறிக்கை வெளியிடப்படும்.
பிரிவு 50	மத்திய ஆண்டு அரசிறை நிலைமை அறிக்கையை சமர்ப்பித்தல்*	பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 50 (2) இன் கீழ் குறிப்பிடப்பட்ட உள்ளடக்கம் உட்பட அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதன் அரசிறை மூலோபாயத்திற்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படையை பொதுமக்களுக்கு வழங்குதல்.	நிதி அமைச்சின் இணையத்தளத்தில், உரிய ஆண்டின் ஒக்டோபர் மாதத்தின் கடைசி நாளுக்குள் அல்லது உரிய ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்ட திகதியிலிருந்து பத்து மாதங்கள் கழிந்தால், இவற்றில் எது பிந்தியதோ அத்தினத்தில் வெளியிடப்படுதல் வேண்டும் அத்துடன் அவ்வாறான அறிக்கையொன்று வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் அல்லது அறிக்கை வெளியிடப்பட்ட திகதியில் பாராளுமன்றம் அமர்வில் இடம்பெறாவிடின், அத்தகைய அறிக்கையினை பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வின் இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கச் செய்தல்.
பிரிவு 51	இறுதி வரவு செலவுத் திட்ட நிலை அறிக்கையை சமர்ப்பித்தல் (வருடாந்த அறிக்கை)	பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 51 (2) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கம் உட்பட தொடர்புடைய நிதியாண்டிற்கான அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்கத்தின் வருடாந்த அரசிறை செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கு பொதுமக்களுக்கு ஒரு அடிப்படையை வழங்குதல்.	நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்கு மிகாமல் நிதி அமைச்சரின் அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டும் மற்றும் அத்தகைய வெளியீட்டுத் திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

பிரிவு	தேவைப்பாடு	நோக்கம்	இணக்கம்
பிரிவு 52	தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலை அறிக்கை சமர்ப்பிப்பு **	பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் பிரிவு 52(2) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கம் உட்பட நாட்டின் அரசிறை நிலைமை பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குதல்.	பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக பொதுத் தேர்தலொன்றை நடத்துமாறு கோரும் பிரகடனம் அல்லது கட்டளை வெளியிடப்பட்ட மூன்று வாரங்களுக்குள் பொதுமக்களுக்கு வெளியிடப்படுதல் புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின் இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டது. நிதியமைச்சர், திறைசேரியின் செயலாளருக்கு அறிக்கையைத் தயாரிப்பதற்கு இயலச்செய்யும் நோக்கத்துக்காக, பொருள்சார் நிதிசார் அல்லது பொருளாதாரத் தாக்கங்களைக் கொண்ட, அல்லது கொண்டிருக்கக்கூடிய அல்லது கொண்டிருக்கக்கூடிய அவரது அறிவுக்குட்பட்ட அனைத்து அரசாங்கத் தீர்மானங்கள் மற்றும் பிற சூழ்நிலைகள் பற்றிய விபரங்களை செயலாளருக்கு வெளிப்படுத்துதல் வேண்டும்.
பிரிவு 53	நிதி அமைச்சரின் அமைச்சின் நிதி செயலாற்றுகை மீதான அறிக்கைகளை சமர்ப்பித்தல்*	அரசின் வருமானம் மற்றும் செலவினங்கள் உள்ளிட்ட நிதி செயல்பாடு குறித்த அறிக்கை அளித்தல்.	ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்ததன் பின்னர் நாற்பத்தைந்து நாட்களுக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுவதுடன் ஒரே நேரத்தில் நிதி அமைச்சரின் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்பட வேண்டும்.

* நிதி அமைச்சரால்
** திறைசேரியின் செயலாளரால்

இணக்கம் - 2026

- **இறுதி வரவு செலவுத்திட்ட நிலை அறிக்கை - 2025**

  2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 51(1) பிரிவின் கீழ் இறுதி வரவு செலவுத்திட்ட நிலை அறிக்கை நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையின் ஒரு பகுதியாக 2026 யூன் 30 அன்று நிதி அமைச்சரினால் பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டது.

- **நிதி செயல் நுணுக்கக் கூற்று – 2027**

  2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 11 (3) ஆம் பிரிவின் படி, நிதி செயல் நுணுக்கக் கூற்று 2026 ஜூன் மாதம் 26 ஆம் திகதியன்று நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. நிதி செயல் நுணுக்கக் கூற்றானது நிதியமைச்சரின் அறிவிப்பைத் தொடர்ந்து நிதி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் 2026 ஜூன் மாதம் 26 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது.

- **மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை- 2026**

  2026 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான அரசிறை மற்றும் பொருளாதார நிலைமையானது 2026 ஒக்டோபர் 31 ஆம் திகதியன்று பொது மக்களுக்கு வெளியிடப்பட்டதுடன் 2026 நவம்பர் 12 ஆம் திகதியன்று பாராளுமற்றத்தில் சமர்ப்பபிக்கப்பட்டது.

- **வரவு செலவுத் திட்டம், பொருளாதார மற்றும் நிதி நிலைமை அறிக்கை – 2027**

  இந்த அறிக்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைகள், வேலைவாய்ப்பு, மற்றும் வேலையின்மை, சென்மதி நிலுவை, வருமானம் மற்றும் செலவு மற்றும் அரசாங்க கடன், மேற்குறிப்பிட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட அடிப்படை, மேற்கூறப்பட்ட மதிப்பீடுகளின் உணர்திறன் தொடர்பான அறிக்கை மற்றும் அத்தகைய மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் பொருளாதார அல்லது பிற அடிப்படையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் ஏனைய தகவல்களுக்கிடையில், அரசிறை நிலைமையின் மீது பொருண்மிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இடர்நேர்வுகள் என்பவற்றை நடைமுறைக்கு சாத்தியமான அளவுக்கு அளவிடப்பட்ட ஒரு கூற்று என்பவற்றை உள்ளடக்கியுள்ள இவ் அறிக்கை 2026 நவம்பர் மாதம் 12 ஆம் தினத்தன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது

வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை – 2027

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. பகுதி I, 2024 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் (20)(2)(இ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நடுத்தர கால அரசிறை மூலோபாய அறிக்கையை வழங்குகிறது. பகுதி II ஆனது 2024 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 49 (2) ஆம் பிரிவின் கிழ் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளடக்கம் உட்பட அரசாங்கத்தின் அரசிறை மற்றும் பொருளாதார நிலையில் பொருள்சார் தாக்கத்தை ஏற்படுத்தக்ககூடிய அனைத்து அரசாங்க முடிவுகள் மற்றும் பிற சூழ்நிலைகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது.

பகுதி I

01 நடுத்தரகால அரசிறை மூலோபாயம்

1.1 மேன்நோக்கு

பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மையினை மீட்டமைப்பதற்கும், அரச நிதிகளை வலுப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கையினை மீளுருவாக்குவதற்குமான தொடர்ச்சியான கொள்கை மறுசீராக்கல்களைப் பிரதிபலித்தவாறு ஒரு வலுவான பேரண்டப்பொருளாதார மற்றும் அரசிறை அத்திவாரத்துடனேயே இலங்கை 2026 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைத்தது. டித்வா சூறாவளியின் தாக்கம் மற்றும் மத்திய கிழக்கில் உச்சமடைந்த பூகோள அரசியல் பதட்டங்கள் உள்ளிட்ட தொடர்ச்சியான உள்நாட்டு அதிர்ச்சிகளும் வெளிநாட்டு அதிர்ச்சிகளும் நிலவிய போதிலும் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது.

2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் போது உண்மையான மொத்தத் உற்பத்தி ஆண்டுக்காண்டு அடிப்படையில் 4.2 சதவிகிதத்தினால் வளர்ச்சியடைந்து, தொடர்ச்சியாகப் பன்னிரெண்டு காலாண்டுகள் நேர்மறையான வளர்ச்சியினைக் குறித்துநின்றது. மேலும், 2026 ஜூலை 01 முதல் செயலூக்கம் பெறும் வகையில் இலங்கையினை மேல் நடுத்தர வருமானம் பெறும் நாடாக உலக வங்கி மீள்வகைப்படுத்தியுள்ளது. அண்மைக்கால உயர் மீழிறன் குறிகாட்டிகள் பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு விரிவாக்கத்தை தொடச்சியாகச் சுட்டிக் காட்டின. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியினால் அளக்கப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் ஆண்டுக்காண்டு 2026 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் 8.3 சதவிகிதமாகக் காணப்பட்டது.

சீன மக்கள் வங்கியுடனான நாணய இடமாற்று வசதி உள்ளிட்ட மொத்த அலுவல்சார் ஒதுக்கங்கள் 2026 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத முடிவில் சுமார் 6.9 பில்லியன் ஐ.அ.டொலர்களாக அதிகரித்ததுடன் இது மேற்பட்ட 3 மாதங்களுக்கும் மேல் பிற இறக்குமதிகளுக்குச் சமமாகக் காணப்பட்டது. இதற்கு மத்திய வங்கியின் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான தேறிய வெளிநாட்டு அந்நியச் செலாவணிப் பரிமாற்றக் கொள்வனவுகளால் ஆதாரமளிக்கப்பட்டது.

2025 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களின் போது நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட 1,853.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மிகையுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் நடைமுறைக் கணக்கானது 420.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் திரட்டிய பற்றாக்குறையினைப் பதிவுசெய்து, தீவிரமடைந்த மத்திய கிழக்கு மோதலின் மத்தியில் அதிகரித்த வெளிநாட்டுத் துறை அழுத்தங்களையே பிரதிபலிக்கின்றது. வணிகப் பொருள் பற்றாக்குறை 5.2 பில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து 7.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்தது 2025 உடன் ஒப்பிடுகையில் திரட்டிய எரிபொருள் செலவினம் 51.5 சதவிகிதத்தினால் சுமார் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்து வருடாந்த எரிபொருள் செலவினத்தை முதல் எட்டு மாதங்களில் தாண்டியது. சுற்றுலாத் துறையில் இருந்து ஈட்டிய வருமானம் ஆண்டுக்காண்டு 9.2 சதவிகிதத்தினால் குறைவடைந்து 2.2 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. இது, மத்திய கிழக்கு மோதல்களுடன் இணைந்த இடையூறுகளுடனும் சராசரிச் சுற்றுலாப் பயணி ஒருவரின் செலவினத்தின் குறைக்கப்பட்ட மதிப்பீட்டுடனும் தொடர்புடையதாகும். எவ்வாறாயினும், 2026 முதல் ஒன்பது மாதங்களில் தொழிலாளர்களின் பண அனுப்பல்கள் ஒரு முக்கியமான ஈடுசெய்யும் உட்பாய்ச்சலை வழங்கியதுடன் ஆண்டுக்காண்டு அடிப்படையில் 18.1 சதவீதத்தினால் அதிகரித்து 6.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது.

2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசிறைச் செயலாற்றுகையானது தொடர்ந்தும் வலுவாகக் காணப்பட்டதுடன் இது நிலையான வருமானத் திரட்டல் மற்றும் செலவுக் கட்டுப்பாடு என்பவற்றினைப் பிரதிபலிக்கின்றது. வரிக் கொள்கை மற்றும் வருமான நிர்வாகம் என்பவற்றில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மறுசீராக்கல்கள் வருமானத்தினை நெருக்கடிக்கு முன்னரான (2015–2019) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரியான 12.6 சதவிகிதத்திற்கு மேலே உயர்த்தியுள்ளன. மானியங்கள் உள்ளிட்ட மொத்த அரசாங்க வருமானம் 2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 16.6 சதவிகிதத்தினை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முதன்மை மிகையானது 2.1 சதவிகிதம் எனும் முன்னைய எதிர்வுகூறலில் இருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.6 சதவிகிதமாக உயரும் என எதிர்வுகூறப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத முடிவில் 1220 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட திறைசேரிக் காசுப் பாய்ச்சல் இயக்கங்களின் இறுதிக் காசு மீதியுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத முடிவில் முடிவுக் காசு மீதி 1,131 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மேலும், 2022 ஆம் ஆண்டு 79.1 சதவிகிதமாகக் காணப்பட்ட மொத்த வருமானத்தின் ஒரு பங்காக வட்டிக் கொடுப்பனவுகள் 2025 ஆம் ஆண்டு 45.9 சதவிகிதமாகக் கணிசமாக வீழ்ச்சியடைந்து 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 40.2 சதவிகிதமாகக் காணப்பட்டது.

2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இருந்து மத்திய கிழக்கு மோதல்களால் ஏற்பட்டு வரும் தீவிர இயக்க அழுத்தங்களையும் நிதி அழுத் தங்களையும் தாண்டி, அரசுக்குச் சொந்தமான பிரதான தொழில்முயற்சிகளின் நிதிச் செயலாற்றுகை தொடர்ந்தும் பரந்த மீண்டெழுந்தன்மையுடையவையாகக் காணப்பட்டதுடன், தொடர்ச்சியான ஆளுகை மற்றும் இயக்க மறுசீராக்கல்கள் இதற்கு ஆதாரமாக அமைந்துள்ளன. அரசுக்குச் சொந்தமான 51 பிரதான தொழில்முயற்சிகள் 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 366.9 பில்லியன் ரூபாவினை வரிக்கு முன்னரான மொத்த இலாபமாக அறிக்கையிட்டுள்ளதுடன் 2025 இன் இதே காலப்பகுதியில் 307.5 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது. எவ்வாறாயினும், உயர் சக்தி மற்றும் உள்ளீட்டுச் செலவுகள், வர்த்தகம் மற்றும் போக்குவரத்து என்பவற்றில் ஏற்பட்ட இடையூறுகள், மற்றும் அதிகரித்த நிச்சயமின்மைகள் என்பன அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் பலவற்றின் நிதி நிலைமைகளில் புதுப்பிக்கப்பட்ட அழுத்தங்களை ஏற்படுத்தியது.

பேரண்டப்பொருளாதார நிலைமைகள் மற்றும் அரசிறை நிலைமைகள் என்பவற்றில் ஏற்படுத்தப்பட்ட முன்னேற்றங்கள் அண்மைக்காலத் இறைமைத் தரமிடல் மாற்றங்களில் பிரதிபலித்துள்ளன. 2026 செப்டெம்பர் 22 அன்று, பிட்ச் தரமிடலானது, பிட்ச் ரேட்டிங் நிறுவனம் இலங்கையின் நீண்ட கால நிலையான வழங்குனர் தவணை தரவிடல்களை ஒரு உறுதியான தோற்றப்பாட்டுடன், 'CCC+' இல் இருந்து 'B-'ஆகத் தரமுயர்த்தி, பேரண்டப்பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் கட்டமைப்புரீதியான மறுசீராக்கல்கள் என்பவற்றில் முன்னேற்றத்தினையும் அரசிறை மற்றும் வெளிநாட்டுத்துறை மீதிகளில் முன்னேற்றங்களையும் அந்நியச் செலாவணி ஒதுக்கங்களை மீள உருவாக்குவதையும் மேற்கோளாகக் காட்டியுள்ளது.


சர்வதேச நிதி நிறுவனங்களிள் முதலீட்டாளர் உறவுகள் மற்றும் கடன் வெளிப்படைத்தன்மை நிறுவகத்தின் மதிப்பீட்டின்படி, வளர்ந்துவரும் சந்தை மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் 57 பொருளாதாரங்களுள், முதலீட்டாளர் உறவுகளில் வருடாந்த அடிப்படையில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் அடிப்படையில் இலங்கை நான்காவது இடத்தையும், கடன் வெளிப்படைத்தன்மையில் அதிகூடிய முன்னேற்றத்தைப் பதிவு செய்த நாடுகளுள் ஐந்தாவது இடத்தையும் பெற்றுள்ளது. இம்முன்னேற்றங்கள் கடன் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதிலும் முதலீட்டாளர்களுடனான தொடர்புகளை வலுப்படுத்துவதிலும் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கின்றன.

எவ்வாறாயினும், பேரண்டப் பொருளாதார ஸ்திரத் தன்மையினையும் அரசிறை மீண்டெழுந்தன்மையினையும் நாட்டின் ஒட்டுமொத்தப் வெளிநாட்டுத்துறை நிலையினையும் வலுப்படுத்துவதில் எட்டியுள்ள முன்னேற்றம் டித்வா சூறாவளியைத் தொடர்ந்து சோதனைக்குள்ளாகி வருகின்றது. அனர்த்தத்திற்குப் பின்னரான தேவைகள் பற்றிய மதிப்பீடானது, மொத்த மீளல் மற்றும் புனரமைப்புக்கான தேவைகளுக்காக மூன்று வருட காலப்பகுதியில் சுமார் 1,022.5 பில்லியன் ரூபா தேவைப்படும் என மதிப்பிட்டுள்ளது. உடனடி மீளல் மற்றும் புனரமைப்புத் தேவைப்பாடுகளுக்கான பதிற்செயற்பாடாக, சேதமடைந்த உட்கட்டமைப்புக்களையும் வீடமைப்புக்களையும் மீளக்கட்டியெழுப்புவதற்கும் வாழ்வாதாரங்கள் மற்றும் ஏனைய அவசர அனர்த்தத்திற்குப் பின்னரான தேவைகளின் மீளலுக்கு உதவுவதற்கும் 2026 ஆம் ஆண்டுக்கான 500 பில்லியன் ரூபா குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தினை பாராளுமன்றம் அங்கீகரித்துள்ளது. கணிசமான புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாணச் செலவினம் 2027 ஆம் ஆண்டுக்குள் தொடரும் என்பதுடன் இது அரசிறைச் சட்டகத்திற்கு ஒரு முக்கியமான சவாலை வழங்கி அரசிறைக் கட்டுப்பாடு மற்றும் இடைக்கால அரசிறை நிலைபேறானதன்மை என்பவற்றினைப் பாதுகாப்பதுடன் அத்தியாவசிய மீளல் தேவைகளை அரசாங்கம் சமனிலைப்படுத்துவதைத் தேவைப்படுத்துகின்றது. தற்போதைய மதிப்பீடுகள் 2027 ஆம் ஆண்டில் சுமார் 260 பில்லியன் ரூபா மேலதிக செலவினத் தேவைப்பாட்டினைச் சுட்டிக்காட்டுகின்றன.

2027 ஆம் ஆண்டினுள் புனரமைப்புத் தொடர்வது முன்பு மதிப்பிடப்பட்ட செலவினப் பாதைக்கு ஒரு தற்காலிக சீராக்கலைத் தேவைப்படுத்தும். 2027 ஆம் ஆண்டின் அரசிறை மூலோபாயக் கூற்று மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 12.9 சதவிகித முதன்மைச் செலவினத்தினை மதிப்பிட்ட அதேவேளை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13 சதவிகிதம் எனும் நியதிச்சட்ட எல்லையினுள், ஏனைய முன்னுரிமை முதலீடுகளை மோசமாகப் பாதிக்காமல், செலவின மீள்முன்னுரிமைப்படுத்தல் மூலம் மேலதிக புனர்நிர்மாணத் தேவைப்பாடுகளுக்குப் பூரணமாக இடமளிக்க முடியாது. இதன்பிரகாரம், திருத்தப்பட்ட இடைக்கால அரசிறைச் சட்டகத்தின் கீழ் (MTFF), முதன்மைச் செலவினம் 2027 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13.6 சதவிகிதத்திற்குத் தற்காலிகமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, மூலதனச் செலவினமும் நிகரக் கடன் வழங்கலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.4 சதவிகிதத்தில் இருந்து 5.1 சதவிகிதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முதன்மைச் செலவின எல்லையில் இருந்து தற்காலிகமாக விலகுவது விதிவிலக்கான சூழ்நிலைகளுக்கு ஏற்புடையதான பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிவர்த்திக்கப்படும் என்பதுடன் இதனுடன் சேர்த்து நியதிச்சட்ட எல்லையுடன் இயைபுறுவதை மீளுருவாக்குவதற்கான தெளிவான ஒரு பாதையும் இருக்கும்.

பகிரங்க முதலீட்டின் தரம், மீண்டெழுந்தன்மை, மற்றும் வினைத்திறன் என்பவற்றில் புனர்நிர்மாண நிகழ்ச்சித்திட்டம் குறிப்பிட்ட வலியுறுத்தலை மேற்கொள்ளும். அவசரத்தன்மை, கருத்திட்டத் தயார்நிலை, அமுல்படுத்தல் ஆற்றல் மற்றும் பொருளாதார மற்றும் சமூக முக்கியத்துவம் என்பவற்றின் அடிப்படையில் செலவினம் முன்னுரிமைப்படுத்தப்படும் அதேவேளை, மீளுருவாக்கப்பட்ட பகிரங்கச் சொத்துக்களும் சமுதாயங்களும் எதிர்கால அனர்த்தங்களுக்கு எதிராகக் கொண்டுள்ள மீண்டெழுந்தன்மையினை வலுப்படுத்துவதற்காக, தொழில்நுட்ப ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பொருத்தமானவிடத்து, மிகச் சிறந்த முறையில் மீளக் கட்டியெழுப்பல் கோட்பாடுகள் ஒருங்கிணைக்கப்படும். வலுவான செலவினக் கட்டுப்பாடுகள், வெளிப்படைத்தன்மையுடைய கொள்வனவுச் செயன்முறைகள் கடப்பாடுகளின், காசு விடுவிப்புக்களின் மற்றும் உண்மையான செலவினத்தின் கிரமமான கண்காணிப்பு என்பன செயற்திறன்மிக்க அமுல்படுத்தலுக்கு உதவும். டித்வா சூறாவளியுடன் தொடர்புடைய செலவினமானது, தொடர்ந்தும் தற்காலிகமானதாகவும் இலக்கு வைக்கப்பட்டதாகவும் மேலதிகமானதாகவும் இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தவும் தற்காலிக அனர்த்தத்துடன் தொடர்புடைய மீண்டெழும் செலவினம் நிரந்தர அரசிறைக் கடப்பாடுகளை உருவாக்குவதைத் தடுப்பதற்கும் அது வேறாக அடையாளம் காணப்பட்டு அறிக்கையிடப்படும்.

வரைபு 1.1 | வட்டிக் கொடுப்பனவுகள்
மொத்த வருமானத்தின் % ஆக



மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

டித்வா சூறாவளி நாட்டில் ஏற்படுத்திய தாக்கங்களுடன் சேர்த்து, மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் சக்தி விலைகளிலும் இறக்குமதிச் செலவுகளிலும் சுற்றுலாத் துறையிலும் வெளிநாட்டுத் துறைகளிலும் பாதிப்புறுநிலையிலுள்ள குடும்பங்களிலும் ஏற்படுத்தியுள்ள விளைவின் மூலம் அவை பேரினப் பொருளாதாரம் மற்றும் அரசிறை இடர் என்பவற்றின் முக்கியமான மூலமாகத் தொடர்ந்திருக்கின்றன. சக்தி விலைகளில் ஏற்பட்டுள்ள சடுதியான அதிகரிப்புக்கும் அதனால் குடும்பங்களின் வருமானங்களிலும் உற்பத்தித் துறைகளிலும் ஏற்பட்டுள்ள அழுத்தங்களுக்குமான பதிற்செயற்பாடாக, ஆரம்பத்தில் 100 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்ட ஒரு தற்காலிக நிவாரணப் பொதியினை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. 106 பில்லியன் ரூபா மொத்தச் செலவினத்துடன் இப்பொதியானது 2026 செப்டெம்பரில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. மோதல்கள் மேலும் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, 2026 ஒக்டோபர் - டிசம்பர் காலப்பகுதியில் மேலதிக எரிபொருள் மானியத்தினை வழங்கி 41 பில்லியன் ரூபா பெறுமதியான ஒரு புதிய பொதி 2026 ஒக்டோபரில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த இடையீடுகள் புற அதிர்ச்சிகளின் உடனடித் தாக்கங்களைக் குறைப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள அதேவேளை வாழ்க்கைச் செலவுகளிலும் பொருளாதார நடவடிக்கைகளிலும் பரந்த அளவிலான இரண்டாம் சுற்று விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இடைக் காலத்தின் போது, அரசாங்கம் செலவுப் பிரதிபலிப்புச் சக்தி விலையிடலைப் பாதுகாத்து அதன் மூலம், உயர் அரசிறைச் செலவுகளை உருவாக்கக்கூடிய, அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் நிதி நிலையினைப் பலவீனப்படுத்தக்கூடிய மற்றும் புனர்நிர்மாணம் மற்றும் ஆக்கத்திறன் மிக்க பகிரங்க முதலீடு என்பவற்றுக்குத் தேவைப்படும் வளங்களை வெளித்தாக்கக் கூடிய அதீத கேள்வியினை உருவாக்கக்கூடிய நீடித்த பரந்த அடிப்படையிலான மானியங்களைத் தவிர்க்கும்.

காலநிலை மற்றும் வானிலை தொடர்பான இடர்களும் பேரினப் பொருளாதார மற்றும் அரசிறைத் தோற்றப்பாட்டின் நிச்சயமற்றதன்மைக்கான முக்கியமான மூலமாகத் தொடர்ந்து காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது நிலவுகின்றதும் 2027 ஆம் ஆண்டில் முற்பகுதிவரை தொடர்ந்தும் தீவிரமாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதுமான எல்நினோ நிகழ்வு அசாதாரணமான மழைவீழ்ச்சிப் பாங்குகளுக்கும் விவசாய உற்பத்தியில் இடையூறுகளுக்கும் நீர் கிடைக்கின்றமையில் இடையூறுகளுக்கும் புதிய உணவு விலை அழுத்தங்களுக்கும் பங்களிக்கும். இவ்வாறான மாற்றங்கள் பொருளாதாரச் செயற்பாடுகளிலும் அரசாங்க வருமானத்திலும் கொண்டுள்ள தாக்கத்தின் மூலமாகவும் அனர்த்த பதிற்செயற்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் ஏனைய இலக்குவைக்கப்பட்ட இடையீடுகள் என்பவற்றுக்கு ஏற்படக்கூடிய மேலதிக தேவைப்பாடுகள் மூலமாகவும் பரந்த அரசிறைத் தாக்கங்களைக் கொண்டிருக்கலாம். போதுமான அரசிறைப் பாதுகாப்புக்களையும் எதிர்பாரா நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளையும் பேணுவதன், அனர்த்த இடர்க் கண்காணிப்பு மற்றும் தயார்நிலையினை வலுப்படுத்துவதன், காலநிலை மீண்டெழுந்தன்மையினைப் பகிரங்க முதலீட்டிலும் இடைக் கால அரசிறைத் திட்டமிடலிலும் ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தினை இந்த இடர்கள் வலியுறுத்துகின்றன.

விதிவிலக்கான செலவினத் தேவைப்பாடுகளைத் தாண்டி, அரசாங்கம் வருமான அடிப்படையிலான அரசிறைத் திடப்படுத்தலைத் தொடர்ந்து முன்னெடுக்கும். திருத்தப்பட்ட மீளல் பாதையின் கீழ், 2027 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 15.8 சதவிகிதமாகவும் அதன் பின்னர் அது 16.0 சதவிகிதமாகவும் காணப்படும் என எதிர்வுகூறப்படுகின்றது. முதன்மை மிகையினைப் பேணி, சரிவடைந்து வரும் கடன் பாதையினைப் பேணும் அதேவேளை, தற்காலிகப் புனர்நிர்மாணச் செலவினத்துக்கு இடமளிப்பதற்குத் தொடர்ச்சியான வருமானத் திரட்டல் அத்தியாவசியமானதாகும். ஒரு தடவையில் மேற்கொள்ளப்படும் செலவினத்துக்கு நிதியளிப்பதற்காகத் தற்காலிகமான வரிகளை அல்லது பொருளாதாரச் சீர்குலைவை ஏற்படுத்தும் வரிகளைச் சார்ந்திருப்பதை விட, வருமான முறைமையின் நீண்ட கால உறுதித் தன்மை, வினைத்திறன் மற்றும் நியாயமானதன்மையினை வலுப்படுத்துவதற்காக நடுத்தர கால வருமான மூலோபாய அறிமுகப்படுத்தப்படும். முன்னுரிமை மறுசீராக்கல்கள்

முன்னுரிமை மறு சீராக்கல்கள் பிரதானமாக வரி நிர்வாகத்தில் கவனம் குவிக்கும் என்பதுடன் இவை இடைக் காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.0 சதவிகித மேலதிக வருமானத்தினை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வரித் தளம் மற்றும் வரி வலையினை மேலும் விரிவாக்குவதையும் இடர் அடிப்படையிலான கணக்காய்வு மற்றும் இயைபுறல் முகாமைத்துவத்தினை வலுப்படுத்துவதையும், வரி நிர்வாகத்தின் டிஜிட்டல்மயமாக்கத்தினைத் துரிதப்படுத்துவதையும், வரி நிர்வாக முகாமைத்துவத் தகவல் முறைமையினை (RAMIS) மேம்படுத்துவதையும், இலத்திரனியல் விலைப்பட்டியல் தயாரிப்பினை அமுல்படுத்துவதையும் வரி ஏய்ப்பு மற்றும் வருமானக் கசிவுகளைக் குறைப்பதற்கான மேலதிக நடவடிக்கைகளையும் பிரதான நடவடிக்கைகள் உள்ளடக்குகின்றன.

திருத்தப்பட்ட அரசிறைச் சட்டகமானது, விதிவிலக்கான புனர்நிர்மாண நிகழ்ச்சித்திட்டத்தினைத் தாண்டி, ஒரு வலுவான முதன்மை மீதியினைப் பேணும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நடப்பு மீளல் பாதையின் கீழ், முதன்மை மிகையானது 2027 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 2.3 சதவிகிதமாக இருக்கும் என எதிர்வுகூறப்படுகின்றது. விதிவிலக்கான டித்வா சூறாவளியுடன் தொடர்புடைய செலவினங்கள் சரிவடையும் போது, முதன்மைச் செலவினம் 2028 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 12.9 சதவிகிதத்திற்குத் திரும்பும் எனவும் நியதிச்சட்ட முதன்மைச் செலவின எல்லையுடனான இயைபுறல் மீளுருவாக்கப்படும் எனவும் எதிர்வுகூறப்படும் அதேவேளை, முதன்மை மிகையானது இடைக்காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 3.0 சதவிகிதமாக வலுவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2028 ஆம் ஆண்டு முதல், முதன்மைச் செலவினமானது நியதிச்சட்ட எல்லையினுள் தொடர்ந்திருக்கும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, வருமானத் திரட்டல், முதன்மை மிகைக் குறிக்கோள்கள் மற்றும் தொடர்ச்சியான கடன் குறைப்பு என்பன இடைக் கால அரசிறைச் சட்டகத்திற்கு வழிகாட்டும்.

சமூகப் பாதுகாப்பு, இடைக் கால அரசிறை மூலோபாயத்தின் ஓர் இன்றியமையாத பாகத்தினைத் தொடர்ச்சியாக உருவாக்கும். அரசிறையின் நிலைபேறான தன்மையும் செயற்திறன் மிக்க சமூகப் பாதுகாப்பும் பரஸ்பரம் வலுப்படுத்துபவை என்பதைப் பொருளாதார நெருக்கடியின் அனுபவங்களும் டித்வா சூறாவளியின் அனுபவங்களும் மத்திய கிழக்கு நெருக்கடிகளும் எடுத்து விளக்குகின்றன. விதிவிலக்கான அதிர்ச்சிகள் ஏற்படுகையில் பாதிப்புறுநிலையிலுள்ள குடும்பங்களுக்கு உதவுவதற்கான ஆற்றலை வலுவான அரசிறைப் பாதுகாப்புக்கள் அரசாங்கத்திற்கு வழங்கும் அதேவேளை, நன்கு இலக்குவைக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பானது, செலவுமிக்கதும் அனைவருக்கும் வழங்கப்படுவதற்காக முறையாக இலக்குவைக்கப்படாததுமான மானியங்களில் தஞ்சமடையாமல் உதவிகள் வழங்கப்படுவதை இயலுமாக்குகின்றது. எனவே, பயனாளர் அடையாளப்படுத்தலிலும் இலக்குவைப்பதிலும் விநியோக முறைமைகளிலும் ஏற்படுத்தப்படும் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் தொடர்ந்தும் முக்கியமானவையாக இருக்கும்.

அரசாங்கம் அரசிறை இடர்களின் முகாமைத்துவத்தினை முன்னேற்றும் அதேவேளை, அரச துறையின் வினைத்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் வகைப்பொறுப்பு என்பவற்றினை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மறுசீராக்கல்களைத் தொடர்ந்து முன்னெடுக்கும். பிரதான முன்னுரிமைகளுள், அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் ஆளுகை மற்றும் நிதிச் செயலாற்றுகையினை வலுப்படுத்தல், அரச சொத்துக்களின் முகாமைத்துவம் மற்றும் பயன்பாட்டினை மேம்படுத்தல், தனியார் துறை நிபுணத்துவத்தினைத் திரட்டுவதற்காகவும் முன்னுரிமை அபிவிருத்தி முன்னெடுப்புக்களுக்கு நிதியளிப்பதற்காகவும் அரச – தனியார் பங்காண்மைகளுக்கான (PPPs) ஒரு வலுவான சட்டகத்தினை நிலைநாட்டல் என்பன உள்ளடங்குகின்றன. உத்தேச அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் சட்டமூலம், அரச சொத்து முகாமைத்துவச் சட்டமூலம் மற்றும் அரச – தனியார் பங்காண்மைச் சட்டமூலம் என்பன இந்த மறுசீராக்கல்களுக்கு ஆதாரமாக அமையும். இவற்றுக்குச் சமாந்தரமாக, தேசிய ஊழல் எதிர்ப்புச் செயற்திட்டம் 2025-2029 மற்றும் ஆளுகைச் செயற்திட்டம் என்பவற்றின் அமுல்படுத்தல் மூலமாக அரசாங்கம் ஆளுகையினையும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் தொடர்ந்து முன்னெடுக்கும். இவற்றுள், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துகைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் (CIABOC) நிறுவன ரீதியான ஆற்றல் மற்றும் சுயாதீனத் தன்மையினை வலுப்படுத்தல், இலத்திரனியல் சொத்துப் பிரகடன முறைமையினை மேம்படுத்தல், பயன்பெறுனர் உரித்தாண்மைத் தகவல்களின் நம்பகத்தன்மை மற்றும் பரீட்சிப்பு என்பவற்றினை மேம்படுத்தல், மற்றும் அரச கொள்வனவுச் செயன்முறையிலும் அரசிறை இயக்கங்களிலும் வெளிப்படைத்தன்மையினையும் வகைப்பொறுப்பினையும் அதிகரித்தல் என்பன உள்ளடங்குகின்றன.

2026 ஒக்டோபர் 4 அன்று, இலங்கை அதிகாரிகளும் சர்வதேச நாணய நிதியப் பணியாளர்களும், 2026 உறுப்புரை IV கலந்தாலோசிப்பின் கீழ் கலந்துரையாடல்களைப் பூர்த்திசெய்தமையுடன் சேர்த்து நான்கு வருட விரிவாக்கப்பட்ட நிதிய வசதி (EFF) ஏற்பாட்டின் கீழ் ஏழாவது மீளாய்வினைப் பூர்த்திசெய்வதற்கான பொருளாதாரக் கொள்கைகள் பற்றிய ஒரு பணியாளர் மட்ட உடன்பாட்டிற்கு வந்தனர். சர்வதேச நாணய நிதிய நிறைவேற்றுச் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு, மீளாய்வின் பூர்த்தியானது, மேலதிக நிதியிடலில், இலங்கைக்குச் மேலதிக நிதியிடலாக 254 மில்லியன் பெறுமதியான சிறப்பு எடுப்பனவு உரிமைக்கான அணுகலை, அதாவது சுமார் 345 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குச் சமமான தொகையை வழங்கும். பூகோள அரசியல் மாற்றங்களாலும் காலநிலை தொடர்பான பாதக இடர்களுக்கு மத்தியில் விலையின் ஸ்திரத்தன்மையினைப் பேணுதல், சமூகப் பாதுகாப்பு வலைகளை வலுப்படுத்தி, ஆளுகை மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீராக்கல்களின் உந்தத்தினை நிலைநறுத்தல் அரசிறை மற்றும் வெளிநாட்டு பாதுகாப்புக்களை மீளுருவாக்குவதின் முக்கியத்துவத்தினையும் சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பீடு கோடிட்டுக்காட்டுகின்றது.

இடைக்காலத்தில், அரசிறைக் கொள்கையானது, இதன் பிரகாரம் மூன்று ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய முன்னுரிமைகளைச் சமனிலைப்படுத்தும்: டித்வாசூறாவளியுடன் தொடர்புடைய புனர்வாழ்வு மற்றும் மீண்டெழுந்தன்மைப் புனர்நிர்மாணத்தினைப் பூர்த்திசெய்தல்; தற்காலிக மற்றும் இலக்கு வைக்கப்பட்ட இடையீடுகளின் மூலம் விதிவிலக்கான வெளிநாட்டு அதிர்ச்சிகளின் பொருளாதார மற்றும் சமூக விளைவுகளைத் தணித்தல்; பேரினப் பொருளாதார மற்றும் கடன் நிலைபேறானதன்மையினைப் பாதுகாப்பதற்குத் தேவைப்படும் அரசிறைத் திடப்படுத்தல் மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரலைப் பேணுதல்.

2026 ஆம் ஆண்டின் அனுபவமும் 2027 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் அரசிறை அழுத்தங்களுக்கு மத்தியில், அரசிறைக் கட்டுப்பாட்டினை, விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் கவனமாக வரையறுக்கப்பட்ட நெகிழ்வுத்தன்மையுடன் இணைக்கும் நம்பத்தக்க விதியின் அடிப்படையிலான அரசிறைச் சட்டகத்தின் முக்கியத்துவத்தினைக் கோடிட்டுக்காட்டுகின்றன. எனவே, டித்வா சூறாவளியுடன் தொடர்புடைய புனர்நிர்மாணத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவைப்படுத்தப்படும் தற்காலிக விலகலுடன் தொடர்ச்சியான வருமானத் திரட்டலும் வலுவான செலவினக் கட்டுப்பாடுகளும் வெளிப்படைத்தன்மையுடைய அறிக்கையிடலும் நியதிச்சட்ட முதன்மைச் செலவின எல்லையுடன் இயைபுறலை மீளுருவாக்குவதற்காகத் தெளிவாக வரையறுக்கப்பட்ட பாதையும் சேர்ந்திருக்கும். இந்த அணுகுமுறையானது, அரசிறை மற்றும் கடன் நிலைபேறானதன்மை என்பவற்றினைப் பேணி, சீராக்கல் மற்றும் மறுசீராக்கல் செயன்முறை மூலம் அடையப்பட்ட பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மையினைப் பாதுகாக்கும் அதேவேளை, உடனடியான புனர்நிர்மாணத் தேவைகளையும் சமூகத் தேவைகளையும் நிவர்த்திசெய்வதற்காக அரசாங்கத்தினை இயலுமாக்கும்.

1.2 பேரினப் பொருளாதார அரசிறைச் செயலாற்றுகை

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தொடர்ச்சியாக ஏற்பட்ட அசாதாரண நிகழ்வுகளின் தாக்கங்களைத் தாண்டி, இலங்கைப் பொருளாதாரம் அதன் மீண்டெழுந்தன்மையினை எடுத்து விளக்கி 2026 ஆம் ஆண்டின் முதற் அரையாண்டின் போது தொடர்ந்தும் விரிவடைந்தது. 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டின் போது உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.7 சதவிகிதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் முதற் காலாண்டின் போது வளர்ச்சியானது 5.1 சதவிகிதமாக இருந்து இரண்டாம் காலாண்டின் போது 4.2 சதவிகிதமாக மிதமான நிலையினை அடைந்தது. 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் போது கைத்தொழில் செயற்பாடுகள் 7.3 சதவிகிதமாக வலுவாக விரிவடைந்த அதேவேளை, சேவைகள் செயற்பாடுகள் 2.7 சதவிகிதத்தினால் வளர்ச்சியடைந்தன. எவ்வாறாயினும், விவசாய நடவடிக்கைகள் 2.3 சதவிகிதத்தினால் சுருக்கமடைந்ததுடன் இது மோசமான காலநிலையுடன் தொடர்புடைய நிலைமைகளை ஓரளவுக்குப் பிரதிபலித்த அதேவேளை உற்பத்திகள் மீதான கழித்தல் மானியங்கள் வரிகள் 11.9 சதவிகிதத்தினால் அதிகரித்தன.

உச்சமடைந்த பூகோள அரசியல் பதற்றங்கள் மத்தியிலும் சக்திச் சந்தைகளுக்கு ஏற்பட்ட இடையூறுகளின் மத்தியிலும் உலகளாவிய நிதி மற்றும் வர்த்தகச் சூழலின் தொடர்ந்து நிலவிய நிச்சயமற்ற தன்மை மத்தியிலும் 2026 இல் உலகளாவிய பொருளாதார நிலைமைகள் தொடர்ந்தும் சவால் மிக்கவையாகக் காணப்பட்டன. இந்தத் தோற்றப்பாடு தளம்பல் மிக்கதாகும். பூகோளஅரசியல் மோதல்களின் விளைவுகள் குறிப்பாகச் சக்தியினை இறக்குமதி செய்கின்ற, பாதிப்புறுநிலையிலுள்ள பொருளாதாரங்கள் மீது தாக்கம் செலுத்தும் அதேவேளை உலகளாவிய பணவீக்கக் குறைப்பு முடங்கியுள்ளது. இதன் காரணமாக, விலை ஸ்திரத்தன்மையினைப் பேணுவதையும் அரசாங்கத்தின் செலவினத் தெரிவுகளில் நெகிழ்வுத்தன்மையினை மீளுருவாக்குவதையும் எதிர்கால அதிர்ச்சிகளுக்கான பொருளாதாரத் தகவமைப்புநிலையினை வலுப்படுத்துவதில் தொடர்ந்தும் முக்கியமானவையாக உள்ளன.

இலங்கை 2026 ஆம் ஆண்டின் போது அதன் வருமான அடிப்படையிலான அரசிறைத் திடப்படுத்தல் செயன்முறையினைத் தொடர்ந்தது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 3,301.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அரசாங்க வருமானமும் கொடைகளும் 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 21.2 சதவிகிதத்தினால் அதிகரித்து 4,002.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது வரி வருமானம் 20.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 3,683.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை, வரி சாரா வருமானம் 39.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 314.8 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. வலுவான வருமானச் செயலாற்றுகைக்கு வருமான வரிகளில் இருந்தான உயர் சேகரிப்புக்களும் மோட்டார் வாகன இறக்குமதிகளில் இருந்து ஈட்டப்பட்ட வருமானமும் வருமான நிர்வாகத்திலும் ஏற்பட்ட தொடர்ச்சியான முன்னேற்றங்களும் ஆதாரமாக அமைந்தன. 2026 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாத முடிவின் போது, வருடாந்த வரி வருமான மதிப்பீட்டின் சுமார் 75 சதவிகிதம் ஏற்கனவே அடையப்பட்டிருந்தது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 702.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட வருமான வரியில் இருந்தான வருமானம் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 17.6 சதவிகிதத்தினால் அதிகரித்து 825.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 1,939.1 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரியில் இருந்தான வருமானமானது 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 2,366.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 427.0 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகளில் இருந்து கிடைத்த வருமானம் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 491.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 1,084.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட பெறுமதி சேர் வரியில் இருந்தான வருமானம் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 22.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 1,322.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

பிரதான வருமான முகவர்களினால் சேகரிக்கப்பட்ட வருமானம் 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின்

போது தொடர்ந்தும் வலுவானதாகக் காணப்பட்டது. இலங்கைச் சுங்கம் 1,726.8 பில்லியன் ரூபாவினைச் சேகரித்திருந்ததுடன் இது அதன் வருடாந்த மதிப்பீட்டின் 78.3 சதவிகிதமாக இருந்த அதேவேளை உண்ணாட்டரசிறைத் திணைக்களம் 1,727.5 பில்லியன் ரூபாவினை அல்லது அதன் வருடாந்த மதிப்பீட்டில் 71.9 சதவிகிதத்தினைச் சேகரித்திருந்தது. மதுவரித் திணைக்களம் அதன் வருடாந்த மதிப்பீட்டில் 74.5 சதவிகிதமான 182.4 பில்லியன் ரூபாவினைச் சேகரித்திருந்தது.

டிஜிட்டல் மயமாக்கத்தினூடாக வரி செலுத்துனர் இயைபுறலிலும் வரி நிர்வாகத்தினை நவீனமயப்படுத்துவதிலும் வருமான நிர்வாக மறுசீராக்கல்கள் தொடர்ந்தும் கவனம் குவித்தன. அமுலாக்கம், கணக்காய்வுத் தெரிவு மற்றும் வரி செலுத்துனர் சேவைகள் என்பவற்றுக்கு வழிகாட்டுவதற்கு இயைபுறல் இடர் முகாமைத்துவச் சட்டகத்தின் பயன்பாட்டினை உண்ணாட்டரசிறைத் திணைக்களம் தொடர்ந்து வலுப்படுத்திய அதேவேளை, உயர் செல்வமுடைய தனிநபர்கள் நிகழ்ச்சித்திட்டமானது உயர் இடருடைய தனிநபர்களையும் தொடர்புடைய அமைப்புக்களையும் இலக்குவைத்து இடர் அடிப்படையிலான கணக்காய்வுகளை முன்னெடுத்தது. பெறுமதி சேர் வரி இயைபுறலை வலுப்படுத்துவதிலும் வரிசெலுத்துனர் பதிவேட்டினைத் தூய்மைப்படுத்தி இற்றைப்படுத்துவதிலும் கோப்பிடல் இயைபுறலை முன்னேற்றுவதிலும் மேலதிக நடவடிக்கைகள் கவனம் குவித்தன. வரி நிர்வாக முகாமைத்துவத் தகவல் முறைமையினைத் (RAMIS) தொடர்ச்சியாக நவீனமயப்படுத்தல் இந்த மறுசீராக்கல்களுக்குத் தொடர்ந்தும் பிரதானமானதாகக் காணப்பட்டதுடன் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் சகல வரிகளும் இந்த முறைமையின் மூலம் செயன்முறைப்படுத்தப்படுவதையும் சேகரிக்கப்படுவதையும் நோக்கியதாகக் காணப்பட்டன. இதற்குச் சமாந்தரமாக, தேசிய இலத்திரனியல் விலைப்பட்டியல் தயாரிப்பு முறைமையின் அமுல்படுத்தல் ஒரு கட்டம் கட்டமான அணுகுமுறையின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இது வரிசெலுத்துனரின் தொழில் முயற்சி வளத் திட்டமிடல் முறைமையில் இருந்து பாதுகாப்பான வெப் API மூலம் பெறுமதி சேர் வரி விலைப்பட்டியல் தரவினை RAMIS இற்கு நிகழ் நேரத்தில் பரிமாற்றுவதை இயலுமாக்குவதுடன் பரந்த ஒருங்கிணைப்பு இதன்போது படிப்படியாக எதிர்பார்க்கப்படுகின்றது.

எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையில் இருந்து நியம இடர் அடிப்படையிலான பெறுமதி சேர் வரி பணமீளளிப்புப் பொறிமுறைக்கான நிலைமாற்றம் 2026 ஆம் ஆண்டின் போது தொடர்ந்தது. 2025 ஒக்டோபர் 1 முதல் செயலூக்கம் பெறும் வகையில் எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் வரித் திட்டம் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து உண்ணாட்டரசிறைத் திணைக்களம் மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு மூலமும் வலுப்படுத்தப்பட்ட செயற்பாட்டு ஆற்றல் மூலமும் வரிசெலுத்துனர்களுடனான தொடர்ச்சியான ஈடுபாடு மூலமும் இடர் அடிப்படையிலான பணமீளளிப்பு முறைமையின் அமுல்படுத்தலைத் தொடர்ந்து வலுப்படுத்தியது. பெறுமதி சேர் வரி இயைபுறல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் 2026 ஜனவரி முதல் பாரம்பரிய பெறுமதி சேர் வரிப் பிரிவுக்கு நீட்டிக்கப்பட்டதுடன் இதற்கு கள மட்ட இயைபுறல் நடவடிக்கைகளும் தற்காலிகப் பெறுமதி சேர் வரி இலக்கங்களின் அங்கீகரிப்பும் வரிசெலுத்துனர் இடாப்பினைத் தூய்மைப்படுத்தி இற்றைப்படுத்துவதும் உள்ளிட்ட நடவடிக்கைகள் ஆதரவளித்தன. மேலும், சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு அறவீட்டுக்கான வருடாந்தப் பதிவு எல்லை 2026 ஜூலை 1 முதல் செயலூக்கம் பெறும் வகையில் 60 மில்லியன் ரூபாவில் இருந்து 36 மில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டதுடன் இதன் மூலம் SSCL வரித் தளம் பரவலாக்கப்பட்டது. இந்த மறுசீராக்கங்களுக்கு வரி நிர்வாகத்தின் தொடர்ச்சியான டிஜிட்டல்மயமாக்கம் மூலம் துணையாக அமைந்ததுடன் இதில், RAMIS மூலம் பெறுமதி சேர் வரி அறிக்கையிடலையும் இயைபுறலையும் வலுப்படுத்தும் நடவடிக்கைகளும் இலத்திரனியல் விலைப்பட்டியல் தயாரிப்பு மற்றும் பெறுமதி சேர் வரி விலைப்பட்டியல் தரவு ஆகியவற்றின் API அடிப்படையிலான பரிமாற்றம் ஆகியவற்றின் கட்டம் கட்டமான அமுல்படுத்தல் நடவடிக்கைகளும் உள்ளடங்குகின்றன.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 3,712.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அரசாங்கச் செலவினம் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் போது 6.9 சதவிகிதத்தினால் ஓரளவு அதிகரித்து 3,966.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மீண்டெழும் செலவினம் 4.4 சதவிகிதத்தினால் அதிகரித்து 3,531.0 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை மூலதனச் செலவினமும் நிகரக் கடன் வழங்கலும் 31.6 சதவிகிதத்தினால் அதிகரித்து 435.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 1,687.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகள் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 4.6 சதவிகிதத்தினால் சரிவடைந்து 1,609.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. வட்டிக் கொடுப்பனவுகள் மீண்டெழும் செலவினத்தின் 45.6 சதவிகிதமாகக் காணப்பட்ட அதேவேளை சம்பளங்களும் ஊதியங்களும் 23.4 சதவிகிதமாகவும் மானியங்களும் மாற்றங்களும் 25.2 சதவிகிதமாகவும் பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான செலவினம் 5.8 சதவிகிதமாகவும் காணப்பட்டன.

செலவுக் கட்டுப்பாட்டுடனான வலுவான வருமானச் செயலாற்றுகையானது 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது அரசிறை மீதியில் கணிசமான முன்னேற்றத்திற்குக் காரணமாகியது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 1,276.5 பில்லியனாகக் காணப்பட்ட முதன்மை மீதி 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 1,644.6 பில்லியன் ரூபாவாக அதிகரித்தது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது காணப்பட்ட ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையான 411.0 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் போது 35.4 பில்லியன் ரூபா ஒட்டுமொத்த வரவுசெலவுத் திட்ட மிகை பதிவுசெய்யப்பட்டிருந்தது. 2026 ஆம் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியிலும் 2027 ஆம் ஆண்டிலும் அனர்த்தத்துடன் தொடர்புடைய பெருமளவிலான புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணச் செலவினங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டாலும், இந்த முன்னேற்றமானது வருமான அடிப்படையில் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சியினைப் பிரதிபலிக்கின்றது.

இருந்தபோதிலும், அரச படுகடன் இடைக்கால அரசிறை முகாமைத்துவத்தில் இது தொடர்ந்தும் ஒரு பிரதான


கருதுகோளாகவே காணப்படுகின்றது. அரச படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் காலாண்டுப் புள்ளிவிபரக் கடன் அறிக்கைக்கு அமைவாக, 2026 ஆம் ஆண்டின் ஜூன் மாத முடிவில் மொத்த பகிரங்க படுகடன் கிட்டத்தட்ட 32,977 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மத்திய அரசாங்கப் படுகடன் சுமார் 31,999 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் இது 19,203 பில்லியன் ரூபா உள்நாட்டுப் படுகடனையும் 12,796 பில்லியன் ரூபா வெளிநாட்டுப் படுகடனையும் கொண்டிருந்தது. நிலையான முதன்மை மீதிகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட அரசிறைச் செயற்பாடுகள் இடைக்கால படுகடன் குறைப்புப் பாதைக்கு ஆதரவாக இருக்கும் அதேவேளை, மதிநுட்பமான கடன்பெறலும் செயற்திறன்மிக்க கடன் மற்றும் பண முகாமைத்துவமும் அரசிறைச் சட்டகத்துடன் தொடர்ச்சியாக இயைபுறுவதும் கடன் பாதிப்புறுநிலைகளைக் குறைப்பதற்குத் தொடர்ந்தும் இன்றியமையாதவையாக இருக்கும்.

பணவீக்கத்துடன் தொடர்புடைய மற்றும் நாணயமாற்ற வீதத்துடன் தொடர்புடைய அழுத்தங்கள் 2026 ஆம் ஆண்டின் போது அதிகரித்தன. குறிப்பாக, மத்தியகிழக்கில் பூகோளஅரசியல் பதற்றங்கள் அதிகரித்தமையினாலும் அதனுடன் இணைந்து உலகளாவிய சக்தி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும் இந்த நிலை ஏற்பட்டது. 2025 ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இலங்கை ரூபாவானது அமெரிக்க டொலருக்கு எதிராக 6.8 சதவிகிதத்தினால் பெறுமானத் தேய்வடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியினால் அளக்கப்பட்டவாறான முதன்மைப் பண வீக்கமானது நாட்டின் பொருளாதாரத்தினுள் விலை அதிகரிப்புக்களின் மொத்த அளவீடானது முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2026 மார்ச் மாதத்தில் 2.2 சதவிகிதத்தில் ஒக்டோபர் மாதத்தில் 8.3 ஆக அதிகரித்தது. உணவுப் பணவீக்கம் 8.8 சதவீதமாக உணவல்லாப் பணவீக்கமும் ஒக்டோபரில் 8.0 சதவிகிதமாக அதிகரித்த அதேவேளை, உணவல்லாத பொருட்களின் சராசரி விலை தொடர்ந்தும் 7.7 சதவிகிதமாகக் காணப்பட்டது. தளம்பல்மிக்கவற்றின் விலைகள் அல்லாத பொதுவான விலை மட்டங்கள் 5.6 சதவிகிதத்தினால் அதிகரித்தன. பணவீக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு, உயர் சக்திச் செலவு ஏனைய சக்தி சார விடயங்களின் விலைகளில் அதிகரிப்பினை ஏற்படுத்தி அதனுடன் இணைந்த பொருளாதார அம்சங்களில் பாதிப்பினை ஏற்படுத்தியமையில் பிரதிபலித்தது. நாட்டின் பொருளாதாரத்தினுள் விலை அதிகரிப்புக்களின் மொத்த அளவீடு, 5 சதவிகிதம் எனும் இலக்கினை நோக்கிப் படிப்படியாக நகர்வதற்கு முன்னர் 2027 ஆம் ஆண்டின் முதற் காலாண்டின் போது உயர் ஒற்றை இலக்கங்களில் தொடர்ந்து காணப்படும் என மத்திய வங்கி எதிர்வுகூறுகின்றது.

ஓரிரவுக் கொள்கை வட்டி வீதத்தினை மத்திய வங்கி 2026 ஆம் ஆண்டின் முற்பகுதியில் 7.75 சதவீதத்தில் பேணியது. எவ்வாறாயினும், 2026 மே மாதத்தில், உருவாகிவந்த பணவீக்க அழுத்தங்களுக்கான, உயர்வடைந்த உலகளாவிய சக்தி விலைகளுக்கான, வலுவடைந்து வந்த உள்நாட்டுக் கிராக்கிக்கான மற்றும் மத்தியகிழக்கில் ஏற்பட்ட உச்சம்பெற்ற நிச்சயமற்றதன்மைக்கான பதிற்செயற்பாடாக நாணயக் கொள்கைச் சபை இந்த வட்டி வீதத்தினை (OPR) 100 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்து 8.75 சதவிகிதமாக்கியது. முன்பு மேற்கொண்ட இறுக்கத்தின் விளைவுகளை மத்திய வங்கி மதிப்பிட்டதாலும் பரிணமித்துவந்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிலைமைகளினாலும் 2026 செப்டெம்பர் நாணயக் கொள்கை மீளாய்வு உள்ளடங்கலாக, OPR 8.75 சதவிகிதமாகப் பேணப்பட்டது. இரண்டாம் சுற்றுப் பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்தி, பணவீக்க எதிர்பார்ப்புக்களை நிலை நிறுத்திய அதேவேளை பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காகப் போதிய கடன் பாய்ச்சலை அனுமதிக்கும் நோக்கத்தினை நடப்பு நாணயக் கொள்கை கொண்டுள்ளது. பொருத்தமான கொள்கை நிலைப்பாட்டினைத் தீர்மானிப்பதற்காகப் பூகோள அரசியல் மாற்றங்களினாலும் உலகளாவிய பண்ட விலைகளினாலும் ஏற்படும் இடர்களையும் எல் நினோவினால் ஏற்படக்கூடிய நிலைமைகளையும் மத்திய வங்கி தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

வரைபு 1.2 | முக்கிய அரசிறைத் திரட்டுகள் 2023 - 2025

மொ.உ.உ இன் % ஆக



மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

1.3 நடுத்தர கால அரசிறை மூலோபாயம்

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கப் பகிரங்க நிதி முகாமைத்துவச் சட்டத்தினால் அரசாங்கத்தின் அரசிறை இயக்கங்கள் ஆளுகை செய்யப்படுவதுடன் பொறுப்பு வாய்ந்த அரசிறை முகாமைத்துவத்திற்காக விதிகளின் அடிப்படையிலான ஒரு சட்டகத்தினை இது நிலைநாட்டுகின்றது. நிலைபேறான அரச படுகடனினை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டுமெனவும் எதிர்காலத் தாக்கங்களுக்கு எதிராகப் போதிய அரசிறைப் பாதுகாப்புக்களைப் பேணவேண்டும் எனவும் பகிரங்க நிதிகளின் முகாமைத்துவத்தில் அரசிறை இடர்களை மதிநுட்பமாக முகாமைத்துவம் செய்யவேண்டுமெனவும் கட்டுப்பாடுகளை வலுப்படுத்த வேண்டுமெனவும் வெளிப்படைத்தன்மையும் வகைப்பொறுப்பும் இருக்கவேண்டும் எனவும் சட்டம் தேவைப்படுத்துகின்றது. வருடாந்த வரவுசெலவுத்திட்டத் தயாரிப்புக்கும் அரசிறைச் செயலாற்றுகையின் மதிப்பீட்டுக்கும் மூலோபாயமிக்க அடிப்படையினை வழங்கும் வருடாந்த அரசிறை மூலோபாயக் கூற்று மூலமும் ஒவ்வொரு வருடமும் இற்றைப்படுத்தப்படும் ஐந்து ஆண்டு நடுத்தர அரசிரை சட்டகம் மூலமும் இது இடைக்கால அரசிறைத் திட்டமிடலை நிறுவனமயமாக்குகின்றது. பகிரங்க நிதி முகாமைத்துவ சட்டத்தின் 11 ஆம் பிரிவுக்கு அமைவாக 2026 ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்ட அரசிறை மூலோபாயக் கூற்று 2027, அரசிறை இடர்க் கூற்றுடன் சேர்த்து 2027 - 2031 இற்காக நடுத்தர அரசிரை சட்டகத்தின் அறிக்கையினை ஒருங்கிணைக்கின்றது.

பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் அமுல்படுத்தல் 2026 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் முன்னேற்றமடைந்ததுடன் இதன்போது நியதிச்சட்டச் சட்டகத்தினைச் செயற்திறன்மிக்க வரவுசெலவுத்திட்ட நிறைவேற்றமாக மாற்றுவதிலும் கடப்பாட்டுக் கட்டுப்பாட்டிலும் அரசிறை அறிக்கையிடலிலும் அரசிறை இடர் முகாமைத்துவத்திலும் அதிகரித்த வலியுறுத்தல் மேற்கொள்ளப்பட்டது. மேலும், சட்டத்தினை நடைமுறைப்படுத்தலில் வரவுசெலவுத்திட்ட நிறைவேற்றம், கடப்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் அமலாக்கல் பொறிமுறைகள் உள்ளிட்ட அமுல்படுத்தல் ஒழுங்குவிதிகளும் நெறிப்படுத்தல்களும் உள்ளடங்குகின்ற அதேவேளை நிதி ஒழுங்குவிதிகளும் ஏற்புடைய திறைசேரிச் சுற்றுநிருபங்களும் புதிய ஒழுங்குவிதிகள் செயலூக்கம் பெறும் வரையில் பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்துடன் இயைபுறும் காலம் வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும். அனர்த்தத்துடன் தொடர்புடைய கொள்வனவுச் செயன்முறை மற்றும் பயன்பெறும் உரிமையாளர் பற்றிய தகவல்கள் உள்ளிட்ட மேம்பட்ட கண்காணிப்பு மற்றும் விதிவிலக்கான செலவின வெளிக்கூறல் மூலம் அரசிறை முகாமைத்துவச் சட்டகமும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

கடன் குறைப்புக் குறிக்கோளானது 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதி முகாமைத்துவ சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் முதன்மையான அரசிறை விதியாக இருப்பதுடன் நடுத்தர கால அரசிறை சட்டத்தின் அறிக்கையின் கீழ் தாபிக்கப்பட்ட முதன்மை மீதி இலக்கு மற்றும் முதன்மைச் செலவின எல்லை என்பவற்றின் மூலம் இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதி முகாமைத்துவ சட்டத்தின் 15 ஆம் பிரிவானது முதன்மைச் செலவினத்தினை மதிப்பிடப்பட்ட பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13 சதவிகிதத்திற்கு வரையறுக்கும் அதேவேளை, முதன்மை மீதி இலக்கானது இடைக்காலக் கடன் குறைப்புக் குறிக்கோளுடன் இசைவான வகையில் தீர்மானிக்கப்படுகின்றது. இதேவேளை, பிரிவு 16 ஆனது, தகைமை பெறும் எதிர்பாராத சம்பவங்களுக்காகவும் இயற்கை அனர்த்தங்களுக்காகவும், பாராளுமன்ற அங்கீகாரம் மற்றும் அரசிறை விதிகளுடன் இயைபுறுவதை மீளுருவாக்குவதை நோக்கிய மீளல் பாதை உள்ளிட்ட தொடர்புடைய நியதிச்சட்டத் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டு மேலதிக, தற்காலிக மற்றும் இலக்குவைக்கப்பட்ட செலவினத்திற்கு இடமளிப்பதற்காகக் கவனமாக வரையறுக்கப்பட்ட நெகிழ்வுத்தன்மையினை வழங்குகின்றது.

எனவே, இடைக்கால அரசிறை உபாயமார்க்கமானது அரசாங்கத்தின் நிதி ஆரோக்கியம் பற்றிய வலுவான பேரின மட்டக் குறிகாட்டியினைப் பேணுவதில் மாத்திரம் கவனம் குவிக்காமல் அதன் தரம் மற்றும் நீடுறுதி என்பவற்றினை முன்னேற்றுவதிலும் கவனம் குவிக்கும். இடைக்கால வருமான உபாயமார்க்கத்தினாலும் வலுப்படுத்தப்பட்ட வருமான நிர்வாகத்தினாலும் பரந்த மற்றும் மிகவும் வினைத்திறன்மிக்க வரித்தளத்தினாலும் ஆதாரமளிக்கப்பட்ட நிலையான உள்நாட்டு வருமானத் திரட்டானது, அரசாங்க வருமானத்தினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 16 சவிகிதத்தினை ஒட்டியதாகப் பேணுவதற்குத் தொடர்ந்தும் பிரதானமானதாக இருக்கும். செலவினப் பக்கத்தினை நோக்குகையில், செலவின முன்னுரிமைப்படுத்தலிலும் செயற்திறன்மிக்க கடப்பாட்டுக் கட்டுப்பாடுகளிலும் மேம்படுத்தப்பட்ட பகிரங்க முதலீட்டு முகாமைத்துவத்திலும் அதிர்ச்சிகளுடன் தொடர்புடைய தற்காலிகச் செலவினங்கள் நிரந்தரமான மீண்டெழுஞ் செலவினக் கடப்பாடுகளை உருவாக்குவதைத் தடுப்பதிலும் பெரும் வலியுறுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அரசிறை இடர் முகாமைத்துவம் பெரும் முக்கியத்துவத்தினைப் பெறும். குறிப்பாக, இயற்கை அனர்த்தங்கள் தொடர்பிலும் காலநிலையுடன் தொடர்புடைய அதிர்ச்சிகள் தொடர்பிலும் அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் தொடர்பிலும் அரசாங்க - தனியார் பங்காண்மை தொடர்பிலும் அரசாங்க உத்தரவாதம் தொடர்பிலும் முக்கியத்துவம் பெறும். இந்த நடவடிக்கைகள், சரிவடைந்து வரும் அரச படுகடன் பாதையினைப் பேணி, இடைக்காலத்தில் பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மையினைப் பாதுகாக்கும் அதேவேளை, அரசிறைப் பாதுகாப்புக்களை மீளக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

1.3.1 அரசிறை மூலோபாயம்

அரசிறை மூலோபாயம், அரசிறை மூலோபாயக் கூற்று 2027 இனால் நிர்ணயிக்கப்பட்டவாறாக, 2027 - 2031 இற்கான மத்திய கால நிதி நிலை அறிக்கையின் வழிகாட்டலுடன் பகிரங்க நிதி முகாமைத்துவ சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அரசிறைப் பொறுப்புச் சட்டகத்தினால் ஆளுகை செய்யப்படுகின்றது. அரசிறை மூலோபாயத்தின் முதன்மைக் குறிக்கோள், அரசிறைப் பாதுகாப்பினை மீளுருவாக்கி, வரித் திரட்டினை வலுப்படுத்தி, அரச செலவினத்தின் வினைத்திறன் மற்றும் ஆக்கக்கூறினை மேம்படுத்தி, பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மையினைப் பாதுகாக்கும் அதேவேளை அரச படுகடனை நிலையான கீழ்நோக்கிய பாதையில் பேணுவதாகும். பகிரங்க நிதி முகாமைத்துவ சட்டத்தின் கீழ், முதன்மைச் செலவினம் ஆரம்ப அமுல்படுத்தல் காலப்பகுதியின் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13 சதவிகிதத்திற்குக் கீழே தொடர்ந்திருக்கவேண்டும் எனப் பொதுவாகத் தேவைப்படுத்தப்படுவதுடன் சேர்த்து, கடன் குறைப்புக் குறிக்கோள் இடைக்கால முதன்மை மீதி இலக்குகளின் மூலமும் ஒரு முதன்மைச் செலவின எல்லையின் மூலமும் செயற்படுத்தப்படுகின்றது. எதிர்பாராத சம்பவங்களாலும் இயற்கை அனர்த்தங்களாலும் ஏற்படும் தற்காலிக மற்றும் இலக்குவைக்கப்பட்ட மேலதிக செலவினத்திற்கு, தொடர்புடைய நியதிச்சட்டத் தேவைப்பாடுகளுக்கு இயைபுற்று இடமளிப்பதற்காகச் சட்டமானது கவனமாக வரையறுக்கப்பட்ட நெகிழ்வுத்தன்மைக்கான ஏற்பாட்டினை வழங்குகின்றது.

2026 ஆம் ஆண்டின் போது அரசிறைச் செயலாற்றுகை, அரசிறை மூலோபாயக் கூற்று 2027 இனை வெளியிட்ட சந்தர்ப்பத்தில் எதிர்பார்த்ததை விட வலுவானதாக இருந்ததுடன் இது, டித்வா சூறாவளியினாலும் மத்திய கிழக்கில் உருவான மாற்றங்களாலும் ஏற்பட்ட கணிசமான மேலதிகச் செலவினத் தேவைப்பாடுகளைத் தாண்டித் தொடர்ச்சியான வருமானத் திரட்டினையும் செலவினக் கட்டுப்பாட்டினையும் பிரதிபலிக்கின்றது. திருத்தப்பட்ட மத்திய கால நிதி நிலை அறிக்கையின் கீழ், 2026 ஆம் ஆண்டில் மொத்த வருமானமும் கொடைகளும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 16.6 சதவிகிதமாக இருக்கும் என எதிர்வுகூறப்படும் அதேவேளை,

வெளியிடப்பட்ட அரசிறை மூலோபாயக் கூற்று 2027 இல் உள்ளடங்கியுள்ள 2.1 சதவிகித எதிர்வுகூறலுடன் ஒப்பிடுகையில், முதன்மை மிகையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 3.6 சதவிகிதத்தினை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வலுவான அரசிறை நிலைமையானது, இடைக்காலத்தில் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினைக் குறைப்பதற்கான திட்டத்தினைப் பேணும் அதேவேளை, விதிவிலக்கான செலவினத் தேவைப்பாடுகளுக்கு இடமளிப்பதற்கான முக்கியமான பாதுகாப்பினை வழங்குகின்றது.

2027 ஆம் ஆண்டுக்காக வெளியிடப்பட்ட அரசிறை மூலோபாயக் கூற்று, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 12.9 சதவிகித முதன்மைச் செலவினத்தையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15.5 சதவிகித வருமானம் மற்றும் கொடைகளையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.6 சதவிகித முதன்மை மிகையினையும் ஆரமத்தில் எதிர்பார்த்தது. வருமானத் தோற்றப்பாட்டில் இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் டித்வா சூறாவளியுடன் இணைந்த மேலதிக புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணத் தேவைப்பாடுகள் இந்த அடிப்படை எதிர்கூறலை இற்றைப்படுத்த வேண்டிய தேவையினை ஏற்படுத்தின. திருத்தப்பட்ட மத்திய கால நிதி நிலை அறிக்கையின் கீழ், மேலதிக புனர்நிர்மாணிப்புச் செலவினத்தினை ஒருங்கிணைப்பதற்கு முன்னர், வருமானமும் கொடைகளும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 15.8 சதவிகிதமாக இருக்கும் எனவும் முதன்மை மிகை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 2.9 சதவிகிதமாகவும் இருக்கும் எனவும் எதிர்வுகூறப்பட்டது. டித்வாசூறாவளியுடன் தொடர்புடைய குறைநிரப்புச் செலவினத்தின் ஒருங்கிணைப்பினைத் தொடர்ந்து, முதன்மைச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 13.6 சதவிகிதமாகத் தற்காலிகமாக அதிகரிக்கும் எனவும் மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 5.1 சதவிகிதமாக அதிகரிக்கும் எனவும் முதன்மை மீதி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.3 சதவிகிதமாக மிதமான நிலையினை அடையும் எனவும் எதிர்பார்க்கப்படும் அதேவேளை ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 4.5 சதவிகிதமாக இருக்கும் என எதிர்வுகூறப்படுகின்றது. தற்காலிக விலகல் விதிகளை அடிப்படையாகக் கொண்ட அரசிறைச் சட்டகத்தினால் முகாமைத்துவம் செய்யப்படும் அதேவேளை, முதன்மைச் செலவினம் 2028 ஆம் ஆண்டில் இருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 12.9 சதவிகிதமாகத் திரும்பும் எனவும் இடைக்காலத்தின் எஞ்சிய பகுதியில் முதன்மை மீதியானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 3.0 சதவிகிதமாக வலுவடையும் எனவும் எதிர்வுகூறப்படுகின்றது.

வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினைக் குறைப்பதற்கான முயற்சிகள் அரசிறை உபாயமார்க்கத்தின் மையமான விடயமாகத் தொடர்ந்திருக்கும். இடைக்காலத்தின் போது அரசாங்க வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 15.5 சதவிகிதமாக இருக்கும் என வெளியிடப்பட்ட அரசிறை மூலோபாயக் கூற்று 2027 எதிர்பார்த்துள்ள அதேவேளை 2027 ஆம் ஆண்டில் இருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 16 சதவிகிதமாக ஒரு வலுவான வருமானப் பாதை இருக்கும் எனத் திருத்தப்பட்ட மத்திய கால நிதி நிலை அறிக்கை பிரதிபலிக்கின்றது. அரசாங்கம் தொடர்ந்தும் வரித் தளத்தினைப் பரந்ததாக்கி, வரி விலக்குகள் மற்றும் ஊக்குவிப்புக்களை முறைப்படுத்தி, வரி நிர்வாகம் மற்றும் இயைபுறலை வலுப்படுத்தி, வரி முறைமையின் வினைத்திறன் மற்றும் நியாயமானதன்மையினை மேம்படுத்தும். MTRS இன் உருவாக்கம் மற்றும் அமுல்படுத்தல் வரிக் கொள்கையில் மறுசீரமைப்புக்கான, வரி நிர்வாகத்திற்கான மற்றும் சட்டச் சட்டகத்திற்கான ஒரு முறைப்படுத்தப்பட்ட சட்டகத்தினை வழங்கும். அண்மைக்கால சர்வதேச நாணய நிதியக் கலந்துரையாடல்கள் இதேபோன்று நிலையான வருமானத் திரட்டினையும் வரித் தளத்தினைப் பரவலாக்குவதையும் வரி நிர்வாகத்தினை வலுப்படுத்துவதையும் பிரதான முன்னுரிமைகளாக வலியுறுத்தியுள்ளன. அரசாங்க வருமானத்தினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 20 சதவிகிதத்தினை நோக்கி அதிகரித்து, நேரடியான வரிக்கும் மறைமுகமான வரிக்கும் இடையிலான விகிதாசரத்தினை 40:60 ஆகப் படிப்படியாக முன்னேற்றும் நீண்ட காலக் கொள்கைக் குறிக்கோளானது, இடைக்கால எதிர்வுகூறல்களில் இருந்து வித்தியாசமான பரந்த அரசாங்க வருமான உபாயமார்க்கமாகத் தொடர்ந்திருக்கும்.

செலவினப் பக்கத்தினை நோக்குகையில், அரசாங்கமானது அத்தியாவசியமான சமூகச் செலவினத்தினைப் பாதுகாத்து உற்பத்தித்திறன்மிக்க பகிரங்க முதலீட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வளங்களின் பங்கினை அதிகரிக்கும் அதேவேளை, மதிநுட்பமான செலவின முகாமைத்துவத்தினைத் தொடர்ந்து முன்னுரிமைப்படுத்தும். 2027 ஆம் ஆண்டில் இருந்து பகிரங்க முதலீட்டினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4 சதவிகிதத்திற்கு மேல் பேணுகின்ற ஒரு குறிக்கோளை அரசிறை மூலோபாயக் கூற்று 2027 நிர்ணயிக்கின்றது. திருத்தப்பட்ட மத்திய கால நிதி நிலை அறிக்கையின் கீழ், மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2027 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.1 சதவிகிதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இது இடைக்காலத்தில் உயர் மட்டங்களில் தொடர்ந்திருப்பதற்கு முன்னர் தித்வாவுடன் தொடர்புடைய புனர்நிர்மாணத்தினைப் பகுதியாகப் பிரதிபலிக்கின்றது. எனவே, உயர் மூலதன ஒதுக்கங்கள் உரிய காலத்தில் உற்பத்தித்திறன்மிக்க முதலீடாக மாறுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காகக் கருத்திட்டத் தயார்நிலை, முன்னுரிமைப்படுத்தல், அமுல்படுத்தல் ஆற்றல் மற்றும் பணத்துக்கான பெறுமதி என்பவற்றின் மீது பெரும் வலியுறுத்தல் மேற்கொள்ளப்படும். நிரந்தரமான மீண்டெழுஞ் செலவினக் கடப்பாடுகளின் உருவாக்கத்தினைத் தவிர்க்கும் அதேவேளை, அண்மைக் காலத்தில் மூலதனச் செலவினத்தின் குறைவான நிறைவேற்றம் மற்றும் புனர்நிர்மாணத்தினைத் துரிதப்படுத்துவதற்கான தேவை என்பவற்றின் காரணமாக இது குறிப்பாக முக்கியமானதாகும்.

பகிரங்க நிதி முகாமைத்துவ மறுசீராக்கல்கள் அரசிறை மூலோபாயத்தின் நிறுவன ரீதியான அத்திவாரத்தினைத் தொடர்ச்சியாக வலுவூட்டும். மேலும், பகிரங்க நிதி முகாமைத்துவ சட்டத்தின் செயற்படுத்தலானது வரவுசெலவுத்திட்ட நிறைவேற்றத்தினையும் கடப்பாட்டுக் கட்டுப்பாடுகளையும் அரசிறை அறிக்கையிடல் மற்றும்

அமலாக்கலையும் மேம்படுத்துவதில் தொடர்ந்தும் கவனம் குவிக்கும் என்பதுடன் இதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவத் தகவல் முறைமையின் (ITMIS) தொடர்ச்சியான விரிவு ஆதரவளிக்கும். 2026 ஆம் ஆண்டின் போது, கொள்வனவுச் செலவினம் மற்றும் பயன்பெறும் உரிமையாளர் தகவல் அறிக்கையிடல் உள்ளிட்ட அனர்த்தம் தொடர்பான கொள்வனவுச் செயன்முறைக்காக அரசாங்கம் வலுப்படுத்தப்பட்ட வெளிக்கூறல் தேவைப்பாடுகளையும் அறிமுகப்படுத்திய அதேவேளை, இலத்திரனியல் அரசாங்கக் கொள்வனவுச் செயன்முறையின் அமுல்படுத்தல் தொடர்ந்தும் விரிவடைந்தது, 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அரசாங்கம் மத்திய e-GP தளத்தில் 324 முனைப்பான கொள்வனவு அமைப்புக்களை அறிக்கையிட்டதுடன் e-GP முறைமையின் அடுத்த கட்டம் 2027 ஆம் ஆண்டுக்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடன் நிலைபேறானதன்மையினை மீளுருவாக்கிப் பேணுவதில் அரசாங்கம் தொடர்ந்தும் கடப்பாடு கொண்டுள்ளது. கடன் மறுசீரமைப்பு தற்போது பெருமளவுக்குப் பூர்த்திசெய்யப்பட்டுள்ள அதேவேளை, 2024 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச பொது தனிசு முகாமைத்துவச் சட்டத்திக்கு இணங்க தாபிக்கப்பட்ட படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் கீழ் கடன் முகாமைத்துவம் நிறுவனமயமாக்கப்பட்டுள்ளது. கடன்பெறல் செலவுகளையும் இடர்களையும் முகாமைத்துவம் செய்வதற்கான தற்போதைய சட்டகத்தினை இடைக்காலக் கடன் முகாமைத்துவ உபாயமார்க்கம் (MTDS) 2027 –2030 மற்றும் வருடாந்த கடன்பெறல் திட்டம் 2026 ஆகியன வழங்குகின்றன. உபாயமார்க்கமானது, சலுகை அடிப்படையிலான இருதரப்பு மற்றும் பல்தரப்பு வெளிநாட்டு நிதியிடலில் பெருமளவு சார்ந்திருத்தல், நீண்ட முதிர்ச்சியுடைய உள்நாட்டுச் சாதனங்கள் மூலம் மீள்நிதியிடல் இடரினைப் படிப்படியாகக் குறைத்தல், உள்நாட்டு அரசாங்கப் பிணையங்கள் சந்தை உருவாக்கம் மற்றும் மேம்பட்ட வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பு முகாமைத்துவம் என்பவற்றினை வலியுறுத்துகின்றது. 2032 ஆம் ஆண்டளவில் அரச படுகடனினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 95 சதவிகிதத்திற்குக் கீழ் பேணும் கடன் குறைப்புக் குறிக்கோள் தொடர்ந்தும் முக்கியமான இடைக்கால அரசிறை இலக்காக இருக்கும் அதேவேளை நிலுவையிலுள்ள, அரசாங்க உத்தரவாத சட்டகமானது நிலுவையிலுள்ள உத்தரவாதங்களின் தொகையினை சம்பந்தப்பட்ட 3 வருட சாரசரி மொத்த உள்ளாட்டு உற்பத்தியில் 7.5 சதவீதத்திற்கு குறைவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

2027 வரவுசெலவுத்திட்டத்தினைத் தயாரிப்பதற்கான உபாயமார்க்க அடிப்படையினை வழங்குவதற்காக, அரசிறை சட்டகத்தினை உள்ளடக்கும் மூலோபாயக் கூற்று 2027, 2026–2031 இற்கான நடுத்தர கால நிதி நிலை அறிக்கை, என்பவற்றைக் கூட்டிணைத்து 2027 வரவு செலவுத் திட்ட தயாரிப்புக்காக 2026 ஜூன் மாதம் வெளியிடப்பட்டது. திருத்தப்பட்ட நடுத்தர கால நிதி நிலை அறிக்கை தொடர்ச்சியான பேரின அரசிறை தற்காலிக அதிகரிப்பு மற்றும் மாற்றங்களையும் டித்வா சூறாவளியுடன் தொடர்புடைய 2027 ஆம் ஆண்டிற்கான மேலதிக செலவினத் தேவைப்பாடுகளையும் பிரதிபலிக்கும் அதேவேளை, இடைக்காலத்தில் நியதிச்சட்ட அரசிறை எல்லைகளுடன் பகிரங்க நிதிகளை மீள ஒருங்கிசைவிக்கும் அரசாங்கத்தின் மூலோபாயத்தினைப் பேணுகின்றது.

அரசிறைப் பாதை:

- வலுவான வருமான அதிகரிப்பு முயற்சிகள் மூலமும் அரசாங்கச் செலவினத்தினைச் சீரமைப்பதன் மூலமும் இடைக்காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 2.3 சதவிகித முதன்மை மிகையினைப் பேணுதல்.

- இடைக்காலத்தில், வருமானத்தினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 20 சதவிகிதத்திற்கு உயர்த்தும் நீண்ட காலக் குறிக்கோளை நோக்கிப் படிப்படியாக முன்னேறும் அதேவேளை, இடைக் காலத்தில் அரசாங்க வருமானத்தினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 16 சதவிகிதத்தில் பேணுதல்.

- வரி முறைமையின் முற்போக்குத் தன்மை மற்றும் நியாயமானதன்மை என்பவற்றினை வலுப்படுத்துவதற்காக இடைக் காலம் முதல் நீண்ட காலம் வரையில் நேரடியான வரிக்கும் மறைமுகமான வரிக்கும் இடையிலான விகிதாசாரத்தினை 40:60 எனும் விகிதாசாரத்தினை நோக்கிப் படிப்படியாக முன்னேற்றுதல்.

- பெறுமதி சேர் வரி இயைபுறல் மேம்பாட்டு நிகழ்ச்சித்தின் தொடர்ச்சியாக அமுல் படுத்தல், SVAT இனை நீக்கியதைத் தொடர்ந்து இடர் அடிப்படையிலான பெறுமதி சேர் வரி திரும்பப் பெறல் பொறிமுறையின் உரிய காலத்திலான செயற்பாடு, வரி - இயைபுறல் பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகளைக் கண்காணித்தல், வரிசெலுத்துனர் இடாப்பினைத் தூய்மைப்படுத்தல், இடர் அடிப்படையிலான கணக்காய்வுகள் மற்றும் RAMIS இன் தொடர்ச்சியான நவீனமயமாக்கம் உள்ளடங்கலாக முதன்மையான நேரடி மற்றும் பிரதான வரிகளின் இயைபுறலை வலுப்படுத்தல்.

- இடைக்கால வருமான மூலோபாயத்தினை உருவாக்கி அமுல்படுத்தல். இதற்கு, நாட்டின் ஒட்டுமொத்த வரி முறைமையின் ஆரோக்கியத்தின் மதிப்பீடு, வரித் தளத்தின் விரிவாக்கம், விலக்குகள் மற்றும் ஊக்குவிப்புக்களை முறைப்படுத்தல், மற்றும் மேம்படுத்தப்பட்ட வரி நிர்வாகம் மற்றும் இயைபுறல், வரிக் கொள்கை, நிர்வாகம் மற்றும் சட்டச் சட்டகத்தில் காலவரிசைப்படுத்தப்பட்ட மறுசீராக்கல் நிகழ்ச்சித்திட்டம் என்பன ஆதாரமாக அமைகின்றன.

- பகிரங்க நிதி முகாமைத்துவ சட்டத்தினுள் முதன்மைச் செலவினத்தினை முகாமைத்துவம் செய்தல், விதிவிலக்கான டித்வா தொடர்பான செலவினத்துடன் தொடர்புடைய தற்காலிக அதிகரிப்பினை 2027 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 13.6 சதவிகிதத்திக்கான அங்கீகரித்தல் மற்றும் 2028 ஆம் ஆண்டில் இருந்து முதன்மைச் செலவினத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 12.9 சதவிகிதமாகப் பேணுதல்.

- அரசாங்கத்தின் கடன் குறைப்புக் குறிக்கோளுக்கு ஒத்திசைவாக, இடைக் காலத்தில் ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 சதவிகிதத்திற்கும் குறைவாகக் கட்டுப்படுத்தல்.

- நிலையான முதன்மை மிகைகள், மதிநுட்பமிக்க கடன்பெறல் மற்றும் வலுப்படுத்தப்பட்ட கடன் முகாமைத்துவம் என்பவற்றின் உதவியுடன் 2032 ஆம் ஆண்டளவில் அரச படுகடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 95 சதவிகிதத்திற்கும் கீழே குறைக்கும் குறிக்கோளுக்கு ஒத்திசைவாக அரச படுகடன் குறைப்பினை நிலைக்கச் செய்தல்.

- அரசாங்க உத்தரவாதங்களினால் ஏற்படும் அரசிறை இடர்களைக் கட்டுப்படுத்தல், வலுப்படுத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் உத்தரவாதங்களின் கண்காணிப்பு என்பவற்றின் உதவியுடன், தொடர்புடைய நிதியாண்டினதும் முன்சென்ற இரண்டு நிதியாண்டுகளினதும் சராசரி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7.5 சதவிகிதத்திற்கும் குறைவான நிலையில் நிலுவையில் இருக்கும் அரசாங்க உத்தரவாதங்களின் மீது நியதிச்சட்ட எல்லையினைப் பேணுதல்.

- கருத்திட்டத் தயார்நிலை, முன்னுரிமைப்படுத்தல், கொள்வனவுச் செயன்முறை மற்றும் அமுல்படுத்தல் ஆற்றல் என்பவற்றினை முன்னேற்றும் அதேவேளை, பகிரங்க முதலீட்டினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4 சதவிகிதத்திற்கும் மேல் பேணுதல்.

- பரந்த அடிப்படையிலான மற்றும் முறையாக இலக்குவைக்கப்படாத மானியங்களைத் தவிர்க்கும் அதேவேளை, பாதிப்புறுநிலையிலுள்ள குடும்பங்களை பொருளாதாரம், அனர்த்தம் தொடர்பான தாக்கங்களில் இருந்தும் வெளிநாட்டுத் தாக்கங்களில் இருந்தும் பாதுகாப்பதற்காக இலக்குவைக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு வலைகளை வலுப்படுத்தல்.

- வரவுசெலவுத்திட்ட நிறைவேற்றம், கடப்பாட்டுக் கட்டுப்பாடுகள், அரசிறை அறிக்கையிடல், பண முகாமைத்துவம் மற்றும் ITMIS மற்றும் பகிரங்க நிதி முகாமைத்துவ சட்டகத்தின் அமுல்படுத்தல் மூலமாகச் செலவின நிலுவைகளைத் தடுத்தல் உள்ளடங்கலாக பகிரங்க நிதி முகாமைத்துவத்தினை வலுப்படுத்தல்.

- e-GP இனை விரிவாக்கல், கொள்வனவுச் செயன்முறை வெளிப்படைத்தன்மையினை மற்றும் வகைப்பொறுப்பினை வலுப்படுத்தல், அமுல்படுத்தல் முன்னேற்றமடைகையில் e-GP இனைப் பரந்த PFM முறைமைகளுடன் ஒருங்கிணைத்தல், மற்றும் அனர்த்தம் தொடர்பான கொள்வனவுச் செயன்முறை மற்றும் பயன்பெறும் உரிமையாளர் தகவல் வெளிக்கூறலை முன்னேற்றல்.

- வலுவான கடப்பாட்டுக் கட்டுப்பாடுகள் மூலமும் ITMIS அடிப்படையிலான கண்காணிப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட பண முகாமைத்துவம் மூலமும் செலவின நிலுவை திரளுவதைத் தடுத்தல்.

- தற்காலிக மற்றும் இலக்குவைக்கப்பட்ட உதவியினை அவசியமான போது வழங்கி அதன் மூலம் அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் மூலமாக ஏற்படும் அரசிறை இடர்களைக் கட்டுப்படுத்தும் அதேவேளை செலவினைப் பிரதிபலிக்கும் சக்தி விலையிடலைப் பேணுதல். ஆளுகை, நிதிப் பாதிப்புறுநிலை, அரசாங்கச் சொத்துப் பயன்பாடு மற்றும் எதிர்பாராதவிதமாக ஏற்படும் அரசிறை இடர்களின் முகாமைத்துவம் என்பவற்றினை மேம்படுத்துவதற்காக அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், பகிரங்கச் சொத்து மற்றும் அரச தனியார் துறைப் பங்காண்மை மறுசீராக்கல்களைத் தொடர்தல்.

- மத்திய வங்கியின் இடைக் காலப் பணவீக்க இலக்குவைத்தல் சட்டகத்துக்கும் அரசிறை மற்றும் வெளிநாட்டுப் பாதுகாப்புக்களை மீளுருவாக்குவதற்கான தேவைக்கும் ஒத்திசைவாக விலை ஸ்திரத்தன்மைக்கும் பரந்த பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் ஆதரவு வழங்கல்.

1.3.2 நடுத்தரகால அரசிறைக் கட்டமைப்பு

நடுத்தர கால அரசிறைக் கட்டமைப்பு பின்வரும் பிரதான அரசிறைக் குறிக்கோள்களில் நிலைபெற்றுள்ளது:

- நடுத்தர காலத்தில் அரசாங்க வருமானத்தினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 16 சதவிகிதமாகப் பேணல்.

- பகிரங்க முதலீட்டினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4 சதவிகிதத்திற்கும் மேல் பேணும் அதேவேளை, நடுத்தர காலத்தில் முதன்மைச் செலவினத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13 சதவிகிதம் எனும் நியதிச்சட்ட எல்லையினுள் பேணுதல், விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் பகிரங்க நிதி முகாமைத்துவ சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள தற்காலிக விலகல்கள் நீங்கலாக.

- நடுத்தர காலத்தில் முதன்மை மிகையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் குறைந்தபட்சம் 2.3 சதவிகிதத்தில் பேணுதல்.

- அரசாங்கத்தின் கடன் குறைப்புக் குறிக்கோள்களுக்கு அமைவாக, ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையினை நடுத்தர காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 சதவிகிதத்திற்கும் கீழ் கட்டுப்படுத்தல்.

- நடுத்தர கால கடன் குறைப்புக் குறிக்கோளுக்கு அமைவாக அரச படுகடனினை நிலைபேறான மட்டங்களுக்குப் படிப்படியாகக் குறைத்தல்.

அட்டவணை 1:1 நடுத்தரக்கால அரசிறைக் சட்டகம் : 2027 - 2031

மொ.உ.உ. சதவீதத்தில் (வேறு தகவல் ஏதும் தரப்படாதவரை)

குறிகாட்டி	2025	2026	2027	2027	2028	2029	2030	2031
	தற்காலிகமான	திருத்தப்பட்ட மதிப்பீடு	மதிப்பீடு	வரவு செலவு(அ)	எதிர்வு கூறல்			
மொத்த வருமானம் மற்றும் மானியங்கள்	**16.7**	**16.6**	**15.8**	**15.8**	**15.9**	**16.0**	**16.0**	**16.0**
மொத்த வருமானம்	**16.6**	**16.5**	**15.8**	**15.8**	**15.8**	**15.9**	**15.9**	**15.9**
வரி வருமானம்	15.4	15.2	14.6	14.6	14.6	14.7	14.7	14.7
வரியல்லா வருமானம்	1.2	1.3	1.2	1.2	1.2	1.2	1.2	1.2
மானியங்கள்	**0.1**	**0.1**	**0.1**	**0.1**	**0.1**	**0.1**	**0.1**	**0.1**
மொத்த செலவினம்	**19.0**	**20.3**	**19.7**	**20.3**	**19.8**	**19.7**	**19.4**	**19.3**
மீண்டெழும் செலவினம்	**16.0**	**16.2**	**15.2**	**15.2**	**15.2**	**14.9**	**14.5**	**14.3**
வட்டி அல்லாத மீண்டெழும் செலவினங்கள்	8.3	9.0	8.4	8.5	8.3	8.1	8.0	8.0
வட்டிச் செலவினங்கள்	7.6	7.3	6.8	6.8	6.8	6.7	6.5	6.3
மூலதனம் மற்றும் தேறிய கடன்	**3.0**	**4.1**	**4.5**	**5.1**	**4.6**	**4.8**	**4.9**	**5.0**
அதில் பொது முதலீடுகள்	3.1	4.1	4.5	5.1	4.6	4.8	4.9	5.0
முதன்மை மீதி	**5.4**	**3.6**	**2.9**	**2.3**	**3.0**	**3.0**	**3.0**	**3.0**
வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை	**-2.3**	**-3.7**	**-3.8**	**-4.5**	**-3.9**	**-3.7**	**-3.5**	**-3.3**

மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) குறை நிரப்பு மதிப்பீடு உள்ளடங்கலாக

1.3.3. அரசிறைச்சட்டகத்திலிருந்தான விலகல்களை நியாயப்படுத்தல்

திருத்தப்பட்ட மத்திய கால நிதி நிலை அறிக்கை 2026 ஆம் ஆண்டில் வலுவான வருமான எதிர்வுகூறலையும் மூலதனச் செலவினத்தின் மந்தமான நிறைவேற்றலையும் 2027 ஆம் ஆண்டில் மேலதிக அனர்த்தப் புனர்நிர்மானத் தேவைப்பாடுகளையும் பிரதிபலிக்கின்றது. இதன் விளைவாக வருமானத்திற்கும் முதன்மைச் செலவினத்திற்கும் அரசிறை மீதிகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

அரசாங்க வருமானம்

2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15.8 சதவிகித மற்றும் 2027 ஆம் ஆண்டில் 15.5 சதவிகித மொத்த வருமானத்தினையும் கொடைகளையும் அரசிறை மூலோபாயக் கூற்று 2027 எதிர்வுகூறியது. திருத்தப்பட்ட மத்திய கால நிதி நிலை அறிக்கையின் கீழ், இந்த எதிர்வுகூறல்கள் 2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 16.6 சதவிகிதம் மற்றும் 2027 ஆம் ஆண்டில் 15.8 சதவிகிதம் என மேல்நோக்கித் திருத்தப்பட்டது. இது, வெளியிடப்பட்ட அரசிறை மூலோபாயக் கூற்று எதிர்வுகூறல்கள் தொடர்பில் 2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 0.8 சதவிகிதப் புள்ளிகள் மற்றும் 2027 ஆம் ஆண்டில் 0.3 சதவிகிதப் புள்ளிகள் எனும் சாதகமான விலகலைப் பிரதிபலிக்கின்றது.

வலுவான வருமானத் தோற்றப்பாடானது வரிக் கொள்கை மற்றும் வருமான நிர்வாக மறுசீராக்கல் என்பவற்றின் தொடர்ச்சியான தாக்கத்தினையும் மேம்பட்ட இயைபுறலையும் பொருளாதாரச் செயற்பாடுகளில் மீளலையும் பல பிரதான வரி வகைகளில் இருந்து எதிர்பார்த்ததை விட வலுவான சேகரிப்புக்களையும் பிரதிபலிக்கின்றது. இதில், மோட்டார் வாகன இறக்குமதிகளுடன் தொடர்புடைய வரிகளும் உள்ளடங்குகின்றன. பிரதான வரி வகைகள் மற்றும் வாகனங்கள் தொடர்பான வருமானம் என்பவற்றிலான உறுதியான வளர்ச்சி உள்ளடங்கலாக 2026 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் அரசிறை மூலோபாயக் கூற்று 2027 ஏற்கனவே கணிசமான வருமான மிகைச்செயலாற்றுகையினை அவதானித்திருந்தது. வருமான நிர்வாக மறுசீராக்கல்களின் தொடர்ச்சியான அமுல்படுத்தல் இடைக் காலத்தில் இந்த உயர் வருமானத் தளத்தின் நிலைபேறானதன்மைக்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முதன்மை உபரி

எதிர்பாராத நிகழ்வுகளுக்கும் இயற்கை அனர்த்தங்களுக்கும் ஏற்புடையதான விதிவிலக்கான சூழ்நிலை ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, முதன்மைச் செலவினங்களுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13 சதவிகித நியதிச்சட்ட எல்லையினை பகிரங்க நிதி முகாமைத்துவ சட்டம்நிலைநாட்டுகின்றது. அரசிறை மூலோபாயக் கூற்று 2027 , 2026 ஆம் ஆண்டில் முதன்மைச் செலவினத்தை ஆரம்பத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13.7 சதவிகிதமாக எதிர்வுகூறியது. இது நியதிச்சட்ட எல்லையினை 0.7 சதவிகிதப் புள்ளிகளால் மிகைத்து, டித்வாசூறாவளியைத் தொடர்ந்து வீடமைப்புக்காகவும் உட்கட்டமைப்புப் புனரமைப்புக்காகவும் புனர்வாழ்வு மற்றும் வாழ்வாதார மீளலுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட 500 பில்லியன் ரூபா குறைநிரப்பல் ஒதுக்கீட்டினைப் பிரதானமாகப் பிரதிபலித்தது. எவ்வாறாயினும், குறைநிரப்பு ஒதுக்கீட்டினைத் தாண்டி, மூலதனச் செலவின நிறைவேற்றம், குறிப்பாக, அனர்த்தத்துடன் தொடர்புடைய புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணச் செயற்பாடுகள் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதை விட மந்தமாகவே காணப்பட்டன.

முதன்மைச் செலவினம் 2027 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 12.9 சதவிகிதமாகத் திரும்பும்

என வெளியிடப்பட்ட அரசிறை மூலோபாயக் கூற்று மதிப்பிட்டுள்ளது. எவ்வாறாயினும், ஏராளமான புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணத் தேவைப்பாடுகள் 2026 ஆம் ஆண்டுக்கு அப்பாலும் தொடரும் எனத் தொடர்ச்சியான மதிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன. திருத்தப்பட்ட மத்திய கால நிதி நிலை அறிக்கையின் கீழ், சுமார் 260 பில்லியன் ரூபா மேலதிக செலவினம் 2027 ஆம் ஆண்டில் தேவைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக, 2027 ஆம் ஆண்டில் முதன்மைச் செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 13.6 சதவிகிதமாகத் தற்காலிகமாக உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன் இது நியதிச் சட்ட எல்லையினைவிட சுமார் 0.6 சதவிகிதப் புள்ளிகள் அதிகமாகும்.

எனவே, எதிர்பார்க்கப்படும் 2027 விலகலானது, மீண்டெழும் செலவினத்தில் காணப்படும் உள்ளார்ந்த கட்டமைப்பு ரீதியான அதிகரிப்பினை விட விதிவிலக்கான மற்றும் கால வரம்புக்கு உட்பட்ட அனர்த்த மீளல் செலவினத்துடன் தொடர்புபடுத்தக்கூடியதாகும். மேலதிக செலவினம் வேறாக அடையாளம் காணப்பட்டு, முன்னுரிமைப்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்படும் என்பதுடன் மீண்டெழும் கூறு தற்காலிக மீளல் தேவைப்பாடுகளுக்குக் கண்டிப்பாக வரையறுக்கப்படும். முதன்மைச் செலவினம் 2028 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 12.9 சதவிகிதத்திற்குத் திரும்பி, அதன் பின்னர் நியதிச்சட்ட எல்லையினுள் தொடர்ந்திருக்கும் என எதிர்வுகூறப்படுகின்றது. விலகலானது தற்காலிகமானது மற்றும் அது விதிகளின் அடிப்படையிலான அரசிறைச் சட்டகக் கோட்பாடுகளுடன் ஒத்திசைகின்றது என்பதை எடுத்து விளக்குவதற்குப் நியதிச் சட்ட எல்லைக்கு திரும்புவதற்கான இந்த தெளிவான மீளல் பாதை இன்றியமையாததாகும்.

மூலதனச் செலவினம் மற்றும் பொது முதலீடு

செலவினத்தின் ஆக்கக்கூறானது அரசிறை மூலோபாயக் கூற்றில் எதிர்பார்த்த பாதையில் இருந்து பெருமளவுக்கு வித்தியாசப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.8 சதவிகிதமாகவும் 2027 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.4 சதவிகிதமாகவும் இருக்கும் என வெளியிடப்பட்ட அரசிறை மூலோபாயக் கூற்று எதிர்வுகூறுகின்றது. திருத்தப்பட்ட மத்திய கால நிதி நிலை அறிக்கையின் கீழ், மூலதனச் செலவினமும் தேறிய கடன்வழங்கலும் 2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 4.1 சதவிகிதமாக இருக்கும் என மதிப்பிடப்படுவதுடன் இது சில மூலதனச் செலவினத்தின் எதிர்பார்க்கப்பட்ட நிறைவேற்றலை விட மந்தமாக இருப்பதைப் பிரதிபலிக்கின்ற அதேவேளை டித்வாதொடர்பான மேலதிக புனர்நிர்மாணச் செலவின ஒருங்கிணைப்பினைத் தொடர்ந்து இந்த விகிதாசாரம் 2027 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 5.1 சதவிகிதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முதன்மை மிகை

அரசிறை மூலோபாயக் கூற்று 2027 இல் எதிர்பார்த்ததை விட 2026 ஆம் ஆண்டில் முதன்மை மீதி சிறப்பாகச் செயலாற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது. டித்வாசூறாவளியினாலும் வெளிநாட்டுத் தாக்கங்களாலும் ஏற்பட்ட மேலதிக செலவினத்தின் காரணமாக 2026 ஆம் ஆண்டுக்கான முதன்மை மிகை இலக்கினை வெளியிடப்பட்ட அரசிறை மூலோபாயக் கூற்று 2.1 சதவிகிதமாகத் திருத்தியது. மிக அண்மைய மதிப்பீடுகளின் கீழ், அரசிறை மூலோபாயக் கூற்று மதிப்பீட்டில் இருந்து முதன்மை மீதியானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 1.5 சதவீத புள்ளிகள் எனும் சாதகமான விலகலைப் பிரதிபலித்து 2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 3.6 சதவிகிதமாக இருக்கும் என எதிர்வுகூறப்படுகின்றது. இந்த முன்னேற்றமானது வருடத்தின் போது எதிர்பார்த்ததை விட உறுதியான வருமானத் திரட்டினையும் செலவினக் கட்டுப்பாட்டினையும் எதிர்பார்த்ததை விடக் குறைவான சில குறிப்பிட்ட மூலதனச் செலவின நிறைவேற்றலையும் பிரதிபலிக்கின்றது.

2027 ஆம் ஆண்டுக்காக, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.6 சதவிகித முதன்மை மிகையினை வெளியிடப்பட்ட அரசிறை மூலோபாயக் கூற்று எதிர்பார்க்கின்றது. திருத்தப்பட்ட மத்திய கால நிதி நிலை அறிக்கையின் கீழ், வலுவான வருமானத் தோற்றப்பாடானது மேலதிக புனர்நிர்மாணச் செலவினத்தை இணைப்பதற்கு முன்னர் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.9 சதவிகித முதன்மை மிகைக்கு ஆதரவளித்திருக்கும். டித்வா சூறாவளியுடன் தொடர்புடைய மேலதிகச் செலவினத்தினை உள்ளடக்கியதைத் தொடர்ந்து முதன்மை மிகையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 2.3 சதவிகிதம் எனும் மிதமான நிலையினை அடையும் என எதிர்வுகூறப்படுகின்றது. இதன்பிரகாரம், கணிசமான மேலதிக புனர்நிர்மானச் செலவினத்தினையும் தாண்டி, திருத்தப்பட்ட 2027 முதன்மை மீதியானது வெளியிடப்பட்ட அரசிறை மூலோபாயக் கூற்றில் இருந்து 0.3 சதவிகிதப் புள்ளி எனும் குறைவான கீழ்நோக்கிய விலகலையே பிரதிபலிக்கின்றது.

முக்கியமாக, எதிர்வுகூறப்பட்ட 2.5 சதவிகித முதன்மை மிகையானது 2027 ஆம் ஆண்டுக்கான இடைக்கால இலக்காக IMF-EFF நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட 2.3 சதவிகித முதன்மை மிகை மட்டத்தினை விடத் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்படுகின்றது. எனவே, மேலதிக புனர்நிர்மாண நிகழ்ச்சித்திட்டம் முதன்மை மீதியினை இற்றைப்படுத்தப்பட்ட குறைநிரப்பலுக்கு முன்னரான அடிப்படை தொடர்பில் குறைத்தாலும், திருத்தப்பட்ட மீதியானது தொடர்ந்தும் இடைக்காலக் கடன் நிலைபேறானதன்மைக் குறிக்கோள்களுடன் பரந்த வகையில் ஒத்திசைவாகவே காணப்படுகின்றது.

ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை

ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்ட மீதியும் வெளியிடப்பட்ட அரசிறை மூலோபாயக் கூற்றில் எதிர்பார்க்கப்பட்டதை விட மிகவும் சாதகமாகச் செயலாற்றும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. 2026 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.6 சதவிகிதமாக இருக்கும் என அரசிறை மூலோபாயக் கூற்று 2027 எதிர்வுகூறியுள்ளமையானது டித்வாசூறாவளியுடன் தொடர்புடைய குறைநிரப்பல் செலவினத்தின் தாக்கத்தினையே பெரிதும் பிரதிபலிக்கின்றது. பற்றாக்குறை 2027 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.5 சதவிகிதமாகச் சுருங்கி அதன் பின்னர் 5 சதவிகிதத்திற்கும் குறைவாகத் தொடர்ந்து காணப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட மத்திய கால நிதி நிலை அறிக்கையின் கீழ், வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையானது 2026 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 3.7 சதவிகிதமாக இருக்கும் என எதிர்வுகூறப்படுவதுடன் இது அரசிறை மூலோபாயக் கூற்று எதிர்வுகூறலை விடக் கணிசமாகக் குறைவானதாக இருப்பதுடன் வருடத்தின் போது உறுதியான வருமானச் செயலாற்றுகை மற்றும் செலவின மாற்றங்களைப் பிரதிபலிக்கின்றது. 2027 ஆம் ஆண்டுக்காக, டித்வாதொடர்பான மேலதிக செலவினத்தினைச் சேர்த்த பின்னர் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.5 சதவிகிதமாக இருக்கும் என எதிர்வுகூறப்படுவதுடன் குறைநிரப்பல் புனர்நிர்மாணத் தேவைப்பாட்டுக்கு முன்னரான இற்றைப்படுத்தப்பட்ட அடிப்படையின் கீழ் காணப்பட்ட 3.8 சதவிகிதத்துடன் ஒப்பிடுகையில் இது அதிகமானதாகும். எனவே, மேலதிகச் செலவினமானது குறைநிரப்பலுக்கு முன்னரான நிலை தொடர்பில் 2027 பற்றாக்குறையினை உயர்வானதாக ஆக்கினாலும், பற்றாக்குறையானது 5 சதவிகித இடைக்கால எல்லையினை விடக் கீழேயும் எதிர்வுகூறப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.5 சதவிகிதத்திற்குக் கீழேயும் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

இதன் பிரகாரம், 2026 ஆம் ஆண்டிலும் 2027 ஆம் ஆண்டிலும் காணப்பட்ட தற்காலிக விலகல் அரசாங்கத்தின் பரந்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைக் குறைப்பு மூலோபாயத்தில் இருந்து விலகிச் செல்வதைக் குறிக்கவில்லை. மாறாக, வலுவான வருமானச் செயலாற்றுகை, முதன்மை மீதிகள் மற்றும் இடைக்காலக் கடன் குறைப்புப் பாதை என்பவற்றினைப் பேணும் அதேவேளை, இவை விதிவிலக்கான அதிர்ச்சிகளுக்கு பதிற்செயற்பாடாற்றுவதற்காகக் கவனமாக வரையறுக்கப்பட்ட அரசிறை நெகிழ்வுத்தன்மையினைப் பிரதிபலிக்கின்றன.

இடைக்கால அரசிறைப் பாதைக்குத் திரும்பல்

விதிவிலக்கான செலவினம் தொடர்ந்தும் தற்காலிகமானதாகவும் இலக்குவைக்கப்பட்டதாகவும் வெளிப்படைத்தன்மையுடன் முகாமைத்துவம் செய்யப்படுவதாகவும் உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் ஆற்றலிலேயே தற்காலிக விலகல்களின் நம்பகத்தன்மை தங்கியுள்ளது. முதன்மை செலவினம் 2028 ஆம் ஆண்டில் இருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 12.9 சதவிகிதமாகத் திரும்புவதற்கான ஏற்பாடுகளைத் திருத்தப்பட்ட மத்திய கால நிதி நிலை அறிக்கை வழங்குகின்ற அதேவேளை, முதன்மைச் மிகை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 3.0 சதவிகிதமாக வலுவடையும் என்றும் அரசாங்க வருமானம் தொடர்ந்தும் இடைக்காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 16 சதவிகிதமாக இருக்கும் என்றும் எதிர்வுகூறப்படுகின்றது.

தொடர்ச்சியான வருமானத் திரட்டு, செலவின முன்னுரிமைப்படுத்தல், மேம்படுத்தப்பட்ட பகிரங்க முதலீட்டு முகாமைத்துவம், வலுப்படுத்தப்பட்ட கடப்பாடு மற்றும் பணக் கட்டுப்பாடுகள் மற்றும் அனர்த்தத்துடன் தொடர்புடைய செலவினக் கண்காணிப்பு என்பன சாதாரண அரசிறைப் பாதைக்குத் திரும்புவதற்கான ஆதாரங்களாக அமையும். கடன் நிலைபேறானதன்மையினைச் சமரசம் செய்யாமல், எதிர்கால உள்நாட்டு அதிர்ச்சிகள் மற்றும் வெளிநாட்டு அதிர்ச்சிகளைத் தாங்குவதற்கான அதன் ஆற்றலை வலுப்படுத்துவதற்காக அரசாங்கம் தொடர்ந்தும் அரசிறைப் பாதுகாப்புக்களை மீளுருவாக்கும்.

எனவே, டித்வா சூறாவளியுடன் தொடர்புடைய தற்காலிக விலகல்கள், விதிவிலக்கான சூழ்நிலைகளுக்கு பதிற்செயற்பாடாற்றுவதற்காகக் கவனமாக வரையறுக்கப்பட்ட நெகிழ்வுத்தன்மையுடன் அரசிறைக் கட்டுப்பாடுகளை இணைக்கும் விதிகளின் அடிப்படையிலான அரசிறைச் சட்டகத்தின் பரந்த சூழமைவினுள்ளேயே நோக்கப்பட வேண்டும். 2028 ஆம் ஆண்டில் இருந்து இயையுறல் பாதைக்குத் திரும்புவதற்கான தெளிவான திட்டமும் அதனுடன் சேர்ந்த நிலையான முதன்மை மீதிகளும் வலுவான வருமானத் திரட்டும் அரசிறைச் சட்டகத்தின் நம்பகத்தன்மையினைப் பாதுகாத்து அரச படுகடனில் தொடர்ச்சியான சரிவுக்கு ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பகுதி II

வரவுசெலவுத்திட்ட, பொருளாதார மற்றும் நிதி நிலை அறிக்கை - 2027

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் கீழ் கௌரவ நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் வெளியிடப்பட்டது

இந்த அறிக்கையானது 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட நாளில் நிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இது மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைகள், வேலைவாய்ப்பு, சென்மதி நிலுவை, வருமானம் மற்றும் செலவினம், அரசாங்க கடன், மேற்கூறிய மதிப்பீடுகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் அடிப்படை தொடர்பான மதிப்பீடுகளை உள்ளடக்கியதுடன் இவ்வறிக்கையில் அடங்கியுள்ள தகவல்கள், இயன்ற வரையில், அரசின் அனைத்துத் தீர்மானங்களைகளையும் அரசிறை மற்றும் பொருளாதார நிலைமையின் மீது பொருள் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்து சூழ்நிலைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்கின்றன.

02

அரசிறை அபிவிருத்திகள், திறைசேரி தொழிற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு நிதியிடல்

2.1 மேன்நோக்கு

2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முனைகளில் ஏற்பட்ட பல அதிர்வுகளுக்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை நிலை மீண்டெழும் தன்மையுடன் காணப்பட்டதுடன், விரைவான கொள்கைப் பதிற்செயற்பாடுகளுக்குப் போதுமான அரசிறை இடைவெளியினை ஏற்படுத்தி, நடைமுறைக் கணக்கு, முதன்மை மற்றும் ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்ட மீதிகளில் மிகைகளைப் பதிவுசெய்து, வறியோரையும் பாதிப்புறுநிலையிலுள்ளோரையும் பாதுகாத்தது. இக்காலப்பகுதியில், மானியங்கள் உள்ளிட்ட அரசாங்கத்தின் வருமானம் 21.2 சதவிகிதத்தினால் அதிகரித்த அதேவேளை மீண்டெழும் செலவினம் 4.4 சதவிகிதத்தினால் மாத்திரமே அதிகரித்திருந்தது, இதன் பிரகாரம், 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஏற்பட்ட ரூபா 411.0 பில்லியன் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையுடன் நோக்குகையில் இக்காலப்பகுதியில் ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டமானது 35.4 பில்லியன் ரூபா மிகையினைப் பதிவுசெய்ததுடன் முதன்மை மிகை 1,276.5 பில்லியன் ரூபாவில் இருந்து 368.1 பில்லியன் ரூபாவினால் அதிகரித்து 1,644.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மூலதனச் செலவின நிறைவேற்றம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சவால்கள் காரணமாக வருடாந்த மதிப்பீட்டின் 25.4 சதவிகிதமாகவே குறைவாகக் காணப்பட்டது. டித்வா சூறாவளியைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட மீளல் மற்றும் புனர்நிர்மாணம் ஆகியவற்றினால் ஏற்பட்ட மேலதிக செலவினத் தேவைப்பாடுகளைத் தாண்டியும் மத்திய கிழக்கில் ஏற்பட்ட மோதலின் தாக்கத்தினைத் தணிப்பதற்காக நாட்டில் முன்னெடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகளுக்காகத் தேவைப்பட்ட மேலதிக செலவினத் தேவைப்பாடுகளைத் தாண்டியுமே இந்த முன்னேற்றம் எட்டப்பட்டது. வருமான அடிப்படையிலான அரசிறை ஒன்றிணைப்பினதும் கட்டமைப்பு ரீதியான அரசிறைச் சீர்திருத்தங்களினதும் தொடர்ச்சியான அமுல்படுத்தலே அரசிறைப் பலாபலன்களுக்கு ஆதாரமாக அமைந்தது. வரி அடிப்படையினைப் பரந்ததாக ஆக்குவதற்கான வரிக் கொள்கை நடவடிக்கைகளும் வருமான நிர்வாகத்தின் நவீனமயமாக்கமும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் அரசிறை மேற்பார்வையின் வலுப்படுத்தலும் அரச நிதி மற்றும் முதலீட்டு முகாமைத்துவத்தில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாடுகளும் இவற்றுள் உள்ளடங்குகின்றன.

2026 ஜூன் மாத முடிவின் போதுள்ளவாறாக, 1,244.1 பில்லியன் ரூபா முதன்மை மிகையானது, சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட கடன் வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட 72 பில்லியன் ரூபா எனும் அளவிடும் அடிப்படையிலான செயலாற்றுகைத் தெரிவிடிப்படை இலக்கினைக் கணிசமாக விஞ்சியுள்ளது. தித்வா சூறாவளி அரசிறையின் மீது ஏற்படுத்திய தாக்கத்தினை நோக்கும்போது, முதன்மைச் செலவினம் 2026 ஆம் ஆண்டில் மொத்தத் உள்நாட்டு உற்பத்தியின் 13 சதவிகிதம் எனும் எல்லையினை மிகைப்பதை அனுமதிப்பதற்கு 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் உள்ள தப்பித்தல் வாசகம் பயன்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம், IMF-EFF நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2026 ஆம் ஆண்டுக்காக ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட மொத்தத் உள்நாட்டு உற்பத்தியின் 2.3 சதவிகிதம் எனும் முதன்மை மீதி இலக்குக் குறைக்கப்பட்ட அதேவேளை, 2027 ஆம் ஆண்டிலிருந்து மொத்தத் உள்நாட்டு உற்பத்தியின் 2.3 சதவிகிதம் எனும் முதன்மை மீதி இலக்குக்கு மீண்டும் வருவதற்கும் முதன்மைச் செலவின எல்லைக்கு மீண்டும் வருவதற்கும் அரசாங்கம் தொடர்ந்தும் கடப்பாடு கொண்டுள்ளது. இதேவேளை, வரவு செலவுத்திட்டத்தின் நடப்புக் கணக்கு மீதி 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 467.2 பில்லியன் ரூபா மிகையாக மாறியுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 86.6 பில்லியன் ரூபா பற்றாக்குறையில் இருந்தே இந்த மிகை ஏற்பட்டுள்ளது. வட்டிக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட மீண்டெழும் செலவினத்திற்குப் பூரணமாக நிதியளிப்பதற்கு அரசாங்கத்தின் வருமானம் போதுமானதாக இருந்தது என்பதையே இது காட்டுகின்றது.

அட்டவணை 2.1 | அரசிறைச்செயற்பாடுகளின் சுருக்கம்

ரூபா . மில்லியன்

விபரம்	சன - ஓக.	
	2025	2026 (அ)
வருமானமும் மாணியங்களும்	**3,301,459**	**4,002,317**
வருமானம்	**3,294,740**	**3,998,291**
வரி	3,068,495	3,683,527
வரி அல்லாத	226,244	314,764
மாணியம்	6,720	4,026
செலவினம்	**3,712,492**	**3,966,913**
நடைமுறை	**3,381,309**	**3,531,045**
சம்பளம்	760,687	826,962
வட்டிக் கொடுப்பனவுகள்	1,687,571	1,609,194
பிற	933,051	1,094,889
மூலதன மற்றும் கடன் வழங்கல்	**331,183**	**435,867**
அரசாங்க முதலீடுகள்	338,846	446,283
பிற	-7,663	-10,416
நடை முறைக்கணக்கு பற்றாக்குறை (-)/மிகை (+)	**-86,569**	**467,245**
முதன்மை இருப்பு பற்றாக்குறை (-)/மிகை (+)	**1,276,538**	**1,644,598**
மொத்த வரவு செலவுதிட்ட பற்றாக்குறை (-)/மிகை (+)	**-411,033**	**35,404**
நிதியளிப்பு	**411,033**	**-35,404**
வெளிநாட்டு நிதியளிப்பு (தேறிய)	-51,849	29,712
உள்நாட்டு நிதியளிப்பு (தேறிய)	462,882	-65,116

மூலம் : அரசிறைக் கொள்கை திணைக்களம்
(அ) தற்காலிகமானது

2025 ஆம் ஆண்டில் முதல் எட்டு மாதங்களில் 3,301.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மானியங்கள் உள்ளிட்ட மொத்த அரசாங்கம் வருமானமானது 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 21.2 சதவிகிதத்தினால் அதிகரித்து 4,002.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 5,300.0 பில்லியன் ரூபா எனும் வருடாந்த மதிப்பீட்டின் 75.5 சதவிகிதத்தினை அடைந்துகொண்டமையினைக் குறிக்கின்றது. வரி வருமானம் 20.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 3,683.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை, வரி சாரா வருமானமானது 39.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 314.8 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கான பிரதான காரணம் இலங்கை மத்திய வங்கியில் இருந்தான 42.1 பில்லியன் ரூபா இலாப மாற்றங்களாகும். 2026 ஜூன் முடிவின் போதுள்ளவாறாக, 2,000 பில்லியன் ரூபா எனும் வரி வருமானத்திற்கான QPC இலக்கு 710.6 பில்லியன் ரூபாவினால் விஞ்சப்பட்டு 2,710.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. வருமானம் சேகரிக்கும் முகவர்களின் மத்தியில், இலங்கைச் சுங்கம் 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது அதன் வரி வருமான மதிப்பீட்டின் 78.3 சதவிகிதத்தினை அடைந்துகொண்டது. இதற்கான பிரதான காரணம் மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தித் தீர்வையாகும். இது அதன் வருடாந்த மதிப்பீடான 30.5 சதவிகிதத்தினை மிகைத்த அதேவேளை உள்நாட்டு இறைவரித் திணைக்களமும் மதுவரித் திணைக்களமும் முறையே அவற்றின் வருடாந்த மதிப்பீடுகளில் 71.9 சதவிகிதத்தினையும் 74.5 சதவிகிதத்தினையும் அடைந்துகொண்டன. இலங்கைச் சுங்கத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானத்தின் பாரிய மூலமாக இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி காணப்பட்டதுடன் இது மொத்தச் சேகரிப்புக்களில் சுமார் 35 சதவிகிதமாகக் காணப்படப்பட்டது.

வரி வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்கான பிரதான காரணம் பெறுமதி சேர் வரியில் இருந்தும் வருமான வரிகளில் இருந்தும் உற்பத்தித் தீர்வை மற்றும் மதுவரியில் இருந்தும் பெற்றுக்கொண்ட உயர் சேகரிப்பாகும். இவை மொத்த வரி வருமானத்தில் முறையே 35.9 சதவிகிதமாகவும் 22.4 சதவிகிதமாகவும் 20.3 சதவிகிதமாகவும் காணப்பட்டன. பெறுமதி சேர் வரியில் இருந்தான வருமானம் 22.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 1,322.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. உள்நாட்டுச் செயற்பாடுகள் மீதான பெறுமதி சேர் வரி 27.5 சதவிகிதத்தினால் அதிகரித்திருந்தது. உள் நாட்டு பொருளாதார செயற்பாடுகளின் விரிவாக்கத்தினையும் மேம்பட்ட பெறுமதி சேர் வரி இயைபுறளையும் இது பிரதானமாக பிரதிபலிக்கிறது. அதேவேளை, இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி 15.9 சதவிகிதத்தினால் அதிகரித்தது. அதிகூடிய இறக்குமதிகள், குறிப்பாக மோட்டார் வாகன இறக்குமதிகள் மற்றும் ரூபாவின் மதிப்பிறக்கம் என்பன இதற்கு ஆதாரமாக அமைந்தன. உற்பத்தித் தீர்வையில் இருந்தான வருமானம் 23.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 748.0 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கான பிரதான காரணம், மோட்டார் வாகனங்கள் மீதான கலால் தீர்வை 28.3 சதவிகிதத்தினால் அதிகரித்து 347.0 பில்லியன் ரூபாவாக வருமானம் காணப்பட்டமையாகும். அதிக உற்பத்தி காரணமாக மதுபானம் மீதான மதுவரி 24.3 சதவிகிதத்தினால் அதிகரித்தது. இதற்கான காரணம், மதுபான உற்பத்தி மீதான தீர்வைக் கொடுப்பனவுகளின் காலத்திட்ட அமைப்புத் தொடர்பான புதிய விதிகளும் கட்டண அறவீடுகளும் உயர் உற்பத்தியும் ஆகும். இதேவேளை, சிகரட்டுக்கள் மீதான உற்பத்தித் தீர்வை 22.6 சதவிகிதத்தினால் அதிகரித்தது.

வருமான வரிகளில் இருந்தான வருமானம் 17.6 சதவிகிதத்தினால் அதிகரித்து 825.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது பிரதானமாக, மதுபானம், புகையிலை, மற்றும் பந்தயம் மற்றும் சூதாட்டத் தொழிற்துறைகளுக்கு ஏற்புடையதான கட்டணங்கள் 40 சதவிகிதத்தில் இருந்து 45 சதவிகிதமாக அதிகரிக்கப்பட்ட காரணத்தினையடுத்துக் கூட்டாண்மை நிறுவன வருமான வரி 21.9 சதவிகிதத்தினால் அதிகரிக்கப்பட்டமையினையும் வெளிநாட்டு மூலங்களில் இருந்து பெற்றுக்கொண்ட ஆதாயங்கள் மற்றும் இலாபங்கள் மீது 15 சதவிகித வரி அறிமுகப்படுத்தப்பட்டமையினையும் பிரதிபலிக்கின்றது. வட்டி வருமானம் மீதான பிடித்துவைக்கும் வரி வீதம் 5 சதவிகிதத்தில் இருந்து 10 சதவிகிதமாக அதிகரிக்கப்பட்டமையினையும் இது பிரதிபலிக்கின்றது. சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரி அறவீட்டில் இருந்து கிடைத்த வருமானம் 22.2 சதவிகிதத்தினால் அதிகரித்து 233.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பபட்டதுடன் இறக்குமதிகள் மீதான சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரி அறவீடு 53.0 சதவிகிதத்தினால் அதிகரித்தது. வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகளில் இருந்தான வருமானம் 15.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 491.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. சுங்க இறக்குமதித் தீர்வை 33.1 சதவிகிதத்தினால் அதிகரிக்கப்பட்டமையினால் இது உந்தப்பட்டதுடன் இது ஆகக்கூடிய வாகன இறக்குமதிகளையும் மோட்டார் வாகனங்கள் மீது ஏற்புடையதான சுங்க இறக்குமதித் தீர்வை மீது 50 சதவிகித கூடுதல் கட்டணம் விதிக்கப்பட்டமையினையும் பிரதிபலிக்கின்றது.

இக்காலப்பகுதியில், வரிக் கொள்கையும் நிர்வாக மறுசீராக்கல்களும் வருமானத் திரட்டுக்குத் தொடர்ந்தும் ஆதரவளித்தன. 2026 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட வரிக் கொள்கை நடவடிக்கைகள், 2026 ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் செயலூக்கம் பெறும் வகையில் இறக்குமதி செய்யப்படும் துணிகள் மீது நியமப் பெறுமதி சேர் வரி வீதத்தினைப் பிரயோகிப்பதையும் 2026 மே மாதம் 1 ஆம் திகதி முதல் செயலூக்கம் பெறும் வகையில் மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில், உற்பத்தி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அவற்றின் மீது சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரி அறவீட்டினை விதிப்பதையும் உள்ளடக்குகின்றது. நான்கு அடுக்குச் சுங்க இறக்குமதித் தீர்வைக் கட்டமைப்பின் அறிமுகம் மூலமாகவும் இடைநிலை உள்ளீடுகள் மீதான செஸ் இனை அகற்றியமை மூலமாகவும் தேசிய தீர்வைக் கொள்கையின் முதற் கட்டமும் அமுல்படுத்தப்பட்டது.

வருமான நிர்வாகத்தில், SVAT முறைமையில் இருந்து இடர்வரவினை அடிப்படையாகக் கொண்ட பெறுமதி சேர் வரியினைத் திருப்பி அளித்தல் முறைமைக்கு இடைமாற்றம் அடைந்தமை வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டது. வரிசெலுத்துனர் பதிவேட்டினைத் தூய்மைப்படுத்தி

இற்றைப்படுத்துவதன் முதற் கட்டத்தினை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பூர்த்திசெய்து உயர் செல்வம் படைத்த தனிநபர்களை இலக்குவைக்கும் இடர்வரவு அடிப்படையிலான கணக்காய்வுகளை முன்னெடுத்துள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் சகல வரிகளும் வருமான நிர்வாக முகாமைத்துவத் தகவல் முறைமையினால் தொடர்ந்தும் செயன்முறைப்படுத்தப்படுகின்றன என்பதுடன் எளிமைப்படுத்தப்பட்ட தனிப்பட்ட வருமான வரித் திரும்பல், முன்பே பூர்த்திசெய்யப்பட்ட தெரிவுடன் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. வரி இயைபுறல் தொடர்பான பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள் தொடர்ந்தும் பின்தொடரப்பட்டு காலாண்டுக்கு ஒரு தடவை அறிக்கையிடப்படும் அதேவேளை, வருமானம் சேகரிக்கும் ஒவ்வொரு முகவரினாலும் மேற்கொள்ளப்படும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளின் அமுல்படுத்தல் பற்றிய காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் தொடர்ந்தும் வெளியிடப்பட்டு வருகின்றன. இதேவேளை, சுங்கப் பிரகடனங்களின் நேருக்கு நேர் மேற்கொள்ளப்படும் மீளாய்வினை இலங்கைச் சுங்கம் இல்லாமலாக்கி வருவதுடன் இலக்க முறைக் கையொப்பங்களின் அறிமுகத்துடன் இடர்வரவு அடிப்படையிலான இசைவினை வலுப்படுத்தி வருகின்றது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 3,712.5 பில்லியனாகக் காணப்பட்ட அரசாங்கத்தின் மொத்தச் செலவினம் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் போது 6.9 சதவிகிதத்தினால் அதிகரித்து 3,966.9 பில்லியனாக மாறியது. 7,557.0 பில்லியன் ரூபா வருடாந்த மதிப்பீட்டுக்கு எதிராக நோக்குகையில் இது 52.5 சதவிகித அடைவாகும் என்பதுடன் இது தித்வா சூறாவளியினைத் தொடர்ந்து மீளலுக்காகவும் புனர்நிர்மாணத்திற்காகவும் பாராளுமன்றத்தினால் 2025 டிசம்பர் 19 அன்று அங்கீகரிக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீடான 500 பில்லியன் ரூபாவினை இது உள்ளடக்குகின்றது. வட்டிக் கொடுப்பனவு நீங்கலான முதன்மைச் செலவினம் 16.4 சதவிகிதத்தினால் அதிகரித்து 2,357.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது, மானியங்கள் மற்றும் மாற்றங்கள் மீதும் மூலதனச் செலவினம் மற்றும் சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட உயர் செலவினத்தினைப் பிரதானமாகப் பிரதிபலிக்கின்றது.

மீண்டெழும் செலவினம் 4.4 சதவிகிதத்தினால் அதிகரித்து 3,531.0 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இதற்கான பிரதான காரணம் மானியங்கள் மற்றும் மாற்றங்கள் மீதான செலவினம் 23.2 சதவிகிதத்தினால் அதிகரித்து 890.3 பில்லியனாகக் காணப்பட்டமையும் சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் மீதான செலவினம் 8.7 சதவிகிதத்தினால் அதிகரித்து 827.0 பில்லியனாகக் காணப்பட்டமையும் ஆகும். 2026 ஜனவரி மாதத்தில் இருந்து செயலூக்கம் பெறும் வகையில் அரச துறைச் சம்பளத் திருத்தத்தின் இரண்டாம் கட்டத்தின் அமுல்படுத்தலே சம்பளங்கள் மற்றும் ஊதியங்களின் அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும். குடும்பங்களுக்கான மாற்றங்களினுள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 17.5 சதவிகிதத்தினால் அதிகரித்து 332.4 பில்லியனாகக் காணப்பட்டமையானது ஓய்வூதியத் திருத்தங்களுடன் ஓய்வூதிய முரண்பாடுகளைத் தீர்த்தமையினைப் பிரதிபலிக்கின்றது. இதேவேளை, அசுவெசும காசு மாற்றங்கள் 14.6 சதவிகிதத்தினால் அதிகரித்து 164.3 பில்லியனாகக் காணப்பட்டமையானது, தித்வா சூறாவளியின் தாக்கத்தினைத் தொடர்ந்து அதற்கான பதிற்செயற்பாடாக 'பாதிப்புறுநிலை' வகையிலுள்ள குடும்பங்களுக்கு நலன்புரிக் கொடுப்பனவுகள் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டமையினைப் பிரதிபலிப்பதுடன் சேர்த்து 2026 ஏப்ரில் மாதத்தில் ஒரே தடவையில் வழங்கப்பட்ட பண நிரப்பலையும் பிரதிபலிக்கின்றது. இலவச மருந்துகளின் மீதான செலவினம் 52.4 சதவிகிதத்தினால் அதிகரித்து 115.3 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது அரசாங்க வைத்தியசாலைகளுக்கான மருத்துவ விநியோகங்களின் மீதான உயர் செலவினத்தினைப் பிரதிபலிக்கின்றது. எவ்வாறாயினும், பண்டங்கள் மற்றும் சேவைகளின் மீதான செலவினம் 2.9 சதவிகிதத்தினால் வீழ்ச்சியடைந்து 204.6 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது இத்தகைய இயக்கச் செலவினத்தின் மீதான இறுக்கமான கட்டுப்பாடுகளைப் பிரதிபலிக்கின்றது.

மத்திய கிழக்கில் ஏற்பட்ட மோதலின் விளைவால் எரிபொருள் விலைகள் அதிகரித்தமைக்கான பதிற்செயற்பாடாக டீசல் லீற்றர் ஒன்றுக்கு ரூபா 100, பெற்றோல் லீற்றர் ஒன்றுக்கு ரூபா 20 என்ற எரிபொருள் மானியங்களும் மாதாந்தம் 180 kWh இற்கும் குறைவான மின்சாரத்தினை நுகரும் குடும்பங்களுக்கான மின்சார மானியங்களும் வதிவிடம் சாராக் கட்டணத்தின் தெரிவுசெய்யப்பட்ட குறைவான நுகர்வுப் பிரிவினருக்கான மின்சார மானியங்களும் விவசாயிகளுக்கான யால பருவத்திற்கான அதிகரிக்கப்பட்ட உர மானியங்களும் அஸ்வெசும பயனாளர்களுக்கான ஒரு தடவையில் கொடுத்து முடிக்கப்பட்ட பண நிரப்பல்களும் உள்ளடங்குகின்றன. 2026 செப்டெம்பர் முடிவில் 105.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட இந்தப் பொதி வரவு செலவுத்திட்டத்தினுள்ளேயே வழங்கப்பட்டு, வருடாந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கம் மற்றும் செலவின மீள்ஒதுக்கீடுகளினூடாக நிதியளிக்கப்பட்டது. மோதல் தொடர்ந்தமையினால், 2026 வரவு செலவுத்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லைக்குள் மீள்ஒதுக்கீடுகள் மூலம் ஈடுசெய்யப்படும் வகையில், மதிப்பீட்டுச் செலவு 47 பில்லியன் ரூபாவுடன் இலக்கிடப்பட்ட ஆதரவினை 2026 இறுதிவரை நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. இதற்கமைய, 2026 ஒக்டோபர் முதல் டிசம்பர் வரை ஓட்டோ டீசலுக்கு 40.7 பில்லியன் ரூபா வரையிலான மானியம் வழங்கப்படுவதுடன் இது 2026 டிசம்பர் 31 இல் முடிவடையும் 2027 வரவு செலவுத்திட்டத்தில் எரிபொருள் மானியங்களுக்கு ஏற்பாடு எதுவும் இல்லை. மேலும், மிகவும் வறிய குடும்பமொன்றுக்கு 6,250 ரூபாவும் வறிய குடும்பமொன்றுக்கு 4,000 ரூபாவும் அசுவெசும பயனாளிகளுக்கு 6 பில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவில் வழங்கப்படுகின்றது. 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளின் போது, உயர் எரிசக்திச் செலவுகளின் பகுதிப் பகிர்வினால் எழும் இழப்புக்களுக்காக வரவு செலவுத் திட்ட நிதி மாற்றம் மூலம் எரிபொருள் விநியோகத்தர்களுக்கும் மின்சாரத் துறைக்கும் நட்டஈடு வழங்கப்பட்டதுடன் 2026 மே மாதத்தில் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கும் வகையில் திருத்தப்பட்டன.

அட்டவணை 2.2 | மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினம் - 2026

ரூபா.பில்லியன்

விபரம்	வருடாந்த மதிப்பிடப்பட்ட	ஜன - ஒக. (தற்காலிகமானது)	அடைவு%
மொத்த வருமானம்	**5,270.0**	**3,998.3**	**75.9**
வரி வருமானம்	**4,910.0**	**3,683.5**	**75.0**
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்			
வருமானம் மற்றும் இலாபம் மீதான வரி	1,210.0	825.6	68.2
பெறுமதி சேர் வரி - உள்நாட்டு (தேறிய)	937.0	723.6	77.2
சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (உள்நாட்டு)	236.0	164.3	69.6
ஏனைய	18.1	13.9	77.0
உப மொத்தம்	**2,401.1**	**1,727.5**	71.9
சுங்கத் திணைக்களம்			
பெறுமதி சேர் வரி - இறக்குமதிகள் (தேறிய)	875.0	599.0	68.5
சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (இறக்குமதி)	97.0	68.9	71.0
துறைமுக விமானநிலைய அபிவிருத்தி அறவீடு	190.0	130.8	68.8
செஸ் அறவீடு	90.0	54.5	60.5
விசேட வியாபாரப் பண்ட அறவீடு	129.0	105.0	81.4
இறக்குமதி தீர்வை	235.0	201.0	85.5
உற்பத்தி விசேட ஏற்பாடுகள்			
சிகரெட்டுகள்	105.0	75.7	72.1
பெற்றோலிய உற்பத்திகள்	205.0	135.1	65.9
மோட்டார் வாகன வரிகள் மற்றும் ஏனையவை	279.0	354.8	127.2
ஏனைய	1.1	2.1	181.6
உப மொத்தம்	**2,206.1**	**1,726.8**	**78.3**
மதுவரித் திணைக்களம்			
மதுபானம் / புகையிலை	245.0	182.4	74.5
உப மொத்தம்	**245.0**	**182.4**	**74.5**
ஏனையவை			
தொலைதொடர்பு அறவீடு	17.0	9.3	54.9
உரிமப் பத்திர வரி மற்றும் பிற	40.8	37.5	92.0
உப மொத்தம்	**57.8**	**46.8**	**81.1**
வரி அல்லாத வருமானம்	**360.0**	**314.8**	**87.4**
மொத்த செலவினம்	**7,557.0**	**3,966.9**	**52.5**
நடைமுறைச் செலவினம்	**5,838.0**	**3,531.0**	**60.5**
சம்பளங்களும் படிகளும்	1,323.0	827.0	62.5
வட்டிக் கொடுப்பனவுகள்	2,617.0	1,609.2	61.5
ஓய்வூதியக் கொடுப்பனவுகள்	517.0	332.4	64.3
அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான மாற்றல்கள்	184.0	84.7	46.0
ஏனையவை	1,197.0	677.8	56.6
மூலதன செலவினம் தேறிய கடன் வழங்கலும்	**1,719.0**	**435.9**	**25.4**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 1,687.6 பில்லியனாகக் காணப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகள் 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 4.6 சதவிகிதத்தினால் குறைவடைந்து 1,609.2 பில்லியனாகக் காணப்பட்டன. மொத்த வட்டிச் செலவினத்தின் 86.4 சதவிகிதத்தினை உள்ளடக்கிய உள்நாட்டுக் கடன்பெறல் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 5.2 சதவிகிதத்தினால் குறைவடைந்து 1,389.7 பில்லியனாகக் காணப்பட்டதுடன் வெளிநாட்டுக் கடன்பெறல் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 0.7 சதவிகிதத்தினால் சற்றே குறைவடைந்து 219.5 பில்லியனாகக் காணப்பட்டது. இதன்பிரகாரம், 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் வரி வருமானத்தின் 55.0 சதவிகிதத்தினை வட்டிக் கொடுப்பனவுகள் எடுத்திருந்தமையுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டில் வட்டிக் கொடுப்பனவுகள் வரி வருமானத்தின் 43.7 சதவிகிதத்தினை எடுத்திருந்தன.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 338.8 பில்லியனாகக் காணப்பட்ட அரச முதலீடுகள் மீதான செலவினம் 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 31.7 சதவிகிதத்தினால் அதிகரித்து 446.3 பில்லியனாகக் காணப்பட்டது. பொது முதலீட்டிலிருந்தான அடைவானது வருடாந்தக் கணிப்பீட்டில் 25.8 சதவீதமாக குறைவாகக் காணப்பட்டது.

வரவு செலவுத்திட்ட நிறைவேற்றலையும் அரச செலவினத்தினைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான அரசாங்கத்தின் ஆற்றலையும் மேம்படுத்துவதற்காக அரசாங்கம் தொடர்ந்தும் அரச நிதி மற்றும் முதலீட்டு முகாமைத்துவத்தினை வலுப்படுத்தியது. 2026 ஒக்டோபரில், அரச முதலீட்டுக் குழுவுக்கான கருத்திட்டத் தயார்நிலை மற்றும் வெளிப்படைத்தன்மையுடைய கருத்திட்டத் தெரிவுத் தெரிவடிப்படை என்பவற்றினை மதிப்பிடுவதற்கான தரப்படுத்தப்பட்ட முறையியல் வெளியிடப்பட்ட அதேவேளை தற்போது அமுலில் இருக்கும் அரச முதலீட்டுத் தொகுதியின் மீளாய்வு பொறுப்பேற்கப்பட்டு வருகின்றது. கடப்பாட்டுக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி

முகாமைத்துவத் தகவல் முறைமையின் மிக முக்கியமான மொட்யூல்கள் சகல செலவினத் தலைப்புக்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் முன்பு திரண்டிருந்த செலவின நிலுவைகள் தீர்க்கப்பட்டன. மேலும், அரசிறை இடர்நேர்வுக் கூற்று உள்ளிட்ட 2027 ஆண்டிற்கான அரசிறை மூலோபாயக் கூற்று 2026 ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்டது. சூறாவளியுடன் தொடர்புடைய கொள்வனவுச் செயன்முறை ஒப்பந்தங்களுக்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கம்பனிகளும் புனர்நிர்மாணச் செலவினத்தில் வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக அவற்றின் பயன்பெறும் உரித்தாண்மைத் தகவல்களை வெளிக்கூறுமாறு தேவைப்படுத்தப்படுகின்றன.

மொத்தத்தில், 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது பதிவுசெய்யப்பட்ட வரவு செலவுத்திட்ட மிகையானது வரிக் கொள்கை மற்றும் நிர்வாக மறுசீராக்கல்களால் ஆதாரமளிக்கப்பட்ட வலுவான வருமானச் செயலாற்றுகையினாலும் வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட சரிவினாலும் திட்டமிடப்பட்டதை விடத் தாமதமான மூலதனச் செலவின நிறைவேற்றத்தினாலும் பெரிதும் உந்தப்பட்டது. இவை சம்பளங்கள், ஓய்வூதியங்கள் சமூக மாற்றல்கள் என்பவற்றுக்கான உயர் செலவினத்தையும் மற்றும் டித்வா சூறாவளி மற்றும் மத்திய கிழக்கு மோதல் என்பவற்றுடன் தொடர்புடைய செலவினத்தையும் ஈடுசெய்த போதும் மிகையாக அமைந்தன. அதனுடன் சேர்ந்த தேறிய வெளிநாட்டு நிதியிடலான 29.7 பில்லியன் ரூபாவும் 65.1 பில்லியன் ரூபா தொகையுடைய உள்நாட்டு நிதியிடலின் ஒரு தேறிய மீள்கொடுப்பனவினை இயலுமாக்கியது. முன்னோக்கிச் செல்கையில், வாகன இறக்குமதிகளால் வருமானத்தில் ஏற்பட்ட தற்காலிக உயர்வு படிப்படியாகக் வழமை நிலைக்குத் திரும்பும் நிலையில் வருமானச் செயலாற்றுகையினைத் தக்கவைப்பது வரித் தளத்தினை மேலும் பரந்ததாக ஆக்குவதிலும் வரி இயைபுறலை மேம்படுத்துவதிலும் தங்கியிருக்கும். இதேவேளை, மூலதனச் செலவின நிறைவேற்றத்தினை முன்னேற்றல், குறிப்பாக சூறாவளிக்குப் பின்னரான புனர்நிர்மாணத்தினை முன்னேற்றல், தொடர்ந்தும் பிரதான முன்னுரிமையாகக் காணப்படுகின்றது.

2.2 அரசாங்க வருமானம்

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 3,294.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட கொடைகள் நீங்கலான மொத்த அரசாங்க வருமானத்துடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியின் போது இது 21.4 சதவிகிதத்தினால் அதிகரித்து 3,998.3 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கான பிரதான காரணம், 2025 ஆம் ஆண்டில் ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 3,068.5 பில்லியன் வரி வருமானத்துடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் வரி வருமானமானது 20.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 3,683.5 பில்லியனாகக் காணப்பட்டமையாகும்.

வரி வருமானத்தின் அதிகரிப்பு பின்வருவனவற்றிலிருந்தான வருமான அதிகாரிப்பினால் முன்னெடுக்கப்பட்டது.

1. 2025 ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் செயலூக்கம் பெறும் வகையில், மதுபானம், புகையிலை மற்றும் பந்தயம் மற்றும் சூதாட்டத் தொழிற்துறை மீதான வரி வீதம் 40 சதவிகிதத்தில் இருந்து 45 சதவிகிதமாக அதிகரித்தமையினையும் எவ்விதமான வெளிநாட்டு மூலத்தில் இருந்தும் ஈட்டப்படும் அல்லது பெறப்படும் ஆதாயத்தின் மீது அல்லது இலாபத்தின் மீது 15 சதவிகித வரியினை அறிமுகப்படுத்தியமையினையும் பிரதிபலிக்கும் கூட்டிணை நிறுவன வரி 21.9 சதவிகிதத்தினால் அதிகரிக்கப்பட்டு 484.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட பிரதான காரணத்தினால் வருமான வரிகள் 17.6 சதவிகிதத்தினால் அல்லது 123.3 பில்லியனால் அதிகரித்தமையாகும். பிடித்துவைக்கும் வரியில் இருந்தான வருமானம் 21.2 சதவிகிதத்தினால் அதிகரித்து 142.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டமையானது 2025 ஏப்ரல் 1 முதல் செயலூக்கம் பெறும் வகையில் வட்டி வீதத்தின் மீதான பிடித்துவைக்கும் வரி 5 சதவிகிதத்தில் இருந்து 10 சதவிகிதமாக அதிகரித்தமையினையும் வட்டி வீதங்களுக்கான அதிகரிப்பினையும் பிரதிபலிக்கின்றது. இதேவேளை, வரி நிர்வாகத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், 2025 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் முடிவில் காணப்பட்டமையுடன் ஒப்பிடுகையில், 2026 ஆகஸ்ட் முடிவில் மொத்த வருமான வரிக் கோப்புப் பதிவுகளில் 12.1 சதவிகித அதிகரிப்பு ஏற்பட்டு 1,425,144 ஆகக் காணப்பட்டமையினைப் பிரதிபலிக்கின்றது. இது வருமான வளர்ச்சிக்கும் பங்களிப்பு வழங்கியது;

2. 2025 பெப்ரவரியில் இருந்து செயலூக்கம் பெறும் வகையில் சகல வகையான மோட்டார் வாகனங்களதும் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதுடன் 2026 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் மோட்டார் வாகன இறக்குமதிகள் 154 சதவிகிதத்தினால் அதிகரித்து 445,546 ஆகக் காணப்பட்ட காரணத்தினால் இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி 15.9 சதவிகிதத்தினால் அதிகரிக்கப்பட்டு 599.0 பில்லியன் ரூபாவாக உயர்ந்தமையே பெறுமதி சேர் வரி 22.0 சதவிகிதமாக அல்லது 238.4 பில்லியனாக உந்தம் பெற்றதற்கான காரணமாகும். இறக்குமதி செய்யப்பட்ட துணிகள் மீதான பெறுமதி சேர் வரி விதிப்பு 2026 ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதியில் இருந்து செயலூக்கம் பெற்றமையும் உள்நாட்டுப் பெறுமதி சேர் வரி 27.5 சதவிகிதத்தினால் அதிகரித்து 723.6 பில்லியனாகக் காணப்பட்டமையுமே உள்நாட்டுச் செயற்பாடுகளும் நிர்வாக நடவடிக்கைகளும் விரிவடைந்து, 2025 ஆகஸ்ட் முடிவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆகஸ்ட் மாத முடிவின் போதுள்ளவாறாக நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக பெறுமதி சேர் வரிப் பதிவுகள் 25.5 சதவிகிதத்தினால் அதிகரித்து 38,024 கோப்புக்களாக அதிகரித்தமைக்கான காரணமாகும்;

3. 2025 பெப்ரவரியில் இருந்து செயலூக்கம் பெறும் வகையில் சகல வகையான மோட்டார் வாகனங்களினதும் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதுடன் 2026 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் மோட்டார் வாகன இறக்குமதிகள் 150 சதவிகிதத்தினால் அதிகரித்து 441,097 ஆகக் காணப்பட்ட காரணத்தினால்

மோட்டார் வாகனங்கள் மீதான 28.3 சதவிகித கலால் தீர்வையானது 76.5 பில்லியன் ரூபாவினைப் பதிவுசெய்திருந்தது;

4. 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது மதுபான உற்பத்தி 9.2 சதவிகிதத்தினால் அதிகரித்து 26.1 மில்லியன் முழுமையான லீற்றர்களாகக் காணப்பட்டமையினால் மதுபானம் மீதான மதுவரி 24.3 சதவீதத்தினால் அல்லது 35.4 பில்லியன் ரூபாவினால் அதிகரித்து காணப்பட்டது.


5. 2026 மே 01 ஆம் திகதி முதல் செயலூக்கம் பெறும் வகையில் சுங்கங்களில் வைத்து மோட்டார் வாகனங்கள் மீதான சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு விதிப்பின் காரணமாக இறக்குமதிகள் மீதான சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு 53.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 68.9 பில்லியன் ரூபாவினைப் பதிவுசெய்த காரணத்தினாலும் மற்றும் உள்நாட்டு சமூகப்பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு 12.7 சதவீதத்தினால் அதிகரித்து 164.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டமையும் 2026 ஆகஸ்ட் முடிவின் போதுள்ளவாறாக சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுக் கோப்புக்களின் பதிவு 34.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 19,957 ஆகப் பதிவுசெய்யப்பட்டுள்ளமையினைப் பிரதிபலிக்கும் மேம்பட்ட வரி நிர்வாக நடவடிக்கைகளுடன் சேர்த்து உள்நாட்டுச் செயற்பாடுகளின் விரிவாக்கம் காரணமாகவும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு 22.2 சதவிகிதமாக அல்லது 42.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

6. இதே காலப்பகுதியில் சுங்க இறக்குமதித் தீர்வை 33.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 50.0 பில்லியன் ரூபாவினைப் பதிவுசெய்தமைக்கான பிரதான காரணம் மோட்டார் வாகனங்களின் மீது சுங்க இறக்குமதித் தீர்வையின் பிரயோகமும் அதனுடன் சேர்த்து மோட்டார் வாகனங்களுக்கு ஏற்புடைய சுங்க இறக்குமதித் தீர்வை மீது 50 சதவிகித மிகைக் கட்டணங்களை விதித்தமையும் பண்டங்களின் இறக்குமதிப் பெறுமதி 24.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 16,557 மில்லியன் ஐ.அ.டொ ஆகக் காணப்பட்டமையும் ஆகும்;

7. இறக்குமதிகள் அதிகரித்த காரணத்தினால் துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீடு 12.9 சதவிகிதத்தினால் அதிகரித்து 14.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது வரி சாரா வருமானங்கள் 39.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 88.5 பில்லியானகக் காணப்பட்டமையும் வருமான அதிகரிப்புக்குப் பங்களிப்பு வழங்கியது. இதற்கான பிரதான காரணம், மத்திய வங்கியின் இலாபமான 42.1 பில்லியன் ரூபா மாற்றப்பட்டமையும் குற்றப்பணங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் என்பன 21.0 பில்லியனால் அதிகரித்தமையும் ஆகும். இதேவேளை, வட்டி வருமானத்தில் இருந்தான வருமானமும் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புக்களும் வரி சாரா வருமானம் அதிகரிப்பதற்குச் சாதகமான பங்களிப்பினை வழங்கியுள்ளன.

வரைபு 2.1 | மொத்த வருமானத்தின் வகுதிகள் : சனவரி - ஆகஸ்ட் 2026 சதவீதம்



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 2.3 | அரசாங்க வருமான செயலாற்றுகையின் சுருக்கம் - 2026


ரூபா.மில்லியன்

விபரம்	சன - ஆக.		மாற்றம் (%)
	2025	2026 (அ)	
வரி வருமானம்	**3,068,495**	**3,683,527**	**20.0**
வருமான வரி	**702,351**	**825,625**	**17.6**
உள்நாட்டு நுகர்வு அடிப்படையிலான வரி	**929,865**	**1,153,779**	**24.1**
பெறுமதி சேர் வரி	567,470	723,643	27.5
உற்பத்தி தீர்வை	216,614	265,825	22.7
சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	145,781	164,310	12.7
இறக்குமதி அடிப்படையிலான வரி	**1,380,169**	**1,641,284**	**18.9**
இறக்குமதித் தீர்வை	150,988	200,975	33.1
பெறுமதி சேர் வரி	516,778	599,037	15.9
சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	45,032	68,905	53.0
துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (PAL)	115,886	130,806	12.9
விசேட வியாபாரப் பண்ட அறவீடு (SCL)	103,641	104,959	1.3
உற்பத்தித்தீர்வை மற்றும் மது வரி	391,313	482,148	23.2
செஸ்	56,529	54,454	-3.7
உரிமப்பத்திர வரிகள் மற்றும் ஏனையவை	**56,110**	**62,840**	**12.0**
வரி அல்லாத வருமானம்	**226,244**	**314,764**	**39.1**
மொத்த வருமானம்	**3,294,740**	**3,998,291**	**21.4**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

வரைபு 2.2 | மூலங்கள் அடிப்படையில் வரி வருமானம் சனவரி - ஆகஸ்ட்- 2026 சதவீதம்



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

வருமான வரி

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட 702.4 பில்லியன் ரூபா வருமான வரியுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் வருமான வரிகளில் இருந்தான வருமானம் 17.6 சதவிகிதத்தினால் அதிகரித்து 825.6 பில்லியனாகக் காணப்பட்டது. இது நீடித்த நிர்வாக மேம்பாடுகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட வரி இயைபுறல் என்பவற்றின் காரணமாக வருடாந்த மதிப்பீடான 1,210.0 பில்லியன் ரூபாவில் 68.2 சதவிகிதத்தினை அடைந்துகொண்டமையினைப் பிரதிபலிக்கின்றது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட 143.9 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் முற்பணத் தனியாள் வருமான வரியில் இருந்து கிடைத்த வருமானம் (APIT / PAYE) 6.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 152.7 பில்லியன் ரூபாவினைப் பதிவுசெய்துள்ளது. 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் APIT இலிருந்து கிடைத்த வருமானச் சேகரிப்பு வருடாந்த மதிப்பீடான 215.0 பில்லியன் ரூபாவில் 71.0 சதவிகிதம் அடையப்பட்டமையினைப் பிரதிபலிக்கின்றது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட 43.2 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் தனியாள் வருமான வரி வருமானம் 5.9 சதவிகிதத்தினால் அதிகரித்து 45.8 பில்லியன் ரூபாவினைப் பதிவுசெய்து 100.0 பில்லியன் ரூபா எனும் அதன் வருடாந்த இலக்கில் 45.8 சதவிகிதத்தினை அடைந்துள்ளது. இதேவேளை, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட 397.3 பில்லியன் கூட்டிணை வரி வருமானம் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 21.9 சதவிகிதத்தினால் கணிசமாக அதிகரித்து 484.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மொத்தத்தில், கூட்டிணை மற்றும் கூட்டிணை சாரா வரி வருமானம் 20.3 சதவிகிதத்தினால் அதிகரித்து 530.0 பில்லியனாகக் காணப்பட்டது (810.0 பில்லியன் ரூபா வருடாந்த மதிப்பீட்டில் 65.4 சதவிகிதத்தினை அடைந்து). இந்த விரிவானது பிரதான வளர்ச்சித் துறைகளின் மத்தியில் மேம்பட்ட கூட்டிணை இலாபத்தினையும் நியதிச்சட்ட வரித் திருத்தங்களில் இருந்து மேம்பட்ட வரி அறவிடப்படலையும் பிரதிபலிக்கின்றது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட WHT/AIT இல் இருந்தான 117.9 பில்லியன் ரூபா வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 21.2 சதவிகிதத்தினால் அதிகரித்து 142.9 பில்லியனாகக் காணப்பட்டது. WHT/AIT சேகரிப்பானது அதன் வருடாந்த மதிப்பீடான 185.0 பில்லியன் ரூபாவில் 77.2 சதவிகிதத்தினை அடைந்துள்ளது.

அட்டவணை 2.4 : வருமான வரியின் செயலாற்றுகை

ரூபா.மில்லியன்

வரி அடிப்படை	சன - ஆக.		வளர்ச்சி (%)
	2025	2026 (அ)	
கூட்டிணை மற்றும் கூட்டிணை சாராத	440,513	530,033	20.3
உழைக்கும் போது செலுத்தும் வரி	143,949	152,686	6.1
வட்டி வருமானத்துக்கான வரி	117,890	142,905	21.2
மொத்தம்	**702,351**	**825,625**	**17.6**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

பெறுமதி சேர் வரி (VAT)

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட 1,084.2 பில்லியன் ரூபா பெறுமதி சேர் வரி வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பெறுமதி சேர் வரி வருமானமானது 22.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 1,322.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. உயர் உள்நாட்டுச் சேகரிப்புக்கள் மற்றும் இறக்குமதி தொடர்பான சேகரிப்புக்கள், வரி நிர்வாகத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மற்றும் இயைபுறலையும் சேகரிப்பு வினைத்திறனையும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட வரி நிர்வாகத்தின் தொடர்ச்சியான டிஜிட்டல்மயமாக்கம் என்பவற்றினால் இதற்கு ஆதாரமளிக்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட உள்நாட்டுச் செயற்பாடுகள் மீதான பெறுமதி சேர் வரி வருமானமான 567.5 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 27.5 சதவிகிதத்தினால் அதிகரித்து 723.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்கான காரணமாகும். 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட இறக்குமதிகளில் இருந்தான பெறுமதி சேர் வரி வருமானமான 516.8 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 15.9 சதவிகிதத்தினால் அதிகரித்து 599.0 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அகற்றிய பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களில் இருந்து கிடைத்த பெறுமதி சேர் வரி வருமானத்தில் ஏற்பட்ட நிலையான அதிகரிப்பே இதற்கான பிரதான காரணமாகும். இதன்பிரகாரம், 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பெறுமதி சேர் வரி வருமான வருடாந்த மதிப்பீடான 1,812.0 பில்லியன் ரூபாவில் 73.0 சதவிகிதம் அடையப்பட்டுள்ளது.

அட்டவணை 2.5 : பெறுமதி சேர் வரியின் செயலாற்றுகை

ரூபா மில்லியனில்

வரி அடிப்படை	சன - ஆக.		வளர்ச்சி (%)
	2025	2026 (அ)	
உள்நாட்டு	567,470	723,643	27.5
இறக்குமதிகள்	516,778	599,037	15.9
தேறிய வருமானம்	**1,084,248**	**1,322,680**	**22.0**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

உற்பத்தித் தீர்வை மற்றும் மது வரி (விசேட ஏற்பாடுகள்)

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் கலால் தீர்வையில் இருந்து கிடைத்த வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 607.9 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 23.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 748.0 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. கலால் தீர்வை விதிக்கப்படக்கூடிய ஏனைய உருப்படிகளில் இருந்தான வருமானத்தில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டமையினையும் தாண்டி, இந்த வளர்ச்சியானது பிரதானமாக மோட்டார் வாகனங்களில் இருந்தும் மதுபானத்தில் இருந்தும் பெற்றோலியம் மற்றும் சிகரட்டில் இருந்தும் கிடைத்த உயர் வருமானத்தினால் ஏற்பட்டதாகும். 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் கலால் தீர்வையில் இருந்து கிடைத்த வருமானம் மொத்த வரி வருமானத்தில் 20.3 சதவிகிதமாகக் காணப்பட்டதுடன் மொத்த வருமானச் சேகரிப்பில் 18.7 சதவிகிதமாகக் காணப்பட்ட அதேவேளை வருடாந்த மதிப்பீட்டில் 89.7 சதவிகிதம் அடையப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மோட்டார் வாகனங்களின் மீதான கலால் தீர்வையில் இருந்து கிடைத்த வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 270.5 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 28.3 சதவிகிதத்தினால் கணிசமாக அதிகரித்து 347.0 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கான காரணம், 2025 பெப்ரவரி மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் மோட்டார் வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை அகற்றப்பட்டதைத் தொடர்ந்து மோட்டார் வாகனங்களுக்குக் காணப்பட்ட உறுதியான கிராக்கியாகும். 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பெற்றோலிய உற்பத்திகளில் இருந்து கிடைத்த வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 120.8 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே

காலப்பகுதியில் இந்த வருமானம் 11.9 சதவிகிதத்தினால் ஓரளவு அதிகரித்து 135.1 பில்லியனாகக் காணப்பட்டது. நிலவுகின்ற மத்திய கிழக்கு மோதலினால் உலகளாவிய எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே இந்த அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மதுபானம் மீதான கலால் தீர்வையில் இருந்து கிடைத்த வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 145.7 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 24.3 சதவிகிதத்தினால் குறிப்பிடத்தக்க அளவு 181.1 பில்லியனாகக் காணப்பட்டு மொத்த கலால் தீர்வை வருமானத்தில் 24.2 சதவிகிதத்திற்குப் பங்களிப்பு வழங்கியது. 2026 ஆம் ஆண்டின் போது கலால் தீர்வை வீதங்களில் எவ்வித அதிகரிப்பும் மேற்கொள்ளப்படாமலேயே இவ்வாறு காணப்பட்டது. 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மதுபானம் மீதான வரியில் இருந்து பெற்றுக்கொண்ட வருமானம் 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டின் 74.5 சதவிகிதமாகும். 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மொத்த மதுபான உற்பத்தியாகப் பதிவுசெய்யப்பட்ட 23.9 மில்லியன் முழுமையான லிற்றர்களுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 9.2 சதவிகிதத்தினால் அதிகரித்து, 26.1 மில்லியன் முழுமையான லிற்றர்களாக (100 சதவிகித எதனோலுடன்) காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் வடிக்கப்பட்ட மதுபான உற்பத்தி 16.3 சதவிகிதத்தினால் அதிகரித்து 16.4 முழுமையான லிற்றர்களாகக் காணப்பட்டதுடன் பியர் உற்பத்தி 2 சதவிகிதத்தினால் சற்றுக் குறைந்து 9.4 முழுமையான லிற்றர்களாகக் காணப்பட்டது.

அட்டவணை 2.6 : உற்பத்தித் தீர்வை மற்றும் மதுவரியின் செயலாற்றுகை


ரூபா.மில்லியன்

வரி அடிப்படை	சன - ஆக.		வளர்ச்சி (%)
	2025	2026 (அ)	
மதுபானம்	145,698	181,105	24.3
சிகரட், புகையிலை	62,810	76,995	22.6
மோட்டார் வாகனங்கள்	270,526	347,032	28.3
பெற்றோலிய உற்பத்திகள்	120,787	135,116	11.9
ஏனையவை	8,105	7,726	-4.7
மொத்தம்	**607,927**	**747,973**	**23.0**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட கலால் தீர்வை விதிக்கப்படக்கூடிய இனிப்பூட்டப்பட்ட பானங்கள், குளிர்பதனப்பெட்டிகள், பாம் ஒயில், மற்றும் கொழுப்பு அமிலங்கள் உள்ளிட்ட ஏனைய பொருட்கள் மீதான கலால் தீர்வையில் இருந்து கிடைத்த வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 8.1 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 4.7 சதவிகிதத்தினால் ஓரளவு வீழ்ச்சியடைந்து 7.7 பில்லியனாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் சிகரட் மற்றும் புகையிலையிலிருந்து கிடைத்த வரி வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 62.8 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 22.6 சதவிகிதத்தினால் கணிசமாக அதிகரித்து 77.0 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

வரைபு 2.3 | உற்பத்தித் தீர்வை மற்றும் மதுவரியின் செயலாற்றுகை : 2025 சனவரி - ஆகஸ்ட் 2026



மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு அறவீடு (SSCL)

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 190.8 பில்லியன் ரூபாவாகப் பதிவுசெய்யப்பட்ட சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு அறவீட்டு (SSCL) வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில இந்த வருமானம் 22.2 சதவிகிதத்தினால் அதிகரித்து 233.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதற்கான பிரதான காரணம், மேம்பட்ட வரி நிர்வாக நடவடிக்கைகளுடன் சேர்த்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நடவடிக்கைகளின் விஸ்தரிப்புடன், 2026 மே 1 முதல் செயலூக்கம் பெறும் வகையில் இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மோட்டார் வாகனங்களின் மீது SSCL இனை விதித்தமையினைப் பெருமளவுக்கு உள்ளடக்கிய இறக்குமதிகள் மீதான SSCL வருமானம் 53.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 68.9 பில்லியனாகக் காணப்பட்டமை ஆகும். 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் SSCL இனால் கிடைத்த வருமானம் வருடாந்த மதிப்பீடான 333.0 பில்லியன் ரூபாவின் 70.0 சதவிகிதமாகும்.

சுங்க இறக்குமதித் தீர்வை (CID)

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் CID இல் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 151.0 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 33.1 சதவிகிதத்தினால் கணிசமாக அதிகரித்து 201.0 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது வருடாந்த மதிப்பீட்டின் 85.5 சதவிகித அடைவினைக் காட்டுகின்றது. இந்த வளர்ச்சியானது பொதுவாக இறக்குமதிகளின் அளவு அதிகரித்தமையினாலும் அதிகரித்த வாகன இறக்குமதியினாலும் CID வீதங்களின் மீது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணத்தினாலும் ஏற்பட்டதாகும்.

விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீடு (SCL)

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் SCL இல் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 103.6 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 1.3 சதவிகிதத்தினால் சற்று அதிகரித்து 105.0 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது வருடாந்த மதிப்பீட்டின் 81.4 சதவிகிதத்தினை அடைந்துகொண்டமையால் ஏற்பட்டதாகும்.

சோளத்தின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டினை அகற்றியமையினாலும் சோளம், உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பவற்றின் மீதான ஏற்புடைய வரி வீதத்தின் அதிகரிப்பினாலும் அரிசி இறக்குமதியினை வசதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாலும் இது ஏற்பட்டது.

பண்ட ஏற்றுமதி மாணியத் திட்டம் (CESS)

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் CESS இல் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 56.5 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் CESS இல் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 3.7 சதவிகிதத்தினால் குறைவடைந்து 54.5 பில்லியனாகக் காணப்பட்டது. இவ்வாறு குறைவடைந்தமைக்கான பிரதான காரணம், 2026 ஏப்ரில் 1 முதல் செயலூக்கம் பெறும் வகையில் அரசாங்கத்தின் வரிவிதிப்பு அகற்றல் திட்டத்தின் கீழ் CESS இனை இல்லாமலாக்கியமையும் இறக்குமதி செய்யப்பட்ட துணிகள் மீதான CESS இனை அகற்றியமையும் ஆகும்.

துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீடு (PAL)

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் PAL இல் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 115.9 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் PAL இல் இருந்து சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் 12.9 சதவிகிதத்தினால் அதிகரித்து 130.8 பில்லியனாகக் காணப்பட்டது. இது வருடாந்த மதிப்பீட்டின் 68.8 சதவிகிதத்தினை அடைந்துகொண்டமையாகும். இது பொதுவாக 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பினாலும் இறக்குமதி அளவுகள் 24.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 16,557.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டமையினாலும் ஏற்பட்டதாகும்.

தொலைத்தொடர்பு அறவீடு (TL)

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் **TL** இல் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 10.6 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் TL இல் இருந்து சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் 11.6 சதவிகிதத்தினால் குறைவடைந்து 9.3 பில்லியனாகக் காணப்பட்டது. இத்தொடர்ச்சியான குறைவுக்குக் காரணம் இணையம் சாராத தொலைத்தொடர்புச் சேவைகளின் விநியோகப் பெறுமதியில் ஏற்பட்ட குறைவாகும் என்பதுடன் தொலைத்தொடர்பு அறவீடு ஏற்புடையதாகாத இணையச் சேவைகளின் பெறுமதிகளின் அதிகரிப்புமாகும்.

மோட்டார் வாகன வரி மற்றும் ஏனைய வரிகள்

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மோட்டார் வாகன வரியில் இருந்தும் ஏனைய வரிகளில் இருந்தும் சேகரிக்கப்பட்ட வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 45.1 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இவற்றில் இருந்து சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் 18.6 சதவிகிதத்தினால் அதிகரித்து 53.5 பில்லியனாகக் காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மோட்டார் வாகனங்கள் மீதான உல்லாச வரியில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 22.3 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 32.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 29.5 பில்லியனாகக் காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பந்தயம் மற்றும் சூதாட்டத்தில் இருந்து கிடைத்த வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 6.0 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இவற்றில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 65.3 சதவிகிதத்தினால் கணிசமாக அதிகரித்து 9.9 பில்லியனாகக் காணப்பட்டது. இதேவேளை, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பகிர்வுக் கொடுக்கல்வாங்கலில் இருந்து கிடைத்த வருமானமாகப் பதிவுசெய்யப்பட்ட 4.6 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பகிர்வுக் கொடுக்கல்வாங்கலில் இருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் 16.0 சதவிகிதத்தினால் குறைவடைந்து 3.8 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கான பிரதான காரணம், புறப் பொருளாதாரத் தாக்கங்களின் காரணமாக ஏற்பட்ட பகிர்வுக் கொடுக்கல்வாங்கலின் பெறுமதியிலும் அளவிலும் உருவான தளம்பல் நிலையாகும்.

அட்டவணை 2.7| மோட்டார் வாகன இறக்குமதிகள்

விபரம்	இறக்குமதிகள் சன - ஆக		மாற்றம் எண்.	மாற்றம் %
	2025	2026		
மோட்டார் கார்கள்	36,969	75,321	38,352	103.7
சிற்றுர்திகள்,பயணிகள் பேருந்துகள்	1,077	3,000	1,923	178.6
முச்சக்கர வண்டிகள்	9,479	38,667	29,188	307.9
மோட்டார் சைக்கிள்கள்	97,969	288,573	190,604	194.6
பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் (அ)	4,942	10,443	5,501	111.3
நில வாகனங்கள் (ஆ)	4,373	7,265	2,892	66.1
ஏனையவை (இ)	20,861	22,277	1,416	6.8
மொத்தம்	**175,670**	**445,546**	**269,876**	**154**

மூலம் : இலங்கைச் சுங்கம்

(அ) லொறிகள், ஏனைய பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் விசேட நோக்க வாகனங்கள்

(ஆ) ட்ராக்டர் மற்றும் கை ட்ராக்டர்கள், பவுசர் மற்றும் தரை வாகனங்கள் உள்ளடங்கலாக

(இ) ஒற்றை வண்டி , இருநோக்க வாகனங்கள், குவாட்ரிசைக்கிள் மற்றும் மோட்டார் வீடுகள் உள்ளடங்கலாக

அட்டவணை 2.8 | சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஏற்றுமதி/ இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பெறுமதி

சுதந்திர வர்த்தக உடன்படிக்கை	சனவரி - ஆகஸ்ட் 2026			
	இறக்குமதி பெறுமதி (CIF/ ரூபா.மில்)	இறக்குமதி பெறுமதி (CIF/ ஐ.அ.டொ மில்)	ஏற்றுமதி பெறுமதி (FOB/ ரூபா.மில்)	ஏற்றுமதி பெறுமதி (FOB/ ஐ.அ.டொ மில்)
இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)	96,950	301	147,071	456
பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)	4,631	14	11,569	36
தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை(SAFTA)	4,792	15	32,279	100
ஆசியா - பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)	9,187	29	55,742	173
சிங்கப்பூர் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SSFTA)	2,969	9	33	0.1
மொத்தம்	**118,529**	**368**	**246,694**	**766**

மூலம் : இலங்கைச் சுங்கம்,வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 2.9 | சர்வதேச வர்த்தகத்திலிருந்தான செஸ் வரி வருமானம்

ரூபா.மில்லியன்

விபரம்	சன - ஆக	
	2025	2026 (அ)
ஏற்றுமதிகள் மீதான செஸ்	**954**	**1,261**
தேயிலை - தேயிலை (ஏற்றுமதி வரி மற்றும் கட்டுப்பாடு) சட்டம், இலங்கை தேயிலை சபை சட்டத்தின் கீழ்	312	326
இறப்பர் - இறப்பர் மீள்நடுகை மானிய சட்டத்தின் கீழ்	2	4
தேங்காய் - தெங்கு அபிவிருத்தி சட்டத்தின் கீழ்	96	112
ஏற்றுமதி அபிவிருத்தி சபை செஸ் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டம்	544	819
இறக்குமதிகள் மீதான செஸ் - இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் கீழ்	**55,575**	**53,193**
மொத்தம்	**56,529**	**54,454**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கம்
(அ) தற்காலிகமானது

வரி அல்லா வருமானம்

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட வரி சாரா வருமானமான 226.2 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் வரி சாரா வருமானம் 39.1 சதவிகிதத்தினால் ஓரளவு அதிகரித்து 314.8 பில்லியனாகக் காணப்பட்ட அதேவேளை வரி சாரா வருமானத்தில் இருந்தான வருமானம் மொத்த வருமானத்தின் 7.9 சதவிகிதத்திற்குப் பங்களிப்பு வழங்கியிருந்தது. இதற்கான பிரதான காரணம், இலங்கை மத்திய வங்கியின் இலாபமான 42.1 பில்லியன் ரூபா மாற்றங்களுடன் சேர்த்து, இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள், வாடகை, குற்றப்பணங்கள் மற்றும் கட்டணங்கள், வட்டி வருமானம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு ஆகியவற்றில் இருந்து பெற்ற வருமானங்களில் ஏற்பட்ட அதிகரிப்பாகும். இதன்பிரகாரம், 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட வட்டி வருமானமான 43.4 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் வட்டியில் இருந்தான வருமானம் 19.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 51.7 பில்லியனாகக் காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட குற்றப்பணங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் என்பவற்றில் இருந்தான வருமானமான 112.6 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 18.7 சதவிகிதத்தினால் அதிகரித்து 133.6 பில்லியனாகக் காணப்படது. இதற்கான பிரதான காரணம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், குடிவரல்வு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களம் என்பவற்றின் கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் என்பவற்றில் இருந்து கிடைத்த வருமான அதிகரிப்பாகும். 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பில் இருந்தான வருமானமான 36.6 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 23.8 சதவிகிதத்தினால் அதிகரித்து 45.3 பில்லியனாகக் காணப்பட்டது. இதற்கான காரணம் பங்களிப்பு வீதத்திலும் அரச ஊழியர்களின் சம்பளங்களிலும் ஏற்பட்ட அதிகரிப்பாகும். 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட வாடகையில் இருந்தான வருமானமான 3.9 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 31.8 சதவிகிதத்தினால் அதிகரித்து 5.1 பில்லியனாகக் காணப்பட்டது. இதேவேளை, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 14.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் இருந்தான இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பவற்றில் இருந்து கிடைத்த வரி சாரா வருமானம் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 36.0 சதவிகிதத்தினால் கணிசமாக அதிகரித்து 19.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது பெற்றுக்கொண்ட வரி சாரா வருமானமானது வருடாந்த மதிப்பீடான 360 பில்லியன் ரூபாவின் 87.4 சதவிகிதமாகும்.

அட்டவணை 2.10 | அரசாங்க வருமானத்தின் மாறுபாட்டுப் பகுப்பாய்வு

ரூபா பில்

விடயம்	2025 ஜன – ஆகஸ்ட்	2026 (வருடாந்த மதிப்பீடு)	2026 ஜன-ஆகஸ்ட்(அ)	மாறுபாட்டுக்கான பிரதான காரணங்கள்
வருமான வரிகள்	702.3	1,210.0	825.6	2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் போது வருமான வரியில் இருந்து கிடைத்த வருமானம் 17.6 சதவிகிதத்தினால் அதிகரித்து 825.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டு 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டில் 68.2 சதவிகித அடைவினைக் காட்டியது: – மதுபானம், புகையிலை மற்றும் சூதாட்டம் மற்றும் பந்தயத் தொழிற்துறைகள் மீதான கூட்டினை வருமான வரியானது 2025.04.01 முதல் செயலூக்கம் பெறும் வகையில் 40 சதவிகிதத்தில் இருந்து 45 சதவிகிதமாக அதிகரிக்கப்பட்டமை; – 2025.04.01 முதல் செயலூக்கம் பெறும் வகையில் வெளிநாட்டு மூலங்களில் இருந்து ஈட்டப்பட்ட அல்லது பெறப்பட்ட வருமானம் மீது 15 சதவிகித வருமான வரி விதிப்பு. – 2025.04.01 முதல் செயலூக்கம் பெறும் வகையில் வட்டி மீதான பிடித்துவைக்கும் வரி 5 சதவிகிதத்தில் இருந்து 10 சதவிகிதமான அதிகரிக்கப்பட்டமை; – அரச துறைகளில் மற்றும் தனியார் துறைகளில் ஊதியங்களில் அதிகரிப்பு; – தனிநபர்கள் மற்றும் பங்கான்மைகளுக்குப் பொருந்தக்கூடிய மூலதன இலாப வரி விகிதமானது 03.06.2026 முதல் அமலுக்கு வரும் வகையில் 10 சதவீதத்திலிருந்து லிருந்து 15 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. – பொருளாதாரச் செயற்பாடுகளின் விரிவினைப் பிரதிபலிக்கும் வகையில் 2026 ஆம் ஆண்டின் முதலரையின் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.7 சதவிகித வளர்ச்சி; மற்றும் – 2025 ஆகஸ்ட் மாத முடிவில் 1270851 ஆகக் காணப்பட்ட பதிவுசெய்யப்பட்ட வருமான வரிக் கோப்புக்கள் 2026 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் முடிவின் போது 12.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 1,425,144 ஆகக் காணப்பட்டமையானது வரி நிர்வாக நடவடிக்கைகளை வலுப்படுத்துவதன் மூலம் வரித் தளத்தினைப் பரந்ததாக ஆக்குவதைப் பிரதிபலிக்கின்றது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது PAYE/ APIT வருமானத்தில் ஏற்பட்ட 6.1 சதவிகித வளர்ச்சியினைத் தாண்டி, 2025 ஏப்ரில் 01 முதல் செயலூக்கம் பெறும் வகையில் வருடாந்த வரியற்ற எல்லையினை 1.2 மில்லியன் ரூபாவில் இருந்து 1.8 மில்லியன் ரூபாவாக அதிகரித்தமை மற்றும் 18 சதவிகித வரி வரம்பினைப் பரவலாக்கியமை என்பவற்றின் இணைந்த விளைவே மிகக் குறைவான ஒட்டுமொத்த வருமான வரிச் சேகரிப்புக்குப் பங்களிப்பு வழங்கியது.
பெறுமதி சேர் வரி (VAT)	1,084.2	1,812.0	1,322.7	2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது பெறுமதி சேர் வரியில் இருந்தான வருமானம் 22.0 சதவிகிதம் எனும் கணிசமான அதிகரிப்பினைக் காட்டி 1,322.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டு 2026 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டில் 73.0 சதவிகித அடைவினைக் கொண்டிருந்தது. இந்தச் செயலாற்றுகைக்கான பிரதான காரணங்கள்: – பொருளாதாரச் செயற்பாடுகளின் விரிவினைப் பிரதிபலித்து 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டின் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.7 சதவீத வளர்ச்சி; – 2026.04.01 முதல் செயலூக்கம் பெறும் வகையில் இறக்குமதி செய்யப்பட்ட துணிகளின் மீதான பூச்சிய வீதப் பெறுமதி சேர் வரியினை அகற்றியமை மற்றும் நியமப் பெறுமதி சேர் வரி வீதத்தின் பிரயோகம்;

ரூபா பில்

விடயம்	2025 ஜன – ஆகஸ்ட்	2026 (வருடாந்த மதிப்பீடு)	2026 ஜன-ஆகஸ்ட்(ல)	மாறுபாட்டுக்கான பிரதான காரணங்கள்
				– 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 150.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 441,097 அலகுகளாகக் காணப்பட்டமை; – 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது மொத்த இறக்குமதிகள் 24.1 சதவிகித அதிகரிப்பு ஏற்பட்டு 16,557.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டமை; மற்றும் – 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத முடிவின் போது 30,298 ஆகக் காணப்பட்ட பதிவுசெய்யப்பட்ட வரிசெலுத்துனர்களின் எண்ணிக்கை 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத முடிவில் 25.5 சதவிகிதத்தினால் அதிகரித்து 38,024 ஆகக் காணப்பட்டு வரி நிர்வாக நடவடிக்கைகளினால் ஆதாரமளிக்கப்பட்ட மேம்பட்ட பெறுமதி சேர் வரி இயைபுறலைப் பிரதிபலித்தல்.
உற்பத்தித் தீர்வை மற்றும் மது வரி	607.9	834 .0	748.0	பின்வரும் பிரதான காரணங்களால் வருடாந்த மதிப்பீட்டுக்கு எதிராக 89.7 சதவிகித உற்பத்தித் தீர்வை மற்றும் மது வரியினை அடைந்துகொண்டமை: – 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் மதுபான உற்பத்தி 9.2 சதவிகிதத்தினால் அதிகரித்து 26.1 மில்லியன் லீற்றர்களாகக் காணப்பட்டமை; – 2025 பெப்ருவரியில் இருந்து செயலூக்கம் பெறும் வகையில் சகல வகையான மோட்டார் வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையினைத் தொடர்ந்து மோட்டார் வாகனங்களின் மீதான உற்பத்தித் தீர்வையில் இருந்தான அதிகரித்த வருமானம்; – 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 150.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 441,097 அலகுகளாக அதிகரித்தமை; – மீளாய்வின் போதான காலப்பகுதியில் சிகரட்டுக்களின் விற்பனை 5 சதவிகிதத்தினால் அதிகரித்து 1,282 மில்லியன் சிகரட்டுக்கள் விற்கப்பட்டமையினால் சிகரட்டுக்களின் மீதான உற்பத்தித் தீர்வையில் இருந்தான வருமானம் 22.2 சதவிகிதத்தினால் அதிகரித்து 75.7 பில்லியன் ரூபாவாக ஆகியமை; மற்றும் – 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பெற்றோல் இறக்குமதிகள் 2.2 சதவிகிதத்தினால் அதிகரித்தமையினாலும் டீசல் இறக்குமதிகள் 8.7 சதவிகிதத்தினால் அதிகரித்தமையினாலும் பெற்றோலியத்தின் மீதான உற்பத்தித் தீர்வை 11.9 சதவிகிதமாக வளர்ச்சியடைந்தமை. எவ்வாறாயினும், இனிப்பூட்டப்பட்ட பானங்கள், குளிர்பதனப் பெட்டிகள் மற்றும் பாம் எண்ணெய் கொழுப்பமிலங்கள் போன்ற கலால் தீர்வை விதிக்கப்படக்கூடிய ஏனைய உருப்படிகளில் இருந்தான வருமானம் மீளாய்வுக் காலப்பகுதியின் போது 4.7 சதவிகிதத்தினால் சரிவடைந்து கலால் தீர்வை வருமானத்தின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகைக்குப் பாதகமான பங்களிப்பினை வழங்கியிருந்தது.
சுங்க இறக்குமதித் தீர்வைகள்	151.0	235.0	201.0	2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது சுங்க இறக்குமதித் தீர்வையில் (CID) இருந்தான வருமானம் 33.1 சதவிகிதத்தினால் கணிசமாக அதிகரித்து 201 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டு 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் 85.5 சதவிகிதத்தினை அடைந்திருந்தது. இச்செயலாற்றுகைக்கான பிரதான காரணங்கள்: – மோட்டார் வாகனங்களின் மீது CID இனை அறிமுகப்படுத்தியதுடன் சேர்த்து மோட்டார் வாகனங்களின் மீது ஏற்புடைய CID மீது 50 சதவிகித மிகைக் கட்டணம்;

ரூபா பில்

விடயம்	2025 ஜன – ஆகஸ்ட்	2026 (வருடாந்த மதிப்பீடு)	2026 ஜன-ஆகஸ்ட்(அ)	மாறுபாட்டுக்கான பிரதான காரணங்கள்
				– 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 154.0 சதவிகிதத்தினால் அதிகரித்து 445,546 ஆகக் காணப்பட்டமை; – 2026.04.01 முதல் செயலுக்கம் பெறும் வகையில் தற்போது அமுலில் உள்ள வீதங்களான 0 சதவிகிதம், 15 சதவிகிதம், மற்றும் 20 சதவிகிதம் ஆகியவை 0 சதவிகிதமாகவும் 10 சதவிகிதமாகவும் 20 சதவிகிதமாகவும் 30 சதவிகிதமாகவும் திருத்தப்பட்டு நான்கு கட்ட சுங்க இறக்குமதித் தீர்வைக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்தியமை – 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் மொத்த இறக்குமதிகள் 24.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 16,557.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக ஆகியமை
துறைமுகம் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (PAL)	115.9	190.0	130.8	2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 2026 ஆம் ஆண்டின் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுக்கு எதிரான துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டின் அடைவு 68.8 சதவிகிதமாகும். இதற்கான பிரதான காரணம்: – 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் மொத்த இறக்குமதிப் பெறுமதி 24.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 16,557.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது.
விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீடு (SCL)	103.6	129.0	105.0	2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீடு (SCL) 1.3 சதவிகிதத்தினால் ஓரளவுக்கு அதிகரித்து 105.0 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டு 2026 ஆம் ஆண்டின் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுக்கு எதிராக 81.4 சதவிகித அடைவினைக் கொண்டிருந்தது. இந்த வளர்ச்சிக்கான பிரதான காரணம்: – 2025.08.26 முதல் செயலுக்கம் பெறும் வகையில் பெரிய வெங்காயத்தின் மீதான தீர்வை வீதம் கிலோகிராமுக்கு 10 ரூபாவில் இருந்து 50 ரூபாவாகவும் உருளைக்கிழங்கிற்கு 60 ரூபாவில் இருந்து 80 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டமை.
சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு அறவீடு (SSCL)	190.8	333.0	233.2	2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு அறவீட்டு (SSCL) வருமானம் 22.2 சதவிகிதத்தினால் கணிசமாக அதிகரித்து 233.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டு 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின் 70.0 சதவிகித அடைவினைக் காட்டியது. இச்செயலாற்றுகைக்கான பிரதான காரணம்: – 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டின் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.7 சதவிகித வளர்ச்சி ஏற்பட்டுப் பொருளாதாரச் செயற்பாடுகளின் விரிவினைப் பிரதிபலித்தமை; – 2026.05.01 முதல் செயலுக்கம் பெறும் வகையில் இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் SSCL விதிப்பு – 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் மொத்த இறக்குமதிகள் 24.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 16,557.1 மில்லியன் ஐ.அ.டொலராக காணப்பட்டது.
ஏனைய வரிகள்	112.6	167.0	117.3	2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ஏனைய வரிகளில் இருந்தான வருமானம் 4.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 117.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் இது 2026 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டின் 70.2 சதவிகித அடைவினைக் கொண்டிருந்தது. இதற்கான பிரதான காரணம்:

ரூபா பில்

விடயம்	2025 ஜன – ஆகஸ்ட்	2026 (வருடாந்த மதிப்பீடு)	2026 ஜன-ஆகஸ்ட்(அ)	மாறுபாட்டுக்கான பிரதான காரணங்கள்
				– 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 22.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீதான உல்லாச வரியில் இருந்தான வருமானம், மோட்டார் வாகன இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 29.5 பில்லியனாக அதிகரித்தது. எவ்வாறாயினும், 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது தொலைத்தொடர்பு அறவீட்டில் இருந்தான வருமானம் 11.6 சதவிகிதத்தினால் சரிவடைந்து தொலைத்தொடர்புச் சேவைகளின் குறைவான நுகர்வினைப் பிரதிபலித்து ஏனைய வரிகளின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகையினைப் பகுதியாக ஈடுசெய்தது. மேலும், CESS அறவீட்டில் இருந்தான வருமானத்தில் 3.7 சதவிகித சரிவு ஏற்பட்டமை மதிப்பீட்டில் இருந்தான விலகலை மேலும் அகலப்படுத்தியது.
வரி அல்லாத வருமானம்	226.2	360.0	314.8	2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் வரி சாரா வருமானம் 39.1 சதவிகிதத்தினால் அதிகரித்து 2026 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பீட்டின் 87.4 அடைவினைக் கொண்டிருந்தது. இந்த உறுதியான செயலாற்றுகைக்கு மத்திய வங்கியில் இருந்து மாற்றப்பட்ட இலாபங்கள், வட்டி வருமானம், சமூகப் பாதுகாப்புப் பங்களிப்புப் பெறுகைகள், குற்றப்பணங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள், வாடகை, மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளில் இருந்தான இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்கள் என்பன பிரதான காரணமாக அமைந்திருந்தன
மொத்தம்	3,294.7	5,270.0	3,998.3	

கட்டம் 2.1 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் ஜனவரி – செப்டெம்பர் 2026

நடைமுறைக்கு வரும் திகதி	நடவடிக்கைகள்
வருமான வரி - 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான திருத்தங்கள்	
03.06.2026	2026 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் - 2025 மற்றும் 2026 வரவு செலவு திட்டங்களில் முன்மொழியப்பட்ட வருமான வரித் திருத்தங்களை கூட்டிணைப்பதற்கு உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் திருத்தப்பட்டது. • மதிப்பிடப்பட்ட வரி செலுத்தத்தக்க கூற்றினை கோவைப்படுத்தும் தேவைப்படுத்தல் 2025/2026 வரி மதிப்பீட்டு ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் வரையில் அகற்றப்படும். • வரி மதிப்பீட்டு ஆண்டுக்காக ஆளொருவரினால் செலுத்தத்தக்க வரியின் ஒவ்வொரு தவணையினதும் தொகையும் முன்னைய வரி மதிப்பீட்டு ஆண்டுக்காக அத்தகைய ஆளினால் செலுத்தத்தக்க வருமான வரியினை அடிப்படையாக கொண்டு கணிக்கப்படும். • வானூர்தி, மென்பொருள் உரிமங்கள் அல்லது தொடர்புடைய சேவைகள் போன்றவற்றுக்காக வதியாதவர்களுக்கு இலங்கை விமானப்படையினால் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும். • ஆயுட்காப்புறுதி பூட்கைகளிலிருந்து கிடைக்கும் வரும்படிகள் மீது வருமான வரி அறவிடும் தன்மை தெளிவுபடுத்தப்படும். அதற்கமைய, காப்புறுதி செய்யப்பட்ட ஆளொருவரின் மரணம், பூட்கையின் முதிர்ச்சி அல்லது பூட்கையினை ஒப்படைத்தல் மீது தனிப்பட்டொருவரினால் ஆயுட் காப்புறுதி பூட்கையொன்றின் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் தொகைகள் வரிமதிப்பிடத்தக்க வருமானத்தை கணிக்கையில் தவிர்க்கப்படும். எனினும், ஆயுட் காப்புறுதி பூட்கையின் கீழ் மேற்கொள்ளப்படும் ஏதேனும் ஆண்டுத்தொகை, ஓய்வூதியம், ஓய்வு, மூப்பு ஓய்வு அல்லது அதனையொத்த கொடுப்பனவுகள் வரிமதிப்பிடத்தக்க வருமானத்திலிருந்து தவிர்க்கப்பட மாட்டாது. • இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டிருப்பதாக கருதப்படுகின்ற பல்கலைக்கழகமொன்றிற்கான பரிசொன்றாக அல்லது அன்பளிப்பொன்றாக சொத்தொன்றினை கைமாற்றல் செய்யப்படுவதன் மூலம் தேறும் தொகை கைமாற்றலுக்கு உடனடியாக முந்திய அதன் தேறிய கொள்விலைக்கு சமமானதாக கொள்ளப்படும்.

கட்டம் 2.1 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் ஜனவரி – செப்டெம்பர் 2026 (*தொடர்ச்சி)*

நடைமுறைக்கு வரும் திகதி	நடவடிக்கைகள்
	• தனிப்பட்டவர்களுக்கும் பங்குடமைகளுக்கும் ஏற்படைய மூலதன ஈட்டல் வரிவீதம் 10 சதவீதத்தில் இலிருந்து 15 சதவீதம் ஆக அதிகரிக்கப்படும். அனைத்து ஏனைய நிறுவனங்களுக்கும் ஏற்புடைய மூலதன ஈட்டல் வரி வீதம் 30 சதவீதம் ஆக இருக்கும். • வரி வதிவிட விதிகள் பின்வருமாறு திருத்தம் செய்யப்படும் :- i. விசேட வதிவிட விசாவொன்றினை வைத்திருக்கும் எவரேனும் தனிப்பட்டவர் வருமான வரி நோக்கத்திற்காக இலங்கையில் வதிபவரொருவராக கருதப்படமாட்டார். ii. இலங்கைக் கொடியேற்றப்பட்ட கப்பலொன்றின் மீது தொழில்பெற்றுள்ள தனிப்பட்டரொருவர் கப்பல் மீது அவர்கள் தொழில்பெற்றுள்ள காலப்பகுதிக்கு மாத்திரம் இலங்கையில் வதிபவரொருவராக கருதப்படுவார். iii. இலங்கைக் கொடியேற்றப்பட்ட கப்பலொன்றில் பணியாற்றுகின்ற வெளிநாட்டு பிரசையொருவர் அத்தகைய தொழிலிலிருந்து பெறுவிக்கின்ற வருமானத்தின் மீது மாத்திரம் ஏகமாக வருமானவரி செலுத்துவார் என்பதுடன் ஏனைய வெளிநாட்டு வருமானத்தின் மீதல்ல. • வருமானத்தை விபரிக்கின்ற சான்றிதழ், விலக்களிப்பு தொகைகள், பிடித்து வைத்தல் வரி மற்றும் ஆணையாளயர் நாயகத்தினால் குறித்துரைக்கப்படும் வேறு தகவல்களை அலகு உடமையாளர்களுக்கு வழங்குவதற்கு தவறுகின்ற ஏதேனும் கூறு நம்பிக்கை அல்லது பரஸ்பர நிதியம் இலங்கையில் வதிகின்ற கம்பனியொன்றாக கருதப்படுவதுடன் வதிவிட கம்பனிகளுக்கு ஏற்புடைய சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கேற்றவாறு ஏற்புடையதாகும். • வரி மதிப்பிட்டு ஆண்டில் முழுமையாக கழிக்கப்பட முடியாத அரசாங்கத்திற்கான அல்லது அரசாங்கம் தாபித்த நிதியங்களுக்கான எவையேனும் அன்பளிப்புகள் தொடர்ந்து வருகின்ற ஆண்டுகளில் தகைமைபெறுகின்ற கழிப்புகளாக முன்னோக்கி செல்லப்படுவதற்கு அனுமதிக்கப்படும். • 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டம் மற்றும் 2022 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மிகை கட்டண வரிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் விதிக்கப்பட்ட வட்டி தள்ளுபடி செய்யப்படும். • அதிகரிக்கப்பட்ட மூலதன கொடுப்பனவுகளுக்கு தகைமை பெறுவதற்கு தேவையான குறைந்தபட்ச முதலீடு ஐ.அ.டொ 3 மில்லியனிலிருந்து ஐ.அ.டொ 250,000 ஆகக் குறைக்கப்படும். • ஏனைய நிருவாக ஏற்பாடுகள் மேற்குறித்த திருத்தங்களுக்கு மேலதிகமாக இணங்குவித்தலை அதிகரித்தல், நடைமுறைகளை சீரமைத்தல் மற்றும் வரி நிர்வாகத்தின் வினைத்திறனையும் செயல்திறனையும் வலுப்படுத்தல் என்பவற்றை நோக்காக கொண்டு பல்வேறு மறுசீரமைப்புகள் உள்நாட்டு அரசிறை சட்டமூலத்தில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.
முத்திரைத் தீர்வை- 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்	
24.02.2026	2026.02.24 ஆம் திகதிய 2477/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு ஆளுக்கும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் 25,000 ரூபாவிற்கும் அதிகமான கொடுப்பனவுகளுக்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டுகளுக்கு விதிக்கப்படும் 25 ரூபா முத்திரை வரியை, பேரிடர் நிவாரணக் கொடுப்பனவுகள் மீது செலுத்த வேண்டிய முத்திரை வரிகளிலிருந்து விலக்களிப்பதற்காக.
பந்தய, சூதாட்ட சட்டம் - 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய சூதாட்ட விதிப்பனவுச் சட்டம்	
17.12.2025 01.01.2026 திகதி முதல்	2025 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்டக் கட்டணம் (திருத்தச்) சட்டம் - 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட உரையில் முன்மொழியப்பட்ட பின்வரும் வருமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்காக, 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்டக் கட்டணச் சட்டம் திருத்தப்பட்டது: • மொத்தச் சேகரிப்புக் கட்டணத்தை 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிப்பதற்காக் மற்றும் • இலங்கை பிரஜைகளுக்கு விதிக்கப்படும் சூதாட்டக் கள (Casino) நுழைவுக் கட்டணத்தை 50 அமெரிக்க டொலரிலிருந்து 100 அமெரிக்க டொலராக அதிகரிப்பதற்காக.

கட்டம் 2.1 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் ஜனவரி – செப்டெம்பர் 2026 *(தொடர்ச்சி)*

நடைமுறைக்கு வரும் திகதி	நடவடிக்கைகள்
சமூகப் பாதுகாப்பு உதவுத் தொகை அறவீட்டு (SSCL) – 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவுத் தொகை அறவீட்டுச் சட்டம்	
09.04.2026	2026 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுத் தொகை அறவீடு (திருத்தச்) சட்டம்
01.07.2026 திகதி முதல்	• சமூகப் பாதுகாப்பு உதவுத் தொகை அறவீட்டுப் (SSCL) பதிவுக்குரிய விற்பனைப் புரள்வுப் பதிவுப் பதிவு எல்லையை 2026 யூலை 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 60 மில்லியன் ரூபாவிலிருந்து 36 மில்லியன் ரூபாவாக குறைத்தல் மற்றும்
01.05..2026 திகதி முதல்	• 02. மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்யும் போது அல்லது உற்பத்தி செய்து விற்பனை செய்யும் போது சமூகப் பாதுகாப்பு உதவுத் தொகை அறவீடு (SSCL) விதிப்பதற்கும் விற்பனைக்குப் பின்னரான பரிவர்த்தனைகளின் போது மோட்டார் வாகனங்களுக்கு இத் திர்வையிலிருந்து விலக்களிப்பதற்கும் 2026 ஆம் ஆண்டு மே 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஏற்பாடு செய்தல்
பெறுமதி சேர் வரி (VAT) – 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம்	
01.04.2026	2026.03.03 ஆம் திகதி 2478/07 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - இறக்குமதி செய்யப்படும் துணிகளுக்கான பூச்சிய வீத பெறுமதி சேர் வரியை நீக்குவதற்கும், அவற்றின் மீது நிலையான பெறுமதி சேர் வரியை விதிப்பதற்கும் ஏற்பாடு செய்தல்
30.06.2026	2026 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுதி சேர் வரி (திருத்தம்) சட்டம் - பின்வரும் முக்கிய வழிமுறைகளுக்கு செயலுறுத்தலை வழங்குவதற்கு 2026 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்தம்) சட்டம் திருத்தப்பட்டது. • வதியாத வழங்குனர்களால் இலத்திரனியல் தளங்களூடாக சேவை வழங்கல் மீது பெறுமதி சேர் வரி விதித்தலின் செயலுறு திகதியை 2026 யூலை 01 வரை காலம் தாழ்த்துதல். • வதியாத வழங்குனர்களால் டிஜிட்டல் தளங்களூடாக சேவைகளை வழங்குவதன் மீது பெறுமதி சேர் வரி விதித்தல் தொடர்பில் பதிவு, அறவிடுதல், சேகரித்தல், திரட்டுகளை கோவைப்படுத்தல் முறையுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தல். • இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியை அகற்றுவதற்கும் மீளளிப்பு செயன்முறை வசதிப்படுத்துவதற்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச்சட்ட விளைவான்தன்மைக்கான திருத்தங்களை கூட்டிணைத்தல். • திரைப்படக் காட்சி சேவையின் வழங்கல் பெறுமதியை உறுதிப்படுத்தும் கண்டறியும் போது, உள்ளூராட்சி நிறுவனங்களால் விதிக்கப்படும் கேளிக்கை வரியைக் கழிப்பதற்கான ஒதுக்கீடு. • சுனாமி கருத்திட்டங்களின் கட்டுமான ஒப்பந்தக்காரர்களால் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்கள் தொடர்பாக, உள்நாட்டு இறைவரி˙ ஆணையாளர் நாயகத்தின் பதிவுகளுக்கமைய பெறுமதி சேர் வரி நிலுவைகளைத் தள்ளுபடி செய்தல். • இணங்கியவாறு அத்தகைய பொருட்கள் மீள ஏற்றுமதி செய்யப்பட்டாலன்றி, இறக்குமதியின் போது பெறுமதி சேர் வரி பிற்போடப்படுகின்றவிடத்து, மீள் ஏற்றுமதி அடிப்படையில் கருத்திட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்கள், உபகரணங்கள் அல்லது வாகனங்கள் போன்ற மூலதனப் பொருட்களின் மீதான உள்ளீட்டு வரிக் கழிப்பை அனுமதிக்காமை. • அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பெறுமதி சேர் வரி பதிவு செய்துள்ள ஆட்களினால் விற்பனை நிலைய இயந்திரங்களின் பயன்பாட்டைக் கட்டாயமாக்குதல் மற்றும் செயல்பாட்டுக்குக் கொண்டுவருதல். • நிதியியல் சேவைகள் மீது சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டினையும் பெறுமதி சேர் வரியினையும் ஒன்றிணைத்து நிதியியல் சேவைகள் மீது 20.5% கொண்ட அதிகரித்த வீதத்தில் பெறுமதி சேர் வரியாக அறவிடுதல் ; அத்துடன் • பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழ் புரியப்படும் தவறுகள் மீதான குற்றவியல் வரும்படிகளை மற்றும் தடைகள் அறிமுகப்படுத்தல். • நிதியியல் சேவைகள் வழங்குதல் மீதன பெறுமதி சேர் வரியின் நோக்கத்துடனான கொள்ளை பற்றிய தெளிவுபடுத்தல்
உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) - 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்	
01.04.2026	2026.03.03 ஆம் திகதிய 2478/06 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய துணைப்பிரிவுகளுக்கு உற்பத்தித் தீர்வை விதிப்பதற்கும் அதற்கான வரி வீதங்களை அது தொடர்பான இயைபு முறைத் தலைப்புக்கள் மற்றும் இயைபு முறை குறியீடுகளுக்கு நேரொத்த உற்பத்தித் தீர்வை விகிதங்களின் அடிப்படையில் ஒதுக்குவதற்கான ஏற்பாடுகளை செய்தல்

கட்டம் 2.1 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் ஜனவரி – செப்டெம்பர் 2026 *(தொடர்ச்சி)*

நடைமுறைக்கு வரும் திகதி	நடவடிக்கைகள்
மதுவரி (கட்டளைச் சட்டம்) – மதுவரிக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)	
12.12.2025	மதுவரி அறிவித்தல் இல.03/2025 (2025.12.11 ஆம் திகதி 2466/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - வருடாந்த மதுவரி உரிமக் கட்டணம் மற்றும் பிணை வைப்புப் பணம் ஆகியவற்றை திருத்தியமைப்பதற்கும், தொழில் துறைக்குள் நுழைவதற்கான கட்டணத்தை ஒருமுறை மட்டுமே விதிப்பதற்கான ஏற்பாடுகளை செய்தல்
துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு (PAL) - 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்	
01.04.2026	2026.03.03 ஆம் திகதிய 2478/05 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய துணைப்பிரிவுகளுக்கு துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரி விதிப்பதற்கும் அதற்கான வரி வீதங்களை அது தொடர்பான இயைபு முறைத் தலைப்புக்கள் மற்றும் இயைபு முறை குறியீடுகளுக்கு நேரொத்த உற்பத்தித் தீர்வை விகிதங்களின் அடிப்படையில் ஒதுக்குவதற்கான ஏற்பாடுகளை செய்தல்
செஸ் வரி விதிப்பனவு – 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்	
01.04.2026	2026.03.03 ஆம் திகதிய 2478/04 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய துணைப்பிரிவுகளுக்கு செஸ் வரியை விதித்தல்
01.04.2026	2026.03.10 ஆம் திகதிய 2479/38 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையின் 35.3 ஆம் இலக்க முன்மொழிவுக்கமைய இறக்குமதி செய்யப்படும் துணிகளுக்கான செஸ் வரியை நீக்குதல். - அபிவிருத்திக் கொள்கை நடைமுறைகளுக்கு அமைய இடைநிலை உள்ளீடுகள் மீதான செஸ்வரி வீதத்தை 50 சதவீதத்தால் குறைத்தல்
சுங்க இறக்குமதி தீர்வை (CID) – 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வருமானப் பாதுகாப்புச் சட்டம்	
01.04.2026	வருமானப் பாதுகாப்பு கட்டளை இலக்கம் 01/2026 (2026.03.03 ஆம் திகதிய 2478/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - தற்போது நடைமுறையிலுள்ள 0 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 20 சதவீதம் ஆகிய சுங்க இறக்குமதி வரி வீதங்களை, 2026 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 0 சதவீதம், 10 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 30 சதவீதம் என திருத்தியமைத்து, நான்கு அடுக்கு சுங்க இறக்குமதி வரி அமைப்பொன்றை அறிமுகப்படுத்துதல்.
சுங்க மேலதிக கட்டணம் - சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235)	
01.02.2026	2026.01.31 ஆம் திகதிய 2473/31 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீது விதிக்கப்படும் 50 சதவீத கூடுதல் வரியை 2026 டிசம்பர் 31 ஆம் திகதி வரை தொடர்ந்து விதிப்பதற்கு ஏற்பாடு செய்தல்.
01.04.2026	2026.03.12 ஆம் திகதிய 2479/55 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2026 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், சுங்க இறக்குமதி வரி 20 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக அதிகரிக்கப்படுவதைக் கருத்திற்கொண்டு, மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீது விதிக்கப்படும் 50 சதவீதம் கூடுதல் வரியை நீக்குதல்.
15.05.2026	2026.05.15 ஆம் திகதிய 2488/56 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மோட்டார் வாகன இறக்குமதி மீது 2026 மே 16 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக 15 சதவீதம் மிகை கட்டணமொன்றை தொடர்ந்தும் விதித்தல்.
18.05.2026	2026.05.17 ஆம் திகதிய 2488/69 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மோட்டார் வாகன இறக்குமதிகளுக்காக 2026 மே 15 அன்று அல்லது அதற்கு முன்னர் தாபிக்கப்பட்ட நாணய கடிதத்திற்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது என்ற முறைகேடுகளைத் தவிர்த்தல்
14.08.2026	2026.08.14 ஆம் திகதிய 2501/88 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மத்திய கிழக்கில் இடம்பெறுகின்ற யுத்த நிலமை மற்றும் வெளிநாட்டு செலாவணி வீதத்தில் தீவிரமடைந்த அழுத்தம் என்பவற்றை கருத்திற் கொண்டு 2026 ஆகஸ்ட் 15 தொடக்கம் 2026 டிசம்பர் 31 வரை நடைமுறைக்கு வரும் வகையில் மோட்டார் வாகன இறக்குமதி மீது 50 சதவீதம் மிகை கட்டணமொன்றினை தொடர்ந்தும் விதித்தல்

கட்டம் 2.1 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் ஜனவரி – செப்டெம்பர் 2026 *(தொடர்ச்சி)*

நடைமுறைக்கு வரும் திகதி	நடவடிக்கைகள்
விசேட வியாபார பண்ட அறவீடு (SCL) – 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்	
01.01.2026	2025.12.31 ஆம் திகதிய 2469/12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 62 அத்தியாவசியப் பண்டங்களின் இறக்குமதி மீது தற்போது நடைமுறையிலுள்ள விசேட வியாபாரப் பண்ட அறவீட்டின் செல்லுபடியாகும் காலத்தை 2026 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடித்தல்.
01.04.2026	2026.03.31 ம் திகதிய 2482/09 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - குறிப்பிட்ட ஒழுங்குமுறை அனுமதிகளுக்கு உட்பட்டு, 2026 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2026 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நடைமுறைக்கு வரும் வகையில்,உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படும் உலர்த்தப்பட்ட தேங்காய்த் துண்டுகள் மற்றும் மருந்து உற்பத்தி நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் உப்பு ஆகியவற்றின் மீதான விசேட வியாபார பண்டப் அறவீட்டின் எஞ்சிய தொகையைத் தள்ளுபடி செய்து, சலுகை அடிப்படையிலான விசேட வியாபார பண்ட அறவீட்டை அனுமதித்தல்.
05.05.2026	2026.05.04 ஆம் திகதிய 2487/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - 2026 டிசம்பர் 31 வரை உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்பு குழுவின் பரிந்துரையினைக் கருத்திற் கொண்டு சோளம் இறக்குமதி மீதான விசேட வியாபார பண்ட அறவீட்டை அதிகரித்தல்.
இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் – 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்	
23.03.2026	2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2026.03.23 ஆம் திகதிய 2481/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) - சர்வதேச விமானச் சேவைகளை வழங்கும் இலங்கையின் விமான நிறுவனங்கள் சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்ற விமானப் போக்குவரத்து அதிகாரசபைகளினால் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்குவதும், 4012.13 என்ற ஒருமுகப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுமான மறுவடிவமைப்பு செய்யப்பட்ட விமான டயர்களை நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறக்குமதி செய்வதற்கு அனுமதித்தல்.
01.04.2026	2026 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2026.03.31 ஆம் திகதிய 2482/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) - 2026 மார்ச் 03 ஆம் திகதியிடப்பட்ட 2478/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வருமானப் பாதுகாப்பு கட்டளையின் மூலம் வெளியிடப்பட்ட, ஒருமுகப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை குறியீடுகளின் தேசிய உள்வகைப்படுத்தல்களுக்கு இணங்க, 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குகளை புதுப்பித்தல்.
02.04.2026	2026 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2026.04.02 ஆம் திகதிய 2482/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) - 2026 ஏப்பிரல் 30 வரையில் சம்பா மற்றும் கீரி சம்பாவிற்கு முறையே மாற்றீடாக கருதப்படும் மற்றும் இயைபு முறைக் குறியீடு 1006.30.29 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பொன்னி சம்பா மற்றும் பால் பொன்னி அரிசி உள்ளிட்ட GR 11 அரிசியென அழைக்கப்படும் அரிசி வகையை இறக்குமதி செய்வதற்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமைத் தேவையை நீக்குதல்
06.06.2026, 01.01.2028	2026 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2026.05.07 ஆம் திகதிய 2487/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) - இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்புகள் 84.15, 84.18, 84.19, 84.79, 87.04 மற்றும் 87.07 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஹைட்ரொக்லோரோப்லோரோகாபன் குளிரூட்டிகளுன் மாத்திரம் இயங்கும் பழுதுபார்க்கப்பட்ட, பயன்படுத்தப்பட்ட அல்லது புதிய பொருட்களை இறக்குமதி செய்வது 2026 யூன் 06 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் தடை செய்யப்பட்டதுடன் ஹைட்ரொக்லோரோப்லோரோகாபனுடன் மாத்திரம் செயற்படும் இயைபு முறைக் குறியீடு 8414.30 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அமுக்கிகளை இறக்குமதி செய்வதற்கு 2028 ஜனவரி 1 ஆம் திகதி முதல் தடை செய்யப்படும்.
15.06.2026	2026 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2026.06.15 ஆம் திகதிய 2493/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) - இயைபு முறைக் குறியீடுகள் (55) இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட உலோகம் சார்ந்த உற்பத்திகள் இறக்குமதிக் கட்டுப்பாட்டு பத்திரத்தின் தேவையை விதித்தல்.

கட்டம் 2.1 | பிரதான அரசிறை நடவடிக்கைகள் ஜனவரி – செப்டெம்பர் 2026 (*தொடர்ச்சி)*

நடைமுறைக்கு வரும் திகதி	நடவடிக்கைகள்
19.06.2026	2026 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் (2026.06.18 ஆம் திகதிய 2493/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) - சரக்கு இறக்குமதிக்கான செலுத்தல் விதிமுறைகள் தொடர்பான விதிகளைத் திருத்துவதோடு, பின்வருவனவற்றைக் கட்டாயமாக்குதல்: • அனைத்து வங்கிகளும்: ஒவ்வொரு பணப்பரிவர்த்தனைக்கும் ஒரு தனித்துவமான இலக்கத்தை ஒதுக்கி, அந்த ஒதுக்கப்பட்ட இலக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அல்லது அது தொடர்பிலான ஒவ்வொரு பரிவர்த்தனை குறித்தும் முறையே பணம் அனுப்புபவரின் (இறக்குமதியாளரின்) செல்லுபடியாகும் வரி செலுத்துவோர் அடையாள எண் , பணம் அனுப்புபவரின் (இறக்குமதியாளரின்) முகவரி, பயனாளியின் முகவரி, பயனாளியின் கணக்கு எண், வங்கிக் குறியீடு, கிளைக் குறியீடு, நாணயத்தின் வகை மற்றும் தொகை, செலுத்தல் விதிமுறைகள், விநியோக விதிமுறைகள் , பணம் அனுப்பிய தேதி, புரோ.ஃபார்மா இன்வாய்ஸ் எண் (Proforma Invoice Number) மற்றும் சரக்குகளின் விவரணம் உள்ளிட்ட அனைத்துத் தகவல்களையும் இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு உடனுக்குடன் அறியப்படுத்துதல். • இறக்குமதியாளர்கள்: முன் கூட்டியே பணம் செலுத்துதலை மேற்கொள்வதற்கு முன்னர், முன் கூட்டியே பணம் செலுத்துவதற்கான தகுதியுள்ள இறக்குமதியாளராக இலங்கை சுங்கத் திணைக்களத்தில் பதிவு செய்தல்.
10.07.2026	2026 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம். (2026.07.10 ஆம் திகதிய 2496/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்) - வலுக்கட்டாயமான உழைப்பைக் கொண்டு முழுமையாகவோ பகுதியாகவோ அகழ்ந்தெடுக்கப்படும் அல்லது தயாரித்து முடிக்கப்படும் எந்தவொரு பொருளையும் இறக்குமதி செய்வது தடைவிதிக்கப்படல்.
புறப்படுகை அறவீடு- 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டம்	
29.12.2025	2025.12.29 ஆம் திகதிய 2469/03 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திலிருந்து (MRIA) விமானம் மூலம் இலங்கையை விட்டு வெளியேறும் நபர்களுக்கான வரி விலக்குக் காலத்தை, 2025 டிசம்பர் 29 ஆம் திகதி முதல் 2027 ஜூன் 26 ஆம் திகதி வரையான 18 மாத காலத்திற்கு நீடித்தல்.
மூலோபாய அபிவிருத்தித் திட்டங்கள் - 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மூலோபாய அபிவிருத்தித் திட்டங்கள் சட்டம்	
08.02.2026	08.02.2026 ஆம் திகதி 2474/66 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் - மூலோபாய அபிவிருத்தித் திட்டமொன்றாக இனங்காணப்படுவதற்கான தகைமை அளவுகோல்களையும், அதற்குப் பொருந்தக்கூடிய வரிவிலக்குகள் அல்லது சலுகைகளையும் வகுத்துரைத்தல்
2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்	
20.01.2026	2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் - பின்வரும் முக்கிய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது:. • கொழும்பு துறைமுக நகர எல்லைக்குள் பணிபுரியும் தனிநபர்களின் வேலைவாய்ப்பு வருமானத்திற்குப் பொருந்தும் வருமான வரி விலக்கினை நீக்குவதற்கு. • வரிச் செலவினங்களை (Tax Expenditure) வருடாந்தம் மதிப்பிடுதல் மற்றும் வெளிப்படுத்துதல், கூட்டாண்மை வருமான வரி கணக்கறிக்கைகளை (Corporate Income Tax Returns) கட்டாயமாக சமர்ப்பித்தல் மற்றும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவினால் செயல்திறன் இலக்குகளை (வேலைவாய்ப்புகள், ஈட்டப்பட்ட முதலீடு, நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதி) தொடர்ந்து கண்காணித்தல் ஆகியவற்றின் மூலம் இணங்குதல் மற்றும் கண்காணிப்பை வலுப்படுத்துவதற்கு. • சர்வதேச தரத்திற்கு ஏற்ப பயனுள்ள வங்கி மேற்பார்வை உள்ளிட்ட ஒழுங்குமுறை நடவடிக்கைகளை வழங்குவதற்கு.

2.3 அரசாங்க செலவினம்

2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போதான அரசாங்கச் செலவினம் 3,966.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் இதில் 3,531.0 பில்லியன் ரூபா மீண்டெழும் செலவினமாகும், 435.9 பில்லியன் ரூபா மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கலாகும். அரசாங்கச் செலவினங்கள் வருடாந்தம் பாராளுமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றது. இதன்பிரகாரம், 2025 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு 2026 ஆம் ஆண்டில் அரசாங்கம் செலவினங்களை மேற்கொள்வது இயலுமாக்கப்பட்டது.

அட்டவணை 2.11 | அரசாங்க செலவின செயலாற்றுகை

ரூபா.மில்லியன்

விபரம்	சன - ஆக.	
	2025	2026(அ)
மீண்டெழும் செலவினம்	**3,381,309**	**3,531,045**
சம்பளங்கள்	760,687	826,962
ஓய்வூதியம்	282,905	332,363
வட்டி	1,687,571	1,609,194
ஏனைய	650,146	762,526
மூலதனம் மற்றும் தேறிய கடன் வழங்கல்	**331,183**	**435,867**
மொத்த செலவினம்	**3,712,492**	**3,966,913**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

ஆள்சார் வேதனாதிகள் மற்றும் ஓய்வூதியங்கள்

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 760.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட மாகாண சபைகளின் ஊழியர்கள் உள்ளிட்ட அரசாங்க ஊழியர்களின் ஆள்சார் வேதனாதிகள் மீதான செலவினத்துடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இச்செலவினம் 8.7 சதவிகிதத்தினால் அதிகரித்து 827.0 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதேவேளை, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 282.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மீதான செலவினமானது 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 17.5 சதவிகிதத்தினால் அதிகரித்து 332.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இந்த அதிகரிப்புக்கான பிரதான காரணம், 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கு அமைவாக அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பள அதிகரிப்பும் ஓய்வூதியத் திருத்தங்களுமாகும்.

வட்டிக் கொடுப்பனவுகள்

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 1,687.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட உள்நாட்டுக் கடன்கள் மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 4.6 சதவிகிதத்தினால் குறைவடைந்து 1,609.2 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 1,466.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட உள்நாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இக்கொடுப்பனவுகள் 5.2 சதவிகிதத்தினால் குறைவடைந்து 1,389.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டன. 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 221.1 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இக்கொடுப்பனவுகள் 0.7 சதவிகிதத்தினால் குறைவடைந்து 219.5 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டன.

நலன்புரிச் செலவினம்

சமூகத்தின் விளிம்புநிலையிலுள்ள மற்றும் பாதிப்புறுநிலையிலுள்ள பிரிவினர்களை வலுவூட்டி அவர்களின் வாழ்வாதாரங்களை முன்னேற்றும் அதேவேளை, மேம்படுத்தப்பட்ட இலக்குவைப்பு மற்றும் உள்ளடக்கம் மூலம் இப்பிரிவினர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் விசேட கவனம் செலுத்தி, சமூகப் பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டங்களை வலுப்படுத்துவதை அரசாங்கம் தொடர்ந்தது.

2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 629.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட சமூக நலனோம்பல், சமூகப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் போசாக்கு, உற்பத்தி மற்றும் மானிய நிகழ்ச்சித்திட்டங்கள் மீதான அபிவிருத்தி உதவி மற்றும் தொழிற் சந்தை உள்ளடக்கம் உள்ளிட்ட மொத்த நலன்புரிச் செலவினம் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 17.2 சதவிகிதத்தினால் அதிகரித்து 738.1 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது சமூக நலன்புரி மற்றும் சமூகப் பாதுகாப்புச் செலவினம் 667.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது, முதியோர் கொடுப்பனவு, மாற்றுத் திறனாளிகளுக்கான மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவுக்கான திட்டமிட்ட வகை சார்ந்த கொடுப்பனவுகள் உள்ளிட்ட 'அசுவெசும' நிகழ்ச்சித்திட்டத்துக்கான 164.2 பில்லியன் ரூபா போன்ற குறிப்பிட்ட ஒதுக்கீடுகளை உள்ளடக்குகின்றது. இந்த ஒதுக்கீடுகள் 2025 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14.5 சதவிகித அதிகரிப்பாகும்.

மேலும், 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது 74.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலைகள் உள்ளிட்ட அரசாங்க வைத்தியசாலைகளுக்கான மருத்துவ விநியோகங்கள் மீதான அரசாங்கச் செலவினம் 2026 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 54 சதவிகிதத்தினால் அதிகரித்து 115.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இந்த அதிகரிப்புக்கான பிரதான காரணம், கொள்வனவுச் செயன்முறைகளின் மேம்படுத்தப்பட்ட வினைத்திறனும் மருத்துவ விநியோகச் சங்கிலிகளின் சுமுகமான செயற்பாடுமாகும்.

அட்டவணை 2.12 | நலன்புரி செலவினம்

ரூபா. மில்லியன்

நிகழ்ச்சித்திட்டம்	சன - ஆகஸ்ட்	
	2025	2026 தற்காலிக
சமூக நலன்புரி	**94,426**	**133,030**
அரச வைத்தியசாலைகளுக்கு மருந்துப்பொருட்கள் வழங்கல் (ஆயுர்வேத மருந்துகள் உட்பட)	74,952	115,394
பாடசாலை மாணவர்களுக்கான சுகாதாரக் காப்புறுதி (சுரக்ஷா)	1,376	857
ஓய்வூதியதாரர்களுக்கான அக்ரஹார காப்புறுதித் திட்டம்	486	602
முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு	490	565
ரணவிரு மாபியா ரகவரண கொடுப்பனவு	916	994
அரசு ஊழியர்களுக்கான சொத்துக் கடனுக்கான வட்டி	958	856
பொருளாதார ரீதியாக லாபமற்ற வழித்தடங்களுக்கான மானியம், சமூக ரீதியாக கட்டாயமான பேருந்து சேவைகளின் பங்களிப்பு (சிசு சரிய, கமி சிரிய மற்றும் நிசி சிரிய) மற்றும் ஆயுதப்படை பேருந்துகள்.	2,608	2,778
சுவசரிய - 1990 இலவச அம்புலன்ஸ் சேவை	1,686	2,021
முதியோர்களின் கணக்குகளில் வட்டி வேறுபாடு	10,000	1,734
உலக உணவு நிகழ்ச்சித்திட்டம்	332	136
வெள்ளம் மற்றும் வரட்சி நிவாரணம்	41	6683
ஏனைய	581	411
சமூக பாதுகாப்பு	**462,944**	**534,407**
குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு காசு மானியம்	98,132	113,200
குறைந்த வருமானம் கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கான ஆதரவு	9,453	12,331
முதியோருக்கான நிதி உதவி	29,769	32,305
சிறுநீரக நோயாளிகளுக்கு நிதி உதவி	3166	3,649
பாடசாலை எழுதுபொருட்கள் கொள்வனவு செய்ய நிதி உதவி	2,833	2,793
ஓய்வூதியம்	282,631	332,363
இறந்த மற்றும் காயமடைந்த வீரர்களுக்கான சேவை இழப்பீடு	33,312	34,653
விவசாயிகளுக்கு ஓய்வூதியம்	3523	2942
ஏனைய	126	171
சுகாதாரம் மற்றும் போசாக்கு	**25,442**	**25,123**
திரிபோசா நிகழ்ச்சித்திட்டம்	1,750	1,621
கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து உணவுப் பொதி	4,196	3,472
பாடசாலை போசணை உணவுத் திட்டம்	17894	18,219
முன்பள்ளி சிறுவர்களுக்கான காலை உணவு	1342	1229
ஏனைய	260	582
கல்வி	**18,931**	**19,000**
பாடசாலை பாடப்புத்தகங்கள்	1,567	867
பாடசாலை சீருடைகள்	58	236
கடின மற்றும் அதிகடின பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான காலணிகள	2490	1891
புலமைப் பரிசில் - தரம் 5 மாணவர்கள்	824	347
மகாபொல புலமைப் பரிசில்கள் மற்றும் மாணவர் உதவி	3,245	3,578
அரச பல்கலைக்கழகங்களில் சேர முடியாத மாணவர்களுக்கான கடன் திட்டம்.	1,335	1,059
பாடசாலை மற்றும் உயர்கல்வி பருவகால சீட்டுக்கள்	8250	9,000
ஏனைய	1,162	2,022
அபிவிருத்தி மானியங்கள்	**27,683**	**26,628**
உர மானியம்	22625	23179
ஏனைய	5058	3449
மொத்தம்	**629,426**	**738,188**

மூலம் : தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்

445.5 பில்லியன் ரூபா தொகையுடைய அரசாங்க முதலீடுகள் 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது மேற்கொள்ளப்பட்டன. இந்தத் தொகையில், 45.2 பில்லியன் ரூபா தொகையானது தித்வா சூறாவளியினால் சேதமாக்கப்பட்ட உட்கட்டமைப்புக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தப்பட்டது. ஒட்டுமொத்த அமுல்படுத்தல் முன்னேற்றம் 27 சதவிகிதமாகக் காணப்பட்டது. சார்பளவில் தாழ் மடட்டத்திலான முன்னேற்றத்துக்கான காரணங்களுள் விநியோகச் சங்கிலி இடையூறுகள், குறிப்பாக வீதி நிர்மாணத்திற்குத் தேவையான தார் பற்றாக்குறை, கெள்வனவுச் செயன்முறையில், காணி கொள்ளலில் மற்றும் சுற்றாடல் அனுமதியைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதங்கள், கருத்திட்ட நோக்கெல்லையில் ஏற்பட்ட மாற்றங்கள், மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட பல தேக்கங்கள் காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட அரச முதலீடுகள் 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களின் போது பின்வரும் துறைகளில் பிரதானமாக மேற்கொள்ளப்பட்டன:

i. கிராமிய வீதிகள், பாலங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகள் என்பவற்றின் பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்காக 126.0 பில்லியன் ரூபா;

ii. குழாய் நீர் விநியோகத் திட்டங்கள், வீடமைப்புத் திட்டங்களின் அபிவிருத்தி மற்றும் நகரப் பிரதேசங்களில் வசதிகள் என்பவற்றின் அபிவிருத்தி மற்றும் விரிவாக்கத்திற்காக 25.7 பில்லியன் ரூபா;

iii. புகையிரதத் தொகுதிகள், ரயில்வேப் பாதைகள் மற்றும் பஸ் போக்குவரத்து உள்ளிட்ட போக்குவரத்து அபிவிருத்திக்காக 28.7 பில்லியன் ரூபா

iv. நவீன தொழில்நுட்ப அறிமுகம் மூலம் விவசாய பெறுமதிச் சங்கிலியின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுக்காக 23.5 பில்லியன் ரூபா;

v. நீர்ப்பாசனத்துடன் தொடர்புடைய உட்கட்டமைப்புக்களைப் பிரதானமாக நிர்மாணித்துப் பேணும் விவசாய நோக்கங்களுக்காக நீர்ப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக 22.5 பில்லியன் ரூபா;

vi. கல்வித் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்திற்காக பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள், தொழிற் கல்வி நிறுவனங்கள், மற்றும் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் புனரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 19.1 பில்லியன் ரூபா;

vii. வைத்தியசாலைகளின் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திக்காகவும் வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காகவும் 24.4 பில்லியன் ரூபா;

viii. மின்சாரம் வழங்குவது தொடர்பிலான உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 2.3 பில்லியன் ரூபா;

ix. ஒநுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி அபிவிருத்திக் கடன் திட்டங்களுக்காக 28.2 பில்லியன் ரூபா

x. அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு உரிமைமுதல் வழங்குவதற்காக 55.2 பில்லியன் ரூபா

2.4 பொதுத் திறைசேரியின் காசுப் பாய்ச்சல் செயலாற்றுகை

2026 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரியின் காசுப் பாய்ச்சல் இயக்கங்கள், வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் அரசாங்கத்தின் அரசிறைத் திரவத்தன்மை நிலையில் வலுவான மேம்பாட்டினைக் காட்டுகின்றன. எதிர்பார்த்ததை விட உயர்வான காசு உட்பாய்ச்சல்கள், அதனுடன் சேர்ந்த மதிநுட்பமான செலவு முகாமைத்துவம் என்பன எதிர்வுகூறப்பட்ட காசுப் பற்றாக்குறையினைக் கணிசமாகக் குறைத்து காலப்பகுதியின் முடிவின் போது திறைசேரி ஓர் ஆரோக்கியமான காசு மீதியினைப் பேணுவதை இயலுமாக்கியது. இந்த மாற்றங்கள், வருமானச் சேகரிப்புப் பொறிமுறைகளை வலுப்படுத்துவதற்கான, அரசிறைக் கட்டுப்பாடுகளை மேம்படுத்துவதற்கான, அரச நிதி முகாமைத்துவத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகளைப் பிரதிபலிக்கின்றன.

திறைசேரிக் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கு அமைவாக, வருமானங்களில் இருந்தான மொத்தக் காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் ஏனைய பெறுகைகள், 3,347.5 பில்லியன் ரூபா என எதிர்வுகூறப்பட்ட உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் 3,886.8 பில்லியனை அடைந்து மதிப்பீட்டிற்கு மேல் 539.3 பில்லியன் ரூபா அல்லது 16.1 சதவிகித அதிகரிப்பினைப் பதிவுசெய்தன. இந்தச் சார்பு மிக்க செயலாற்றுகையானது மேம்பட்ட வருமானத் திரட்டலையும் அரசாங்க வருமான மூலங்களில் இருந்தும் ஏனைய பெறுகைகளில் இருந்தும் எதிர்பார்த்ததை விட வலுவான சேகரிப்புக்களையும் பிரதிபலிக்கின்றன.

செலவினப் பக்கத்தில், மீண்டெழும் கொடுப்பனவுகளுக்கான மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல் மதிப்பிடப்பட்ட 4,342.8 பில்லியன் ரூபாவுக்கு எதிராக 3,441.0 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 901.8 பில்லியன் ரூபா குறைவினைப் பிரதிபலித்து மீளாய்வின் போதான காலப்பகுதியில் செயற்திறன்மிக்க செலவு முகாமைத்துவத்தினையும் மீண்டெழும் செலவினக் கட்டுப்பாட்டினையும் சுட்டிக்காட்டுகின்றது. இதேபோன்று, மூலதனக் கொடுப்பனவுகளுக்கான காசு வெளிப்பாய்ச்சல் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடான 774.0 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 497.7 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டு 276.3 பில்லியன் ரூபா மிகக் குறைவான பயன்பாட்டுக்குக் காரணமாக அமைந்தது. இந்தப் பலாபலனுக்கு அபிவிருத்திக் கருத்திட்டங்களின் கட்டம் கட்டமான அமுல்படுத்தலையும் அரச முதலீட்டுச் செலவினத்தின் முன்னுரிமைப்படுத்தலையும் குறிப்பிட முடியும்.

மதிப்பிடப்பட்ட காசு உட்பாய்ச்சல்களை விடக் கூடியதும் மதிப்பிடப்பட்டதை விடக் குறைந்ததுமான செலவினத்தின் விளைவாக தேறிய காசுப் பற்றாக்குறை ஆரம்பத்தில் எதிர்பார்த்ததை விட மிகக் குறைவாகக் காணப்பட்டது. 1,769.2 பில்லியன் ரூபா எதிர்வுகூறப்பட்டிருந்தாலும் உண்மையான பற்றாற்குறைத் தொகை 51.9 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது மதிப்பிடப்பட்ட நிலையுடன் ஒப்பிடுகையில் 1,717.3 பில்லியன் முன்னேற்றத்தினைக் குறிப்பதுடன் திறைசேரி இயக்கங்களின் மேம்பட்ட வருமானச் செயலாற்றுகையினையும் செலவினக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும் கோடிட்டுக்காட்டுகின்றது.

அரசாங்கம் அதன் கடப்பாடுகளுக்கு நிதியிடுவதற்காக, இக்காலப்பகுதியின் போது மொத்தமாக 2,217.9 பில்லியன் ரூபா கடன் பெற்றது. இது, மதிப்பிடப்பட்ட கடன் தேவைப்பாடான 2,214.1 பில்லியன் ரூபாவினை விடச் சற்று உயர்வானதாகும். இதேவேளை, கடன் மீள்கொடுப்பனவுகள்

மதிப்பிடப்பட்ட மீள்கொடுப்பனவுத் தேவைப்பாடான 2,225.1 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2,206.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இதன் விளைவாக, தேறிய கடன் பெறலானது, மதிப்பிடப்பட்ட எதிர்மறைத் தேறிய கடன்பெறலான 11.0 பில்லியனுக்கு எதிராக நேர்மறை மீதியான 11.6 பில்லியன் ரூபாவினைப் பதிவுசெய்து மொத்தக் கடன்பெறலானது இக்காலப்பகுதியில் கடன் மீள்கொடுப்பனவினை விஞ்சியதைச் சுட்டிக்காட்டுகின்றது. இது இக்காலப்பகுதியில் திறைசேரி நிதியிடலின் கட்டமைப்பு ரீதியான இயங்கியலைப் பிரதிபலிக்கின்றது.

இதனைத் தொடர்ந்து, இக்காலப்பகுதியின் முடிவான காசு மீதியானது 936.0 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட எதிர்மறை மீதியான 864.3 பில்லியனை விட இது குறிப்பிடத்தக்க மிகைச்செயலாற்றுகையாகும். தன்னிலையான நேர்மறைக் காசு மீதியினைப் பேணுவது அரசாங்கத்தின் காசு முகாமைத்துவ உபாயமார்க்கங்களின் செயற்தினை எடுத்துவிளக்குவதுடன் எதிர்காலச் செலவினத் தேவைப்பாடுகள் மற்றும் கடன் மீளச் செலுத்தல் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கான முக்கியமான திரவத்தன்மைப் பாதுகாப்பினையும் வழங்குகின்றது.

மொத்தத்தில், 2026 ஆம் ஆண்டின் போதான பொதுத் திறைசேரிக் காசுப் பாய்ச்சலானது அரசிறை இயக்கங்களின் குறிப்பிடத்தக்க வலுப்படுத்தலைப் பிரதிபலிப்பதுடன் இதற்கு, திடமான வருமான வளர்ச்சி, கட்டுப்படுத்தப்பட்ட செலவின மட்டங்கள், மற்றும் மதிநுட்பமான கடன் முகாமைத்துவ நடைமுறைகள் என்பன ஆதாரமாக அமைந்தன. இக்காலப்பகுதியின் போது அடையப்பட்ட மேம்பட்ட காசு நிலையானது, முன்னுரிமைப் பொருளாதார நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் சமூக நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் உதவுகின்ற அதேவேளை, அரசாங்கத்தின் நிதி மீண்டெழுந்தன்மையினை மேம்படுத்தி, அரசிறை ஸ்திரத்தன்மையினை நிலைக்கச் செய்வதற்கான அரசாங்கத்தின் ஆற்றலை வலுப்படுத்துகின்றது.

அட்டவணை 2.13 | அரசாங்க திறைசேரி காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் மீதான கூற்று

ரூ. பில்லியனில்

விடயம்	சன - ஆக.		
	2025	2026	
	உண்மையான	மதிப்பிடப்பட்ட	உண்மையான
ஆரம்ப காசு மீதி வருட / மாத	**805.1**	**915.8**	**915.8**
வருமானம் மற்றும் பிற பெறுகைகளிலிருந்தான மொத்த காசு உட்பாய்ச்சல்	3,187.4	3,347.5	3,886.8
மீண்டெழும் செலவினங்களுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல்	-3,292.4	-4,342.8	-3,441.0
மூலதனக் கொடுப்பனவுகளுக்காக மொத்த காசு வெளிப்பாய்ச்சல்	-327.7	-774.0	497.7
தேறிய காசு மிகை/ (பற்றாக்குறை)	-432.7	-1,769.2	-51.9
மொத்த பெறுகை *	2,295.6	2,214.1	2,217.9
படுகடன் மீள்கொடுப்பனவு	-1,457.6	-2,225.1	-2,206.3
தேறிய பெறுகை	838.0	-11.0	11.6
சரிபடுத்தல் கணக்கு மீதி (TEB, தேறிய வைப்புகள் ஏனைய மாற்றல்கள் போன்றன)	-4.7	–	60.5
இறுதி காசு மீதி	**1,205.8**	**-864.3**	**936.0**

மூலம் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

அட்டவணை 2.14 | அரசாங்க பிணையங்கள் மற்றும் நாணய விகிதங்கள் மீதான விளைவு வீதங்களின் போக்கு : 2025 – 2026

காலப்பகுதி		திறைசேரி உண்டியல்கள் (%)			திறைசேரி முறிகள் (%)				நாணய மாற்று வீதங்கள் ரூபா/ ஐ.அ.டொ.
		91 நாட்கள்	182 நாட்கள்	364 நாட்கள்	2 வருடம்	3 வருடம்	4 வருடம்	5 வருடம்	
2025	சன	7.93	8.09	8.47	–	–	10.42	10.73	296.18
	பெப்	7.57	7.87	8.35	–	–	10.63		296.80
	மார்	7.50	7.84	8.25	–	–		10.72	295.91
	ஏப்	7.65	7.97	8.30	–	–	10.30	10.64	298.53
	மே	7.55	7.77	7.98	–	8.85	9.47		299.41
	யூன்	7.55	7.75	7.94	–	–	9.41		299.90
	யூலை	7.62	7.91	8.03	–	–	9.46	9.77	301.12
	ஆகஸ்	7.58	7.89	8.03	–	–			301.49
	செப்	7.57	7.89	8.02	–	–		9.76	302.20
	ஒத	7.52	7.90	8.04	–	–		9.80	303.13
	நவ	7.52	7.91	8.03	–	–	9.53	9.56	306.35
	திசெ	7.74	8.27	8.45	–	–	9.55	9.80	309.20
2026	சன	7.84	8.26	8.36	–	–	9.72		309.65
	பெப்	7.63	7.92	8.24	–	–	9.50		309.36
	மார்	7.80	8.09	8.41	–	–	9.63		311.91
	ஏப்	8.20	8.25	8.52	–	–	10.12		316.45
	மே	9.36	9.68	9.83	–	–	11.86		324.91
	யூன்	10.14	10.21	10.17	–	–	11.44		334.43
	யூலை	9.86	10.21	10.20	–	–	11.57	11.90	336.02
	ஆகஸ்	9.06	9.44	9.89	–	–	10.54	–	332.91

மூலங்கள் : திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம், பொதுப் படுகடன் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி

2.5 அரசாங்க படுகடன் முகாமைத்துவம்

2026 ஆம் அரசிறை ஆண்டுக்காக ரூபா 3,740 பில்லியன் கொண்ட கூட்டுமொத்த கடன்பெறுதலை பாராளுமன்றம் அனுமதித்தது. இதில் ரூபா 2,536 பில்லியன் 2026 சனவரி 01 தொடக்கம் ஆகஸ்ற் 31 வரையான காலப்பகுதிக்கான ஒதுக்கீடு செய்யப்படும். இக் காலப்பகுதியின் போதான கடன்பெறுதல்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகள் இரண்டிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டு முறையே ரூபா 1,859.8 பில்லியனாகவும் ரூபா 304.1 பில்லியனாகவும் இருந்தது. இந்த கடன்பெறுதல்களின் முதன்மைக் குறிக்கோள்கள் படுகடன் தீர்ப்பனவுக் கடற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளுக்கு நிதி அளிப்பதற்குமாகவிருந்தன.

அறிக்கையிடும் தேதியன்றுள்ளவாறு 2026 இன் முதல் எட்டு மாதங்களில் மொத்த கடன்பெறுதல்களின் ஏறத்தாழ 85.9 சதவீதமானவை உள்நாட்டில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. உள்நாட்டு படுகடன் தீர்ப்பனவுக்காக திறைசேரி முறிகள் பிரத்தியேகமாக உபயோகிக்கப்பட்டன. இக்காலப்பகுதியில் ரூபா 1,403.9 பில்லியன் தொகையுடைய அனுமதிக்கப்பட்ட கடன்பெறுதல் வரையறையின் பயன்பாடு பெரும்பாண்மையாக திறைசேரி முறிகளை வழங்குவதனூடாகவிருந்தது.

ஏறத்தாழ ரூபா 760 பில்லின் கொண்ட தேறிய எதிர்மறை திறைசேரி உண்டியல் வழங்கல்களை தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. இதன் அர்த்தம் மீட்புகள் புதிய வழங்கல்களை விஞ்சியிருந்தது என்பதாகும். காலப்பகுதியின் போது திறைசேரி உண்டியல் செலுத்த வேண்டிய இருப்பை குறைப்பதற்கு வேறு நிதியளிப்பு மூலங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதை இது பரிந்துரைக்கின்றது. 2026 ஆகஸ்ற் இறுதியிலுள்ளவாறு மொத்த திறைசேரி உண்டியல் வழங்கல்கள் ரூபா 3,568.8 பில்லியனாகவிருந்த அதேவேளை திறைசேரி உண்டியல்களில் செலுத்த வேண்டிய இருப்பு ரூபா 2,378.6 பில்லியனாகவிருந்தது.

2026 ஆகஸ்ற் 31 அன்றுள்ளவாறு மத்திய அரசாங்கத்தின் நிலுவையாகவிருக்கின்ற உள்நாட்டு படுகடன் ரூபா 19,419.2 பில்லியனாகவிருந்தது. திறைசேரி முறிகள், உள்நாட்டு படுகடன் இருப்பின் 83.8 சதவீதத்தை (ரூபா 16,278.4 பில்லியன்) உள்ளடக்கியிருந்து. அதனைத் தொடர்ந்து திறைசேரி உண்டியல்கள் 12.2 சதவீதமாக (ரூபா 2,378.6 பில்லியன்) மற்றும் தவணைக் கடன்கள் 3.7 சதவீதமாக (ரூபா 716.4 பில்லியன்) காணப்பட்டன.

அட்டவணை 2.15 | மொத்த உள்நாட்டு கடன்பெறுதல்கள் (2026 சனவரி – ஆகஸ்ட்)

ரூபா பில்லியன்

சாதனங்கள்	2026 சனவரி - ஆகஸ்ற்
திறைசேரி முறிகள் (மொத்த கடன்பெறுதல்)	1,859.8
திறைசேரி உண்டியல்கள் (மொத்தம்)	3,568.8
மொத்தம்	**5,428.6**

மூலம் : பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்

2.6 வெளிநாட்டு நிதியளிப்பு

மேன்நோக்கு

படுகடன் நிலைபெறு தன்மையினையும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டையும் மீளமைப்பதை நோக்கிய முக்கிய படிமுறையொன்றான இலங்கையின் படுகடன் மறுசீரமைப்பு செயன்முறை தற்போது பெருமளவு நிறைவுபெற்றுள்ளது. கடந்த 4 ஆண்டு சர்வதேச நாணய நிதிய நிகழ்ச்சித்திட்ட காலப்பகுதியில் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் ஏறத்தாழ ஐ.அ.டொ 9.5 பில்லியன் குறைப்புகள், இலங்கையின் முறிகளின் கூப்பன் வீதத்தில் 4.4 சதவீதமாக 31 சதவீதக்குறைப்பு மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட சராசரி முதிர்ச்சித் தொகுப்பின் நீடிப்பு என்பவற்றிலிருந்து இலங்கை நன்மைபெறும்.

வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புகள்

டிஜிட்டல் மாற்றல் திட்டத்திற்கு நிதியளிப்பதற்காக, உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி சங்கத்துடன் அரசாங்கம் ஐ.அ.டொ. 50 மில்லியன் கடன் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது. இந்த கடன் ஒப்பந்தம் 2026, மே 13 அன்று கையெழுத்திடப்பட்டது மற்றும் 5 ஆண்டுகள் சலுகைக் காலம் உட்பட மொத்தம் 25 ஆண்டுகள் தவணைக்காலத்தைக் கொண்டுள்ளதுடன், 1.50 சதவீத வட்டி விகிதத்தைக் கொண்டுள்ளது.

டித்வா புயலால் ஏற்பட்ட பேரழிவைச் சமாளிப்பதற்காக இந்தியக் கடன் வசதி - புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புத் தொகுப்பின் கீழ், மொத்தம் ஐ.அ.டொ. 350 மில்லியன் நிதியுதவிக்காக இந்திய ஏற்றுமதி-இறக்குமதி வங்கியுடன் (EXIM Bank) அரசாங்கம் ஆகஸ்ட் 4, 2026 அன்று ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது. இந்த வசதியானது முறையே 250 மில்லியன் மற்றும் 100 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள இரண்டு கடன் கூறுகளைக் கொண்டுள்ளது. இவை ஒரு வருட MCLR-க்கு முறையே 1.5 மற்றும் 0.3 சதவீதப் புள்ளிகள் குறைவான மிதக்கும் வட்டி விகிதங்களைக் கொண்டுள்ளன. இரண்டு கடன்களும் 5 ஆண்டுகள் சலுகைக் காலம் உட்பட 20 ஆண்டுகள் முதிர்வுக் காலத்தைக் கொண்டுள்ளன.

வெளிநாட்டு நிதியளிப்பு பகிர்ந்தளிப்புகளும் உபயோகமும்

2026 சனவரி 01 தொடக்கம் ஆகஸ்ற் 31 வரையான காலப்பகுதியில் மொத்த வெளிநாட்டு கடன் பகிர்ந்தளிப்புகள் ஐ.அ.டொலர் 1,069.1 மில்லியனாகவிருந்தது.

பகிர்ந்தளிப்புகளின் பாரிய பங்கு மொத்தத்தின் 77.5 சதவீதத்தை கொண்டிருந்தது, சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதியின் கீழ் பதிவாகியிருந்தது. இதனைத் தொடர்ந்து, உலகவங்கி (10 சதவீதம்) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (7 சதவீதம்) உடனான கடன் உடன்படிக்கைகளின் கீழான பகிர்ந்தளிப்புகள் இடம்பெறுகின்றன. முக்கிய இருதரப்பு கடன்கொடுநர்களுடனான இருதரப்பு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து பகிர்ந்தளிப்புகள் மீளத்தொடங்கியதுடன் காலப்பகுதியின் போதான இருதரப்பு பகிர்ந்தளிப்புகள் ஐ.அ.டொலர் 30.1 மில்லியன் தொகையாகவிருந்தது.

நோக்கத்தின் அடிப்படையிலான பகிர்ந்தளிப்பு ஒதுக்கீட்டு நியதிகளில் வரவு செலவுத்திட்ட ஆதரவுத் துறை மொத்த பகிர்ந்தளிப்புகளின் 82 சதவீதம் கொண்ட பாரிய

பங்களிப்பிற்கு வகைகூறி அதனைத் தொடர்ந்து வீதிகள் மற்றும் பாலங்கள் அபிவிருத்தி (6 சதவீதம்) நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் (2.5 சதவீதம்) ஆகியன அமைந்திருந்தன.

வெளிநாட்டு படுகடன் இருப்பு மற்றும் வெளிநாட்டு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

2026 ஆகஸ்ற் இறுதியிலுள்ளவாறு மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டு படுகடன் ஐ.அ.டொலர் 37.7 பில்லியன்[1] தொகையுடையதாகவிருந்தது. மொத்த அரசாங்க வெளிநாட்டு படுகடனில் 39 சதவீதத்திற்கு பல்தரப்பு படுகடன் உள்ளடக்கியிருந்தது. அதனைத் தொடர்ந்து வர்த்தகப் படுகடன் 33 சதவீதமாகவும் இருதரப்பு படுகடன் 28 சதவீதமாகவும் காணப்பட்டன. வர்த்தகப் படுகடனின் ஏறத்தாழ 81 சதவீதமானவை வெளிநாட்டு பிணை முறிகள் எஞ்சியிருக்கின்றவற்றை உள்ளடக்குவதுடன் (கூட்டுக் கடன்கள்) உடன் கூடிய நாட்டுக்கான பன்னாட்டு முறிகளை உள்ளடக்கியிருந்தது.

அட்டவணை 2.16 | 2026 சனவரி 01 தொடக்கம் ஆகஸ்ட் 31 வரை வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்புகள்

(ஐ.அ.டொ. மில்லியன்)

அபிவிருத்திப் பங்காளர்/கடன்வழங்கல் முகவராண்மை	பகிர்ந்தளிப்புகள்*
	கடன்
இருதரப்பு	**30.1**
யப்பான்	15.1
சவுதி நிதியம்	9.7
இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி	5.3
பல்தரப்பு	**1,039.0**
சர்வதேச நாணய நிதியம்	828.2
உலக வங்கி	103.1
ஆசிய அபிவிருத்தி வங்கி	75.9
ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி	23.5
ஒபெக் நிதியம்	4.8
விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம்	3.5
மொத்தம்	**1,069.1**

மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்

வேறுபட்ட நாணயங்களில் மேற்கொள்ளப்பட்ட பகிர்ந்தளிப்புகளை ஐ.அ.டொலர்களாக மாற்றுவதற்கு ஒவ்வொரு பகிர்ந்தளிப்பு திகதியன்றும் நிலவிய செலாவணி வீதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சிறப்பு எடுப்பனவு உரிமையை ஐ.அ.டொலராக மாற்றுவதற்கு மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட முந்திய மாத இறுதிக்கு ஏற்புடைய சிறப்பு எடுப்பனவு உரிமையின் மாத இறுதி செலாவணி வீதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**தற்காலிகமானது*

பல்தரப்பு கடன்கொடுநர்கள் மத்தியில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி என்பன ஒன்றிணைந்து மொத்த பல்தரப்பு படுகடனின் ஏறத்தாழ 78 சதவீதத்தைக் கொண்டிருந்தன. இருதரப்பு படுகடனில் 59 சதவீதமானவை பரிஸ் கிளப் அல்லாத கடன்கொடுநர்களால் வைத்திருக்கப்பட்டு எஞ்சிய 41 சதவீதம் பரிஸ் கிளப் உறுப்பினர்களால் வைத்திருக்கப்பட்டன. 2026 சனவரி 01 தொடக்கம் ஆகஸ்ற் 31 வரை மொத்த படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள்[1] ஐ.அ.டொலர் 1,708.8 மில்லியன் தொகையுடையதாகவிருந்தன. இதில் ஐ.அ.டொலர் 1,039.1 மில்லியன் முதன்மைத் தொகை மீள்கொடுப்பனவுகளுக்காகவும் எஞ்சிய ஐ.அ.டொலர் 669.7 மில்லியன் வட்டிக் கொடுப்பனவுகளாகவும் அமைந்திருந்தன.


2026 ஆகஸ்ட் இறுதியிலுள்ளவாறு வெளிநாட்டு கொடுப்பனவு நிலுவைகள் எதுவும் காணப்படவில்லை. ஏதேனும் ஏற்புடைய சலுகைக் காலப்பகுதிக்கு உட்பட்டு ஒப்பந்தசார் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறு நிலுவையாக வருகின்றபோது செலுத்தப்படாதிருக்கும் வதியாதோர்களுக்கான படுகடன் தீர்ப்பனவுக் கணக்குகளை (முதன்மைத் தொகை மற்றும் வட்டி) வெளிநாட்டு கொடுப்பனவு நிலுவைகள் உள்ளடக்குகின்றன. சர்வதேச நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதி வசதி நிகழ்ச்சித்திட்ட கண்காணிப்பு நோக்கத்திற்காக பிணக்கிலிருக்கும் காலங்கடந்த நிலுவை படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடு என்பன வெளிநாட்டு கொடுப்பனவு நிலுவைகளாக கருதப்படவில்லை. மீள அட்டவணைப்படுத்தல் அல்லது மறுசீரமைத்தல் நாடப்பட்டுவருகின்ற படுகடன் தீர்ப்பனல்லாதவற்றிலிருந்து தோன்றுகின்ற நிலுவைகள் இவ்வரைவிலக்கணத்திலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தன. மறுசீரமைக்கப்பட்ட மற்றும் மறுசீரமைக்கப்படாத இரு கடன் உடன்படிக்கைகளின் கீழும் கொடுப்பனவு தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

1 தற்காலிகமானது, மத்திய அரசாங்க நிலுவையாகவிருக்கின்ற வெளிநாட்டுப்படுகடனை மாத்திரம் காண்பிக்கின்றது.

- படுகடன் இடைநிறுத்தக் கொள்கை அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒன்றுதிரண்ட கொடுப்பனவு செய்யப்படாத முதன்மை தொகையினை உள்ளடக்குகின்றது.
- வதியாதோர் திறைசேரி உண்டியல் / திறைசேரி முறிகள் உரித்துக்கள் உள்ளடக்கப்படவில்லை.
- நாட்டுக்கான பன்னாட்டு முறிகளின் நிலுவையாகவிருக்கின்ற தொகைகள் அவற்றின் உரித்துகளின் நடப்பு வதிவோர்/வதியாதோர் அடிப்படையில் வகைப்படுத்தப்படவில்லை.


1 படுகடன் தீர்ப்பனவுகள் = முதன்மைத் தொகைக் கொடுப்பனவுகள் + வட்டிக் கொடுப்பனவுகள்

வரைபு 2.4 | அபிவிருத்திப் பங்காளர்கள் மூலமான பகிர்ந்தளிப்புகள் 2026 சனவரி - ஆகஸ்ட் (ஐ.அ.டொ. மில்லியன்)



மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்

வரைபு 2.5 | நோக்கம் வாரியான பகிர்ந்தளிப்புகள் 2026 ஜனவரி - ஆகஸ்ட் (ஐ.அ.டொ. மில்லியன்)



மூலம்: பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம்
*** ஏனைய = கல்வி மற்றும் பயிற்சி, சுகாதாரம் மற்றும் நலன் நோம்புகை, காணி அபிவிருத்தி, மின்சக்தி மற்றும் எரிசக்தி, கிராமிய அபிவிருத்தி, ஊடகம், நிதி மற்றும் காப்புறுதி, சுற்றுலா மற்றும் ஹொட்டேல் தொழிற்றுறை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், வர்த்தகம்*

03

பொருளாதார கண்ணோட்டம்

3.1 மேன்நோக்கு

தொடர்ச்சியான அதிர்ச்சிகள் ஏற்பட்ட போதிலும் கூட, 2026 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாராம் ஸ்திரத்தன்மையுடன் நீடித்தது. டித்வா சூறாவளி மற்றும் மத்திய கிழக்கின் மோதல்களின் காரணமாக எரிபொருள்களின் விலை அதிகரித்த போதிலும் கூட, இவ்வாண்டின் முதல் அரைப்பகுதியில், 4.7 சதவீத பொருளாதார வளர்ச்சியொன்று பதிவு செய்யப்பட்டதோடு, தொடர்ச்சியாக பன்னிரெண்டு காலாண்டுகளாக நேர் மறையான வளர்ச்சியொன்றினையும் பேணக்கூடியதாக இருந்தது. 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு அடையப் பெற்ற மேம்பட்ட பொருளாதாரச் செயலாற்றம் இதுவாகும். பொருளாதாரம், 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 7.3 சதவீத சுருக்கத்திற்குப் பின்னர், 2025 ஆம் ஆண்டில் 5.0 சதவீத வளர்ச்சியொன்றினை நோக்கி நகர்ந்ததோடு, எவ்வாறாயினும் ஆண்டிறுதிப் பணவீக்கம் 57.2 சதவீதத்திலிருந்து 2.1 சதவீதமாக முறையே குறைந்து இதே காலப்பகுதியில் அரசாங்க வருமானமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 8.2 சதவீதத்திலிருந்து 16.6 சதவீதமாக இரட்டிப்படைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.7 சதவீதம் பற்றாக்குறையாக இருந்த முதன்மை மீதி 5.4 சதவீத மிகையொன்று வரை வளர்ச்சியடைந்தது. மேலும், மத்திய அரசாங்கத்தின் படுகடனானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 114.2 சதவீதத்திலிருந்து 91.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில், ஐ. அ. டொ 1.9 பில்லியன்களாக இருந்த மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகளிள் அளவு, 2026 செப்டெம்பர் மாத இறுதியில் மூன்று மாதங்களையும் விட அதிகமான இறக்குமதிகளின் செலவினை தீர்ப்பனவு செய்வதற்குப் போதுமான அளவிற்கு, அதாவது ஐ.அ.டொ 6.9 பில்லியன்கள் வரை வளர்ச்சியடைந்ததோடு, முதல் எட்டு மாத காலப்பகுதிக்குள் முதன்மை மிகையாகவும் மற்றும் ஒட்டு மொத்த வரவு செலவுத் திட்ட மிகையாகவும் பேணுவதன் மூலம் 2026 ஆம் ஆண்டிலும் இவ்வெற்றியினை மேலும் தக்க வைக்கக்கூடியதாக இருந்தது. இப்பொருளாதார மீட்சியினை கவனத்தில் கொள்வதன் மூலம் உலக வங்கியினால் 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இலங்கை உயர் நடுத்தர மட்ட வருமானம் பெற்றுக் கொள்ளும் நாடாக மீண்டும் வகையிடப்பட்டது.

2026 ஆம் ஆண்டில் முதல் அரைப் பகுதியில் விவசாயம் தவிர்ந்த பொருளாதாரத்தின் ஏனைய அனைத்து துறைகளினதும் வளர்ச்சி, முதலாவது காலாண்டில் 5.1 சதவீதமாக இருந்த வளர்ச்சி, இரண்டாம் காலாண்டில் 4.2 சதவீதம் வரை ஓரளவு குறைவடைந்துள்ளது. நிர்மாணம், சுரங்கம் மற்றும் அகழ்தல் மற்றும் உணவு , பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி ஆகிய துறைகளின் பங்களிப்பின் காரணமாக கைத்தொழில் துறை 7.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததோடு, நிதிச்சேவைகள், போக்குவரத்து மற்றும் தகவல் தொழில்நுட்பச் சேவைகளின் பங்களிப்பின் காரணமாக சேவைத்துறை 3.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. இருப்பினும், பிரதானமாக, கடல்நீர் மீன்பிடிக் கைத்தொழிலிலும் மற்றும் நெற் பயிர்ச்செய்கையிலிருந்து கிடைக்கப் பெற்ற உற்பத்தி வீழ்ச்சியடைந்ததன் காரணமாக விவசாயத் துறை 0.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்துள்ளது. தனியார் துறையின் கடன் துரிதமாக வளர்ச்சியடைந்தமை மற்றும் நுகர்வோர் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி அதிகரித்ததன் மூலம் உள்நாட்டுக் கேள்வி உறுதியாக இருப்பதைப் பிரதிபலிப்பதோடு, எதிர்காலப் போக்கினை எடுத்துக் காட்டும் குறிகாட்டிகளின் வளர்ச்சிப் போக்கின் மூலம் பொருளாதாரம் துரித போக்கினைக் கொண்டுள்ளமை உறுதிப்படுத்தப்படுகின்றது.

2026 ஆம் ஆண்டின் முதலாலது காலாண்டில், 3.7 சதவீதமாகக் காணப்பட்ட வேலையின்மை வீதம் இரண்டாம் காலாண்டில் 4.0 சதவீதம் வரை அதிகரித்ததோடு, தொழிற்படை பங்கேற்பு 49.2 சதவீதத்திலிருந்து 50.0 சதவீதம் வரை வளர்ச்சியடைந்துள்ளது.

வரைபு 3.1 | நெருக்கடியிலிருந்து மீண்டெழுதல் – முக்கிய குறிகாட்டிகள், 2022 மற்றும் 2025

உண்மையான மொ.உ.உ வளர்ச்சி
சதவீதம்

2022		2025
−7.3	→	**5.0**

சுருக்கத்திலிருந்து வளர்ச்சிக்கு

பணவீக்கம்
சதவீதம் (கொ.நு.வி.சு, ஆண்டிறுதி)

2022		2025
57.2 (2013=100)	→	**2.1** (2021=100)

விலை நிலைத்தன்மை மீண்டும் நிலைநாட்டப்பட்டது.

அரசாங்க வருமானம்
மொ.உ.உ இன் சதவீதமாக

2022		2025
8.2	→	**16.6**

இரட்டிப்பினை விட அதிகமாக அதிகரித்தது.

முதன்மை மீதி
மொ.உ.உ இன் சதவீதமாக

2022		2025
−3.7	→	**5.4**

பற்றாக்குறையிலிருந்து மிகை நிலைக்கு

மத்திய அரசாங்கப் படுகடன்
மொ.உ.உ இன் சதவீதமாக

2022		2025
114.2	→	**91.6**

22.6 சதவீதப் புள்ளிகளால் குறைந்தது

மொத்த அலுவல்சார் ஒதுக்கீடுகள்
ஐ.அ.டொ பில்லியன்

2022		2025
1.9	→	**6.8**

3.6 மடங்கு உயர்ந்தது

மூலங்கள்: தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, அரசிறைக் கொள்கைத் திணைக்களம்.

முக்கியமாக, உலகளாவிய ரீதியில் எரிசக்தியின் விலைகள் அதிகரித்தமையின் காரணமாக ஏற்பட்ட தாக்கம் உள்நாட்டு சந்தையிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியமையினால், உள்நாட்டு எரிசக்தி மற்றும் உணவின் விலைகள் அதிகரித்தமையின் காரணமாக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (கொ.நு.வி.சு,. 2021 = 100) ஆண்டிற்கு ஆண்டு வேறுபாட்டின் மூலம் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கம், 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 2.3 சதவீதத்திலிருந்து 2026 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் 8.3 சதவீதம் வரை அதிகரித்தது. எரிசக்தி மற்றும் உணவு விலை அதிகரிக்கும் இரண்டாம் நிலைத்தாக்கம் மற்றும் கேள்வி நிலைமைகளை வலுப்படுத்துவதனை பிரதிபலிப்பதன் மூலம் மையப் பணவீக்கம் 5.6 சதவீதம் வரை அதிகரித்தது. முதன்மை பணவீக்கம் 5 சதவீத இலக்கை நோக்கி படிப்படியாக நெருங்குவதற்கு முன்னர் 2027 இன் முதலாவது காலாண்டில் முதன்மைப் பணவீக்கத்தை 5 சதவீத்திற்கு மேலாகப் பேண இலங்கை மத்திய வங்கி எதிர்பார்க்கிறது. மத்திய கால பணவீக்க எதிர்ப்பார்ப்புகள் நிலையான மட்டமொன்றியில் பேணப்படுகின்றமையால் இலக்கை நோக்கி படிப்படியாக முன்னேறுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.


உயர்வடைந்து வரும் பணவீக்க எதிர்பார்ப்புகள், எரிசக்தி விலைகளின் சீரமைப்புக்களின் காரணமாக ஏற்படக் கூடிய இரண்டாம் நிலைத்தாக்கங்கள், தனியார் துறைக்கு வழங்கும் கடன்கள் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்தமையின் காரணமாக அதிகரித்து வரும் இறக்குமதிக்கான கேள்வி மற்றும் வெளித்துறை மீதான அழுத்தங்களைக் கருத்திற் கொண்டு, இலங்கை மத்திய வங்கியினால் 2026 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒரு நாள் கொள்கை வட்டி வீதம் 8.75 சதவீதம் வரை 100 அடிப்படை புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டதோடு, அது தொடர்ந்து அம்மட்டத்திலேயே பேணப்பட்டு வந்துள்ளது.

மத்திய கிழக்கு மோதல்கள் தீவிரமடைந்ததன் காரணமாக உலகளாவிய எரிபொருள் விலைகள் உயர்வடைந்தமை மற்றும் வாகனங்களின் இறக்குமதிகள் அதிகரித்தமை என்பனவற்றின் காரணமாக நாட்டின் இறக்கமதி விலைகள் அதிகரித்தமையின் யினால் வெளித்துறை அழுத்தங்களுக்கு உள்ளாகியது. 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதிக்குள் இறக்குமதிகள் ஐஅடொ 18.7 பில்லியன் வரை 21.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமை மற்றும் ஏற்றுமதி 10.8 ஐ.அ.டொ பில்லியன் வரை 5.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமையின் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறை 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதிக்குள் ஏற்பட்ட ஐஅடொ 5.2 பில்லியனிலிருந்து ஐஅடொ 7.9 பில்லியன் வரை விரிவடைந்தது. "டிட்வா" சூறாவளியின் பின்னர் ஐஅடொ 6.9 பில்லியன் வரை 18.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததோடு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் சுற்றுலாத் துறையினால் ஈட்டப்பட்ட வருமானத்தினை மதிப்பீடு செய்வதற்கு பின்பற்றப்பட்ட திருத்தப்பட்ட செய்முறையோடு நீண்டகாலம் தங்கியிருக்கும் ஐரோப்பிய சந்தைகளிலிருந்து வருகை தரும் சுற்றுப் பிரயாணிகளின் எண்ணிக்கையின் வீழ்ச்சி ஓரளவிற்கு தாக்கம் செலுத்தியமையினால் சுற்றுலாத் துறையின் வருமானம் ஐஅடொ 2.2 பில்லியன் வரை 9.2 சதவீதத்தினால் குறைவடைந்தது. அதற்கு இணையாக 2025 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட ஐஅடொ 1,853.2 மில்லியன் மிகைக்கு ஒப்பீட்டளவில் 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ஐஅடொ 420.4 மில்லியன் பற்றாக்குறையொன்று பதிவாகியது. இவாண்டின் ஆரம்பத்திலிருந்து 2026 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் இறுதி வரை இலங்கையின் ரூபா ,ஐஅடொ இற்கு ஒப்பீட்டளவில் 6.8 சதவீதத்தினால் பெறுமதி இறக்கம் செய்யப்பப்பட்டது.

முதல் ஒன்பது மாத காலப்பகுதிக்குள் ரூபா 56.8 பில்லியன் பெறுமதியான தேறிய வெளிநாட்டு விற்பனைக்கு மத்தியிலும் பங்குச் சந்தையின் மாற்றமடையும் தன்மையை பிரதிபலிப்பதன் மூலம் 2026 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாத இறுதியளவில், ஒட்டு மொத்த விலைச் சுட்டெண்ணை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 20,813 அலகுகளாக பதியப்பட்டாலும் கூட, அது 2025 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட மட்டத்தை விட 8.0 சதவீத வீழ்ச்சியொன்றாகும்.


இலங்கையின் விருத்தியுற்ற பேரண்டப் பொருளாதார அடிப்படைகள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டன. பிச் தரப்படுத்தல்கள் மூலம் நிலையான கண்ணோட்டத்துடன் 2026 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி இலங்கையின் நீண்ட கால வெளிநாட்டு நாணய வெளியீட்டாளர் புறக்கணிப்பு தரப்படுத்தலை 'CCC+ மட்டத்திலிருந்து 'B-' மட்டம் வரை உயர்த்தியது. 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 04 ஆம் திகதி இலங்கை மற்றும் சர்வதேச நாணய நிதி நீட்டப்பட்ட கடன் வசதியளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏழாம் மீளாய்வு தொடர்பாக ஊழியர்கள் மட்டத்திலான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு, 2026 ஆம் ஆண்டில் IV ஆம் பிரிவின் கலந்தாலோசனையின் முடிவில் சர்வதேச நாணய நிதியின் நிறைவேற்றுச் சபையின் அனுமதியின் கீழ் ஐஅடொ 345 மில்லியனைப் பெற்றுக் கொள்வதற்கான அணுகல் கிடைக்கப்பெறலாம்.

வரைபு 3.2 | மொ.உ.உ. வளர்ச்சி
சதவீதம்



மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

வரைபு 3.3 | மொ.உ.உற்பத்தி வகுதி - 2026 இன் முதல் அரையாண்டு(அ)



மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
(அ) நிலையான விலைகளில்

3.2 பொருளாதார வளர்ச்சி

இலங்கையின் பொருளாதாரம், 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 4.8 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 4.7 சதவீத வளர்ச்சியொன்றினை அடைந்தது. இவ்வளர்ச்சிக்கு முக்கியமாக பங்களிப்புச் செலுத்திய கைத்தொழில் துறை 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் அடையப் பெற்ற 7.9 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் 7.2 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவு செய்ததோடு. அது ஒட்டு மொத்த வளர்ச்சியில் 43.4 சதவீதமாகும். சேவைகள் துறை 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 3.3 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 3.1 சதவீத வளர்ச்சியொன்றினை அடைந்துள்ளது. மானியங்கள் கழித்த பிறகுள்ள முடிவுப் பொருட்கள் மீதான வரிகள் 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 10.7 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 13.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதற்கு மாறாக, விவசாயத் துறை 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 0.6 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 0.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்துள்ளது. அதன் படி, ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு முறையே சேவைகள் துறை 38.2 சதவீதத்தினையும் மற்றும் மானியங்கள் குறைக்கப்பட்டதன் பின்னரான முடிவுப் பொருட்கள் மீதான வரி 19.5 சதவீதத்தினாலும் பங்களிப்புச் செலுத்திய அதே வேளை, விவசாயத் துறை 1.0 சதவீத எதிர் மறைப் பங்களிப்பினையும் செலுத்தியுள்ளது.

விவசாயத் துறை

நடைமுறை சந்தை விலைக்கு ஏற்ப, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.8 சதவீத பங்களிப்பினைச் செலுத்திய விவசாயத் துறை, 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலவிய 0.6 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 2026 ஆம் ஆண்டு முதல் அரைப் பகுதியில் 0.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்துள்ளது. இதற்கான முக்கிய காரணம், கடல்சார் மீன்பிடி மற்றும் கடல் வாழ் நீரியல் வளங்களின் வளர்ப்பு (19.1 சதவீதம்), நெற்பயிர்ச்செய்கை (11.2 சதவீதம்), நன்னீர் மீன்பிடி மற்றும் நன்னீர் நீரியல் வளங்கள் (50.8 சதவீதம்), ஆகியவற்றில் ஏற்பட்ட சுருக்கத்தோடு. இறப்பர் பயிர்ச்செய்கை (8.5 சதவீதம்), தேயிலைப் பயிர்ச்செய்கை (2.6 சதவீதம்,) மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்கள் (1.3 சதவீதம்), ஆகிய துறைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுமாகும். இருப்பினும், எண்ணெய்யுள்ள பழங்கள் (தேங்காய், இளநீர் மற்றும் எண்ணெய் பனை) பயிரிடும் துணைத் துறைகளில் 30.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியொன்றினை அடைவதன் மூலம் ஒட்டு மொத்த சுருக்கத்தில் ஒரு பகுதியை ஈடு செய்யக் கூடிய வகையில் பங்களிப்புச் செலுத்தியது. அதே போல வனப் பயிர்ச்செய்கை மற்றும் மரம் வெட்டுதல், (12.5 சதவீதம்), வாசனைப் பொருட்கள், நறுமணப் பயிர்கள், மருந்து மற்றும் மருத்துவப் பயிர்கள், (3.9 சதவீதம்)) காய்கறிப் பயிர்ச்செய்கை (2.2 சதவீதம்) மற்றும் பழப்பயிர்ச்செய்கை (2.1 சதவீதம்) ஆகிய இன்னோரன்ன துணைத் துறைகளும் வளர்ச்சியடைந்துள்ளது.

அட்டவணை 3.1 | நிலையான விலைகளின் அடிப்படையில் (2015) மொத்த உள்நாட்டு உற்பத்தி

ரூ. மில்லியனில்

	துறைகள்	2022	2023(අ)	2024(අ)	2025(අ)	முதல் பாதி		வளர்ச்சி (%)	
						2025(අ)	2026(அ)	2025(අ)	2026(அ)
	விவசாயம், காடாக்கம் மற்றும் மீன்பிடி	**911,252**	**911,839**	**916,971**	**929,668**	**465,380**	**462,422**	**0.6**	**-0.6**
1	தானியங்கள் (நெல் நீங்கலாக)	16,507	15,971	16,635	16,676	8,313	8,356	5.0	0.5
2	நெற் பயிர்ச்செய்கை	94,730	110,946	115,438	121,533	61,409	54,511	9.6	-11.2
3	காய்கறிப் பயிர்ச்செய்கை	103,161	97,959	97,173	90,317	45,663	46,652	-7.6	2.2
4	கரும்புச் செய்கை, புகையிலைச்செய்கை மற்றும் இதர நீண்டகால அல்லாத பயிர்ச்செய்கை	3,803	3,742	3,697	3,850	1,928	1,717	2.6	-11.0
5	பழப்பயிர்ச்செய்கை	73,310	73,995	75,472	76,927	39,458	40,284	3.8	2.1
6	எண்ணெய் பிரித்தெடுக்கும் வித்துக்கள் பயிர்ச்செய்கை (தேங்காய், செவ்விளநீர், பாம்எண்ணெய்	111,196	104,758	92,716	100,334	44,813	58,613	-12.5	30.8
7	தேயிலைச்செய்கை (பச்சை இலை)	62,867	61,912	63,080	63,966	32,831	31,961	7.0	-2.6
8	இதர பிற பானப் பயிர்ச் செய்கை (கோப்பி, கொக்கோ முதலியன)	1,229	1,141	1,169	1,051	526	523	-10.1	-0.5
9	வாசனைத் திரவியங்கள், நறுமணப்பயிர்கள், மருந்து மற்றும் மூலிகைத் தாவரங்கள்	101,653	99,982	101,492	101,792	52,723	54,769	-0.4	3.9
10	இறப்பர்ச் செய்கை	23,871	22,024	22,910	21,541	11,055	10,119	-9.1	-8.5
11	ஏனைய நீண்டகாலப் பயிரச்செய்கை	27,533	28,086	25,005	23,729	11,974	11,799	-4.7	-1.5
12	கால்நடை உற்பத்திகள்	83,307	83,645	97,155	107,309	53,407	52,417	15.8	-1.3
13	தாவரப்பரவல்	965	728	596	763	324	333	15.0	2.6
14	விவசாய நடவடிக்கைளுக்கான ஒத்துழைப்புச் செயற்பாடுகள்	33,062	32,888	28,966	30,552	17,137	17,104	4.3	-0.2
15	வனச்செய்கை, மரக்குற்றி மற்றும் காடு சார்ந்த உற்பத்திகள்	50,931	47,221	46,227	51,191	23,037	25,925	2.9	12.5

ரூ. மில்லியனில்


துறைகள்	2022	2023(அ)	2024(அ)	2025(அ)	முதல் பாதி		வளர்ச்சி (%)	
					2025(அ)	2026(அ)	2025(அ)	2026(அ)
16 ஆழ்கடல் மீன்பிடி மற்றும் ஆழ்கடல் மீன் வளர்ப்பு	95,447	100,099	104,949	104,850	54,043	43,728	5.2	-19.1
17 நன்நீர் மீன் பிடித்தொழில் மற்றும் நன்நீர் வாழ் உயிரின வளர்ப்பு	27,682	26,739	24,290	13,288	6,740	3,314	-46.8	-50.8
கைத்தொழில்	**3,308,573**	**3,002,981**	**3,337,231**	**3,597,326**	**1,784,136**	**1,912,985**	**7.9**	**7.2**
18 சுரங்க அகழ்வு மற்றும் அகழ்வுத்தொழில்	198,613	154,313	184,430	215,568	101,799	120,668	14.3	18.5
19 உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள்	869,371	899,739	954,559	1,004,413	491,177	515,332	4.2	4.9
20 புடவை, ஆடைகள் மற்றும் தோற்பொருள் உற்பத்திகள்	511,860	450,438	500,445	540,558	282,837	274,688	13.4	-2.9
21 தளபாடம் தவிர்ந்த மரக்கட்டைகள் மற்றும் மரப்பொருட்கள் உற்பத்திகள்	29,758	23,807	24,975	26,232	11,805	12,727	1.4	7.8
22 காகிதம் மற்றும் காகிதம் சார்ந்த பொருட்கள் அச்சிடுதல் மற்றும் ஊடக தயாரிப்பின் மீள்பதிப்பு	52,069	47,259	48,734	53,846	30,885	31,668	14.7	2.5
23 சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் தார் வகை உற்பத்திகள்	6,474	21,895	19,690	23,026	12,485	11,438	10.0	-8.4
24 இரசாயனங்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் மருந்துப்பொருட்கள் உற்பத்திகள்	82,349	82,949	90,995	93,549	49,408	54,003	-1.7	9.3
25 இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் உற்பத்திகள்	67,505	56,157	60,973	62,587	32,190	29,217	3.5	-9.2
26 ஏனைய உலோகம் அல்லாத கனிமப்பொருட்கள் உற்பத்திகள்	85,182	84,670	86,816	100,890	54,783	61,898	20.3	13.0
27 அடிப்படை உலோகங்கள் மற்றும் வார்ப்பு உலோகப்பொருட்கள்	58,780	60,303	70,963	82,144	34,167	39,078	9.9	14.4
28 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் உற்பத்திகள்	59,181	50,229	53,372	54,145	23,679	24,729	7.3	4.4
29 தளபாட உற்பத்திகள்	60,837	56,089	61,740	63,528	40,272	43,454	9.9	7.9
30 ஏனைய இயந்திர சாதன தயாரிப்புகள், பொருத்துதல் மற்றும் பழுது பார்த்தல்	79,088	66,747	72,427	68,239	39,205	37,416	-7.5	-4.6
31 மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டல் சேவை	178,059	174,017	184,480	201,472	99,754	106,867	7.0	7.1
32 நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் விநியோகம்	14,059	11,590	11,900	12,584	6,824	7,306	2.3	7.1
33 கழிவுநீர் அகற்றல், கழிவு முகாமைத்துவம் மற்றும் மீள்சுழற்சி நடவடிக்கைகள்	28,070	27,955	28,319	30,612	13,955	14,258	6.2	2.2
34 நிர்மானம்	927,319	734,823	882,411	963,935	458,911	528,238	9.0	15.1
சேவைகள்	**7,217,485**	**7,256,690**	**7,431,130**	**7,676,443**	**3,706,256**	**3,819,622**	**3.3**	**3.1**
35 மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்	1,675,528	1,677,941	1,697,914	1,722,223	865,521	878,458	1.4	1.5
36 பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்துச் சேவைகளுக்கான களஞ்சியப்படுத்தல் வசதிகள்	1,364,677	1,428,381	1,461,417	1,505,214	738,577	763,808	3.6	3.4
37 தபால் மற்றும் விரைவுத் தபால் செயற்பாடுகள்	19,780	20,349	21,416	23,320	11,585	12,144	10.5	4.8
38 தங்குமிடவசதி மற்றும் உணவு, பானங்கள் வழங்கல் சேவைகள்	166,030	209,106	276,975	311,444	147,677	154,387	14.2	4.5
39 வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலி, ஒளிபரப்பு மற்றும் அதன் தயாரிப்பு நடவடிக்கைகள்	37,350	36,551	37,760	38,502	19,629	19,969	1.6	1.7
40 தொலைத்தொடர்பு	140,524	137,078	142,540	146,976	72,160	75,547	3.0	4.7

ரூ. மில்லியனில்

	துறைகள்	2022	2023(ஆ)	2024(ஆ)	2025(அ)	முதல் பாதி		வளர்ச்சி (%)	
						2025(ஆ)	2026(அ)	2025(ஆ)	2026(அ)
41	கணினி மென்பொருள் தயாரிப்பு தொடர்பான ஆலோசனை சேவைகள் மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகள்	238,455	232,331	246,185	277,594	136,313	153,808	12.5	12.8
42	நிதிச் சேவை செயற்பாடுகள், துணை நிதிச் சேவைகள்	529,744	475,201	491,206	543,449	263,987	290,922	11.1	10.2
43	காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியளிப்பு	78,187	103,519	88,934	101,901	47,456	54,394	4.5	14.6
44	வதிவிட உரித்து உள்ளடங்களாக ஆதன விற்பனை	554,456	521,463	543,273	562,911	285,695	295,459	3.8	3.4
45	தொழில் முறைச் சேவைகள்	248,467	254,360	263,382	269,829	120,504	122,344	2.7	1.5
46	பொது நிர்வாகம், பாதுகாப்பு மற்றும் கட்டாய சமூகப் பாதுகாப்பு	629,031	618,542	600,314	592,529	274,576	269,540	-2.5	-1.8
47	கல்வி	302,435	307,712	314,759	318,736	163,462	165,157	1.2	1.0
48	மனித தேகாரோக்கிய செயற்பாடுகள், வதிவிடப் பராமரிப்பு , சமூகப் பணிச் செயற்பாடுகள்	237,677	236,087	234,361	241,337	102,979	104,221	2.7	1.2
49	ஏனைய தனிப்பட்ட சேவை செயற்பாடுகள்	995,147	998,069	1,010,693	1,020,480	456,137	459,467	0.9	0.7
	அடிப்படை விலைகளில் மொத்த பெறுமதி சேர்க்கைகள் (GVA)	**11,437,311**	**11,171,510**	**11,685,332**	**12,203,438**	**5,955,772**	**6,195,030**	**4.4**	**4.0**
	+ பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரிகள் மானியங்கள் நீங்கலாக	**723,576**	**742,640**	**823,623**	**925,140**	**429,461**	**487,289**	**10.7**	**13.5**
	நிலையான சந்தைவிலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP),	**12,160,886**	**11,914,150**	**12,508,954**	**13,128,577**	**6,385,234**	**6,682,319**	**4.8**	**4.7**

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தப்பட்டது

வரைபு 3.4 | விவசாயத்துறை வகுதி - 2026 இன் முதல் அரையாண்டு(அ)



மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
(அ) நிலையான விலைகளில்

நெல்

நெற் பயிர்ச்செய்கை துணைத் துறையானது, 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில், 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவான 9.6 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 11.2 சதவீதத்தினால் சுருக்கமடைந்துள்ளது. இருப்பினும், பெரும் போகத்தின் தொடக்கத்தில் தித்வா சூறாவளியின் பலத்த தாக்கத்தைக் கருத்திற் கொள்ளாது, 831,105 ஹெக்டேயர் மொத்த விதைப்பு நிலப்பரப்பளவையும், மற்றும் பயிர்களின் இழப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கவனத்தில் கொண்டதன் பின்னர் 2025/26 பெரும் போகத்தில் நெல்லுற்பத்தி 2.82 மெட்ரிக் தொன்களாக மதிப்பிடப்பட்டுள்ளதோடு. அது 2024/25 பெரும் போகத்தில் உற்பத்தியான நெல்லுற்பத்தி 2.75 மெட்ரிக் தொன் மில்லியனுக்கு ஒப்பீட்டு ரீதியில் 2.7 சதவீத வளர்ச்சியொன்றாகும். 2026 சிறு போகத்திற்கு, 2026 ஜூன் மாத இறுதி வரை பதிவான மொத்தம் 508,793 ஹெக்டேயர் மொத்த விதைப்பு நிலப்பரப்பளவை அடிப்படையாகக் கொண்டு, நெல்லுற்பத்தி 2.01 மில்லியன் மெட்ரிக் தொன் மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2025 சிறு போகத்தில் பதிவான 2.31 மில்லியன் மெட்ரிக் தொன் நெல்லுற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 12.9 சதவீதம் வீழ்ச்சியைக் குறிக்கிறது. மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவிய மோதல்களின் காரணமாக உற்பத்தி உள்ளீடுகளின் செலவு அதிகரித்ததன் காரணமாக விவசாயிகள் எதிர்கொண்ட அழுத்தத்தினை தணிக்கும் நோக்கில், அரசாங்கம் தற்காலிக நிவாரணத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2026 சிறு போகத்திற்காக ரூபா 5.5 பில்லியன் மதிப்பிலான மேலதிக உர மானியமொன்றினை வழங்கியுள்ளது.

சம்பா மற்றும் கீரி சம்பா நெல் வகைகளின் பற்றாக்குறையினைப் பிரதிபலிக்கும் வகையில், கீரி சம்பா அரிசியின் சராசரி சில்லறை விலை 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 370.21 ஆக உயர்ந்தது. இதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 38.4 சதவீத அதிகரிப்பாகும். மேலும், 2026 ஏப்ரல் மாதத்தில் கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 375.11 வரை மேலும் உயர்வடைந்துள்ளது. 2026 ஆம் ஆண்டு மே மாதமளவில் கடுமையான பற்றாக்குறையொன்று ஏற்படக் கூடும் என எதிர்பார்த்தமையினால், நுகர்வோர் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் விலையை ஸ்திரப்படுத்துவதற்கும் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் GR 11 அரிசி மற்றும் அதற்கு ஒத்த மாற்று அரிசி வகைகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கீரி சம்பா அரிசியின் சராசரி சில்லறை விலை ஏப்ரல் மாதத்தை விட 22.5 சதவீததினால் குறைவடைந்து 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 290.69 வரை வீழ்ச்சியடைந்தது.

தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை

தேயிலைப் பயிர்ச்செய்கை துணைத் துறையானது, 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில், 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் ஏற்பட்ட 7.0 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் 2.6 சதவீதத்தினால் சுருங்கியுள்ளது. தேயிலை உற்பத்தி 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் ஏற்பட்ட 135.8 கிலோ கிராம் மில்லியனுக்கு ஒப்பீட்டளவில் 131.2 கிலோ கிராம் மில்லியன்கள் வரை 3.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கான முக்கிய காரணம் 2026 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நிலவிய வறட்சியான காலநிலையும் மற்றும் குறைவான உரத்தின் பயன்பாடுமேயாகும். இறப்பர் பயிர்ச்செய்கை துணைத் துறையானது, 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில், 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் ஏற்பட்ட 9.1 சுருக்கத்திற்கு ஒப்பீட்டளவில் 8.5 சதவீதத்தினால் சுருக்கமடைந்துள்ளது. முக்கியமாக, மோசமான காலநிலை நிலைமைமைகளின் காரணமாக ஆண்டின் தொடக்க மாதங்களில் நிலவிய வறட்சியான வானிலை இறப்பர் பால் (லேடெக்ஸ்) விளைச்சல் மீது ஏற்படுத்திய தாக்கம், மற்றும் 2026 மே மாத காலப்பகுதியில் மழையுடனான நாட்கள் அதிகரித்தமையினால் இறப்பர் பால் சேகரிக்கும் பணி குறைந்ததன் காரணமாக , இறப்பர் உற்பத்தி 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவான 34.2 மில்லியன் கிலோ கிராம் இறப்பர் உற்பத்திக்கு ஒப்பீட்டு ரீதியில் 32.6 மில்லியன் கிலோ கிராம்கள் வரை 4.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில், 12.5 சதவீத வீழ்ச்சியைக் காட்டிய எண்ணெய்யுள்ள் பழங்கள் (தேங்காய், இளநீர், மற்றும் எண்ணெய் பனை) துணைத் துறையானது, , 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 30.8 சதவீதமாக குறிப்பிடத்தக்க அளவிலான வளர்ச்சியொன்றினை அடைந்துள்ளது. அதன் படி, 2025 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பீட்டளவில் குறைவான உற்பத்தி நிலையிலிருந்து மீட்சியடைந்ததைப் பிரதிபலிக்கும் வகையில் தேங்காய் உற்பத்தி, 1,343 மில்லியன் தேங்காய்களுக்கு ஒப்பீட்டளவில் 1,747 மில்லியன் தேங்காய்கள் வரை 30.1 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

தானியங்கள்,. காய்கறிகள், பழங்கள், வாசனைத் திரவியங்கள் மற்றும் மருத்துவப் பயிர்கள்

தானியங்கள் (நெல் தவிர்ந்த) பயிர்ச்செய்கை துணைத் துறையானது, 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில், 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவாகிய 5.0 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் 0.5 சதவீதத்தினால் மிகக் குறைந்த அளவிலான வளர்ச்சியொன்றினைப் பதிவு செய்தது. காய்கறிகள் பயிர்ச்செய்கை துணைத் துறையானது, 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் பதிவாகிய 7.6 சதவீத வீழ்ச்சிக்கு ஒப்பீட்டளவில் 2.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த அதே வேளை, பழங்கள் பயிர்ச்செய்கை துணைத் துறையானது, 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவாகிய 3.8 சதவீத வளர்ச்சியுடன் 2.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. வாசனைத் திரவியங்கள், நறுமணப் பயிர்கள், மருந்துகள் மற்றும் மருத்தவப் பயிர்கள் துணைத்துறை பயிர்ச்செய்கை 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவாகிய 0.4 சதவீத வீழ்ச்சிக்கு ஒப்பீட்டளவில் 3.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.

மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு

கடல் நீர் மீன் பிடி மற்றும் கடல்சார் நீரியல் வள உயிரின வளர்ப்புத் துணைத் துறையானது, 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில், 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில், ஏற்பட்ட 5.2 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 19.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்துள்ளது. கடல்நீர் மீன் உற்பத்தியானது, 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவாகிய 158.8 கிலோ கிராம் மில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 128.6 கிலோ கிராம் மில்லியன்கள் வரை 19.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. கடல் மேற்பரப்பு வெப்ப நிலையில் ஏற்பட்டுள்ள உயர்வு மற்றும் எரிபொருள் விலையேற்றமுமே இதற்கான முக்கிய காரணங்களாகும். நீர்த்தேக்கங்களில் மீன்களின் இருப்பு குறைந்துள்ளமையை ஓரளவிற்கு பிரதிபலிப்பதன் மூலம், நன்னீர் மீன் பிடி மற்றும் நன்னீர் நீரியல் வள உயிரின வளர்ப்புத் துணைத் துறையானது, 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவாகிய 46.8 சதவீத வீழ்ச்சிக்கு ஒப்பீட்டளவில் 50.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்துள்ளது. இதற்கிடையில், தித்வா சூறாவளியால் கோழி மற்றும் கால்நடைகள் உயிரிழந்தமைமையை ஓரளவு பிரதிபலிப்பதன் மூலம் கால்நடை உற்பத்தி துணைத் துறையானது, 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 15.8 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 2026 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

கைத்தொழில் மற்றும் தயாரிப்புத் துறை


நடைமுறை சந்தை விலைகளின் படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 26.6 சதவீதத்திற்குப் பங்களிப்பினைச் செலுத்தும் கைத்தொழில் துறையானது, 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவாகிய 7.9 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 2026 ஆம் ஆண்டின். முதல் அரைப்பகுதியில் 7.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கான முக்கியமான காரணம் , நிர்மாணம் (15.1 சதவீதம்), சுரங்கம் மற்றும் அகழ்வு (18.5 சதவீதம்) உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திப் பொருட்களின் தயாரிப்புக்கள் (4.9 சதவீதம்), ஏனைய உலோகமல்லாத கனிய வள உற்பத்திப் பொருட்களின் தயாரிப்புக்கள் (13.0 சதவீதம்), அடிப்படை உலோகங்கள் மற்றும் புனையப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்களின் தயாரிப்புக்கள் (14.4 சதவீதம்) இரசாயன உற்பத்திப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருத்துவ உற்பத்திப் பொருட்கள் (9.3 சதவீதம்), மற்றும் மின்சாரம், எரிவாயு, நீராவி, மற்றும் குளிர் சாதன வசதிகள் வழங்கல் (7.1 சதவீதம்) ஆகிய துணைத் துறைகளின் வளர்ச்சியாகும்.

மர மற்றும் தளபாடங்கள் தவிர்ந்த மரத்தாலான தயாரிப்புகள், மற்றும் உள் பட்டை தயாரிப்புகள் (7.8 சதவீதம்), தளபாடங்களின் தயாரிப்புக்கள் (7.9 சதவீதம்), இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் தயாரிப்புக்கள் (4.4 சதவீதம்)), காகித உற்பத்திப் பொருட்களின் தயாரிப்புக்கள் , அச்சிடுதல் மற்றும் ஊடகத் தயாரிப்புகளின் மீள் தயாரிப்புகள், (2.5 சதவீதம்), நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் (7.1 சதவீதம்), மற்றும் கழிவு நீர் கழிவு சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள், (2.2 சதவீதம்), ஆகிய துறைகளும் 2026 ஆம் ஆண்டின் முதல் பாதியில் வளர்ச்சியடைந்தன.

இருப்பினும், 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் சில துணைத் துறைகள் வீழ்ச்சியடைந்தன. வெளிநாடுகளிலிருந்தான குறைவான கேள்விக்கு மத்தியிலும் நெசவுத் துணிகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய் வீழ்ச்சியடைந்தமையை பிரதிபலிப்பதன் மூலம் நெசவுத் துணிகள் மற்றும் ஆடைகள் மற்றும் தோல் சார்ந்த தயாரிப்புகள், 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 13.4 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 2.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மத்திய கிழக்கில் நிலவும் மோதலின் காரணமாக வழங்கல்களில் ஏற்பட்டுள்ள தடைகளுக்கு மத்தியில் சுத்திகரிப்பதற்காக இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெய்யின் அளவு குறைவடைந்தமையை பிரதிபலிப்பதன் மூலம் நிலக்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் தயாரிப்புகள் 8.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு, இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்திப் பொருட்களின் தயாரிப்புகள் 9.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததோடு, ஏனைய தயாரிப்புகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் திருத்தங்கள் மற்றும் பொருத்துதல்கள் 4.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.


மொத்த மின்னுற்பத்தியானது, 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில், பதிவாகிய 8,688 கிவோ மணிக்கு ஒப்பீட்டளவில் 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 9,304 கிவோ மணி வரை 7.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. நீர்மின் நிலையங்களின் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட மின்னுற்பத்தி 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவாகிய 2,975 கிவோ மணிக்கு ஒப்பீட்டளவில் 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 2.294 கிவோ மணி வரை 22.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதோடு, காற்றாலையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மின்னுற்பத்தி 139 கிவோ மணியாக 16.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இருப்பினும், எரிபொருள் எண்ணெய்யிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மின்னுற்பத்தி 1,004 கிவோமி வரை 62.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ள அதே வேளை, நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின்னுற்பத்தி 2,809 கிவோம வரை 4.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. தனியார் துறையின் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட மின்னுற்பத்தியுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 2,245 கிவோம ஆக இருந்த தனியார் துறையின் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட மின்னுற்பத்தி, 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப் பகுதியில் 3,058 கிவோம வரை 36.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. மரபு ரீதியற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களினூடாக உற்பத்தி செய்யப்பட்ட மின்னுற்பத்தி 2,158 கிவோம வரை 16.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. கைத்தொழில் நடவடிக்கைகளின் விரிவாக்கத்திற்கு ஏற்ப, கைத்தொழில்களுக்கான மின்சாரத்தின் விற்பனையானது, 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 2,316 கிவோம இற்கு ஒப்பீட்டு ரீதியில் 2,426 கிவோம வரை 4.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது.

வரைபு 3.5 | கைத்தொழில்த் துறை வகுதி - 2026 இன் முதல் அரையாண்டு(அ)



மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
(அ) நிலையான விலைகளில்

வரைபு 3.6 | தயாரிப்புத் துறை வகுதி - 2026 இன் முதல் அரையாண்டு(அ)



மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
(அ) நிலையான விலைகளில்

சேவைகள் துறை


நடைமுறையிலுள்ள சந்தை விலைகளுக்கு ஏற்ப, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 53.5 சதவீத பங்களிப்பைச் செலுத்தும் சேவைகள் துறையானது, 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் பதிவாகிய 3.3 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 3.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வளர்ச்சிக்கு, நிதிச்சேவை நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிதிச்சேவைகள் (10.2 சதவீதம்) காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதி நடவடிக்கைகள் (14.6 சதவீதம்), பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து,, களஞ்சியப்படுத்தல் உள்ளிட்ட (3.4 சதவீதம்), மற்றும் தகவல் தொழில்நுட்ப நிரலாக்கம், ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள் (12.8 சதவீதம்) ஆகிய துறைகளின் விரிவாக்கமே பிரதான காரணமாகும். மேலும் தொலைத்தொடர்பு, (4.7 சதவீதம்) தபால் மற்றும் பொருட்களை கொண்டு செல்லல் நடவடிக்கைகள் (4.8 சதவீதம்) தங்குமிட வசதிகள், உணவு மற்றும் பான சேவைகளின் நடவடிக்கைகள் (4.5 சதவீதம்), மற்றும் வீட்டுரிமைகள் உள்ளிட்ட அசையாச் சொத்துக்களின் விற்பனை நடவடிக்கைகள் (3.4 சதவீதம்) ஆகிய இன்னோரன்ன துணைத் துறைகளும் 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் வளர்ச்சியடைந்தன. மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், (1.5 சதவீதம்),தொழில்நிலை உத்தியோகபூர்வ சேவைகள், (1.5 சதவீதம்) நிரலாக்கம் மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகள், காணொளி மற்றும் செவியலை தயாரிப்புக்கள், (1.7 சதவீதம்), மனித சுகாதார நடவடிக்கைகள் வதிவிடப் பராமரிப்பு மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் (1.2 சதவீதம்), கல்வி (1.0 சதவீதம்), மற்றும் ஏனைய தனிப்பட்ட சேவை நடவடிக்கைகள் (0.7 சதவீதம்), ஆகிய துறைகள் சிறு வளர்ச்சியொன்றினைப் பதிவு செய்தன. இருப்பினும், பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு, கட்டாய சமூக பாதுகாப்பு ஆகிய துணைத் துறை என்பன 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 1.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

அட்டவணை 3.2 | சேவைத்துறையில் தெரிவு செய்யப்பட்ட குறிகாட்டிகள்

குறிகாட்டிகள்	2021	2022	2023	2024	2025	2025	2026(அ)
துறைமுக சேவைகள்						சன - ஆக	சன - ஆக
வருகை தந்த கப்பல்கள் (இல)	4,180	4,073	4,809	4,562	5,120	3,334	3,527
மொத்த சரக்கு கையாடல் (மெ.தொ '000)	109,356	100,376	103,794	120,203	125,383	84,580	90,110
மொத்த கொள்கலன் கையாடல் (TEU '000)	7,249	6,862	6,950	7,792	8,301	5,435	5,995
இடைமாற்றம் செய்யப்பட்டவை (TEU '000)(இ)	6,050	5,832	5,754	6,623	6,587	4,353	4,828
தொலைதொடர்பாடல் சேவை						ஜூன் இறுதியில்	ஜூன் இறுதியில்
நிலையான தொலைபேசி இணைப்பு (எண். '000)	2,852	2,651	2,308	2,122	2,627	3,473	2,708
கையடக்க தொலைபேசி (எண். '000)	29,959	28,838	28,986	28,820	29,490	29,027	29,419
கம்பியல்லா தொலைபேசி (எண். '000)	1,587	1,388	1,163	1,046	1,564	2,393	1,660
இணைய, மின்னஞ்சல் வசதி (எண் '000)	22,106	21,668	22,864	23,149	23,855	23,686	23,882
சுகாதாரத் துறை							
தனியார் வைத்தியசாலைகள்	243	250	த.இ	த.இ	த.இ	த.இ	த.இ
அரசாங்க வைத்தியசாலைகள்	618	617	த.இ	த.இ	688	த.இ	த.இ
கட்டில்களின் எண்ணிக்கை (அரசாங்கம்)	78,228	78,228	த.இ	த.இ	91,551	த.இ	த.இ
வைத்தியர்களின் எண்ணிக்கை (அரசாங்கம்)	20,209	21,045	த.இ	த.இ	25,055	த.இ	த.இ
தாதிகள் எண்ணிக்கை (அரசாங்கம்)	39,091	40,775	த.இ	த.இ	51,067	த.இ	த.இ
நிதித் துறை						ஜூன் இறுதியில்	ஜூன் இறுதியில்
வங்கிக் கிளைகள், பிற விற்பனை நிலையங்கள்	7,369	7,378	7,522	7,613	7,968	7,652	7,570
பாவனையிலுள்ள கடன் அட்டைகள்	2,054,985	2,054,896	1,987,857	1,990,271	2,165,600	2,093,738	2,274,221
						ஜூன் இறுதியில்	ஆகஸ்ட் இறுதியில்
உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் (உ)	39	37	33	32	32	32	30
விசேட குத்தகைக் கம்பனிகள்	3	1	1	1	1	1	-
சுற்றுலாத்துறை						சன - ஆக	சன - ஆக
சுற்றுலாப் பயணிகளின் வருகை	194,495	719,978	1,487,303	2,053,465	2,362,521	1,566,523	1,535,122
சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அடொ.மில்.)	507	1,136	2,068	3,169	3,219	2,290	2,061
அறை பயன்பாட்டு விகிதம்	18.6	30.4	39.0	த.இ	த.இ	த.இ	த.இ
போக்குவரத்து சேவைகள் (புதிய பதிவு)						சன - ஆக	சன - ஆக
பேருந்துகள்	281	404	685	146	2,096	853	3,105
கார்கள்	3,495	1,489	1,816	1,644	68,047	26,894	81,801
பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள்(ஈ)	2,593	940	523	1,284	3,792	1,700	5,728
மோட்டார் சைக்கிள்கள்	8,011	9,060	20,200	65,289	254,817	127,745	308,292
முச்சக்கர வண்டிகள்	2,093	36	60	94	17,332	5,967	31,925
நில வாகனங்கள் மற்றும் இழுவை வண்டிகள் (எ)	12,616	5,285	4,020	5,070	9,079	5,139	6,790
ஏனைய (ஏ)			586	883	6,937	3,283	7,694

மூலம் : இலங்கை மத்திய வங்கி, போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இலங்கை துறைமுக அதிகார சபை, சுகாதார அமைச்சு, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
(அ) தற்காலிக
(ஆ) மீள்களஞ்சியப்படுத்தப்பட்டவை உள்ளடங்கலாக திருத்தப்பட்ட
(இ) மீள்களஞ்சியப்படுத்தப்பட்டவை உள்ளடங்கலாக (2021-2024)
(ஈ) பிரத்தியேக நோக்கம் கொண்ட வாகனங்கள், மோட்டார் லொறி மற்றும் ஏனைய லொறிகள் உள்ளடங்கியுள்ளது.
(உ) நில வாகனங்கள், இழுவை வண்டிகள் உள்ளடங்கலாக
(ஊ) வான்கள், இரட்டை பயன்பாட்டு வாகனங்கள், குவாட்ரிசைக்கிள்கள் மற்றும் மோட்டார் வீடுகள் ஆகியவை அடங்கும்.
(எ) வரையறுக்கப்பட்ட ETI நிதி கம்பனி நீங்கலாக (2021 - 2024)

வரைபு 3.7 | சேவைத் துறை வகுதி - 2026 இன் முதல் அரையாண்டு(அ)



மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
(அ) நிலையான விலைகளில்

போக்குவரத்து மற்றும் துறைமுக சேவைகள்

களஞ்சியப்படுத்தல் உள்ளிட்ட பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து துணைத் துறையானது, 2026 ஆம ஆண்டின் முதல் அரைப்பகுதியில், 3.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து மோட்டார் வாகனங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து மோட்டார் வாகனங்களின் இறக்குமதி அதிகரித்தமையினைப் பிரதிபலிப்பதன் மூலம் புதிய மோட்டார் வாகனங்களின் பதிவுகளின் எண்ணிக்கையானது, 2025 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் பதிவாகிய 96,056 உடன் ஒப்பீட்டளவில் 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 342,029 வரை 256.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. புதிய வாகனங்களின் மொத்தப் பதிவுகளில் 68.5 சதவீத பங்களிப்பைச் செலுத்தும் மோட்டார் சைக்கிள்களின் பதிவு 234,354 வரை 223.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ள அதே வேளை, மோட்டார் கார்களின் பதிவுகள் 66,344 வரை 383.4 சதவீதத்தாலும் மற்றும் முச்சக்கர வண்டிகளின் பதிவுகள் 23,523 வரை 718.8 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்துள்ளது. பேருந்துகள், இரட்டை நோக்க வாகனங்கள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து வாகனங்களின் பதிவுகள் முறையே 380.1 சதவீதம், 256.2 சதவீதம் மற்றும் 299.8 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்துள்ளன.

துறைமுகச் செயற்பாடுகள் 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் விரிவடைந்தன. கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்தக் கொள்கலன்களின் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 3.97 மில்லியன் இருபது அடி கொள்கலன் அலகுகளுக்கு ஒப்பீடு ரீதியில் 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் 4.44 மில்லியன் இருபது அடி கொள்கலன் அலகுகள் 11.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளன. கையாளப்பட்ட மொத்தக் கொள்கலன்களின் எண்ணிக்கை 80.1 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செலுத்தும் இடமாற்றக் கொள்கலன் கையாளுகை மொத்தக் கொள்கலன்களின் எண்ணிக்கை 3.56 மில்லியன் இருபது அடி கொள்கலன் அலகுகள் வரை 11.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. கையாளப்பட்ட மொத்த உள்நாட்டுக் கொள்கலன் கையாளுகை 0.68 மில்லியன் இருபது அடி கொள்கலன் அலகுகள வரை 8.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததோடு, மீள் களஞ்சியப்படுத்துவதற்காக கையாளப்பட்ட மொத்தக் கொள்கலனகளின் எண்ணிக்கை 0.20 மில்லியன் இருபது அடி கொள்கலன் அலகுக்ள வரை 24.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. கொழும்பு காலி, திருகோணமலை துறைமுகங்கள் மற்றும் அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் கையாளப்பட்ட ஒட்டு மொத்தக் கப்பல் சரக்குகளின் கையாள்கைகளின் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டில் அதே காலப்பகுதியில் 63.0 மெட்ரிக் தொன் மில்லியன்களுக்கு ஒப்பீட்டளவில் 67.4 மெட்ரிக் தொன் மில்லியன்கள் வரை 6.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. இதில் தரையிறக்கப்பட்ட சரக்குகள் 37.9 மெட்ரிக் தொன் மில்லியன்கள் வரை 8.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததோடு, மற்றும் கப்பலேற்றப்பட்ட சரக்குகளின் அளவு 29.4 மெட்ரிக் தொன் மில்லியன்கள் வரை 4.6 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தது. இதற்கிடையில், கப்பல் போக்குவரத்தானது 2,605 கப்பல்கள் 6.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

தொலைத்தொடர்பு

தொலைத்தொடர்புத் துணைத் துறையானது, 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப் பகுதியில், 4.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. செலியுலர் நடமாடும் கைத்தொலைபேசிகளுக்கான இணைப்புகளின் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின்

இறுதியில் பதிவாகிய 29.0 மில்லியன்களுக்கு ஒப்பீட்டளவில் 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 29.4 மில்லியன்கள் வரை 1.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. நடமாடும் தொலைபேசி இணையத்தள இணைப்புக்கள் உள்ளிட்ட இணையத்தள இணைப்பாளர்களின் எண்ணிக்கை 23.9 மில்லியன்கள் வரை 0.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இருப்பினும், கம்பியில்லா உள்ளூர் இணைப்பு வலையமைப்பு இணைப்புகள் 1.7 மில்லியன்கள் வரை 30.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக நிரந்தர தொலைபேசிகளின் எண்ணிக்கை 2.7 மில்லியன்களாக 22.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதோடு, கம்பியுள்ள இணைப்புகள் 1.0 மில்லியன் வரை 3.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. அதன் படி, செலியுலர் நடமாடும் தொலைபேசி இணைப்புக்கள் உள்ளிட்ட தொலைபேசி ஊடுருவல் விகிதமானது, 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டின் இறுதியில் 2025 ஆம் ஆண்டின் இரண;டாம் காலாண்டின் இறுதியில் பதிவாகிய 100 பேருக்கு 149.4 இற்கு ஒப்பீட்டு ரீதியில் 100 பேருக்கு 146.2 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

வேலையின்மை

வேலையின்மை வீதமானது, 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில், பதிவாகிய 3.8 சதவீதத்திற்கு ஒப்பீட்டு ரீதியில் 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 4.0 சதவீதம் வரை சிறிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. பெண்கள் மற்றும் ஆண்களுக்கிடையிலான வேலையின்மையானது முறையே , 6.1 சதவீதமாகவும் மற்றும் 2.8 சதவீதமாகவும் பதிவாகியது. இதற்கிடையில், பெண்கள் 22.4 சதவீதமாகவும், மற்றும் ஆண்கள் 15.5 சதவீதமாகவும் இருந்த இளைஞர்களுக்கிடையிலான (15 - 24) வேலையின்மை வீதமானது, 17.8 சதவீதமாக இருந்ததோடு, இது அனைத்து வயதினர்களின் குழுக்களுக்கிடையில் பதிவாகிய மிக உயர்ந்த வேலையின்மை வீதமாக இருந்தது. இதில். க.பொ.த. உயர் தர மற்றும் உயர் கல்வித் தகைமை உள்ளவர்களுக்கிடையிலான வேலையின்மை வீதமானது, 6.7 சதவீதமாக இருந்ததோடு, அது ஆண்களுக்கிடையிலான வேலையின்மை வீதத்தை விட (3.9 சதவீதம்) பெண்களுக்கிடையிலான வேலையின்மை வீதம் (9.6 சதவீதம்) குறிப்பிடத்தக்க அளவில் உயர்வடைந்துள்ளது. அனைத்து வயதுக் குழுவினர் மற்றும் கல்வி மட்டங்களில் ஆண்களை விட பெண்களுக்கிடையிலான வேலையின்மை வீதம் உயர் மட்டத்தில் காணப்பட்டது.


இதற்கிடையில், தொழிற்படை பங்கேற்பு விகிதம் 2025 ஆம் அண்டின் இரண்டாம் காலாண்டில் 49.3 சதவீதத்திற்கு ஒப்பீட்டு ரீதியில் 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 50.0 சதவீதம் வரை சிறிய அளவில் அதிகரித்துள்ளது. ஆண்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் இடையிலான தொழிற்படை பங்கேற்பு விகிதமானது முறையே 70.3 சதவீதமாகவும் மற்றும் 32.7 சதவீதமாகவும் இருந்தது. வேலைவாய்ப்புள்ளோரின் மொத்த எண்ணிக்கை 8.2 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு, அத்தொகையில் 49.2 சதவீதமானோர் சேவைகள் துறையிலும், 27.3 சதவீதமானோர் கைத்தொழில் துறையிலும், 23.4 சதவீதமானோர் விவசாயத் துறையிலும் ஈடுபட்டிருந்தனர்.

அட்டவணை 3.3 | சுற்றுலாத்துறையின் செயலாற்றுகை

மாதம்	சுற்றுலாப் பயணிகளின் வருகை					சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ.டொ.மில்.)				
	2022	2023	2024	2025(ஆ)	2026(அ)	2022	2023	2024	2025(ஆ)	2026(அ)
சனவரி	82,327	102,545	208,253	252,761	277,327	151.7	153.5	341.8	400.7	413.8
பெப்ரவரி	96,507	107,639	218,350	240,217	279,328	169.4	161.6	345.7	367.6	381.4
மார்ச்	106,500	125,495	209,181	229,298	183,979	161.2	188.8	338.4	354.0	244.8
ஏப்ரல்	62,980	105,498	148,867	174,608	135,643	108.7	148.2	225.7	256.7	164.3
மே	30,207	83,309	112,128	132,919	145,745	43.5	100.0	154.0	164.1	155.7
ஜூன்	32,856	100,388	113,470	138,241	124,551	45.0	122.9	151.1	169.5	151.1
ஜூலை	47,293	143,039	187,810	200,244	196,845	85.0	219.0	328.3	318.5	285.5
ஆகஸ்ட்	37,760	136,405	164,609	198,235	191,704	67.9	210.5	282.1	258.9	264.4
செப்டெம்பர்	29,802	111,938	122,140	158,971	158,557	40.5	152.2	181.0	182.9	185.6
ஒக்தோபர்	42,026	109,199	135,907	165,193		54.9	136.7	185.6	186.1	
நவம்பர்	59,759	151,496	184,158	212,906		81.0	205.3	272.9	251.6	
டிசெம்பர்	91,961	210,352	248,592	258,928		127.4	269.3	362.1	308.6	
மொத்தம்	**719,978**	**1,487,303**	**2,053,465**	**2,362,521**	**1,693,679**	**1,136.3**	**2,068.0**	**3,168.6**	**3,219.2**	**2,246.6**

மூலம் : இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
(அ) தற்காலிகமானது
(ஆ) திருத்தப்பட்டது

வரைபு 3.8 | தொழிலாளர் பங்கேற்பு விகிதம் மற்றும் வேலையின்மை விகிதம்



மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

3.3 நாணயத் துறையின் அபிவிருத்திகள்

2026 ஆம் ஆண்டு காலப்பகுதியில், பணவீக்க அழுத்தங்கள் மீண்டும் எழுந்தமையினால் நாணயங்களின் நிலைமைகள் தளர்ப்புத் தன்னமையிலிருந்து மிகவும் இறுக்கமான நாணயக் கொள்கையொன்றினை நோக்கி மாற்றமடைந்தது. இலங்கை மத்திய வங்கி 2026 ஆம் ஆண்டின் முதல் அரைப் பகுதியில் . ஒரு நாள் கொள்கை வீதத்தை 7.75 சதவீத மட்டத்தில் பேணி வந்தது. 2026 ஆம் ஆண்டு மே மாதத்தில், உலகளாவிய எரிசக்தி விலைகள் உயர்வடைந்தமை, உள்நாட்டு எரிசக்தி விலைகள் உயர்வடைந்தமை தனியார் துறையின் கடன் வழங்குவதன் தொடர்ச்சியான பரவல் மற்றும் பணவீக்க எதிர்பார்ப்புகள் மீது ஏற்படக் கூடிய இடர் தொடர்பாக கவனம் செலுத்தவதன் மூலம் ஒரு நாள் கொள்கை 100 அடிப்படைப் புள்ளிகள் 8.75 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் காணப்பட்ட நாணயக் கொள்கை மீளாய்வின் போது ஒரு நாள் கொள்கை வட்டி வீதம் 8.75 சதவீத மட்டத்தில் பேணுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டதோடு, அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கொள்கை இறுக்கமாக்ககுதல் எதிர் வரும் காலப்பகுதிக்குள் பொருளாதாரத்தின் மீது மாற்றமடையும் என நாணயக் கொள்கை சபை எதிர்பார்க்கின்றது. அதன் பிரதிபலனாக நிலையான வைப்புத்தொகை வசதி விகிதம் மற்றும் நிரந்தர கடன் வசதி ' விகிதம் முறையே 8.25 சதவீதம் மற்றும் 9.25 சதவீதம் என்ற அளவில் காணப்பட்டது. நிலையியற் சட்ட ஒதுக்கு விகிதம் 2 .00 சதவீதமாக மாறாமல் காணப்பட்டது.

நாணயக் கொள்கையை இறுக்கியதன் பின்னர் சந்தை வட்டி வீதம் முன்னைய காலப்பகுதியில் காணப்பட்ட குறைந்த பெறுமதியிலிருந்து கூடிய பெறுமதி வரை வளர்ச்சியடைந்தது. வாராந்த சராசரி நிறையிடப்பட்ட முதன்மை கடன் வட்டி வீதம் (AWPR) 2026 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் காணப்பட்ட 9.86 சதவீதத்துக்கு ஒப்பீட்டளவில் 2026 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதியில் முடிவடையும் கிழமைக்கு 11.23 சதவீதமாக இருந்தது. சராசரி நிறையிடப்பட்ட புதிய கடன் வட்டி வீதம் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் காணப்பட்ட 11.33 சதவீதத்திலிரந்து 2026 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் 12.65 சதவீதம் வரை உயர்வடைந்ததோடு, புதிய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிலமுயற்சிகளுக்கான கடன்களுடன் தொடர்புடைய விகிதம் 2026 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதமளவில் 13.17 சதவீதம் வரை நெருங்கியது. இவ்வளர்ச்சிகளின் மூலம் இறுக்கமான நாணயக் கொள்கை நிலை கடன் வழங்கும் நிபந்தனைகளை படிப்படியாக மாறுவதைக் காட்டுகின்றது.

2026 ஆம் ஆண்டில் நாணய விரிவாக்கம் தொடர்ச்சியாக இடம் பெற்றாலும் கூட, அவ்வரிவாக்கத்தின் வேகம் கடன் வழங்கும் நிபந்தனைகள் மற்றும் வெளித்துறை அபிவிருத்திகள் இரண்டையும் பிரதிபலிக்கின்றது. விரிவான நாணய வழங்கல் (M_{2b}) 2026 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாத இறுதியில் முன்னைய ஆண்டுக்கு ஒப்பீட்டு ரீதியில் 11.5 சதவீத வளர்ச்சியொன்றினை பதிவு செய்வதன் மூலம் மொத்தமாக ரூபா 17,189.2 பில்லியன் வரை வளர்ச்சியடைந்திருந்தது. 2026 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத இறுதியில் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்களின் அளவை முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 23.6 சதவீத அளவிலான வளர்ச்சியொன்றினை பதிவு செய்வதன் மூலம் மொத்தம் ரூபா 11,768.7 பில்லியன் வரை அதிகரித்தது. இக்காலப்பகுதியில் வங்கி முறைமையின் தேறிய வெளிநாட்டு சொத்துக்களும் வலுப் பெற்றது. தனியார் துறை கடன் வழங்கலின் தொடர்ச்சியான பரவல் நாணய மாற்றத்தில் முக்கிய ஒரு மூலமாகக் காணப்பட்டதோடு., 2026 ஆம் ஆண்டு மே மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை இறுக்கமாக்கலுக்கான அளவீடுகளின் காரணமாக காலத்தோடு கடன் வழங்கும் வளர்ச்சி மந்தமடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அட்டவணை 3.4 | மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் துறைரீதியான பகிர்வு (%)

துறை	2022	2023	2024(அ)	2025(ஆ)	முதல் பாதி	
					2025(அ)	2026(அ)
விவசாயம்	**-4.1**	**1.6**	**1.2**	**1.4**	**0.6**	**-0.6**
தேயிலைப் பயிர்ச்செய்கை	-15.7	-1.5	1.7	1.4	5.9	-2.6
நெற் பயிர்ச்செய்கை	-11.8	17.1	3.1	5.3	2.4	-11.2
இறப்பர பயிர்ச்செய்கை	-9.8	-7.7	2.2	-6.0	-17.1	-8.5
தானியங்கள பயிர்ச்செய்கை	-24.8	2.5	10.9	0.2	5.5	0.5
மரக்கறிகள் பயிர்ச்செய்கை	-5.5	2.9	2.8	-7.1	-0.8	2.2
கால்நடைகள்	-11.4	0.3	14.1	10.5	16.3	-1.3
காடாக்கம், விறகு	14.8	-7.3	-2.1	10.7	6.8	12.5
மீன்பிடி	-10.5	3.0	1.9	-0.1	5.1	-19.1
கைத்தொழில்	**-16.0**	**-9.2**	**11.0**	**7.8**	**7.9**	**7.2**
அகழ்வு, சுரங்கமறுத்தல்	-31.0	-22.3	19.4	16.9	14.5	18.5
தயாரிப்புச் செயற்பாடுகள்	-12.2	-3.2	7.6	6.2	7.0	33.3
ஏனைய கைத்தொழில்கள்	-4.3	-3.0	5.9	8.9	4.8	6.6
நிர்மாணம்	-20.9	-20.8	19.4	9.2	9.6	15.1
சேவைகள்	**-2.6**	**-0.2**	**2.4**	**3.3**	**3.3**	**3.1**
மொத்த, சில்லறை வர்த்தகம்	0.0	0.1	1.3	1.4	1.5	1.5
போக்குவரத்து, களஞ்சியசாலை	3.0	4.3	2.9	3.0	3.2	3.4
தங்குமிட வசதி, உணவுச் சேவைச் செயற்பாடுகள்	27.0	26.0	31.4	12.4	12.7	4.5
தகவல், தொடர்பாடல்	6.5	-2.2	4.2	8.6	3.0	9.3
நிதி, காப்புறுதிச் செயற்பாடுகள்	-11.1	-10.3	-1.2	11.2	13.5	10.9
ஆதன விற்பனை செயற்பாடுகள்	-12.1	-6.0	4.2	3.6	3.2	3.4
தொழிற்துறை சேவைகள்	-17.7	2.4	3.5	2.4	2.7	1.5
கல்வி, தேகாரோக்கியம், சமூகப் பணிச் செயற்பாடுகள்	-2.0	0.7	1.0	2.0	1.4	1.0
பொது நிர்வாகம், பாதுகாப்பு	1.2	-1.7	-2.9	-1.3	-2.5	-1.8
ஏனைய சேவைகள் (சுய சேவைகள் நீங்கலாக)	0.3	0.3	1.5	1.0	0.9	0.7
மொ.உ.உ.	**-7.3**	**-2.3**	**5.0**	**5.0**	**4.8**	**4.7**


மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

(அ) தற்காலிகமானது


(ஆ)திருத்தப்பட்டது

வரைபு 3.9 : விளைவு வீதங்கள், நாணய திரட்டுக்கள், தனியார்த்துறை கடன் வளர்ச்சி

சதவீதம்



மூலம் : இலங்கை மத்திய வங்கி



மூலம் : இலங்கை மத்திய வங்கி


பணவீக்கம்

2026 ஆம் அண்டில் பணவீக்க நிலைமைகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு மாற்றமடைந்தது. இவ்வாண்டின் முதல் அரைப்பகுதியில் குறைவான பெறுமதியொன்றில் இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை (கொ.நு.வி.சு 2021=100) அடிப்படையாகக் கொண்ட முதன்மை பணவீக்கம், 2026 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில் 8.0 சதவீதத்திலிருந்து 2026 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் 8.3 சதவீதம் வரை உயர்வடைந்ததோடு, இதற்கான முக்கிய காரணம் உணவுப் பணவீக்கத்தில் ஏற்பட்ட புள்ளிவிபர அடிப்படை தாக்கம் செலுத்தியமையாகும். குடித்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு அமைய, 2026 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்கான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் பெறுமதி 209.9 ஆகும். 2026 ஆம் ஆண்டில் பணவீக்கம் உயர்வடைந்தமைக்கு முக்கியமாக எரிபொருள் விலைகள் உயர்வடைந்தமையும் மற்றும் அது சார்ந்த இரண்டாம் கட்டத்தின் தாக்கமும் அடிப்படை தாக்கமும் மற்றும் உணவு விலைகளில் ஏற்பட்ட வளர்ச்சியும் காரணங்களாகும்.

கொழும்பு நுகர்வொர் விலைச் சுட்டெண்ணின் கீழ் உணவுப் பணவீக்கம் செப்டெம்பர் மாதத்தில் பதிவான 8.7 சதவீதத்திலிருந்து 2026 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் 8.8 சதவீதம் வரை உயர்வடைந்ததோடு, உணவல்லாத பண வீக்கம் செப்டெம்பர் மாதத்தில் பதிவாகிய 7.7 சதவீதத்திலிருந்து ஒக்டோபர் மாதத்தில் 8.0 சதவீதமாக உயர்வடைந்தது. மைய பணவீக்கம் உயர்வடைந்துள்ளதோடு, அது 2026 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் பதிவாகிய 5.4 சதவீதத்திலிருந்து ஒக்டோபர் மாதத்தில் 5.6 சதவீதம் வரை உயர்வடைந்ததோடு, பணவீக்க அழுத்தங்கள் படிப்படியாக விரிவான அடிப்படையில் காணப்படுவதாகக் காட்டப்படுகின்றது. குடித்தொகை மற்றும் பள்ளிவிபரத் திணைக்களம் அறிக்கையிட்ட படி, தரவுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நெருக்கமான மாதமான 2026 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே. நு.வி.சு. , 2021 = 100) மீது அடிப்படையாகக் கொண்ட பணவீக்கம் 8.1 சதவீதமாக இருந்ததோடு. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பெறுமதி 224.2 ஆக காணப்பட்டது.

வரைபு 3.10 : முதன்மைப் பணவீக்கம், மைய பணவீக்கம், உணவுப் பணவீக்க அசைவுகள்

சதவீதம்



மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

அட்டவணை 3.5 | நுகர்வோர் விலைப் பணவீக்கம் (அடிப்படை : 2021 = 100)

மாதம்	2025 (அடிப்படை ஆண்டு 2021=100)				2026 (அடிப்படை ஆண்டு 2021=100)			
	முதன்மை பணவீக்கம் (ஆண்டுக்காண்டு)		மைய பணவீக்கம் (ஆண்டுக்காண்டு)		முதன்மை பணவீக்கம் (ஆண்டுக்காண்டு)		மைய பணவீக்கம் (ஆண்டுக்காண்டு)	
	கொ.நு.வி.சு	தே.நு.வி.சு	கொ.நு.வி.சு	தே.நு.வி.சு	கொ.நு.வி.சு	தே.நு.வி.சு	கொ.நு.வி.சு	தே.நு.வி.சு
சனவரி	-4.0	-4.0	1.2	-0.2	2.3	2.4	2.3	2.2
பெப்ரவரி	-4.2	-3.9	0.7	-0.6	1.6	1.6	2.1	2.2
மார்ச்	-2.6	-1.9	0.7	-0.6	2.2	2.4	2.5	2.7
ஏப்ரல்	-2.0	-0.8	0.8	-0.1	5.4	4.7	3.8	4.4
மே	-0.7	0.6	1.2	0.3	5.5	5.4	3.9	4.5
ஜூன்	-0.6	0.3	1.5	0.6	6.8	6.5	4.0	5.0
ஜூலை	-0.3	0.7	1.6	0.9	7.3	7.2	4.4	6.0
ஆகஸ்ட்	1.2	1.5	2.0	1.5	8.0	8.1	5.1	6.3
செப்டெம்பர்	1.5	2.1	2.0	1.9	8.0	8.1	5.4	6.4
ஒக்டோபர்	2.1	2.7	2.2	2.1	8.3	-	5.6	-
நவம்பர்	2.1	2.4	2.4	2.2				
டிசெம்பர்	2.1	2.9	2.7	2.6				

மூலம் : தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற பொள்கை மீளாய்வின் போது மேற்கொள்ளப்பட்ட எதிர்வு கூறல்களுக்கு ஏற்ப, மத்திய கிழக்கு மோதல் நிலைமைகளின் தாக்கங்கள் மற்றும் அங்கு பரவிய தாக்கங்கள் தற்காலிகமாக இருக்கும் என்ற அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டு முதன்மை பணவீக்கம் குறுகிய காலத்தில் 5 சதவீத இலக்கை விட உயர் மட்டத்திற்தில் இருக்கும் எனவும் அதன் பின்னர் குறைந்து நடுத்தர காலத்தில் அவ்விலக்கு சுற்றி ஸ்திரமடையும் என இலங்கை மத்திய வங்கியினால் எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய ஸ்திரமற்ற தன்மை காரணமாக எதிர்கால நோக்கிற்கான இடர் உயர் மட்டத்தில் காணப்பட்டாலும் கூட, நடுத்தர கால பண வீவீக்க எதிர்பார்ப்புகள் விரிவாக நிலையான மட்டத்தில் இருந்தாக 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாணயக் கொள்கை அறிக்கையும் குறிப்பிடுகின்றது. அதன் படி, பொருத்தமான கொள்கை நிலையை தீர்மானிக்கும் போது மத்திய வங்கிகளினால் பண வீக்க அழுத்தம், கடன் நிலைமைகள் மற்றும் வெளித்துறையின் வளர்ச்சிகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதுடன் நாணயக் கொள்கை மேலும் தரவுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

3.4 பங்குச் சந்தை

2026 ஆம் அண்டில் கொழும்புப் பங்குச் சந்தை பரிமாற்ற நடவடிக்கைகள் உயர் மட்டத்தில் காணப்பட்ட போதும் கூட, ஆகஸ்ட் மாதத்தில் சந்தைக் கொடுக்கல் வாங்கல்களுடன் ஒப்பீட்டு ரீதியில் குறுகிய வீச்சொன்றின்றிற்குள் ஏற்பட்டது. 2026 செப்டெம்பர் 30 ஆம் திகதியளவில் அனைத்து பங்குச் விலைச் சுட்டெண் அலகுகள் 20,812.9 ஆவது மட்டத்தில் இருந்நததோடு, ஸ்டேண்டார்ட் என்ட் புவர்ஸ் ஸ்ரீ லங்கா 20 சுட்டெண் (S& P SL 20) 5,894.2 அலகுகள் மட்டத்தில் காணப்பட்டது. ஒக்டோபர் மாத இறுதியில் சந்தை மூலதனமயமாக்கல் மொத்தமாக ரூபா 7,548.2 பில்லியனாக இருந்தது. 2026 ஒக்டோபர் 30 ஆம் திகதி நாளாந்த சந்தை விற்பனை மொத்தம் ரூபா 958.6 மில்லியனாக இருந்தது.

2026 ஆம் ஆண்டு பங்குச் சந்தையின் செயல் திறன் மூலம் நாணயக் கொள்கை வளர்ச்சிகள், நிறுவன ரீதியான செயலாற்றுகை, உள்ளூர் பொருளாதாரம் மீட்சி அடைதல் மற்றும் உலகளாவிய மற்றும் புவிசார் அரசியல் வளர்ச்சிகளுக்கு பதிலாக மாறுபடும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பிரதிபலித்தது. 2026 ஒக்டோபர் மாதத்தில் சந்தைச் செயற்பாடுகள் சாதாரண மட்டத்தில் காணப்பட்டதோடு. அம்மாதத்தில் அனைத்து பங்கு விலைச் சுட்டெண்களும் 3.5 சதவீத அளவில் சிறிய குறைவொன்றையும் பதிவுசெய்தது. 2026 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி 72.33 மில்லியன் ரூபா அளவில் தேறிய வெளிநாட்டு வெளிப் பாய்ச்சலொன்று பதிவாகியதோடு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கேற்பு குறைவடைந்தது.

பொருளாதார வளர்ச்சியின் போக்கு நிறுவன ரீதியான வருவாய் ஈட்டல்கள், வட்டி வீதம் பணவீக்க எதிர்பார்ப்புகள் அரசின் கடன் அபாயம் குறித்த எண்ணப் போக்குகள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கேற்பு ஆகியன கொழும்பு பங்குச் சந்தையின் செயல் திறனில் தொடர்ச்சியாக தாக்கத்தை ஏற்படுத்தும். உள்ளூர் மூலதனச் சந்தை அபிலவிருத்திக்கு ஆதரவளிப்பதற்காக பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மையை மேலும் பேணுதல் மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை விருத்தி செய்தல் போன்ற விடயங்கள் தொடர்ந்து மேலும் முக்கிய காரணிகளாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அட்டவணை 3.6 | மூலதனச் சந்தை அசைவுகள்


குறிகாட்டிகள்	2020	2021	2022	2023	2024	2025	செப் இறுதியில்	
							2025	2026(அ)
அனைத்து பங்கு விலைச்சுட்டெண் (1985 = 100)	6,774	12,226	8,490	10,654	15,945	22,624	21,779	20,813
S&P SL 20 குறிகாட்டி	2,638	4,233	2,636	3,068	4,862	6,157	6,127	5,894
சந்தை மூலதனவாக்கம் (ரூ. பில்லியன்)	2,961	5,489	3,847	4,249	5,696	8,069	7,752	7,548
விற்பனை நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை	283	296	290	290	284	288	289	289
வருடாந்த புரள்வு (ரூ. பில்லியன்)	397	1173	687	411	538	1867	904	672
வெளிநாட்டு விற்பனைகள் (ரூ. மில்லியன்)	104,165	86,689	36,863	37,088	58,492	95,560	73,847	87,258
வெளிநாட்டு கொள்வனவுகள் (ரூ. மில்லியன்)	52,889	39,410	67,488	41,451	48,013	56,931	46,755	30,416
தேறிய கொள்வனவுகள் (ரூ. மில்லியன்)	-51,276	-47,279	30,625	4,363	-10,479	-38,629	-27,092	-56,842

மூலங்கள் : கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம், இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது


3.5 வெளிவாரித்துறையின் அபிவிருத்திகள்

2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இலங்கையின் வெளிவாரித்துறை மீண்டும் அழுத்தத்திற்கு உள்ளானது. இதற்கு முக்கிய காரணமாக, மத்திய கிழக்கில் தீவிரமடைந்த மோதல் உலகளாவிய கச்சா எண்ணெய் விலைகளையும் எரிபொருள் இறக்குமதிச் செலவையும் அதிகரித்தது. இதனுடன் வாகன இறக்குமதிகள் மீண்டும் அதிகரித்தமையும் சேர்ந்து அழுத்தத்தை ஏற்படுத்தின. இருப்பினும், அதிகரித்த ஏற்றுமதி வருமானமும் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களிடமிருந்து கிடைத்த பண அனுப்பல்களின் அதிகரித்த வரவும் ஓரளவு ஆதரவளித்தன. ஏற்றுமதி வருமானம் 5.3 சதவீதத்தால் அதிகரித்து 10,754.2 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. அதேவேளை, இறக்குமதிச் செலவு 21.3 சதவீதத்தால் அதிகரித்து 18,665.7 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்தது. இதன் விளைவாக, 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வர்த்தகப் பற்றாக்குறை 7,911.5 மில்லியன் அமெரிக்க டொலராக விரிவடைந்தது; 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 5,174.4 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. வெளிநாடுகளில் பணிபுரிபவர்களின் பண அனுப்பல்கள் 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 18.1 சதவீதத்தால் அதிகரித்து 6,865.4 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்தன. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் அவை 5,811.7 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தன. இதற்கிடையில், மத்திய கிழக்கு மோதலால் ஏற்பட்ட பயணத் தடங்கல்களின் மத்தியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்ததன் காரணமாக, சுற்றுலாத்துறை வருமானம் 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 9.2 சதவீதத்தால் குறைந்து 2,245.2 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 2,472.9 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது

வரைபு 3.11 : வர்த்தக மீதி மற்றும் நாணய மாற்று வீத அசைவு
(ஐ.அ.டொ பில்லியன்)



மூலம் : இலங்கை மத்திய வங்கி



மூலம் : இலங்கை மத்திய வங்கி

2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் நடப்புக் கணக்கில் 420.4 மில்லியன் அமெரிக்க டொலர் பற்றாக்குறை பதிவானது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் 1,853.2 மில்லியன் அமெரிக்க டொலர் உபரி பதிவாகியிருந்தது. விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையும் சேவைக் கணக்கின் உபரி குறைந்தமையும் இதற்கான முக்கிய காரணங்களாகும். 2026 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் சென்மதி நிலுவை 136 மில்லியன் அமெரிக்க டொலர் உபரியைப் பதிவு செய்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த உபரி 522 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கொழும்பு பங்குச் சந்தையில் 170.2 மில்லியன் அமெரிக்க டொலர் நிகர வெளியேற்றம் பதிவானது; 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் நிகர வெளியேற்றம் 84.6 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. அரசாங்கப் பிணையங்கள் சந்தைக்கான நிகர மூலதனப் பாய்ச்சல் 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 167.8 மில்லியன் அமெரிக்க டொலர் வரவாகப் பதிவானது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் நிகர வரவு 178.0 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2026 செப்டம்பர் மாத இறுதியில் மொத்த அலுவல்சாரர் இருப்புகள், சீன மக்கள் வங்கியுடனான பரிமாற்ற வசதியையும் உள்ளடக்கி, 6.9 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தன. இது 3.3 மாதங்களுக்கான இறக்குமதியை ஈடுசெய்யும் அளவாகும். இதற்கிடையில், 2026 ஒக்டோபர் மாத இறுதிவரை ஆண்டு தொடக்கம் முதல் கணக்கிடுகையில் இலங்கை ரூபாய் அமெரிக்க டொலருக்கு எதிராக 6.8 சதவீதம் மதிப்பிழந்தது.


ஏற்றுமதிகள்

2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பொருட்கள் ஏற்றுமதி வருமானம் 5.3 சதவீதத்தால் அதிகரித்து 10,754.2 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 10,215.1 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. குறிப்பாக. பெற்றோலியப் பொருட்கள். இறப்பர் பொருட்கள். இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி வருமானம் அதிகரித்தமையே இதற்கான முக்கிய காரணமாகும். ஏற்றுமதி வருமானத்தில் மிகப்பெரிய பங்கைத் தொடர்ந்து கைத்தொழில் ஏற்றுமதிகள் வகித்தன் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் அவற்றின் பங்கு 78.1 சதவீதமாக இருந்தது. விவசாய மற்றும் கனிம ஏற்றுமதிகளின் பங்குகள் முறையே 21.5 சதவீதமாகவும் 0.2 சதவீதமாகவும் இருந்தன.

2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கைத்தொழில் ஏற்றுமதி வருமானம் 6.9 சதவீதத்தால் அதிகரித்து 8,398.3 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 7,854.2 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. பெற்றோலியப் பொருட்கள். இறப்பர் பொருட்கள். உணவு. பானங்கள் மற்றும் புகையிலைப் பொருட்கள. இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி வருமானம் அதிகரித்தமையே இதற்கான முக்கிய காரணமாகும். 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பெற்றோலியப் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 52.1 சதவீதத்தால் அதிகரித்து 1,094.8 மில்லியன் அமெரிக்க டொலராகவும். இறப்பர் பொருட்களின் வருமானம் 9.2 சதவீதத்தால் அதிகரித்து 752.9 மில்லியன் அமெரிக்க டொலராகவும. உணவு. பானங்கள் மற்றும் புகையிலைப் பொருட்களின் வருமானம் 6.1 சதவீதத்தால் அதிகரித்து 702.6 மில்லியன் அமெரிக்க டொலராகவும். இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் வருமானம் 45.8 சதவீதத்தால் அதிகரித்து 516.0 மில்லியன் அமெரிக்க டொலராகவும் இருந்தன. எனினும். கைத்தொழில் ஏற்றுமதி வருமானத்தில் முக்கிய பங்களிப்பை வழங்கும் புடவை மற்றும் ஆடைகள் ஏற்றுமதி வருமானம் 5.6 சதவீதத்தால் குறைந்து 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 3,797.0 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 4,021.4 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது.

2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் விவசாய ஏற்றுமதி வருமானம் 0.3 சதவீதத்தால் சிறிதளவு குறைந்து 2,317.4 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 2,323.6 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. தேயிலை. சிறு விவசாயப் பொருட்கள். கடலுணவுப் பொருட்கள. மரக்கறிகள் மற்றும் இறப்பர் ஆகியவற்றின் வருமானம் குறைந்தமையே இதற்குக் காரணமாகும். தேயிலை ஏற்றுமதி வருமானம் 6.8 சதவீதத்தால் குறைந்து 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 1,083.6 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 1,163.0 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. மேலும். கடலுணவுப் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 2.0 சதவீதத்தால் குறைந்து 180.8 மில்லியன் அமெரிக்க டொலராகவும். சிறு விவசாயப் பொருட்களின் வருமானம் 19.4 சதவீதத்தால் குறைந்து 126.2 மில்லியன் அமெரிக்க டொலராகவும். மரக்கறிகளின் வருமானம் 20.4 சதவீதத்தால் குறைந்து 21.1 மில்லியன் அமெரிக்க டொலராகவும். இறப்பரின் வருமானம் 12.0 சதவீதத்தால் குறைந்து 21.0 மில்லியன் அமெரிக்க டொலராகவும் இருந்தன. எனினும். தேங்காய் ஏற்றுமதி வருமானம் 3.6 சதவீதத்தால் அதிகரித்து 441.0 மில்லியன் அமெரிக்க டொலராகவும்இ வாசனைத் திரவியங்களின் வருமானம் 30.4 சதவீதத்தால் அதிகரித்து 423.2 மில்லியன் அமெரிக்க டொலராகவும். பதப்படுத்தப்படாத புகையிலையின் வருமானம் 9.7 சதவீதத்தால் அதிகரித்து 20.6 மில்லியன் அமெரிக்க டொலராகவும் இருந்தன.இதற்கிடையில். கனிம ஏற்றுமதி வருமானம் 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 35.1 சதவீதத்தால் அதிகரித்து 24.5 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 18.1 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது

வரைபு 3.12 | ஏற்றுமதிகளின் வகுதி
(ஐ.அ.டொ பில்லியன்)



மூலம் : இலங்கை மத்திய வங்கி

இறக்குமதிகள்


2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இறக்குமதிச் செலவு 21.3 சதவீதத்தால் அதிகரித்து 18,665.7 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 15,389.5 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. நுகர்வுப் பொருட்கள். இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிச் செலவு அதிகரித்தமையே இதற்குக் காரணமாகும். மத்திய கிழக்கு மோதலைத் தொடர்ந்து இறக்குமதி விலைகள் உயர்ந்த நிலையில். எரிபொருள் இறக்குமதிச் செலவு அதிகரித்ததும் வாகன இறக்குமதிகள் உயர்ந்ததும் இதற்கு முக்கியமாகப் பங்களித்தன. 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மொத்த இறக்குமதிச் செலவில் நுகர்வுப் பொருட்கள். இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் பங்குகள் முறையே 24.0 சதவீதம். 56.0 சதவீதம் மற்றும் 19.9 சதவீதமாக இருந்தன.

2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிச் செலவு 17.5 சதவீதத்தால் அதிகரித்து 4,484.6 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 3,816.4 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. உணவல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிச் செலவு அதிகரித்தமையே இதற்கான முக்கிய காரணமாகும். உணவு மற்றும் பானங்களின் இறக்குமதிச் செலவு 3.4 சதவீதத்தால் அதிகரித்து 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 1,617.7 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 1,565.1 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. பால் உற்பத்திப் பொருட்கள். கடலுணவுப் பொருட்கள். தானியங்கள் மற்றும் அரைக்கும் தொழிற்துறைப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிச் செலவு அதிகரித்தமையே இதற்குக் காரணமாகும். உணவல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிச் செலவு குறிப்பிடத்தக்க வகையில் 27.3 சதவீதத்தால் அதிகரித்து 2,866.9 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 2,251.3 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. தனிப்பட்ட பயன்பாட்டுக்கான வாகனங்கள். மருத்துவ மற்றும் மருந்துப் பொருட்கள். வீட்டு உபகரணங்கள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றின் இறக்குமதி அதிகரித்தமையே இதற்கான முக்கிய காரணமாகும்.

2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிச் செலவு 21.3 சதவீதத்தால் அதிகரித்து 10,456.2 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 8,617.2 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. எரிபொருளுக்கான இறக்குமதிச் செலவு அதிகரித்தமையே இதற்கான முக்கிய காரணமாகும். எரிபொருள் இறக்குமதிச் செலவு 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 51.5 சதவீதத்தால் அதிகரித்து 4,487.2 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. இதில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களுக்கான இறக்குமதிச் செலவு 60.4 சதவீதத்தால் அதிகரித்து 3,483.7 மில்லியன் அமெரிக்க டொலராகவும். கச்சா எண்ணெய்க்கான செலவு 27.1 சதவீதத்தால் அதிகரித்து 817.4 மில்லியன் அமெரிக்க டொலராகவும். நிலக்கரிக்கான செலவு 26.9 சதவீதத்தால் அதிகரித்து 186.1 மில்லியன் அமெரிக்க டொலராகவும் இருந்தன. துணிநூல்கள் மற்றும் துணிநூல் பொருட்களின் இறக்குமதிச் செலவு 3.7 சதவீதத்தால் குறைந்து 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 1,961.7 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 2,037.3 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது.

இதற்கிடையில், முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிச் செலவு 26.0 சதவீதத்தால் அதிகரித்து 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 3,709.8 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 2,943.9 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கான இறக்குமதிச் செலவு 26.3 சதவீதத்தால் அதிகரித்து 2,332.9 மில்லியன் அமெரிக்க டொலராகவும். கட்டுமானப் பொருட்களுக்கான செலவு 8.7 சதவீதத்தால் அதிகரித்து 803.4 மில்லியன் அமெரிக்க டொலராகவும், போக்குவரத்து உபகரணங்களுக்கான செலவு 60.8 சதவீதத்தால் அதிகரித்து 569.8 மில்லியன் அமெரிக்க டொலராகவும் இருந்தன. போக்குவரத்து உபகரணங்களின் அதிகரிப்பு பெரும்பாலும் வர்த்தக வாகனங்களால் ஏற்பட்டது. அவற்றின் இறக்குமதிச் செலவு 60.7 சதவீதத்தால் அதிகரித்து 435.8 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்தது.

வரைபு 3.13 | இறக்குமதிகளின் வகுதி
(ஐ.அ.டொ பில்லியன்)



மூலம் : இலங்கை மத்திய வங்கி

சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாடுகளில் பணிபுரிபவர்களின் பண அனுப்பல்கள்

2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 1.8 சதவீதத்தால் குறைந்து 1.693,679 பேராக இருந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 1,725,494 பேராக இருந்தது. இதற்கமைய, சுற்றுலாத்துறை வருமானம் 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 9.2 சதவீதத்தால் குறைந்து 2,245.2 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது; 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 2,472.9 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. மத்திய கிழக்கில் மோதல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்தமையே இந்த வீழ்ச்சிக்கான முக்கிய காரணமாகும். மேலும், சுற்றுலா வருமானத்தை மதிப்பிடுவதற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA) அறிமுகப்படுத்திய திருத்தப்பட்ட முறையின் கீழ், ஒரு சுற்றுலாப் பயணி நாளொன்றுக்கு செலவிடும் சராசரித் தொகை கீழ்நோக்கித் திருத்தப்பட்டமையும் இதற்கு ஓரளவு காரணமாகும். சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கான மிகப்பெரிய மூலச் சந்தையாக இந்தியா தொடர்ந்தும் காணப்பட்டது; 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இந்தியாவிலிருந்து 437,414 பேர் வருகை தந்தனர். இதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம், சீனா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இடம்பெற்றன. இதற்கிடையில், வெளிநாடுகளில் பணிபுரிபவர்களின் பண அனுப்பல்கள் 2026 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 18.1 சதவீதத்தால் அதிகரித்து 6,865.4 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தன. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் அவை 5,811.7 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்தன. குறிப்பாக, தித்வா புயலைத் தொடர்ந்து நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளுக்காக அதிகளவில் பணம் அனுப்பப்பட்டமையும் இந்த அதிகரிப்புக்கு ஆதரவளித்தது.

அட்டவணை 3.7 | வெளிநாட்டு வர்த்தகம்

ஐ.அ.டொ.மில்.

வகை	2022	2023	2024	2025(ஆ)	சன - செப்	
					2025(ஆ)	2026(அ)
ஏற்றுமதி	**13,106**	**11,911**	**12,772**	**13,581**	**10.215**	**10,754**
விவசாய ஏற்றுமதிகள்	**2,568**	**2,567**	**2,775**	**3,072**	**2,324**	**2,317**
தேயிலை	1,259	1,310	1,436	1,507	1,163	1,084
பிற விவசாய உற்பத்திகள்	1,309	1,257	1,339	1,565	1,161	1,234
கைத்தொழில் ஏற்றுமதிகள்	**10,465**	**9,278**	**9,947**	**10,461**	**7,854**	**8,398**
புடவை மற்றும் தைத்த ஆடைகள்	5,952	4,879	5,061	5,314	4,021	3,797
உணவு, குடிபானம், புகையிலை	520	539	652	896	662	703
இறப்பர் உற்பத்திகள்	977	902	976	915	690	753
இயந்திர மற்றும் உபகரணங்கள்	581	598	486	492	354	516
பெற்றோலிய உற்பத்திகள்	568	539	1,064	971	720	1,095
ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள்	1,868	1,820	1,710	1,874	1,407	1,535
கனிப்பொருள் ஏற்றுமதிகள்	**50**	**39**	**25**	**24**	**18**	**25**
வகுக்கப்படாதவை	**23**	**28**	**26**	**24**	**19**	**14**
இறக்குமதிகள்	**18,291**	**16,811**	**18,841**	**21,480**	**15,390**	**18,666**
நுகர்வுப் பொருட்கள்	**2,813**	**3,044**	**3,466**	**5,518**	**3,816**	**4,485**
உணவும் குடிபானமும்	1,608	1,693	1,914	2,116	1,565	1,618
ஏனைய நுகர்வுப் பொருட்கள்	1,205	1,351	1,551	3,402	2,251	2,867
இடைநிலைப் பொருட்கள்	**12,439**	**11,007**	**11,915**	**11,859**	**8,617**	**10,456**
பெற்றோலியம்	4,897	4,703	4,354	4,043	2,961	4,487
புடவை மற்றும் தைத்த ஆடைகள்	3,065	2,371	2,847	2,749	2,037	1,962
கோதுமை மற்றும் சோளம்	303	338	383	398	253	257
ஏனையவை	4,174	3,595	4,331	4,669	3,366	3,750
முதலீட்டுப் பொருட்கள்	**3,030**	**2,745**	**3,448**	**4,090**	**2,944**	**3,710**
இயந்திரங்களும் உபகரணங்களும்	1,969	1,868	2,363	2,513	1,848	2,333
கட்டிடப் பொருட்கள்	926	775	927	1017	739	803
போக்குவரத்து உபகரணம்	132	99	57	556	354	570
ஏனையவை	3	3	3	4	3	4
வகுக்கப்படாதவை	**9**	**28**	**13**	**13**	**12**	**15**
வர்த்தகப் பற்றாக்குறை	**-5,185**	**-4,900**	**-6,069**	**-7,899**	**-5,174**	**-7,912**

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது.
(ஆ) திருத்தியமைக்கப்பட்ட

3.6 உலகளாவிய பொருளாதார முன்நோக்கு 1

2025 ஆம் ஆண்டில் 3.5 சதவீத வளர்ச்சிக்குப் பின்னர் 2026 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாத இறுதியில் ஏற்பட்ட மத்திய கிழக்குப் பிராந்திய மோதல்கள், அதன் விளைவாக எரிசக்தி சந்தைகள் மற்றும் முக்கியமாக கடல் மார்க்க வர்த்தகப் பாதைகளைத் தடுப்பதன் மூலம் ஹோர்மூஸ் நீரிணை மூடப்பட்டமை, மற்றும் தொடர்ச்சியாக நிலவிய வர்த்தக பதட்டங்களுக்கு மத்தியிலும் , உலகளாவயி பொருளாதாரம் 2026 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட அளவை விட மிகச் சிறந்த செயல் திறனை வெளிப்படுத்தியள்ளது. முக்கியமாக, செயற்கை நுண்ணறிவு சார்ந்த தொழில்நுட்ப செயற்பாடுகளினால் உருவான வலுவான கேள்வியும் பொருளாதார செயற்பாடுகளுக்கு ஆதரவளித்துள்ளது.

தொடர்ச்சியான நிச்சயமற்ற சூழ்நிலைக்கு மத்தியிலும் கூட, உலகளாவிய பொருளாதாரத்துக்கு குறிப்பிடத்தக்க மீட்சித் திறனை காட்டி வருகிறது. இருப்பினும், நாடுகளுக்கிடையிலான வளர்ச்சி சமமற்றதாக உள்ளதோடு, மேலும், எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய அதிர்வுகளுக்கு எதிர்கொள்ளும் திறன் பல நாடுகளிடம் வரையறுக்கப்பட்டதாகவே உள்ளது. சாதகமான வர்த்தக நிபந்தனைகள் சாதகமான நாடுகளுக்கு அல்லது தொழில்நுட்ப பெறுமதிச் சங்கிலிகளில் வலுவான பங்கேற்பைக் கொண்ட நாடுகள் அதிக பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடியனவாக உள்ளதோடு, எரிசக்தி இறக்குமதி சார்ந்த பொருளாதரங்கள் உயர்வான இறக்குமதி செலவுகள் மற்றம் பலவீனமான கேள்விகளுக்கு முகங் கொடுக்கின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தின் “ உலகப் பொருளாதார முன்னோக்கு” அறிக்கையின் படி, உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 2026 ஆம் ஆண்டில் 3.1 சமதவீத மட்டத்திற்கு மிதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இது ஏப்ரல் மாத முன்னறிவிப்பில் மாற்றமில்லாத நிலையில் இருக்கின்றதோடு, 2027 ஆம் ஆண்டில், 3.4 சதவீத மட்டத்திற்கு மீட்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையானது, 2026 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத “ உலகப் பொருளாதார முன்னோக்கு” அறிக்கைக்கு ஒப்பீட்டளவில் 0.2 சதவீதப் புள்ளிகள் மேல் நோக்கிய திருத்தமொன்றாகும். 2025 ஆம் ஆண்டில் 4.1 சதவீததத்திற்கு வீழ்ச்சியடைந்த உலகளாவிய ஒட்டு மொத்தப் பணவீக்கம், முக்கியமாக, உயர்வான எரிசக்தி மற்றும் உணவு விலைகளின் காரணமாக 2026 ஆம் ஆண்டில் 4.7 சதவீதம் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு, நாடுகளுக்கு இடையில் குறிப்பிடத்தக்க அளவில் வேறுபாடுகளுடன் 2027 ஆம் ஆண்டில் 4.1 சதவீதம் வரை வீழ்ச்சி அடையும் என எதிர்பார்க்கபபடுகின்றது.

2026 ஆம் ஆண்டில் முதல் அரைப்பகுதியில் உலகளாவிய நிதி நிலைமைகள் தீவிரமான முறையில் கடினமடைந்ததோடு, தளர்த்துவதற்கு முன்னர் குறிப்பாக, தொழில்நுட்ப வர்த்தகப் பங்குகள் மீதான வலுவான முதலீட்டாளர் நம்பிக்கையை பெருமளவு பிரதிபலிப்பதன் மூலம் முன்னர் நிலவிய நிலைமைக்கு ஏற்ப, ஒப்பீட்டளவில் சாதகமானதாக காணப்படுகின்றது. இருப்பினும், மீள் பணவீக்கம் ஏற்படுதல் தொடர்பாக கவனம் செலுத்துதல், கொள்கை வட்டி வீதங்கள் எதிர் கால போக்கு குறித்த எதிர்பார்ப்புகள் மற்றும் அரச பிணைகள் நிலைபேறான தன்மை தொடர்பான சிக்கல்கள் காரணமாக அநேகமான நாடுகளில் அரச பிணைகளுக்கான வட்டி வீதங்கள் உயர்வடைந்துள்ளது. விருத்தியுற்ற பொருளாதாரங்களின் நீண்ட கால அரச பிணைகளின் உற்பத்தித் திறன் பல தசாப்தங்களின் உச்ச மட்டத்தை எட்டியுள்ளது. இதனால் வளர்ந்து வரும் சந்தைகளின் கடன் பெற்றுக் கொள்ளும் செலவு உயர்வடைந்துள்ளது. குறிப்பாக, ஆசியாவின் அந்நியச் செலாவணி விகிதங்கள் பெரும்பாலும் நிச்சயமற்றதாக உள்ளதோடு, அது அதிகாரிகள்/ இலங்கை மத்திய வங்கியின் தலையீட்டின் காரணமாக ஏற்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி, உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளுகுகான வலிமை மற்றும் போரின் காரணமாக ஏற்படும் உறுதியான பணவீக்க அபாயங்கள் ஆகியவற்றிற்கு இடையில் சமநிலையைப் பேணும் வகையில் அவற்றின் நாணயக் கொள்கைத் தீர்மானங்களில் எச்சரிக்கையான நிலைப்பாட்டை கடைப்பிடித்து வருகின்றன. இதற்கிடையில், பல முக்கிய பொருளாதாரங்களளில் நிதிக் கொள்கைள் இன்னும் விரிவாக்கத் தன்மையிலேயே உள்ளதோடு. இதில் அரச கடன்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதோடு, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள் முன்னர் நிலவிய நிலைமைக்கு ஒப்பீட்டளவில் உயர் மட்டமொன்றில் உள்ளது.

உலகளாவிய வர்த்தகத்தின் அளவு 2025 ஆம் ஆண்டில் 5.0 சதவீதம் வளர்ச்சியடைந்ததோடு. 2026 ஆம் ஆண்டில் 4.6 சதவீதத்தினால் மிதமடைந்தது. 2027 ஆம் ஆண்டில் 4.7 சதவீதம் வரை சிறிய அளவில் உயர்வடையும் என எதிரபார்க்கப்படுகின்றது. 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் “உலக பொருளாதார முன்னோக்கு” அறிக்கையின் படி, சுங்க வரி விதிப்பகளின் காரணமாக ஏற்படக் கூடிய தாக்கம், வர்த்தக மறுசீரமைப்பு மற்றும் வழங்குனர்களின் மாற்றீடுகளின் ஊடாக வர்த்தகத் தொடர்புகள் மற்றும் உற்பத்திச் சங்கிலிகள் படிப்படியாக மாற்றமடைந்து வருவதோடு, மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வர்த்தகப் போக்குகளின் துரித வளர்ச்சியாகும். சர்வதேச கடல் வழிப் போக்குவரத்தில் மேற்கொள்ளப்படும் மசகெண்ணெய் வர்த்தகத்தில் 35 சதவீத மற்றும் உலகளாவிய திரவ இயற்கை எரிவாயு வர்த்தகத்தில் 20.0 சதவீதமும் கடந்து செல்லும் ஹோர்மூஸ் நீரிணை, 2026 ஆம் அண்டின் ஆகஸ்ட் இறுதி வரை வளைகுடா பிராந்தியத்தில் எண்ணெய் ஏற்றுமதிக்காக பெரும்பாலும் மூடப்பட்டு இருந்ததோடு. அதனைத் தொடர்ந்து குறுகிய கால போர் நிறுத்தத்திற்குப் பதிலாக குறைந்த தீவிரத் தன்மையுள்ள மோதலொன்று ஏற்பட்டதோடு, அது செங்கடல் வரை பரவியது. இதன் விளைவாக, 2025 ஆம் ஆண்டில், ஓரளவு கட்டுப்பாட்டில் இருந்த பல முக்கிய பொருட்களின் விலைகள் 2026 ஆம் ஆண்டில் தீவிரமாக உயர்வடைந்தன. உலக வங்கியின் தரவுகளின் படி, எரிசக்தி விலைச் சுட்டெண் 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், சராசரி 89.1 இலிருந்து 2026 ஆம் ஆண்டில் அதே காலப்பகுதியில் 125.4 வரை உயர்வடைந்துள்ளதோடு. செப்டெம்பர் மாதத்தில், 148.9 ஆகப் பதிவாகியது. இது 2025 ஆம் ஆண்டில் பதிவாகிய சராசரியை விட பெருமளவிற்கு உயர்ந்த பெறுமதியாகும். ப்ரெண்ட் மசகெண்ணெய் பீப்பாய் ஒன்றின் சராசரி விலை மூன்றாம் காலாண்டில் ஐஅடொ 97.1 ஆக பதிவாகியதோடு.

1 உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2026 ஒக்டோபர், சரவதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் இளஞ்சிவப்புத்தாள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது.

ஏப்ரல் மாதத்தில் ஐஅடொ 120.4 ஆக உச்ச நிலையை அடைந்து, ஜூலை மாதத்தில் ஐஅடொ 83.4 வரை வீழ்ச்சியடைந்து செப்டெம்பர் மாதத்தில் மீண்டும் ஐஅடொ 116.8 வரை உயர்வடைந்துள்ளது. இது 2025 ஆம் ஆண்டில் பதிவாகிய ஐஅடொ 69.0 சராசரியை விட ஒப்பீட்டளவில் குறிப்பிடத்தக்க அளவிலான உயர்வான ஒரு பெறுமதியாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் தகவலின் படி, சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விலைகள் போர் தொடங்குவதற்கு முன்னர் காணப்பட்ட நிலையை விட 70.0 சதவீதத்திற்கும் மற்றும் 95 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவில் உயர்வான மட்டமொன்றில் காணப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டில் காணப்பட்ட ஐஅடொ 11.96 சராசரிக்கு ஒப்பீட்டளவில் ஐரோப்பிய இயற்கை வாயுவின் விலை செப்டெம்பர் மாதத்தில் பிரித்தானியாவின் இயற்கை எரிவாயு ஒரு அலகின் விலை (MMBtu) ஐஅடொ 25.42 வரை அதிகரித்ததோடு. ஐக்கிய அமெரிக்காவின் இயற்கை எரிவாயுவின் விலை பிரித்தானியாவின் எரிவாயு அலகு மெட்ரிக் மில்லியனுக்கு ஐ.அ.டொ 2.95 ஆக குறைந்த பெறுமதியொன்றில் காணப்பட்டது. உரங்களின் விலைகளும் உயர்வடைந்ததோடு, 2026 இன் இரண்டாம் காலாண்டில் 188.2 ஆக தீவிரமான அதிகரிப்பைத் தொடர்ந்து மூன்றாவது காலாண்டில் உரத்துக்கான சுட்டி 147.0 ஆக குறைந்தது. இது 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இருந்த 153.4 ஐ விடக் குறைவாகும் மேலும் செப்டெம்பரில் உரத்துக்கான சுட்டி 147.6 ஆக காணப்பட்டது. தானிய வகைகளின் விலைகளை முன்னெடுத்து, உணவுகளின் விலைகளும் உயர்வடைந்ததோடு 2025 ஆம் ஆண்டில் காணப்பட்ட 109.2 சராசரிக்கு ஒப்பீட்டு ரீதியில் 2026 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் உணவு விலைச் சுட்டெண் 124.1 ஆக பதிவாகியது. உலோகங்களின் விலைகள் தொடர்ச்சியாக உயர்வடைந்ததோடு, உலோகங்கள் மற்றும் கனிமங்களுக்கான விலைச் சுட்டெண் 2025 ஆம் ஆண்டில் பதிவாகிய 112.2 சராசரியிலிருந்து 2026 செப்டெம்பர் மாதத்தில் 147.5 வரை உயர்வடைந்தது. அதே வேளை, 2025 ஆம் ஆண்டில், ஒரு அவுன்சு ட்ராயின் ஐஅடொ 3,442 ஆகக் காணப்பட்ட தங்கத்தின் விலை, 2026 ஆம் ஆண்டில், நிலவிய ஒரு அவுன்சு ட்ராய்க்கு ஐஅடொ 4,876 பெறுமதியிலிருந்து குறைவடைந்து செப்டெம்பர் மாதத்தில் ஒரு அவுன்சு ட்ராய்க்கான சராசரி விலை ஐஅடொ 4,319 ஆகப் பதிவாகியது. இது 2026 முதல் காலாண்டில் இருந்து 4876 ஐ.அ.டொலரை விடக் குறைவாகும். எதிர்காலத்தை நோக்கிப் பார்க்கும் போது, 2026 ஆம் ஆண்டில், மசகெண்ணெய் ஒரு பீப்பாயின் விலை சராசரி ஐஅடொ 95.74 ஆக இருக்கும் என சர்வதேச நாணய நிதியம் முன்னறிவித்துள்ளது. இது 2025 ஆம் ஆண்டை விட 41.3 சதவீத உயர்வான பெறுமதியொன்றாக உள்ளதோடு, 2027 ஆம் ஆண்டில் இது 87.39 ஐஅடொ வரை குறைவடையும் என முன்னறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2026 ஆம் ஆண்டில், உரத்தின் விலை 10.0 சதவீதத்தினாலும் மற்றும் உணவின் விலை 5.0 சதவீதத்தினாலும் உயர்வடையும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பிராந்திய ரீதியான அபிவிருத்தி

விருத்தியுற்ற பொருளாதாரங்களின் வளர்ச்சி 2027 ஆம் ஆண்டில் 1.8 சதவீதம் வரை வீழ்ச்சியடைவதற்கு முன்னர், 2025 ஆம் ஆண்டில், பதிவான 2.0 சதவீதத்திலிருந்து 2026 ஆம் ஆண்டில் 2.1 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுவதோடு, அது 2026 ஏப்ரல் மாத " உலக பொருளாதார முன்னோக்கு" அறிக்கையின் மதிப்பீட்டை விட 0.3 சதவீத உயர்வான பெறுமதியொன்றாகும். இருப்பினும், பொருளாதார நடவடிக்கைகள் நாடுகளுக்கு இடையில் வேறுபட்டதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தூய எரிசக்தி ஏற்றுமதி நாடுகள் சாதகமான வர்த்தக நிபந்தனைகளினால் ஓரளவு நன்மைகளை அடைவதோடு. வலுவான தொழில்நுட்ப செயற்பாடுகளால் ஈடு செய்யப்படாவிட்டால் எரிசக்தி இறக்குமதி செய்யும் பொருளாதாரங்கள் உயர்வடையும் எரிசக்தி விலைகளின் காரணமாக குறிப்பிடத்தக்க அளவிலான பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்ள நேரிடலாம்.

வலுவான தனி நபர் நுகர்வு, உற்பத்தித் திறன் மட்டம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த முதலீடுகளின் ஆதரவுடன் ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம் 2026 மற்றும் 2027 ஆண்டுகள் இரண்டிலும் 2.3 சதவீதத்தினால் வளர்ச்சியடையலாம் என எதிர்பார்க்கப்படுவதோடு, அவை தூய எரிசக்தி ஏற்றுமதியாளர் ஒருவராக இருப்பதனால் தற்போது நிலவும் போர் நிலைமைகள் காரணமாக அந்நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படக் கூடிய நேரடித் தாக்கம் மட்டுப்படுத்தப்படட்டதாக இருக்கும். அதே வேளை, எரிசக்தி சந்தை இடையூறுகளுக்கு அதிக அளவு உட்படாத ஐரோப்பபிய வலயத்தின் பொருளாதார வளர்ச்சி 2026 ஆம் ஆண்டில், 1.1 சதவீதமாகவும் மற்றும் 2027 ஆம் ஆண்டில் 1.2 சதவீதமாகவும் இருக்கும் என கணிப்பிடப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களின் (EMDEs) பொருளாதார வளர்ச்சி , 2027 ஆம் ஆண்டில் 4.4 சதவீதம் வரை மீட்சி அடைவதற்கு முன்னர் , 2025 ஆம் ஆண்டில், நிலவிய 4.5 சதவீதத்திலிருந்து 2026 ஆம் ஆண்டில் 3.7 சதவீதம் வரை மந்த நிலையை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், நுகர்வுப் பொருட்களின் மீது தங்கியிருத்தல், மத்திய கிழக்கு மோதல்களுக்கு உட்படாமை, பண அனுப்புதல்கள் மற்றும் சுற்றுலாத் துறை வருவாய் மீது அதிக அளவு தங்கியிருத்தல் மற்றும் உலகளாவிய தொழில்நுட்பப் பெறுமதிச் சங்கிலிகளில் அவற்றின் இடத்திற்கு ஏற்ப, பொருளாதார எதிர்கால நோக்கு நாட்டுக்கு நாடு வேறுபடலாம். வளர்ந்து வரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் ஆசியா மிகவும் மீள்திறன் கொண்ட பிராந்தியமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு, அது 2026 ஆம் ஆண்டில், 5.1 சதவீதத்தினாலும் மற்றும் 2027 ஆம் ஆண்டில் 4.9 சதவீதத்தினாலும் வளர்ச்சியக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் இந்தியா இவ்விரண்டு வருடங்களிலும் (நிதியாண்டின் அடிப்படையில் 7.0 சதவீதமாக துரிதமாக வளர்ச்சியுறும் முக்கிய பொருளாதாரங்களாக இனங்காண முடியும். இதற்கிடையில், சீனாவின் பொருளாதார வளர்ச்சி 2026 ஆம் ஆண்டில், 4.5 சதவீதம் வரை மற்றும் 2027 ஆம் ஆண்டில் 4.0 சதவீதம் வரை மந்தமடையும் என எதிர்பார்க்கபபடுகின்றது. மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசிய ஆசிய வலயங்களின் பொருளாதார வளர்ச்சி 2026 ஆம் ஆண்டில் 0.3 சதவீதத்தினால் சுருக்கமடையும் என எதிர்பார்க்கப்படுவதோடு, அதில் பஹ்ரைன், ஈராக், குவைத், மற்றம் கட்டார் ஆகிய நாடுகளின் பொருளாதார வேகம் 2026 ஆம் ஆண்டில் இரண்டு இலக்கங்களின் பெறுமதியிலான

வீழ்ச்சியைச் சந்திக்கக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டது. இது 2026 ஏப்ரல் உலகப் பொருளாதார எதிர்கால நோக்கின் எதிர்வுகூறலை விட 2.2 சதவீதத்தை விட குறைவான ஒர பெறுமதியாகும். இருப்பினும், ஹோர்மூஸ் நீரிணை வழியாக கடற்போக்குவரத்துக்கான தடைகள் தளர்ந்ததன் பின்னர் உற்பத்தி, ஏற்றுமதி, மற்றும் நிரம்பல் சங்கிலிகள் இயல்பு நிலைமைக்கு மாறியதன் பின்னர் அது 2027 ஆம் ஆண்டில் 6.3 சதவீதம் வரை மீண்டும் உயர்வடையக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. துணை சஹாரா ஆபிரிக்கா பிராந்தியம் 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளில் 4.5 சதவீதத்தினால் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுவதோடு, லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபிய வலயம் 2026 ஆம் ஆண்டில் 2.3 சதவீத்தினாலும் மற்றும் 2027 ஆம் ஆண்டில் 2.5 சதவீததினாலும் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகளாவிய பொருளாதார அபாயங்கள்

எதிர்கால பொருளாதார நோக்கிற்குள் மேலும் பொருளாதாரம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட வீழ்ச்சியடைக் கூடிய அபாய நிலைமையொன்று காணப்படுகின்றது. மத்திய கிழக்குப் பிராந்திய மோதல்கள் அல்லது உக்ரைன் மோதல்கள் நீண்ட காலத்துக்குத் தொடர்தல் மற்றும் மேலும் தீவிரமடைதல் ', ஹோர்மூஸ் நீரிணை மற்றும் செங்கடலின் கடல்சார் போக்குவரத்துக்களுக்கு வழித்தடங்கல்கள் தொடர்ந்து இடையூறுகளை ஏற்படுத்துவதன் காரணமாக எரிசக்தி மற்றும் உணவுப் பொருட்களின் விலைகள் நீண்ட காலமாக உயர்வான மற்றும் நிச்சயமற்ற மட்டத்தில் நிலைத்திருக்கக் கூடும். இதற்குக் காரணமாக, உலகளாவிய எண்ணெய் கையிருப்புகள், நேரியல் அல்லாத விலை சரிசெய்தல்களினால் ஏற்படக் கூடிய அழுத்தமான நிலைகளை நோக்கி சுருங்கிச் செல்வதோடு, ஐரோப்பாவின் அநேகமான பிரதேசங்களில் இயற்கை எரிவாயு குளிர் காலத்துக்கு முன்னதாக பருவ கால சராசரியை விட குறைந்த நிலையில் உள்ளதனாலாகும். தொடர்ச்சியாக உயர்வடைந்து செல்லும் பொருட்களின் விலைகள் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகளை விரிவாக்குவதற்கும் மற்றும் அந்நியச் செலாவணி வீதங்களின் அழுத்தங்களை தீவிரப் படுத்துவதற்கும் மற்றும் வரையறுக்கப்பட்ட நிதி வசதி மற்றும் குறைந்த வெளிப்புற பாதுகாப்பைக் கொண்ட எரிசக்தி இறக்குமதி செய்யும் வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களின் உணவுப் பாதுகாப்புத் தன்மையை அதிகரிக்கவும் வழிவகுக்கக் கூடும். மேலும், நீடித்த பணவீக்கம் காரணமாக நாணயக் கொள்கையை நீண்ட காலத்திற்கு தீவிரமாக பேண வேண்டிய நிலை ஏற்படலாம். தற்போது நிலவும் எல் நினோ நிலைமை உள்ளிட்ட மோசமான காலநிலை நிகழ்வுகள் சய்பர் இணையத் தள தாக்குதல்கள், மற்றும் மீண்டும் உருவாகும் வர்த்தக பதட்டங்கள் கூடுதலான அழுத்தங்களை ஏற்படுத்தக் கூடும். செயற்கை நுண்ணறிவு தொடர்பான இலாபத் தன்மை மற்றும் எதிர்பார்ப்புகளை மீண்டும் மதிப்பீடு செய்வதால் முதலீடுகள் திடீரெனக் குறைவதற்கும் மற்றும் மூலதனச் சந்தைகளை திருத்தங்களை மேற்கொள்வதற்கும் மற்றும் நிதி நிலைமைகளை தீவிரப்படுத்துவதற்கும் காரணமாக அமையலாம், இது தொழில்நுட்ப வழங்கல் சங்கிலிகளுடன் தொடர்புடைய பொருளாதாரங்களுக்கும் பரவக் கூடும். நேர் மறையான திசையை நோக்கும் போது செயற்கை நுண்ணறிவு சார்ந்த முதலீடுகள் மிகவும் உறுதியானதென நிரூபிக்கக் கூடியதாக உள்ளது. புதிய வர்த்தக ஒழுங்கு விதிகளின் மூலம் எதிர்வு கூறக் கூடிய மற்றும் விருத்தி செய்யக் கூடிய நிரம்பல் சங்கிலிகளின் மீள் திறனை வலுப்படுத்த முடியும். நீண்ட கால மோதல்கள் சமாதானப்படுத்தும் நிலைமை மற்றும் ஹோர்மூஸ் நீரிணைச் சந்தியின் ஊடாக கப்பல் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பித்தல், எரிசக்தி விலைகள் மற்றும் பண வீக்க அழுத்தங்கள் தளர்த்தப்படலாம்.

உலகளாவிய பொருளாதார எதிர்கால நோக்கு இலங்கையின் பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தக் கூடிய தாக்கம் சிறிய திறந்த பொருளாதாரமொன்றாக, இருக்கும் இலங்கை, உயர்வான எரிசக்தி இறக்குமதிச் செலவுகள் , பலவீனமான சுற்றுப் பிரயாணிகளின் வருகை மற்றும் பிரதான ஏற்றுமதிச் சந்தைகளின் மந்தமான வெளிப்புறக் கேள்விகள் பொன்ற காரணிகளின் ஊடாக உலகளாவிய நிலைமைகளுக்கு உள்ளாகின்றது. மத்திய கிழக்குப் பிராந்திய மோதல்கள் மற்றும் அது சார்ந்த நிரம்பல் தடைகள் மற்றும் எரிபொருள் மற்றும் உர விலைகள் உயர்வடைவதற்கு மத்தியிலும் கூட, 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் பதிவாகிய 5.0 சதவீத வளர்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் இலங்கை 4.2 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவு செய்துள்ளது. 2026 ஆம் ஆண்டில், அக்டோபர் மாதத்தில் உலகப் பொருளாதார எதிர்கால நோக்கிற்கு ஏற்ப, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2025 ஆம் ஆண்டில் காணப்பட்ட 5.0 சதவீத பெறுமதிக்கு ஒப்பீட்டு ரீதியில் 2026 ஆம் ஆண்டில் 4.0 சதவீதமாகவும் மற்றும் 2027 ஆம் ஆண்டில் 3.7 சதவீதமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுலதோடு. முக்கியமாக, உயர்வான எரிசக்தி விலைகளை பிரதிபலிப்பதன் மூலம் பணவீக்கம் , 2025 ஆம் ஆண்டில் நிலவிய -0.5 சதவீதத்திலிருந்து 2026 ஆம் ஆண்டில் 5.3 சதவீதம் வரை யிலும் 2027 ஆம் ஆண்டில் 5.4 சதவீதம் வரையிலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, பிச் ரேடிங்ஸ் (Fitch Ratings) நிறுவனத்தினால் 2026 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதன் புதிய தரப்படுத்தல்களுக்கு ஏற்ப இலங்கையின் நீண்ட கால வெளியீட்டாளர்களின் புறக்கணிப்புத் தரப்படுத்தல்கள் நிலையான எதிர்கால் நோக்கொன்றுடன் 'CCC+ ' இலிருந்து 'B-' வரை உயர்த்தப்பட்டுள்ளதோடு இது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை விருத்தி செய்வதற்கும் மற்றும் வெளிநாட்டு நிதி அழுத்தங்களைக் கறைப்படுத்துவதற்கு உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும், உயர்த்தப்பட்ட எரிசக்தி மற்றும் உரங்களின் விலைகள் மற்றும் தொடர்ச்சியாக நிலவும் புவசாரி அரசியலின் நிச்சயமற்ற கொடுப்பனவு மீதி , உற்நாட்டு விலைகள் மற்றும் ஏற்றுமதிப் போட்டித் தன்மைகள் குறிப்பாக ஆடைத் துறை மீதான அழுத்தங்கள் ஏற்படலாம். ஆதன் படி, நிச்சயமற்ற உலகளாவிய சூழலில் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதற்காக நிலைபேறான விவேகமான பேரண்டப் பொருளாதார முகாமைத்துவம் , ஏற்றுமதி மற்றும் வர்த்தகப் பன்முகப்படுத்தல்கள் மற்றும் வெளிப்புற பாதுகாப்பு இருப்புக்களை தொடரந்து வலுப்படுத்தலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம்.

அட்டவணை 3.8 |உலக பொருளாதாரத்தின் பிரதான குறிகாட்டிகள் – 2026 (கணிப்பு)

நாடு	மொ.உ.உ. வளர்ச்சி (வருடாந்த சதவீதம்)[அ]	பணவீக்கம் (சதவீதம்)[அ]	வேலையின்மை (சதவீதம்)[அ]	அரசிறை பற்றாக்குறை (மொ.உ.உ சதவீதம்)[ஆ]	தேறிய கடன் (மொ.உ.உ. சதவீதம்)[ஆ]
ஆர்ஜன்டீனா	2.1	32.5	7.6	0.5	70.4
அவுஸ்திரேலியா	1.9	3.9	4.4	-2.4	50.6
பிரேசில்	2.2	4.4	6.2	-7.7	96.5
கனடா	1.1	2.8	6.5	-2.7	110.7
சிலி	0.6	3.7	9.5	-2.5	42.5
சீனா	4.5	1.0	5.1	-8.2	106.9
பிரான்ஸ்	0.4	2.4	8.4	-4.9	118.4
ஜேர்மனி	1.3	2.7	4.0	-3.8	64.6
கிரீஸ்	1.8	4.2	8.0	0.6	136.9
இந்தியா	7.0	5.0	5.0	-7.4	83.4
இந்தோனேசியா	5.1	3.3	4.7	-2.9	41.5
இத்தாலி	0.8	3.3	5.6	-2.8	138.4
ஜப்பான்	0.7	2.0	2.5	-2.0	204.4
கொரியா	3.3	2.7	2.8	-1.5	54.4
மலேசியா	5.2	2.2	3.0	-3.3	69.5
மெக்சிகோ	1.5	3.8	2.8	-4.4	62.7
ரஷ்யா	0.9	6.1	2.2	-2.0	19.1
சிங்கப்பூர்	5.0	2.3	2.1	3.3	171.9
தென்னாபிரிக்கா	1.0	4.4	33.2	-4.9	78.9
ஸ்பெயின்	2.5	3.7	9.8	-2.1	98.2
தாய்லாந்து	2.1	2.1	1.0	-2.2	66.8
ஐக்கிய இராச்சியம்	1.3	3.3	5.3	-3.9	103.6
ஐக்கிய அமெரிக்கா	2.3	3.6	4.2	-7.5	125.8
வியட்நாம்	8.4	4.7	2.1	-2.0	29.8

மூலங்கள் : [அ]உலக பொருளாதார பார்வை, சர்வதேச நாணய நிதியம், 2026 ஒக்டோபர் [ஆ]நிதி கண்காணிப்பு, சர்வதேச நாணய நிதியம், 2026 ஏப்ரல்,

04

அரசுடமைத் தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை

4.1 மேன்நோக்கு

2026 ஆம் ஆண்டில், குறிப்பாக மத்திய கிழக்கில் மோதல் தீவிரமடைந்ததன் காரணமாக, அதிகரித்த வெளிப்புற நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் அரசுடமைத் தொழில்முயற்சிகள் இயங்கியது. இதன் விளைவாக உலகளாவிய எரிசக்தி விலைகளில் ஏற்பட்ட நிலையற்ற தன்மையும், வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலிகளில் ஏற்பட்ட இடையூறுகளும் இறக்குமதிச் செலவுகளை அதிகரித்து, கொடுப்பனவு மீதி மற்றும் இலங்கை ரூபாய் ஆகியவற்றின் மீது அழுத்தத்தை ஏற்படுத்தி, உள்நாட்டுப் பணவீக்க அழுத்தங்களுக்கு வழிவகுத்தன. இந்த நிகழ்வுகள், எரிபொருள், எரிசக்தி மற்றும் ஏனைய இறக்குமதி உள்ளீட்டுச் செலவுகள் அதிகரித்தல், அந்நியச் செலாவணி சார்ந்த கடப்பாடுகள் அதிகரித்தல், மற்றும் செயற்பாட்டு இலாப வரம்புகளில் அதிக அழுத்தம் ஆகியவற்றின் மூலம் அரசுடமைத் தொழில்முயற்சிகளைப் பாதித்தன.

இருப்பினும், அரசுடமைத் தொழில்முயற்சிகள் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகையில் மேம்பாடு ஒன்றைப் பதிவுசெய்துள்ளது. 2025[1] ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இருந்த ரூபா 307.5 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், முக்கியமான 51 அரசுடமைத் தொழில்முயற்சிகள் மொத்தம் ரூபாய் 366.9 பில்லியன் இலாபத்தைப் பதிவு செய்துள்ளன. முக்கிய அரசுடமைத் தொழில்முயற்சிகளின் வருவாய் செயலாற்றுகை, தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட செலவு முகாமைத்துவ முன்னெடுப்புகள், மற்றும் இந்தத் துறையில் செயற்பாட்டுத் திறன், ஆளுகை, பொறுப்புக்கூறல் மற்றும் நிதி ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்து வரும் தொடர் முயற்சிகள் இதற்கு முக்கியக் காரணங்களாகும். அதேவேளையில், அரசுடமைத் தொழில்முயற்சிகளிடமிருந்து திரட்டப்பட்ட அறவீடுகள் மற்றும் பங்கிலாபம் மூலம் கிடைத்த வருவாய், 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இருந்த ரூபா 14.6 பில்லியனிலிருந்து, ரூபா 19.9 பில்லியனாக அதிகரித்துள்ளது.

2026 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில், பல அரசுடமைத் கம்பனிகள் அரசுடமைத் தொழில்முயற்சிகளின் தொகுப்பில் சேர்க்கப்பட்டன. இதில் இலங்கை மின்சார சபையின் பணிகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட ஆறு நிறுவனங்கள் அடங்கும்: எலக்ட்ரிசிட்டி ஜெனரேஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட், நெஷனல் டிரான்ஸ்மிஷன் நெட்வேர்க் சர்வீஸ் (பிரைவேட்) லிமிடெட், எலக்ட்ரிசிட்டி டிஸ்ட்ரிபியூஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட், நெஷனல் சிஸ்டம் ஒபரேட்டர் (பிரைவேட்) லிமிடெட், எனர்ஜி வென்ஷர்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் சிஇபி எம்ப்ளாயீஸ் பண்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஸ்கை கெயார் ஹொஸ்பிடல் மெனேஜ்மன்ட் லிமிடெட் மற்றும் மல்டி மொடல் ட்ரான்ஸ்போர்ட் லிமிடெட் என்பனவாகும்.

பொதுப் போக்குவரத்துத் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், இலங்கை போக்குவரத்து சபையின் துணை நிறுவனமான "லங்கா மெட்ரோ டிரான்சிட் (பிரைவேட்) லிமிடெட்", நிறுவனம் கிளீன் ஸ்ரீலங்கா கருத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட, தரைப்பகுதி தாழ்வாக அமைந்த 10 பேருந்துகளுடன் 2026 மார்ச் மாதம் தனது செயற்பாடுகளைத் தொடங்கியது. இந்தச் சேவை தற்போது 114 பேருந்துகளைக் கொண்ட தொகுப்பாக விரிவடைந்துள்ளது.

அரசுடமைத் தொழில்முயற்சிகள் துறையைச் சீரமைப்பதற்கான அரசாங்கக் கொள்கைக்கு இணங்க, அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் ஒரு பிரத்யேகப் பிரிவு 2026 மார்ச் மாதத்தில் நிறுவப்பட்டது. இந்தப் பிரிவு தற்போது தெரிவுசெய்யப்பட்ட 33 அரசுடமைத் தொழில்முயற்சிகளைக் கலைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதற்கிடையில், "பொது வணிக தொழில்முயற்சிகள் முகாமைத்துவச் சட்டமூலத்தின் இறுதி வரைவு தயாரிக்கப்பட்டு, அது சட்டமா அதிபரின் அனுமதிகாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டமூலத்தின் நோக்கங்கள், பொது வணிக தொழில்முயற்சிகளினால் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம், மலிவு விலை, கிடைக்கும்தன்மை, போட்டித்தன்மை மற்றும் அணுகல்தன்மை ஆகியவற்றை மேம்படுத்துவதையும், அதேபோல் அரசின் வணிகச் சொத்துகளின் நீண்டகால மதிப்பை அதிகரிப்பதையும் உள்ளடக்கியுள்ளது.

4.2 பிரதான பத்து அரசுடமை வணிகத் தொழில் முயற்சிகள் பற்றிய மீளாய்வு

இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் சொத்து அடித்தளமானது 2025 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 5,468 பில்லியனிலிருந்து 2026 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 5,675 பில்லியனாக, 3.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில், வங்கியின் வைப்புத்தளமானது, 2025 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 4,389 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 4.3 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 4,576 பில்லியனாக காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 2,372 பில்லியனாக இருந்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2026 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் இறுதியில் 8.4 சதவீதத்தினால் அதிகரித்து ரூபா 2,571 பில்லியனாக அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 5.59 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டிருந்த வங்கியின் கடன் விகித கட்டம் III ஆனது, 2026 ஆகஸ்ட் மாத இறுதியில் 4.91 சதவீதமாக சிறுதளவு குறைவடைந்துள்ளது. இலங்கை வங்கி 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 82.8 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ரூபா 78.7 பில்லியன் வரிக்கு முந்திய இலாபத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும். நிகர வட்டி வருமானம் ரூபா 149 பில்லியன்வரை 9 சதவீதத்தினால் அதிகரித்தமை இதற்கான பிரதான காரணமாகும்.

மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் சொத்து அடித்தளமானது 2025 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 3,708 பில்லியனிலிருந்து 2026 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 3,839 பில்லியனாக 3.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2026 ஆகஸ்ட் மாத முடிவில் வங்கியின் வைப்புத்தளமானது ரூபா 3,230 பில்லியனை பதிவுசெய்துள்ளதுடன், 2025 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 3,229.8 பில்லியனுடன்

1. இலங்கை மின்சார சபையைப் பொறுத்தவரை, 2026 ஆம் ஆண்டிட்காக 2026.01.01 முதல் 2026.03.09 வரையிலான காலப்பகுதிக்கான இலாபம் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

ஒப்பிடுகையில், பரவலாக மாற்றமின்றிக் காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,731 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த கடன்களும் முற்கொடுப்பனவுகளும், 2026 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 1,933 பில்லியன்வரை 11.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. கடன் விகித கட்டம் III ஆனது, இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்பதுடன், 2025 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 6.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 2026 ஆகஸ்ட் மாத இறுதியில் 7.66 சதவீதமாக அதிகரித்துள்ளது. மக்கள் வங்கி 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 44.5 பில்லியனைப் பதிவு செய்துள்ளதுடன், 2025 இன் இதே காலப்பகுதியில் பதிவான ரூபா 37.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 17.7 சதவீத குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பாகவும் காணப்படுகிறது. இந்த அதிகரிப்பானது ரூபா 110.9 பில்லியன் வரை தேறிய வட்டி வருமானத்தில் ஏற்பட்ட 20 சதவீதத்தினால் இயக்கப்பட்டதனால் ஏற்பட்டவையாகும்.

தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் சொத்து அடித்தளமானது, 2026 ஆகஸ்ட் இறுதியில் ரூபா 1,880 பில்லியனை பதிவு செய்துள்ளதுடன், இது 2025 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,831 பில்லியனுடன் ஒப்பிடுகையில் சிறியதொரு அதிகரிப்பினைக் காட்டுகிறது. 2026 ஆகஸ்ட் இறுதியில் வங்கியின் வைப்புத்தளமானது ரூபா 1,640 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இது 2025 இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,608 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2 சதவீத அதிகரிப்பாகவும் அமைந்துள்ளது. 2025 ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 551 பில்லியன் கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில், 2026 ஆகஸ்ட் இறுதியில் ரூபா 610 பில்லியனாக 10.7 சதவீதம். அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 2.52 சதவீதமாக இருந்த வங்கியின் கடன் விகித கட்டம் III ஆனது, 2026 ஆகஸ்ட் இறுதியில் 2.1 சதவீதமாக மேம்பட்டுள்ளது. தேசிய சேமிப்பு வங்கியானது, 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வரிக்கு முந்திய இலாபம் 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 30.6 பில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 30.1 வரை ஓரளவு வீழ்ச்சியாக காணப்பட்டதுடன் ரூபா 18.8 பில்லியன்வரை 17.5 சதவீதத்தினால் ஆள்சார் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே இம்மாற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது, 2026 முதல் எட்டு மாதங்களுக்கு மொத்த வருமானம் ரூபா 3.5 பில்லியனாக இருந்ததுடன், இது 2025 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் காணப்பட்ட ரூபா 5 பில்லியனுடன் ஒப்பிடும்போது 30 சதவீத வீழச்சியாகும். இந்த வீழ்ச்சியானது பிரதானமாக குறைந்த முதலீட்டு வருமானம் மற்றும் பங்குலாப வருமானம் ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டதாகும். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது 2026 இன் முதல் எட்டு மாதங்களுக்கு வரிக்கு முந்தைய இலாபம் ரூபா 2.9 பில்லியனாக இருந்ததுடன், இது 2025 ஆண்டின் அதே காலகட்டத்தில் ரூபா 4.4 பில்லியனாகக் காணப்பட்டது. மொத்த சொத்துக்கள் 2026 ஆகஸ்ட் மாத இறுதியில் ரூபா 135.5 பில்லியனாக இருந்தது. இது 2025 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 133.4 பில்லியனிலிருந்து உயர்ந்துள்ளதுடன் வலுப்படுத்தப்பட்ட நிதி நிலைமையினை பிரதிபலிக்கிறது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் காப்புறுதி வணிகம் தொடர்பான இரண்டு துணை நிறுவனங்கள் 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மேம்பட்ட செயற்திறனைப் பதிவு செய்துள்ளன. ஸ்ரீலங்கா இன்ஸ ூரன்ஸ் கோபரேஷன் லைப் லிமிடெட், 2025 முதல் எட்டு மாதங்களில் ரூபா 2.11 பில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 2.14 பில்லியன்வரை வரிக்கு முந்திய இலாபத்தில் ஓரளவு அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. இதற்கிடையில், ஸ்ரீலங்கா இன்ஸூரன்ஸ் கோபரேஷன் ஜெனரல் லிமிடெட் நிறுவனம் வரிக்கு முந்திய இலாபத்தில் முன்னைய வருடத்தில் காணப்பட்ட ரூபா 2.8 பில்லியனிலிருந்து 2.6 பில்லியன்வரை 7.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு பிரதான காரணம் தேறிய காப்புறுதிக் கோரிக்கைகள் மற்றும் நன்மைகளில் ரூபா 10.2 பில்லியன் வரை ஏற்பட்ட 41.7 சதவீத அதிகரிப்பாகும்.

இலங்கை மின்சார சபை மற்றும் துணைக் கம்பனிகள்

இலங்கை மின்சார சபையின் கட்டமைப்புச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, எலக்ட்ரிசிட்டி ஜெனரேஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட், நெஷனல் டிரான்ஸ்மிஷன் நெட்வேர்க் சர்வீஸ் (பிரைவேட்) லிமிடெட், எலக்ட்ரிசிட்டி டிஸ்ட்ரிபியூஷன் லங்கா (பிரைவேட்) லிமிடெட், நெஷனல் சிஸ்டம் ஒபரேட்டர் (பிரைவேட்) லிமிடெட், எனர்ஜி வென்ஷர்ஸ் லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் சிஇபி எம்ப்ளாயீஸ் பண்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்ஆகியவற்றுடன் இணைந்து, மின்சாரத் துறையில் தத்தமது பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன.

2026 ஜூலையில் மேற்கொள்ளப்பட்ட மூன்றாம் காலாண்டு கட்டண மீளாய்வின் போது, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சார சபையினால் ஏற்பட்ட பொறுப்புகளை ஈடுகட்டுவதற்கு அரசாங்கம் வழங்கிய ரூபா 17,213 மில்லியன் மானியத்தைக் கருத்திற் கொண்டு, அடுத்த கட்டண மீளாய்வு வரை தற்போதைய மின்சாரக் கட்டணங்களையே தொடர்ந்து நடைமுறைப்படுத்தத் தீர்மானித்தது. 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், மின் உற்பத்தி கலவையானது நீர் மின்சாரம், அனல் மின்சாரம் (நிலக்கரி), காற்று மற்றும் கூரை மேல் சூரியசக்தி உள்ளிட்ட மரபுசாரா புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மற்றும் அனல் மின்சாரம் (எரிபொருள்) ஆகியவற்றிற்கு முறையே 25:28:27:20 என்ற விகிதத்தில் அமைந்திருந்தது. இது 2025 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 35:29:25:11 என்ற விகிதத்தில் இருந்தது. இது முந்தைய ஆண்டின் 12,005 ஜிகாவாட் ஒப்பிடுகையில் மின்சாரத்திற்கான தேவை அதிகரித்ததைக் பிரதிபலிக்கும் வகையில், மொத்த மின் உற்பத்தி 7.4 சதவீதம் அதிகரித்து, 12,894 ஜிகாவாட்டை எட்டியுள்ளது. நீர்மின் உற்பத்தி 22.6 சதவீதம் குறைந்து, 4,169 ஜிகாவாட்டிலிருந்து 3,225 ஜிகாவாட் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. வீட்டின் மேற்கூரைகளில் அமைக்கப்படும் சூரியசக்தி மின் உற்பத்தி சுமார் 42 சதவீதம் அதிகரித்து, 1,195 ஜிகாவாட்டிலிருந்து 1,700 ஜிகாவாட் உயர்ந்தது. ஆனால், அதிகரித்த மின் தேவை மற்றும் குறைந்த நீர்மின் உற்பத்தி ஆகியவற்றின் கூட்டு விளைவை ஈடுகட்டுவதற்கு இது போதுமானதாக இருக்கவில்லை. இதன் விளைவாக, மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, அனல் மின் (எரிபொருள்) உற்பத்தி 89.6 சதவீதம் அதிகரித்து, 1,341 ஜிகாவாட்டிலிருந்து 2,543 ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளது.

அட்டவணை 4.1 | மின் உற்பத்தி மற்றும் திறன் கட்டமைப்பு

	2025 சனவரி - ஆகஸ்ட் உற்பத்தி			2025 சனவரி - ஆகஸ்ட் (தற்காலிக) உற்பத்தி		
	நிறுவப்பட்ட திறன் மெகா வோட்	மொத்த உற்பத்தியில் சதவீதம்	தேறிய உற்பத்தி - GWh	நிறுவப்பட்ட திறன் மெகா வோட்	மொத்த உற்பத்தியில் சதவீதம்	தேறிய உற்பத்தி - GWh
இ.மி.ச./ஈஜீஎல்- நீர் மின்	1,533	35	4,169	1,533	25	3,225
இ.மி.ச./ஈஜீஎல்- அனல்	801	7	849	801	11	1,326
அனல் - ஐபீபீ	482	4	491	582	9	1,216
அனல் - நிலக்கரி	900	29	3,466	900	28	3,635
புதுப்பிக்கத்தக்க மற்றும் காற்றாலை	945	15	1,834	1,286	14	1,791
கூரை சூரிய சக்தி	1684	10	1,195	2,529	13	1,700
மொத்தம்	**6,345**	**100**	**12,004**	**7,631**	**100**	**12,893**

மூலம்: இலங்கை மின்சார சபை மற்றும் இலக்ட்ரிசிட்டி ஜெனரேஷன் லங்கா (பிரைவட்) லிமிரற்

2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மின்சார விற்பனை மூலமான வருவாய் 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இலங்கை மின்சார சபையினால் பதிவு செய்யப்பட்ட ரூபா 271.5 பில்லியனுடன் ஒப்பிடும்போது ரூபா 325.4 பில்லியன்வரை 19.9 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துள்ளது. 2026 ஆம் ஆண்டின் இந்தத் தொகையானது 2026 மார்ச் 09 வரை இலங்கை மின்சார சபையினால் சம்பாதிக்கப்பட்ட ரூபா 80 பில்லியன் மற்றும் அதே காலப்பகுதியில் எலக்ட்ரிசிட்டி டிஸ்ட்ரிபியூஷன் லங்கா நிறுவனத்தினால் சம்பாதிக்கப்பட்ட ரூபா 245.4 பில்லியன் தொகை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இலங்கை மின்சார சபை 2026 சனவரி 01 முதல் மார்ச் 09 வரையான காலப்பகுதியில் ரூபா 1.48 பில்லியன் தேறிய இலாபமொன்றைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேறிய வருமானம் 2025 ஆம் ஆண்டின் இதேகாலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 556.9 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 796.7 பில்லியன் வரை 43.1 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனைச் செலவு 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 514.3 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 780.7 பில்லியன்வரை 51.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. விற்பனைச் செலவில் உள்ள அதிகரிப்பு தேறிய வருமானத்தில் உள்ள வளர்ச்சியைத் தாண்டியுள்ளபடியினால் மொத்த இலாபம் 2025 ஆம் ஆண்டின் இதேகாலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 42.6 பில்லியனிலிருந்து ரூபா 16.0 பில்லியன்வரை 62.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

மொத்த இலாபத்தின் வீழ்ச்சியேற்பட்ட போதிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 20.9 பில்லியன் செயற்பாட்டு இலாபமொன்றைப் பதிவு செய்துள்ளது. இது 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 13.4 பில்லியனிலிருந்து 56 சதவீத அதிகரிப்பாகும். இதற்குப் பிரதான காரணம் பொது மக்களின் அன்றாட வாழ்க்கையின் மீதும், ஒட்டுமொத்த பொருளாதாரத்தின் மீதும் மத்திய கிழக்கில் ஏற்பட்ட முரண்பாடுகளின் பாதகமான தாக்கத்தை தணிப்பதற்கு 2026 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் இருந்து யூன் மாதம் வரையான காலப்பகுதியில் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 41 பில்லியன் உதவு தொகையாகும்.

2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 91.3 மில்லியன் நாணயமாற்று வருமானத்துடன் ஒப்பிடும் போது ரூபா 5.2 பில்லியன் நாணயமாற்று நட்டமொன்றைப் பதிவு செய்துள்ளது. இது, 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 4.8 பில்லியனுடன் ஒப்பிடும் போது 8.4 பில்லியன் ரூபா என்ற அளவில் அமைந்த, உணரப்படாத அந்நியச் செலாவணி ஆதாயத்தால் ஓரளவு ஈடுசெய்யப்பட்டது. இதன் விளைவாக, 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 21.3 பில்லியனாக இருந்த வரிக்கு முந்தைய இலாபம் 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் 35.7 சதவீதம் அதிகரித்து ரூபா 28.9 பில்லியன் வரை அதிகரித்துள்ளது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் இலாபத்தன்மையின் நிலைத்தன்மையை மதிப்பிடும் போது, மானிய வருமானம் மற்றும் அந்நியச் செலாவணி விகித மாற்றங்களின் பங்களிப்பைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட்

ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிறுவனம் தனது நிதி மறுசீரமைப்பை எளிதாக்கவும் செயல்பாட்டு நிலைத்தன்மையை மேம்படுத்தவும் அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் இருந்தபோதிலும், மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்து நிதிச் சவால்களை எதிர்கொண்டது. 2026/27 நிதியாண்டின் முதல் ஐந்து மாதங்களில், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ரூபா 154.6 பில்லியன் மொத்த வருவாயைப் பதிவு செய்தது. இது 2025/26 நிதியாண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 114.6 பில்லியனாக இருந்தது. இருப்பினும், மொத்தச் செலவினம், விமான எரிபொருள் செலவில் 78.2 சதவீத அளவிலான கடுமையான உயர்வு காரணமாக, 2025/26 நிதியாண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 118.6 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 160.4 பில்லியன் வரை 35.2 சதவீதம் அதிகரித்து. இதன் விளைவாக, நிறுவனம் ரூபாய் 5.8 பில்லியன் செயல்பாட்டு நட்டத்தை பதிவு செய்துள்ளது. நிதிச் செயலாற்றுகை ரூபா 7.1 பில்லியன் நிதிச் செலவுகள் மற்றும் ரூபா 11.9 பில்லியன் அந்நியச் செலாவணி நட்டங்கள் ஆகியவற்றினால் மேலும் பாதித்தன. ஒருமுறை மட்டுமே நிகழும் சரிசெய்தல்களுக்கு முன்னதாக, இந்நிறுவனம் ரூபா 20.3 பில்லியன் தேறிய நட்டத்தை பதிவு செய்தது. ரோல்ஸ்-ராய்ஸ் நிறுவனத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கழிவுகள் மற்றும் இடைநிறுத்தப்பட்ட கடன் வரவுகள் மொத்தம் ரூபா 11.4 பில்லியன் மீண்டும் சேர்க்கப்பட்ட பிறகு, இது தேறிய நட்டம் ரூபா 8.9 பில்லியனாக குறைந்தது.

அரசாங்கம், விமான நிறுவனத்தின் நிலுவையிலுள்ள நிதிக் கடமைகளை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்தது இதில் 2024 இல் முதிர்ச்சியடைந்த, அரசு உத்தரவாதம் பெற்ற ஐ.அ.டொ.175 மில்லியன் மதிப்பிலான பிணைய முறியிணை மறுசீரமைத்ததும் அடங்கும். மேலும், 2025 இல் தொடங்கப்பட்ட தீர்வு ஏற்பாட்டின் மூலம், அந்நிறுவனத்தின் நீண்டகாலக் கடன்களைச் சரிசெய்யவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அத்துடன், அதன் உடனடி செயல்பாட்டுத் தேவைகள் மற்றும் பணப்புழக்கத் தேவைகளை ஈடுகட்ட ஐ.அ.டொ.30 மில்லியன் அளவிலான குறுகிய கால நிதி உதவியையும் வழங்கியது. நீண்டகால மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே வேளையில், விமான நிறுவனத்தின் நிதி நெருக்கடியைக் குறைப்பதற்கும், அதன் செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்வதற்கும் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், 2026 ஜூன் மாதத்தில், ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிறுவனத்திற்கான மூலோபாய மீளாய்வை மேற்கொள்ளவும், அதன் மறுசீரமைப்பு கட்டமைப்பை உருவாக்கவும் உயர் மட்டக் குழுவொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இந்தக் குழுவானது, செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துதல், நிதி நிலைத்தன்மையை வலுப்படுத்துதல் மற்றும் அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஆதரவைச் சார்ந்திருக்கும் நிலையை விமான நிறுவனம் குறைத்துக்கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டறியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், 2026 ஆம் ஆண்டில் மத்திய கிழக்கில் நிலவிய தீவிர பதற்றங்கள், விமானச் செயல்பாடுகளைப் பாதித்தல், வான்வெளிக் கட்டுப்பாடுகளை விதித்தல், விமானப் பாதைகளை மாற்ற வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்துதல் மற்றும் செயல்பாட்டுச் செலவுகளை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் சர்வதேச விமானப் போக்குவரத்துத் துறையில் நிச்சயமற்ற தன்மையை அதிகப்படுத்தின. மத்திய கிழக்கு நாடுகளை இணைக்கும் விமானப் பாதைகளில் SLA நிறுவனம் அதிக அளவில் ஈடுபட்டுள்ளதால், இத்தகைய சூழல்கள் அதன் செயல்பாடுகள் மற்றும் நிதி நிலைமை மீது கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தின. விமான நிறுவனத்தின் நிதி நிலையை வலுப்படுத்தவும், அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய நிதி அபாயங்களைக் குறைக்கவும் தொடர்ச்சியான மறுசீரமைப்பு, விவேகமான பணப்புழக்க முகாமை மற்றும் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துதல் ஆகியவை மிக அவசியமானவை.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபையானது, 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா. 58.7 பில்லியன் வருவாயைப் பதிவு செய்துள்ளது. இது 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ஈட்டிய ரூபா. 56.1 பில்லியன் வருவாயுடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீத அதிகரிப்பாகும். இருப்பினும், 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் விற்பனைச் செலவு 11.3 சதவீதம் அதிகரித்து, ரூபா. 20.4 பில்லியனிலிருந்து ரூபா. 22.7 பில்லியனாக உயர்ந்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம் உற்பத்திச் செலவுகள் அதிகரித்ததே ஆகும். குறிப்பாக, மின்சாரக் கட்டண உயர்வால் நீரை இறைப்பதற்கான செலவு கணிசமாக அதிகரித்ததே இதற்குக் காரணமாக அமைந்தது. இதன் விளைவாக, மொத்த இலாபம் சற்று அதிகரித்து ரூபா. 35.9 பில்லியனாக உள்ளது. இது 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா. 35.7 பில்லியனாக இருந்தது. இந்தச் சிறிய முன்னேற்றம் இருந்தபோதிலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபையின் வரிக்கு முன்னைய இலாபம், 2025 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ஈட்டிய ரூபா 25.2 பில்லியனுடன் ஒப்பிடும் போது, 2026 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 4.8 சதவீதம் குறைந்து ரூபா 24 பில்லியனாகப் பதிவாகியுள்ளது.

2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை, அமைப்பில் 77,243 புதிய இணைப்புகளைச் சேர்த்ததன் விளைவாக, 2026 ஆகஸ்ட் மாத இறுதியில் மொத்த இணைப்புகளின் எண்ணிக்கை 3.33 மில்லியனாக உயர்ந்தது. 2025 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் இருந்த 568 மில்லியன் கன மீட்டர் நீருடன் ஒப்பிடும் போது, இதே காலகட்டத்தில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை 594 மில்லியன் கன மீட்டர் (m^3) நீரை உற்பத்தி செய்துள்ள அதேவேளையில், 2025 ஆம் ஆண்டின் இதே காலக்கட்டத்தில் இருந்த 429 மில்லியன் கன மீட்டர் நீர் விற்பனையுடன் ஒப்பிடும் போது, இதே காலகட்டத்தில் 448 மில்லியன் கன மீட்டர் நீர் விற்பனையைப் பதிவுசெய்துள்ளது. மேலும், மீளாய்வின் கீழான காலகட்டத்தில், வருமானம் ஈட்டாத நீர் அளவு 24.52 சதவீதத்திலிருந்து சற்று அதிகரித்து, 24.57 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், பொதுத் திறைசேரியானது, கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கும், நீர் வழங்கல் கருத்திட்டங்களை நிறைவு செய்வதற்கு ஆதரவளிப்பதற்கும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபைக்கு ரூபா. 10.8 பில்லியனை பங்கு மூலதனமாக வழங்கியது.

இலங்கை துறைமுக அதிகாரசபை

கொழும்பு துறைமுகம் 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் கையாளப்பட்ட 5.43 மில்லியன் TEU இருபது அடிக்கு இணையான கொள்கலன் கையாளுகையுடன் ஒப்பிடுகையில், 10.3 சதவீத வளர்ச்சியுடன், 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், 5.99 மில்லியன் TEU களைக் கையாண்டு 2026 ஆம் ஆண்டிலும் தனது வலுவான வளர்ச்சியைத் தொடர்ந்தது. இந்த வளர்ச்சிக்கு இருபது அடிக்கு இணையான கொள்கலன்கள் 4.83 மில்லியன் TEU வரை 10.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு, சரக்கு இடமாற்ற செயற்பாடுகள் முக்கியக் காரணமாக அமைந்தது.

துறைமுக நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில், 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் இலங்கை துறைமுக அதிகாரசபை மேம்பட்ட நிதிச் செயலாற்றுகையைப் பதிவு செய்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 55.3 பில்லியனாக இருந்த மொத்த வருமானம், 10.3 சதவீதம் அதிகரித்து ரூபா 61.0 பில்லியனாக அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, செயல்பாட்டு இலாபம் ரூபா 37.3 பில்லியனிலிருந்து ரூபா 40.3 பில்லியனாகவும், வரிக்கு முந்தைய இலாபம் ரூபா 39.2 பில்லியனிலிருந்து ரூபா 43.2 பில்லியனாகவும் அதிகரித்துள்ளது.

துறைமுகத்தின் கொள்ளளவு, செயற்பாட்டுத் திறன் மற்றும் சர்வதேசப் போட்டித்திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. கொள்கலன் கையாளும் உட்கட்டமைப்பின் விரிவாக்கம், முக்கிய கப்பல்

நிறுவனங்களுடனான ஈடுபாடு மற்றும் தொடர்ச்சியான துறைமுக நவீனமயமாக்கல் முயற்சிகள் ஆகியவை எதிர்கால சரக்குக் கையாளல் வளர்ச்சிக்கு ஆதரவளித்து, ஒரு பிராந்திய சரக்கு மாற்று மையமாக கொழும்பின் நிலையை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகரித்து வரும் சரக்கு அளவுகளைக் கையாளவும், துறைமுகத்தின் போட்டித்திறனைத் தக்கவைக்கவும் உட்கட்டமைப்பு, எண்ணிமமயமாக்கல் மற்றும் தரமான சேவையில் தொடர்ச்சியான முதலீடு செய்வது முக்கியமானதாக இருக்கும். இதற்கிடையில், மீளாய்வின் கீழான காலகட்டத்தில் மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் பதற்றங்கள், சர்வதேச கப்பல் போக்குவரத்து மற்றும் கடல்சார் வர்த்தகத்தில் நிச்சயமற்ற தன்மையை அதிகரித்துள்ளன. கப்பல் வழித்தடங்களில் ஏற்படும் இடையூறுகள், உயர்ந்த கடல்சார் எரிபொருள் செலவுகள், கப்பல் வழித்தடத் தீர்மானங்களில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் அதிகரித்த கடல்சார் பாதுகாப்பு அபாயங்கள் ஆகியவை கப்பல்களின் நடமாட்டம், கப்பல் போக்குவரத்துச் செலவுகள் மற்றும் உலகளாவிய வர்த்தக ஓட்டங்களைப் பாதிக்கக்கூடும். இத்தகைய நிகழ்வுகள், பிராந்திய கப்பல் வழித்தடங்கள் மற்றும் சரக்கு மாற்றுத் தேவையில் ஏற்படும் மாற்றங்கள் மூலம் கொழும்புக்கு வாய்ப்புகளையும் உருவாக்கக்கூடும். அதன் பிரகாரம், புவிசார் அரசியல் மாற்றங்களையும், கப்பல் போக்குவரத்து முறைகள், இயக்கச் செலவுகள் மற்றும் சரக்கு அளவுகள் மீதான அவற்றின் தாக்கங்களையும் கண்காணிப்பது, உருவாகி வரும் அபாயங்களை நிர்வகிப்பதில் முக்கியமானதாக உள்ளது.

வரும் காலங்களில், சரக்குக் கையாளல் வளர்ச்சி நிலையைத் தக்கவைத்தல், செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துதல், உட்கட்டமைப்பு அபிவிருத்தியை முன்னெடுத்தல் மற்றும் சர்வதேச கப்பல் நிறுவனங்களுடனான ஈடுபாட்டை வலுப்படுத்துதல் ஆகியவை இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதிச் செயலாற்றுகையைப் பேணுவதற்கு இன்றியமையாதவையாக இருக்கும்.

விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் (இலங்கை) (பிரைவேட்) லிமிடெட்

விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் (இலங்கை) (பிரைவேட்) லிமிடெட் 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், வலுவான நிதிச் செயலாற்றுகையைப் பதிவு செய்துள்ளது. மொத்த வருமானம் ரூபா 35.8 பில்லியனாக, ஏறக்குறைய மாற்றமின்றி நீடித்தது. மொத்தச் செயற்பாட்டுச் செலவு ரூபா 14.9 பில்லியனாக இருந்த நிலையில், செயல்பாட்டு இலாபம் ரூபா 20.9 பில்லியனாகப் பதிவானது. இது 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடத்தக்க அளவில் இருந்தது. நாணய மாற்று விகித மாற்றங்களின் சாதகமான தாக்கத்தால், விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் (இலங்கை) (பிரைவேட்) லிமிடெட், 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் ரூபா 2.5 பில்லியன் அந்நியச் செலாவணி நட்டத்துடன் ஒப்பிடும் போது, 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் ரூபா 3.5 பில்லியன் அந்நியச் செலாவணி இலாபத்தைப் பதிவு செய்துள்ளது. இதன் விளைவாக, 2026 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் (இலங்கை) (பிரைவேட்) லிமிடெட் 2025 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவான ரூபா 22 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 30 சதவீத வளர்ச்சியுடன் நிறுவனத்தின் வரிக்கு முந்தைய இலாபம் ரூபா 28.6 பில்லியனாக பதிவாகியுள்ளது.

மீளாய்வுக்கு உட்பட்ட காலத்தில், இலங்கையின் சர்வதேச வான்வழி இணைப்புகளை வலுப்படுத்தவும், விமான நிலைய சேவைகளை மேம்படுத்தவும் விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் (இலங்கை) (பிரைவேட்) லிமிடெட் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தானியங்கி எல்லைக் கட்டுப்பாட்டு மின் வாயிலை அறிமுகப்படுத்தியமை, பயணிகளின் நடைமுறைகளை எளிதாக்குவதற்கும் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட ஒரு முக்கிய நடவடிக்கையாக அமைந்தது. மேலும், மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்து, தளவாடங்கள் (logistics), சரக்குக் கையாளுகை மற்றும் அது தொடர்பான வணிக நடவடிக்கைகளில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் (இலங்கை) (பிரைவேட்) லிமிடெட் "விருப்ப வெளிப்பாட்டு கோரிக்கையை" வெளியிட்டதுடன், முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடல் நிகழ்வையும் நடத்தியது.

இருப்பினும், 2026 ஆம் ஆண்டில் மத்திய கிழக்கில் அதிகரித்த பதற்றங்கள், விமான அட்டவணைகள், வான்வெளி இருப்பு, பயணிகள் நடமாட்டம் மற்றும் விமான நிறுவனங்களின் செயல்பாட்டுச் செலவுகள் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், உலகளாவிய விமானப் போக்குவரத்துத் துறைக்கு நிச்சயமற்ற சூழலை உருவாக்கின. இத்தகைய சூழல், பயணிகள் தொடர்பான வணிக நடவடிக்கைகள் உட்பட விமான நிலையப் போக்குவரத்து மற்றும் வான் போக்குவரத்து சார்ந்த மற்றும் அது சாராத சேவைகளுக்கான தேவையைப் பாதிக்கலாம். அதன் பிரகாரம், விமான நிலைய, விமான போக்குவரத்து சேவைகள் (இலங்கை) (பிரைவேட்) லிமிடெட்டின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதில், சர்வதேச விமானப் போக்குவரத்துப் போக்குகளையும், அவை பயணிகள் மற்றும் விமானங்களின் நடமாட்டத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கங்களையும் தொடர்ந்து கண்காணிப்பது அவசியமாகும்.

அட்டவண 4.2 | அரசுடமைத் தொழில்முயற்சிகள் 52 இன் வரிக்கு முன்னரான இலாபம்

ரூபா மில்லியன்

	தொழில்முயற்சி	2024 உண்மையான	2025 (தற்காலிக)	2026 சன-யூன் (தற்காலிக)
1	இலங்கை வங்கி	106,904	120,827	82,805
2	மக்கள் வங்கி	41,584	64,409	44,531
3	தேசிய சேமிப்பு வங்கி	26,268	44,493	30,107
4	அரச ஈட்டு, முதலீட்டு வங்கி	158	737	585
5	வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி***	64	10	205
6	பிராந்திய அபிவிருத்தி வங்கி	3,210	5,830	4,677
7	ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை	63,177	68,510	49,468
8	இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம்	3,546	6,891	2,918
9	தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்	16,442	9,391	15,135
10	இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம்	560	592	723
11	விவசாய மற்றும் கமத்தொழில் காப்புறுதிச் சபை	-3,182	-1,907	536
12	இலங்கை மின்சார சபை**	141,605	-38,740	1,479
13	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம்	34,188	36,461	28,893
14	இலங்கை துறைமுக அதிகாரசபை	46,349	57,246	43,158
15	தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை	23,833	31,604	23,980
16	விமானநிலைய மற்றும் சிவில் விமான சேவைகள் கம்பனி	28,671	33,658	28,648
17	ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்*	-7,595	-23,211	-12,640
18	இலங்கை போக்குவரத்துச் சபை	547	4,312	480
19	அரச பொறியியல் கூட்டுத்தபானம்	-773	-899	-182
20	மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம்	607	395	60
21	அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தபானம் (அ)	-1,217	-565	-259
22	மில்கோ (பிரைவெட்) லிமிடட்	-64	1,410	1,468
23	தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை	396	-143	380
24	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தபானம்	-69	-35	-73
25	மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை	-229	-222	-65
26	குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி	415	635	332
27	சிலாபம் பிளான்டேசன்ஸ் லிமிடட்	219	650	301
28	கலுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலைக் கம்பனி*	-7	84	30
29	இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்	14	17	2
30	இலங்கை கனிம மணல் கம்பனி	-77	649	88
31	லங்கா பொஸ்பேட் லிமிடட்*	465	459	121
32	கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட்*	-1	14	-18
33	அபிவிருத்தி லொத்தர் சபை	4,197	7,487	7,149
34	தேசிய லொத்தர் சபை	6,203	8,177	7,207
35	அரச மருந்தாக்கல் மற்றும் உற்பத்திக் கூட்டுத்தபானம்	3,083	2,478	2,083
36	இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம்	183	276	99
37	அரச மருந்துப்பொருட் கூட்டுத்தபானம்	2,474	3,772	1,694
38	ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை	552	363	1,028
39	சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு	3	62	-55
40	இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தபானம்	-247	-191	-199
41	இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தபானம்	-176	-203	-90
42	இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை	25	35	4
43	அரசாங்க மரக் கூட்டுத்தபானம்	825	1,139	153
44	அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபன வர்த்தக கம்பனி*	370	429	146
45	லங்கா சதொச நிறுவனம்	-776	-536	-71
46	அரசாங்க அச்சகக் கூட்டுத்தபானம்	284	145	-218
47	இலங்கை கடற்தொழில் கூட்டுத்தபானம்(அ)	-53	132	1
48	இலங்கை கடற்தொழில் துறைமுகக் கூட்டுத்தபானம்	-101	-376	276
49	ஹொட்டேல் டெவலொப்பர்ஸ் லங்கா பீஎல்சீ	-268	139	64
50	லங்கா சீனிக் கம்பனி	-1,944	-3,193	-535
51	லங்கா உரக் கம்பனி லிமிடட்(ஆ)	118	-	-
52	கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர் கம்பனி(ஆ)	555	-	-
53	அரச உரக் கம்பனி லிமிடட்*	-	723	279
	மொத்தம்	**541,316**	**444,421**	**366,889**

மூலம்: அரசுடமைத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

(அ) தற்காலிக

(ஆ) இந்த இரண்டு நிறுவனங்களை ஒன்றிணைப்பதன் மூலம் அரச உரக் கம்பனி உருவாக்கப்பட்டது.

** 2026 ஏப்ரில் - ஆகஸ்ட்*

*** 2026 ஆம் ஆண்டுக்கான வரிக்கு முன்னரான இலாபம் 2026.01.01 முதல் 2026.03.09 வரையானது*

**** 2026 சனவரி - யூன்*

அட்டவணை 4.3 | அரசுடமைத் தொழில்முயற்சிகளிலிருந்தான அறவீடு / பங்கிலாப வருமானம்

ரூபா மில்லியன்

தொழில்முயற்சி	உண்மையான			மதிப்பிடப்பட்ட	
	2024	2025	அன்றுள்ளவாறு 31.08.2026	2027	2028
அறவீடு	33,190	47,332	16,002	50,286	50,505
தேசிய சேமிப்பு வங்கி	-	6,088		6,000	6,000
இலங்கை வங்கி	-	5,000		5,000	5,000
மக்கள் வங்கி	-	2,000	1,550	3,500	3,500
பிராந்திய அபிவிருத்தி வங்கி				500	500
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தபானம்	-	6,000	-	7,000	7,000
தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு	9,000	3,000	5,000	10,000	10,000
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை	-	200	-	1,000	1,000
அரசாங்க மரக் கூட்டுத்தபானம்	-	585	100	250	250
அரசு மருந்து உற்பத்திக் கூட்டுத்தபானம்	300	779	200	535	588
தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்	2,919	4,973	602	2,000	2,000
புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம்	1,468	1,688	185	100	100
தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை	25	145	115	50	50
இலங்கை முதலீட்டுச் சபை	928	1,150	-	1,269	1,396
தேசிய லொத்தர் சபை	1,060	1,250	630	750	850
இலங்கை கட்டளைகள் நிறுவனம்	13	269	75	129	150
இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தபானம்	300	150	-	342	377
மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம்	-	15	5	10	10
இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்	500	1,000	2,000	525	525
சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை	750	1,000	100	350	350
இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்	100	487	400	890	699
தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்	850	280	150	325	350
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம	-	5,000	-	825	825
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு	250	300	250	300	300
இலங்கை சுற்றுலா அபிவருத்தி அதிகாரசபை	-	275	250	45	45
இலங்கை நில மீட்பு மற்றும் அபிவிருத்தி ஆணைக்குழு	-	100	-	50	50
இலங்கை துறைமுக அதிகார சபை	607	2,000	3,607	6,967	6,967
தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை	880	751	300	475	475
வீதி அபிவிருத்தி அதிகார சபை	1,749	2,128	-	-	-
காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு	15	100	-	1	1
கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை	-	10	15	10	10
தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவகம்	85	30	50	105	110
இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருள் கூட்டுத்தபானம்	5	76	-	65	65
முகாமைத்துவத்திற்கான பட்டமேற்படிப்பு நிறுவகம்	4	30	28	28	30
ஏனைய அரசுடமைத் தொழில்முயற்சிகள்	11,381	474	391	890	932
பங்கிலாபங்கள்	7,890	9,211	3,913	16,585	16,970
வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தபானம்	1,271	1,987	4	2,000	2,200
விமான நிலையங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் கம்பனி	1,286	2,931		6,622	6,622
இலங்கை கனிம மணல் கம்பனி	158	-	-	200	200
இலங்கை பொஸ்பேட் கம்பனி	75	125	-	100	100
லங்கா லேலாண்ட் லிமிடட்	-	14	-	9	9
ரக்னா ஆரக்ஷக லங்கா லிமிடட்	75	-	111	100	100
மாந்தை ஸோல்ட் லிமிடட் (தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்)	-	30	40	75	75
சிலோன் பெர்டிலைசர்ஸ் லிமிடட் (அரச உர நிறுவனம்)	15	-	-	-	-
கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடட்	30	-	-	-	-
வரையறுக்கப்பட்ட பரந்தன் இரசாயனக் கம்பனி	131	33	-	90	126
அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன பொது வர்த்தகக் கம்பனி	50	116	-	90	101
ஸ்ரீலங்கா ரெலிகொம் பீஎல்சீ	-	227	680	230	230
டி லா ரூ லங்கா லிமிடட்	1,324	494	-	510	510
வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனி	436	436	-	440	440
வரையறுக்கப்பட்ட இலங்கை பெருந்தோட்டக் கைத்தொழில்கள்	98	101	-	-	-
சிலோன் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ்	202	226	131	-	-
பெருந்தோட்டக் கம்பனிகள்	559	214	264	421	433
அரச உரக் கம்பனி	-	65	181	60	124
லங்கா திரிபோஷா லிமிடட்	100	123	-	100	100
ஏனைய அரசுடமைத் தெழில்முயற்சிகள்	2,080	2,090	2,503	5,538	5,600
மொத்தம்	41,080	56,543	19,916	66,871	67,475

மூலம் : அரசுடமைத் தொழில்முயற்சிகள் மற்றும் பொது தொழில்முயற்சிகள் திணைக்களம்

05

2027 வரவுசெலவுத்திட்டத்தை தயாரிக்க பயன்படுத்தப்பட்ட அடிப்படை

5.1 மேன்நோக்கு

2027 வரவுசெலவுத்திட்டத்தில் உள்ள பேரண்டப்பொருளாதாரம் மற்றும் அரசிறை மதிப்பீடுகள் வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட்ட நேரத்தில் ஆக்கப்பட்ட ஊகங்கள், பகுப்பாய்வுகள் மற்றும் தீர்ப்புகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவை. மொத்த உள்நாட்டு உற்பத்தி, பணவீக்கம், தொழிலின்மை மற்றும் வெளிநாட்டுத்துறை உள்ளடங்கலாக வருவாய் மற்றும் செலவின மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் பரிசீலனையில் கொள்ளப்பட்ட முக்கிய பேரண்டப்பொருளாதார குறிகாட்டிகளை இப்பிரிவு எடுத்துரைக்கின்றது. உலகளாவிய, நிதியியல் துறை மற்றும் தொழிற்சந்தை அபிவிருத்திகள் என்பவற்றையும் உள்ளடக்குவதுடன் மதிப்பீடுகளில் காணப்படும் உணர்திறன்களையும் எடுத்துக்காட்டுகின்றது.

5.2 மொத்த உள்நாட்டு உற்பத்தி

இலங்கையின் பொருளாதாரமானது அத்தகைய வளர்ச்சியின் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டுக்கு தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி ஐ.அ.டொ 5,000 இனை விஞ்சி 2025 இல் 5.0 சதவீதம் வளர்ச்சியடைந்தது. 2025 இன் பிந்திய பகுதியின் டித்வா புயல் மற்றும் 2026 பெப்ரவரி தொடக்கம் மத்திய கிழக்கு மோதல்கள் என்ற இரட்டை அதிர்வுகளுக்கு மத்தியில் பொருளாதாரமானது 2026 இன் முதலாம் காலாண்டில் 5.1 சதவீதம் மற்றும் இரண்டாம் காலாண்டில் 4.2 சதவீதம் மூலம் வளர்ச்சியடைந்து, ஆண்டின் முதல் அரைப் பகுதியில் சராசரியாக ஏறத்தாழ 4.7 சதவீதமாகவிருந்தது. இரண்டாம் காலாண்டில் வளர்ச்சி மிதமடைந்தது. எரிபொருள் வழங்கலில் இடையூறுகள் மற்றும் வேளாண்மையில் 2.3 சதவீதம் சுருக்கம் என்பன பிரதான காரணமாக அமைந்த அதேவேளை, கட்டடவாக்கம் முன்னிலை வகித்து கைத்தொழில் 7.3 சதவீதத்தினால் விரிவடைந்தது. அடிப்படைச் சூழ்நிலையின் கீழ் பொருளாதாரமானது புயலுக்குப் பிந்திய மீள்நிர்மாணம், உள்நாட்டு கேள்வியின் மீட்சி மற்றும் சக்தி வழங்கல் இயல்பு நிலையடைதல் என்பவற்றினால் துணையளிக்கப்பட்டு 2026 இல் மதிப்பிடப்பட்ட 3.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2027 இல் 4.0 சதவீதத்தினால் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வேளாண்மைத் துறைக்கான அரசாங்கக் கொள்கையானது டித்வா புயல் மற்றும் நீண்ட வறண்ட வானிலை மூலம் ஏற்படுத்தப்பட்ட சேதத்தின் பின்னர் உற்பத்தித்திறன், போட்டித்தன்மை மற்றும் தாக்குப்பிடிக்கும்தன்மை என்பவற்றை மீளமைத்து, அதிகரிக்கும் அதேவேளை, ஏற்றுமதியினால் இயக்கப்படும், பெறுமதி சேர்க்கப்பட்ட துறையொன்றினை அபிவிருத்தி செய்வதாகும். நீர்ப்பாசன உட்கட்டமைப்பினை புனரமைத்தல், தரமான விதைகளை வழங்குதல், நீர் வளங்களின் வினைத்ததிறன்மிக்க பயன்பாட்டினை ஊக்குவித்தல் மற்றும் உயர்வடைந்த உலகளாவிய விலைகளுக்கு மத்தியில் வசதியான விலைகளில் உரியகாலத்தில் வளமாக்கிகள் கிடைக்கப் பெறுதலை உறுதி செய்தல் என்பவற்றை முக்கிய வழிமுறைகள் உள்ளடக்குகின்றன. கைத்தொழில் துறையைப் பொறுத்த வரை சேதமடைந்த அரசாங்க உட்கட்டமைப்பு மீள்நிர்மாணம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.1 சதவீதம் கொண்ட அரசாங்க முதலீடு என்பன மூலம் துணையளிக்கப்பட்டு குறிப்பாக கட்டடவாக்கம் விரிவடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. தயாரிப்பானது ஏற்றுமதி பன்முகப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்த்தல் என்பவற்றிடமிருந்து நன்மையடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாரிய பங்கைக் கொண்டிருக்கின்ற சேவைகள் துறை நிதி, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் ஆதனத்துறை என்பவற்றில் வளர்ச்சியினால் துணையளிக்கப்பட்டு நிலையாக விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் அபிவிருத்தி உபாயத்தின் முக்கிய தூண் ஒன்றான டிஜிட்டல் பொருளாதாரம் மிகத் துரிதமாக அபிவிருத்தியடைவதனால் வளர்ச்சி மேலும் வலுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் திருப்தி என்பவற்றை உறுதிசெய்வதற்கு உட்கட்டமைப்பை மேம்படுத்துதல். பயணிகள் வருகை தரல் மூலம் சந்தைகளைப் பன்முகப்படுத்தல் மற்றும் வழிமுறைகளை வலுப்படுத்தல் என்பன மூலம் பிராந்திய நிச்சயமின்மைக்கு மத்தியில் சுற்றுலாத் துறை வருவாய்களை நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் கவனம் செலுத்தும்.

5.3 நுகர்வோர் விலைகள்

முதன்மைப் பணவீக்கம் 2026 இன் நடுப்பகுதியிலிருந்து 5 சதவீத இலக்கிற்கு மேல் உயர்வடைந்து, 2026 மார்ச் இறுதியின் 2.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026 ஒக்டோபர் 2026 இல் 8.3 சதவீதத்தை அடைந்தது. மத்திய கிழக்கு மோதலின் பின்னர் உயர்வான உலகளாவிய எரிபொருள் விலைகள், அதனைத் தொடர்ந்து உள்நாட்டு எரிபொருள் விலைகளுக்கும் மின்சாரக் கட்டணங்களுக்கும் திருத்தங்கள், வேளாண்மையில் வழங்கல் இடையூறுகள் என்பன மூலம் இவ்வதிகரிப்பு தூண்டப்பட்டது. 2026 ஒக்டோபர் அளவில் உணவுப் பணவீக்கம் 8.8 சதவீதமாகவும் உணவல்லா பணவீக்கம் 8.0 சதவீதமாகவும் மையப் பணவீக்கம் 5.6 சதவீதமாகவும் காணப்பட்டன. இதற்குப் பதிலிறுத்தி மத்திய வங்கி 2026 மேயில் ஓரிரவு கொள்கை வீதத்தை 100 அடிப்படைப் புள்ளிகளால் 8.75 சதவீதமாக உயர்த்தியது.

இறுக்கமான நாணயக் கொள்கை நிலை, முன்மதிமிக்க அரசிறைக் கொள்கை மற்றும் மத்திய கிழக்கு மோதலின் தாக்கம் படிப்படியாக இல்லாமல்போதல் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு பணவீக்கமானது 2027 இன் இரண்டாம் அரையில் 5 சதவீத இலக்கை நோக்கி படிப்படியாக தளர்வடைவதற்கு முன்னர் இலக்கிற்கு மேல் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்திக் சுருக்கி 2027 இல் 4.0 சதவீதமாகக் காணப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. உலகளாவிய சக்தி மற்றும் பண்ட விலைகள் படிப்படியாக இயல்புநிலையை அடைதல், புயல் மற்றும் வறண்ட வானிலையிலிருந்தான மீட்சியைத் தொடர்ந்து சாதகமான வேளாண்மை உற்பத்தி மற்றும் தொடர்ச்சியான செலாவணி வீத உறுதிப்பாடு என்பவற்றை இவ்வெதிர்பார்க்கை அறுமானிக்கிறது.

5.4 வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை

வேலையின்மை வீதம் 2024 இன் 4.4 சதவீதத்திலிருந்து 2025 இல் 3.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. எனினும், 2025 இன் அதே காலப்பகுதியின் 3.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026 இன் இரண்டாம் காலாண்டின் 4.0 சதவீதமாக அது சிறிதளவு அதிகரித்தது. தொழிற்படைப் பங்களிப்பு வீதம் 2025 இன் அதே காலப்பகுதியின் 31.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026 இன் இரண்டாம் காலாண்டில் 32.7 சதவீதமாக சிறிதளவு அதிகரித்தது.

ஆயினும் குறைவாகக் காணப்பட்டு தொடர்ச்சியான குறைவான பெண்கள் பங்கேற்பையும் வெளிநோக்கிய தொழிலாளர் புலம்பெயர்தலையும் பிரதிபலித்தது. பொருளாதார நடவடிக்கை மீட்சியானது புயலுக்கு பின்னரான மீள்நிர்மாணம் மற்றும் கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகளின் எதிர்பார்க்கப்பட்ட விரிவாக்கம் என்பவற்றுடன் வேலையின்மை வீதம் 2027 இல் குறைவாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தொழிற்படைப் பங்கேற்பை குறிப்பாக பெண்கள் மற்றும் இளையோர் மத்தியில் ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் இலக்கிடப்பட்ட கொள்கைகளை அறிமுகப்படுத்தும்.

5.5 வெளிநாட்டுத் துறை

இலங்கையின் வெளிநாட்டுத்துறை தொடர்ச்சியாக 3 ஆண்டு மிகையான 2025 இன் ஐ.அ.டொலர் 1.7 பில்லியன் கொண்ட நடைமுறைக் கணக்கு மிகையின் பின்னர் மத்திய கிழக்கு மோதல் காரணமாக 2026 இல் அழுத்தத்தை எதிர்கொண்டது. பிரதானமாக உயர்வான எரிபொருள் இறக்குமதி செலவினத்தின் காரணமாக நடைமுறைக் கணக்கு 2025 இன் அதே காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 2,047.0 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2026 இன் முதல் 8 மாதங்களில் ஐ.அ.டொ 290.6 மில்லியன் கொண்ட பற்றாக்குறையொன்றை பதிவுசெய்தது. எரிபொருள் இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 4,072 மில்லியனாக 61.6 சதவீதத்தினால் அதிகரித்து 2025 இன் முதல் 8 மாதங்களின் ஐ.அ.டொலர் 4.3 பில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 7.2 பில்லியனாக வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையை விரிவடையச் செய்தது.

சுற்றுலாவில் இருந்தான வருவாய்கள் 2025 இன் அதே காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 2,290.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2026 சனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரை ஐ.அ.டொலர் 2,061.1 மில்லியனாக 10.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ந்தும் வலுவாக வளர்ச்சியடைந்து 2026 இன் முதல் 8 மாதங்களில் ஐ.அ.டொலர் 6,131.0 மில்லியனாக 19.8 சதவீதத்தினால் உயர்வடைந்த அதேவேளையில், வணிகப் பொருள் ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 9,376.9 மில்லியனாக 3.3 சதவீதத்தினால் அதிகரித்தன. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2026 ஆகஸ்ட் இறுதியில் ஐ.அ.டொலர் 6.9 பில்லியனாகவிருந்த அதேவேளையில் ரூபா ஐ.அ.டொலருக்கு எதிராக 2026 செப்டெம்பர் இறுதியளவில் இற்றைவரை ஆண்டு அடிப்படையில் 6.3 சதவீதத்தினால் பெறுமானத்தேய்வடைந்தது.

உலகளாவிய சக்தி விலைகள் இயல்புநிலைக்குத் திரும்புதல் மற்றும் சுற்றுலா வருவாய்கள் அத்துடன் தொழிலாளர் பணவனுப்புதல் தொடர்ந்தும் தேறிய உட்பாய்ச்சல்களுக்கு ஆதரவளித்தல் என்பவற்றினால் வெளிநாட்டுத் துறை 2027 இல் படிப்படியாக மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எளிமைப்படுத்தப்பட்ட, வெளிப்படையான மற்றும் முன்கணிப்புச்செய்யத்தக்க வரிக் கட்டமைப்பு என்பவற்றை நோக்காகக் கொள்கின்ற தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித்திட்டம் (2025-2029) மற்றும் தேசிய வரிக் கட்டமைப்பு என்பவற்றுக்கு அமைவாக பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேம்பட்ட வெளிநாட்டு மீதிகள் தொடர்ச்சியாக ஒதுக்குகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் வலுவடைந்த சந்தை நம்பிக்கை என்பவற்றைப் பிரதிபலித்து செலாவணி வீதம் 2027 இல் பரந்தளவில் நிலையாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

5.6 நாணயத் திரட்டுக்கள்

பணவீக்கத்தினை 5 சதவீத இலக்கிற்கு மீண்டும் கொண்டுவரும் மத்திய வங்கியின் குறிக்கோளுக்கு இசைவாக பணநிரம்பல் பொருத்தமான மட்டத்தில் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2027 இல் வருவாயும் மானியங்களும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.8 சதவீதமாக எறிவுசெய்யப்பட்டுள்ளமை மற்றும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.8 சதவீத எறிவு என்பவற்றுடன் அரசாங்கத்தின் மொத்த நிதியளிப்புத் தேவைகள் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு வட்டி வீதங்கள் மீது இது அழுத்தத்தைத் தளர்த்தி, தனியார்துறை கொடுகடன் மற்றும் முதலீட்டுக்காக மிகவும் சாதகமான சூழலை உருவாக்கும்.

5.7 வருமானம்

மொத்த வருவாயானது மோட்டார் வாகன இறக்குமதிகள் மீள தொடங்கியதிலிருந்து ஏற்பட்ட ஒருமுறை ஈட்டல்களின் தொடர்ந்து வருவாய் இயல்புநிலைக்குத் திரும்பலை பிரதிபலித்து வரிவருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 14.6 சதவீதத்துடன் 2027 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15.8 சதவீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளன. நடுத்தரகால வருவாய் உபாயத்தின் (2027-2031) கீழான வருவாய் நிர்வாக வருமான நிர்வாக வழிமுறைகளில் வருவாய் ஈட்டல்கள் பிரதானமாகத் தூண்டப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றன. வருவாய் மதிப்பீடுகளுக்கு ஏதுவாகின்ற ஊகங்கள் இணைப்பு III இல் விபரிக்கப்பட்டுள்ளன.

5.8 செலவினம்

2027 வரவுசெலவுத்திட்டத்தின் செலவின மதிப்பீடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 12.9 சதவீதம் அல்லது ரூபா 5,030 பில்லியன் கொண்ட முதன்மை செலவின உச்ச வரம்பினுள் தயாரிக்கப்பட்டுள்ளன. எனினும் இவ் உச்சவரம்பானது 2027 வரவு செலவுத்திட்டத்திற்கான குறைநிரப்பு மதிப்பீட்டினுள் கூட்டிணைக்கப்படவுள்ள டித்வா புயலின் பின்னரான மீள் நிர்மாணம் மற்றும் புனருத்தாபனத்திற்கான உபயோகிக்கப்படாத ஒதுக்கீடுகளின் 2026 இலிருந்து 2027 இற்கான மீள் ஒதுக்கீடு காரணமாக விஞ்சிச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றன. இம்மதிப்பீடுகள் பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டவை.

- சம்பளங்கள் மற்றும் கூலிகள் : ஏறத்தாழ 1.3 மில்லியன் ஊழியர்களைக் கொண்ட அரசாங்கத்துறை தொழிற்படையை மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டவை. அரசாங்கத்துறை ஊழியர்களின் எண்ணிக்கை 2027 இன் புதிய ஆட்சேர்ப்பு ஊடாக கணிசமாக அதிகரிக்காது என ஊகிக்கப்படுகின்றது. ஆண்டுச் சம்பள ஏற்றங்கள் 2025 வரவுசெலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட சம்பள திருத்தத்தின் இறுதிக் கட்டத்துடன் சேர்த்து காரணிப்படுத்தப்பட்டுள்ளன.

- ஓய்வூதியக் கொடுப்பனவுகள் : மதிப்பீடுகள், மதிப்பிடப்பட்ட 762,570 ஓய்வூதியம் பெறுபவர்களின் மதிப்பீடுகளையும் 2025 வரவு செலவுத்திட்டத்திலும் 2026 வரவுசெலவுத்திட்டத்திலும் முன்மொழியப்பட்ட ஓய்வூதிய சீராக்கங்களையும் அடிப்படையாக கொண்டவை.

- வட்டிக் கொடுப்பனவுகள்: படுகடன் மறுசீரமைப்பு, நிறைவடைந்தமை மற்றும் வீழ்ச்சியடைகின்ற படுகடன் இருப்பு என்பவற்றைப் பிரதிபலித்து 2026 இன் 7.3 சதவீதத்திலிருந்து 2027 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.8 சதவீதமாக வட்டிச் செலவினம் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றன. 2026 இல் நாணய இறுக்கமாக்கலைத் தொடர்ந்து உயர்வான உள்நாட்டு வட்டி வீதங்கள் இதனை பகுதியளவில் எதிரீடுசெய்யலாம்.

- பொருட்கள் மற்றும் சேவைகள் : பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான செலவினம் ரூபா 409 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- வீட்டு அலகுகளுக்கான உதவுதொகைகள்: சமூகப் பாதுகாப்பு வலை மீதான செலவிடலானது அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வயது முதிர்ந்தோர், அங்கவீனமுற்றோர் மற்றும் நாட்பட்ட சிறுநீரக நோயாளிகள் போன்றோருக்கு ஆதரவளிக்கும் ஏனைய இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் அதேபோன்று டித்வா புயல் மற்றும் உயர்வான சக்தி விலைகள் மூலம் பாதிக்கப்பட்ட வீட்டலகுகளுக்காக தொடர்ச்சியான அதரவு என்பவற்றின் கீழ் தேவை அடிப்படையிலமைந்த ஒதுக்கீடுகளைப் பிரதிபலித்து சீரமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மாற்றுத்திறன் கொண்ட படையினர், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து நிகழ்ச்சித்திட்டங்கள் இலவச மருந்து வழங்கல் அத்துடன் உணவுப் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கான உர மானியங்கள் என்பவற்றுக்கான ஆதரவு உள்ளடங்கலாக ஏனைய முக்கிய நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நிதியிடலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- அரசாங்க நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள்: சக்தித் துறையில் செலவுப் பிரதிபலிப்பு விலையிடல் மற்றும் முக்கிய அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளில் முன்னெடுக்கப்படும் மறுசீரமைத்தல் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு மாற்றல்கள் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- அரசாங்க முதலீடு: அரசாங்க முதலீடு அனர்த்தத்திற்கு பிந்திய தேவைகள் மதிப்பீடு 2026 இற்கமைவாக டித்வா புயலினால் சேதமாக்கப்பட்ட உட்கட்டமைப்பு மீள்நிர்மாணம் மற்றும் முன்னுரிமைத் துறைகளில் முதலீடு என்பவற்றை முன்னுரிமைப்படுத்தி 2027 மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 5.1 சதவீதமாக இருக்கும் அதேவேளை, முன்னுரிமையற்ற அத்துடன் அத்தியவசியமற்ற செலவினத்தைக் குறைக்கும். 2026 இல் நிறைவுசெய்யப்படாத ஏதேனும் டித்வா மீள்நிர்மாண நடவடிக்கைகளுக்கான நிதியிடல் 2026 இன் இறுதியில் மதிப்பீட்டின் பின்னர் தீர்மானிக்கப்படும்.

- 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டம்: இச்சட்டம் தற்போது பெருமளவில் தொழிற்படுவதுடன் 2027 வரவு செலவுத்திட்டமானது 2026 யூனில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அரசிறை மூலோபாயக் கூற்று 2027 இற்கமைவாக தாபிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் கீழ் அரசிறைப் பொறுப்பு கட்டமைப்பு செலவின முகாமைத்துவம் உள்ளடங்கலாக அரசாங்க நிதி முகாமைத்துவத்தில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஒழுக்கம் மற்றும் வினைத்திறன் என்பவற்றை தொடர்ந்தும் மேம்படுத்தும்.

- தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் தீர்வுகள்: அரசாங்க கொடுப்பனவுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்காக 'GovPay' தளத்தை விரிவுபடுத்தல் உள்ளடங்கலாக நாட்டை டிஜிட்டல் சமூகமொன்றாக மாற்றுவதற்கான முயற்சிகள் அரசாங்க சேவை வழங்கலையும் தொழிற்பாட்டு வினைத்திறனையும் மேம்படுத்தும்.

- முகவராண்மை ஒருங்கிணைப்பும் கண்காணித்தலும்: அரசாங்க முகவராண்மைகள் மத்தியில் மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பும் வலுவான மேற்பார்வையும் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் செயல்திறனை உறுதிசெய்து இரட்டிப்பு பணிகளை தவிர்க்கும்.

- கடமைப்பொறுப்பு கட்டுப்பாட்டுப் பொறிமுறைகள்: கடமைப்பொறுப்பு கட்டுப்பாட்டுப் பொறிமுறைகள் 2024 இன் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட கடமைப்பொறுப்பு கட்டுப்பாட்டு முறைமை அரசிறை மற்றும் காசுப்பாய்ச்சல் முகாமைத்துவத்தை வலுப்படுத்தும்.

5.9 கடன் பெறுகைகள்

அரசாங்கத்தின் மொத்த கடன்பெறுதல் தேவைப்பாடு 2027 இல் ரூபா 3,800 பில்லியனாக எறிவுசெய்யப்பட்டுள்ளது. வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை 2026 இன் 3.7 சதவீதம் கொண்ட திருத்தப்பட்ட மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 2027 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.8 சதவீதமாக 0.1 சதவீதப் புள்ளிகளால் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், டித்வா புயல் தொடர்புபட்ட மீள்நிர்மாணம் மற்றும் புனரமைப்பின் தொடர்ச்சிக்கான செலவினத்தை கூட்டிணைக்கவுள்ள 2027 வரவு செலவுத்திட்டத்துடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படவுள்ள குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டத்தைக் கருத்திற் கொண்டு வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையானது 2027 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீதமாக விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுப்படுகடன் 2027 இல் வீழ்ச்சியடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளதுடன் 2027 – 2032 காலப்பகுதியில் சராசரி ஆண்டு மொத்த நிதியளிப்புத் தேவைகளை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13 சதவீதத்திற்குக் கீழும் வெளிநாட்டு நாணய படுகடன் தீர்ப்பனவை மொ.உ.உ 4.5 சதவீதத்திற்குக் கீழும் வைத்திருப்பதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

2024 இன் 33 ஆம் இலக்க பொதுத் தனிசு முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் தற்போது முழுமையாக இயங்குகின்றது. அரசாங்கப் படுகடனை முகாமைசெய்தல், கடன் உத்தரவாதங்களை வழங்குதல் மற்றும் முகாமைசெய்தல், மீள்கடன் வழங்கல் தொழிற்பாடுகளை முகாமைசெய்தல, பொதுப்படுகடனை பதிவுசெய்தல் மற்றும்

அறிக்கையிடல் என்பவற்றுக்கு இது பொறுப்புடையதாகும். 2027 இல் கடன்பெறுதலானது முதிர்ச்சி தொகுப்பினை நீட்சியடையச் செய்தல் மற்றும் வெளிநாட்டு நாணய படுகடன் மீது தங்கியிருப்பதைக் குறைத்தல் என்பன மீதான கவனம்செலுத்துதலுடன் நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயம் மற்றும் ஆண்டு கடன்பெறுதல் திட்டம் என்பவற்றினால் வழிநடாத்தப்படும்.

5.10 மதிப்பீடுகளுக்கான உணர்திறன்

அரசிறை மற்றும் பொருளாதார எறிவுகள் பின்வருவன உள்ளடங்கலாக பல இடர்கள் சவால்கள் மூலம் செல்வாக்குசெலுத்தப்படலாம்.

- பேரண்டப்பொருளாதார நிச்சயமின்மை: பொருளாதார நிலைமைகள் அரசிறை நிலையை எதிர்வுகூறுதலில் அரசிறை பெறுபேறுகளினதும் முதன்மை நிச்சயமற்ற மூலத்தினதும் முக்கிய நிர்ணயக் காரணியாகும். மத்திய கிழக்கு மோதலின் காலம் மற்றும் தீவிரம், உலகளாவிய எரிபொருள், உணவு மற்றும் வளமாக்கி விலைகளில் தளம்பல் மற்றும் உலகளாவிய நிதி நிலைமைகளை இறுக்கப்படுத்தல் என்பன 2027 வரவுசெலவுத்திட்ட எறிவுகளிலிருந்து விலகுவதற்கான உண்மை வருவாய் மற்றும் செலவினப் பெறுபேறுகளை ஏற்படுத்தலாம். பணவீக்கம், வட்டி வீதங்கள் மற்றும் செலாவணி வீதங்கள் போன்ற மாறிகள் கடன்பெறுதல் செலவையும் ஒட்டுமொத்த அரசிறை நிலைமையினையும் நேரடியாகப் பாதிப்பதுடன் திடீர் மாறுதல்களுக்கு பாதிக்கப்படத்தக்கவையாகக் காணப்படுகின்றன.

- வெளிநாட்டு அதிர்வுகள் : ஒட்டுமொத்தமாக எரிபொருளை இறக்குமதி செய்யும் நாடு என்றவகையில் இலங்கை ஹோர்மோஸ் நீரினை மூடுதலின் விளைவிலிருந்து தோன்றுகின்றவை உள்ளடங்கலாக உலகளாவிய சக்தி வழங்கலில் இடையூறுகளுக்கு அதிகளவு ஆட்பட்டு காணப்படுகின்றது. நீண்டகால மோதல் இறக்குமதிச் செலவுகளை மேலும் அதிகரித்து சுற்றுலா வருவாய்கள் மற்றும் மத்திய கிழக்கிலிருந்தான பணவனுப்பல் உட்பாய்ச்சல்களை நலிவடையச் செய்து, முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் கேள்வியைக் குறைத்து செலாவணி வீதம், பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பன மீது அழுத்தத்தை இடம்பெறச் செய்யலாம்.

- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் சாதகமற்ற வானிலை நிலைமைகள்: இயற்கை அனர்த்தங்களிலிருந்து தோன்றும் அரசிறை இடர்நேர்வின் அளவினை டித்வா புயல் எடுத்துக்காட்டி 2026 இல் ரூபா 500 பில்லியன் கொண்ட குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டத்தை தேவைப்படுத்தியது. வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவுகள், புயல் மற்றும் வறட்சி போன்ற வரவிருக்கும் ஆண்டினுள் நிகழக்கூடிய ஏதேனும் ஒன்றுக்கு நாடு ஆட்பட்டுக் காணப்படுகின்றது. அத்தகைய நிகழ்வுகள் நிவாரணம், மீட்பு மற்றும் புனர்நிர்மாணம் மீதான எதிர்நோக்காத செலவினத்தை அவசியப்படுத்தலாம் என்பதுடன் வேளாண்மை வெளியீடு, தொழிலாளர் உற்பத்தித்திறன் மற்றும் வளர்ச்சி என்பவற்றை பாதகமாகப் பாதிக்கலாம்.

- நிர்வாகம் மற்றும் பெறுகைத் தாமதங்கள்: நிர்வக ரீதியான தடைகள், தார் போன்ற மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் பெறுகைத் தாமதங்கள் என்பன புயலுக்கு பிந்திய புனர்நிர்மாணம் உள்ளடங்கலாக அரசாங்க முதலீட்டுக் கருத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை மெதுவடையச்செய்து வளர்ச்சிக்கும் தொழிலுக்குமான அவற்றின் பங்களிப்பைக் குறைக்கலாம். தாமதங்கள் கருத்திட்டச் செலவுகளையும் அதிகரித்து அரசாங்க செலவிடுதல்களில் வினைத்திறனின்மைகளை உருவாக்கி அரசிறை நிலுவை மீது மேலதிக அழுத்தத்தை இடம்பெறச் செய்யக்கூடும்.

- சட்டவாக்கத் தாமதங்கள்: முக்கிய அரசிறை தொடர்புபட்ட சட்டவாக்கத்தின் அனுமதியில் தாமதங்கள் வரவு செலவுத்திட்ட வழிமுறைகளில் காலவரையறை மற்றும் நடைமுறைப்படுத்தலில் நிச்சயமின்மையை என்பவற்றைத் தோற்றுவிக்கலாம். காலதாமதப்படுத்தப்பட்ட வரி மறுசீரமைப்புகள் அல்லது செலவிடல் அனுமதிகள் வருவாய் பற்றாக்குறைகளுக்கும் செலவினத் திரும்பல்களுக்கும் வழிவகுத்து கடன்பெறுதல் தேவைப்பாடுகளை அதிகரித்து அரசாங்கம் அதன் அரசிறை இலக்குகளை நிறைவுசெய்வதற்கான இயலுமையை நலிவடையச் செய்யலாம்.

- அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் செயலாற்றம் : அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகள் அவற்றின் இலாபத்தன்மையினையும் நிதியியல் நிலைபெறு தன்மையினையும் பாதிக்கக்கூடிய தொழிற்பாட்டு ரீதியான இடர்கள், வெளிநாட்டு நாணய இடருக்குள்ளாதல் மற்றும் பண்ட விலை அதிர்வுகள் ஆகியவற்றுக்குட்பட்டுள்ளன. அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளின் நலிவான செயலாற்றம் மறுசீரமைத்தலில் தாமதங்கள் சக்தித் துறையில் செலவுப் பிரதிபலிப்பு விலையிடலில் ஏதேனும் திரும்பல் என்பன எதிர்பாரா பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு வழிவகுத்து அரசிறை திரட்சிப்படுத்தல் குறிக்கோள்களுக்கு சவால்விடுக்கக்கூடும்.

- நிதியியற்றுறை இடர்கள் : நாட்டுக்கான படுகடன் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிதியிடல் நிறுவனங்களுக்கான அரசாங்க உத்தரவாதங்கள் என்பவற்றுக்கு துறை ஆட்படுதல் ஊடானவை உள்ளடங்கலாக நிதியிடல் முறைமையில் அழுத்தம் அரசிறை செலவுகளை உயர்வடையச் செய்து அரசாங்கத்தின் நிதியளித்தல் நிலைமைகளைப் பாதிக்கக்கூடும்.

2026.08.31 வரையில் பொது திறைசேரியினால் வழங்கப்பட்ட திறைசேரி உத்தரவாதங்கள் மற்றும் உத்தரவாதக் கடிதங்கள் பற்றிய நிலுவை விபரப்பட்டியல்

தொடர் இல	வங்கி / நிறுவனத்தின் பெயர்	நிறுவனத்தின் பெயர்	2026.08.31 அன்றுள்ளவாறு வழங்கப்பட்ட மதிப்பு ரூ.மில்.		2026.08.31 அன்றுள்ளவாறு நிலுவைப் பெறுமதி ரூ.மில்	
1	ஆசிய அபிவிருத்தி வங்கி	இலங்கை மின்சார சபை	185,328.42	218,129.91	148,094.53	180,896.02
		லங்கா மின்சாரக் கம்பனி (பிரைவட்) லிமிடெட்	16,400.75		16,400.75	
		பிராந்திய அபிவிருத்தி வங்கி	16,400.75		16,400.75	
2	ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB)	இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி	29,521.34	29,521.34	9,837.17	9,837.17
3	இலங்கை வங்கி	கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் லிமிடெட்	500.00	470,685.48	500.00	260,465.42
		இலங்கை மின்சார சபை	4,540.00		11.18	
		இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	220,000.00		105,851.72	
		ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்	85.00		2.31	
		மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை	200.00		19.27	
		லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடெட்	49,500.00		33,807.21	
		நெஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மெனேஜ்மென்ட் லிமிடெட்	8,600.00		3,765.00	
		தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	64,863.64		28,342.41	
		வீதி அபிவிருத்தி அதிகார சபை	118,970.03		84,875.72	
		அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்	1,126.81		990.61	
		அரச பொறியியற் கூட்டுத்தாபனம்	2,300.00		2,299.99	
4	சீன அபிவிருத்தி வங்கி	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	115,595.70	115,595.70	61,719.28	61,719.28
5	சீனா தேசிய இரசாயன பொறியியல் இல. 14 கட்டுமான நிறுவனம்	இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	14,358.85	14,358.85	5,825.54	5,825.54
6	கொமர்ஷியல் வங்கி	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	968.36	968.36	298.53	298.53
7	டீஎப்சீசீ வங்கி	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	6,026.24	11,026.24	2,381.81	5,642.68
		வீதி அபிவிருத்தி அதிகார சபை	5,000.00		3,260.87	
8	இந்திய எக்சிம் வங்கி	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	85,966.14	85,966.14	50,921.03	50,921.03
9	ஹற்றன் நெஷனல் வங்கி	விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட்	4,000.00	20,421.49	4,000.00	9,535.16
		தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	16,421.49		5,535.16	
10	ஹொங்கொங் சங்காய் வங்கி லிமிடெட்	விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட்	14,477.91	14,477.91	9,673.16	9,673.16
11	சீன கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கி லிமிடெட்	இலங்கை மின்சார சபை	13,767.57	13,767.57	8,702.24	8,702.24
12	ஐஎன்ஜி வங்கி, என்வி, நெதர்லாந்து	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	31,541.21	31,541.21	30,323.73	30,323.73

தொடர் இல	வங்கி / நிறுவனத்தின் பெயர்	நிறுவனத்தின் பெயர்	2026.08.31 அன்றுள்ளவாறு வழங்கப்பட்ட மதிப்பு ரூ.மில்.		2026.08.31 அன்றுள்ளவாறு நிலுவைப் பெறுமதி ரூ.மில்	
13	சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் (IATA)	ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட்	3,804.97	3,804.97	3,804.97	3,804.97
14	ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையம் (ஜைக்கா)	விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட்	152,751.92	152,751.92	55,421.41	55,421.41
15	தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	21,380.43	21,380.43	12,050.36	12,050.36
16	தேசிய சேமிப்பு வங்கி	இலங்கை மின்சார சபை	5,000.00	147,098.87	2,500.00	114,097.47
		ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்	33,896.09		24,211.49	
		தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	32,710.61		24,304.24	
		வீதி அபிவிருத்தி அதிகார சபை	75,492.17		63,081.74	
17	மக்கள் வங்கி	இலங்கை மின்சார சபை	6,500.00	113,533.63	4,335.34	75,624.83
		இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	2,533.92		1,266.14	
		இலங்கை கப்பற் போக்குவரத்துக் கூட்டுத்தாபனம் லிமிடெட்	23,587.70		15,534.79	
		தேசிய முறைமை இயக்குநர் (பிரைவட்) லிமிடெட்	20,560.00		20,523.18	
		தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	4,563.98		2,144.98	
		வீதி அபிவிருத்தி அதிகார சபை	53,398.03		31,256.25	
		இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்	100.00		51.28	
		அரச அச்சகக் கூட்டுத்தாபனம்	2,290.00		512.87	
18	சம்பத் வங்கி	வீதி அபிவிருத்தி அதிகார சபை	14,500.00	14,500.00	8,568.18	8,568.18
19	யுனிகிரெடிட் வங்கி ஆஸ்திரியா ஏஜி	தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை	19,239.89	19,239.89	15,513.58	15,513.58
20	நெற் சந்தைப்படுத்தல் சபை	மொத்த விற்பனை கூட்டுறவு நிறுவனம்	880.00	880.00	729.60	729.60
21	ஏற்றுமதி அபிவிருத்திச் சபை	இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி	60.00	60.00	60.00	60.00
		முழு மொத்தம்	**1,499,709.91**	**1,499,709.91**	**919,710.37**	**919,710.37**

குறிப்பு: வெவ்வேறு நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளை இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கு, இலங்கை மத்திய வங்கியினால் 2026 ஆகஸ்ட் 31 அன்றுள்ளவாறு வெளியிடப்பட்ட நாணயமாற்று விகிதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பேரினப் பொருளாதார குறிகாட்டிகள்

அட்டவணை 1 : பிரதான துறைசார் வளர்ச்சி வீதங்கள் % 2024–2026

துறை	2024	2025	2026	
			கா1(அ)	கா2(அ)
மொ.உ.உ.	5.0	5.0	5.1	4.2
விவசாயம்	1.2	1.4	1.1	-2.3
கைத்தொழில்	11.0	7.8	7.2	7.3
சேவைகள்	2.4	3.3	3.4	2.7
பணவீக்கம் - மொ.உ.உ. சுருக்கி (%)	3.8	3.7	5.7	6.9
வேலையின்மை விகிதம் (%)	4.5	3.9	3.7	4.0

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

(அ) தற்காலிகமானது

அட்டவணை 2 : விவசாயத்தின் பிரதான உப துறைகளின் காலாண்டு வளர்ச்சி வீதங்கள்

துறை	2024	2025(அ)	2026(அ)	
			கா1	கா2
தேயிலை (மில்.கி.கி)	262.7	262.8	59.6	72.1
வளர்ச்சி%	2.6	0.0	-3.6	-1.9
இறப்பர் (மில்.கி.கி)	69.2	66.5	16.2	14.7
வளர்ச்சி%	7.4	-3.9	-13.6	-2.2
தேங்காய் (மில். காய்கள்)	2,790.1	3,040.3	944.8	834.3
வளர்ச்சி%	-12.0	9.0	64.8	6.2
மீன் ("000 மெ.தொ.)	411.0	364.2	75.6	67.0
வளர்ச்சி%	1.1	11.3	-26.8	-17.3
	2024/25	**2025**	**2025/26**	
	பெரும் போகம்	**சிறு போகம்**	**பெரும் போகம்**	
நெல் ("000 மெ.தொ.)	2,745.3	2,308.4	3,133.9	

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

அட்டவணை 3 : கைத்தொழிற் துறையின் செயலாற்றுகை : 2024 - 2026

ரூபா.மில்லியன்

துறை	2024	2025(அ)	2026(அ)	
			கா1	கா2
உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி	954,409	1,004,413	304,409	210,923
வளர்ச்சி வீதம்	6.1	5.2	5.8	3.7
புடவை, ஆடை மற்றும் தோற் பொருட்கள்	500,210	540,558	173,671	101,017
வளர்ச்சி வீதம்	11.0	8.0	-3.7	-1.4
இரசாயன உற்பத்திகள் மற்றும் அடிப்படை மருந்தாற்கல் பொருட்கள்	90,994	93,549	21,887	32,116
வளர்ச்சி வீதம்	9.7	2.8	22.8	1.7
இறப்பர், பிளாஸ்ரிக் உற்பத்திகள்	60,972	62,587	10,663	18,555
வளர்ச்சி வீதம்	8.6	2.6	-16.8	-4.2
உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள்	86,813	100,890	33,154	28,744
வளர்ச்சி வீதம்	2.5	16.2	12.9	13.1
மொத்த கைத்தொழிற்துறை	**3,333,008**	**3,597,326**	**1,049,104**	**863,881**
ஒட்டு மொத்தக் கைத்தொழில் வளர்ச்சி	**11.0**	**7.8**	**7.2**	**7.3**

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
(அ) தற்காலிகமானது

அட்டவணை 4 : மின்சார உற்பத்தி மற்றும் சேவைகள் துறை செயலாற்றுகை : 2025 - 2026

வகுதி	2025				2026(அ)			
	கா1	கா2	ஜூன்	சன -ஜூன்	கா1	கா2	ஜூன்	சன -ஜூன்
மின்சார உற்பத்தி								
மொத்த உற்பத்தி (GWh)(சுய உற்பத்தி நீங்கலாக)	4,221	4,466	1,504	8,688	4,511	4,793	1,589	9,304
வளர்ச்சி வீதம்	2.4	7.3	9.6	4.9	6.9	7.3	5.6	7.1
நீர் மின்சாரம் (சிறிய நீர்மின் உற்பத்தி நீங்கலாக)	1,271	1,704	626	2,975	1,213	1,081	388	2,294
வளர்ச்சி வீதம்	1.0	37.0	33.7	18.9	-4.6	-36.6	-38.0	-22.9
எரிபொருள் எண்ணெய்	754	259	46	1,014	954	950	213	1,904
வளர்ச்சி வீதம்	6.3	-56.3	-13.3	-22.2	26.4	266.2	360.4	87.8
நிலக்கரி	1,383	1,299	359	2,682	1,362	1,447	484	2,809
வளர்ச்சி வீதம்	-6.2	-11.7	-23.3	-8.9	-1.5	11.4	34.6	4.7
மரபு சாரா புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (சிறிய நீர்மின் உற்பத்தி உள்ளடங்களாக)	813	1,203	473	2,016	982	1,315	504	2,297
வளர்ச்சி வீதம்	19.9	40.6	23.6	31.4	20.8	9.2	6.5	13.9
நீர் : எரிபொருள் : நிலக்கரி : மரபு சாரா புதுப்பிக்கத்தக்க சக்தி விகிதம்	30:18:33:19	38:6:29:27	42:3:24:31	34:12:31:23	27:21:30:22	23:20:30:27	24:13:30:32	25:20:30:25
நீர்த்தேக்க மட்டம் % (முடிவு கால சராசரி)	75.5	65.3	72.7	70.4	68.4	44.5	51.2	56.4
துறைமுக சேவைகள்	**கா1**	**கா2**	**ஆக**	**சன - ஆக**	**கா1**	**கா2**	**ஆக**	**சன - ஆக**
கையாளப்பட்ட மொத்த சரக்குகள் ("000 மெ.தொ.)	30,850	32,186	10,847	84,580	32,292	35,060	10,970	90,110
வளர்ச்சி வீதம்	1.1	10.9	-9.4	4.8	4.7	8.9	1.1	6.5
கையாளப்பட்ட மொத்த கொள்கலன்கள் ("000 TEUs) (இ)	1,936	2,036	741	5,435	2,154	2,290	776	5,995
வளர்ச்சி வீதம்	-3.6	8.2	16.8	5.7	11.2	12.5	4.7	10.3
தொலைத் தொடர்பாடல் சேவைகள் (பாவனையாளர் எண்.) (ஈ)								
	கா1	**கா2**			**கா1**	**கா2**		
நிலையான இணைப்புகள் ("000)	3,543	3,473			2,732	2,708		
வளர்ச்சி வீதம்	62.5	61.1			-22.9	-22.0		
செல்லிடத் தொலைபேசி ("000)	28,784	29,027			29,679	29,419		
வளர்ச்சி வீதம்	2.9	0.1			3.1	1.4		
மொத்த கையடக்க மற்றும் நிலையா இணைப்புகள் ("000)	32,328	32,500			32,411	32,127		
வளர்ச்சி வீதம்	7.2	4.3			0.3	-1.1		
இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் ("000)	24,170	23,686			23,755	23,882		

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது

(ஆ) NCRE: மரபு சாரா புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

(இ) கொழும்பு துறைமுகம் மட்டும்

(ஈ) காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு

அட்டவணை 5 : ஏற்றுமதிச் செயலாற்றுகை 2025 – 2026

ஐ.அ.டொ. மில்லியன்

விபரம்	2025	2026
	சன - ஆக	சன - ஆக[அ]
விவசாய உற்பத்திகள்	2,030.2	2,015.4
தேயிலை	1,026.0	948.5
இறப்பர்	20.8	18.9
தெங்கு உற்பத்திகள்	367.5	389.6
ஏனைய விவசாய உற்பத்திகள்	615.9	658.5
கைத்தொழில் உற்பத்திகள்	7,015.4	7,327.1
புடவைகள், ஆடைகள்	3,595.3	3,355.6
பெற்றோலிய உற்பத்திகள்	654.7	944.9
ஏனைய கைத்தொழில் உற்பத்திகள்	2,765.4	3,026.5
கனிப் பொருள் ஏற்றுமதிகள்	14.3	22.2
ஏனைய ஏற்றுமதிகள்	16.8	12.3
மொத்த ஏற்றுமதிகள்	9,076.6	9,376.9

மூலம் : இலங்கை மத்திய வங்கி
[அ] தற்காலிகமானது

அட்டவணை 6 : இறக்குமதி செயலாற்றுகை 2025 - 2026

ஐ.அ.டொ. மில்லியன்

விபரம்	2025	2026
	சன - ஆக	சன - ஆக[அ]
நுகர்வுப் பொருட்கள்	3,294.7	4,004.5
தானியங்கள் மற்றும் அரைக்கும் தொழில் தயாரிப்புகள்	90.9	120.6
சீனி	245.8	206.6
ஏனைய உணவுப் பொருட்கள்	1,082.9	1,120.6
உணவல்லா நுகர்வுப் பொருட்கள்	1,875.0	2,556.6
இடைநிலைப் பொருட்கள்	7,437.4	9,334.2
எரிபொருள்	2,520.6	4,072.1
கோதுமை, சோளம்	205.1	239.5
உர வகைகள்	164.8	129.5
புடவைகள், ஆடைகள்	1,793.5	1,713.2
பிற இடைநிலைப் பொருட்கள்	2,753.4	3,179.8
முதலீட்டுப் பொருட்கள்	2,597.2	3,203.6
ஏனைய இறக்குமதிகள்	11.6	14.8
மொத்தம்	13,340.9	16,557.1

மூலம் : இலங்கை மத்திய வங்கி
[அ] தற்காலிகமானது

அட்டவணை 7 : கொடுப்பனவு மீதிகள் - 2026

ஐ.அ.டொ. மில்லியன்

விபரம்	2026	
	கா1[அ]	கா2[அ]
நடைமுறைக் கணக்கு மீதி	**704**	**-986**
வர்த்தக மீதி	**-2,310**	**-3,179**
ஏற்றுமதிகள்	3,461	3,442
இறக்குமதிகள்	5,771	6,621
சேவைகள் (தேறிய)	**1,125**	**507**
பெறுகைகள்	2,016	1,512
கொடுப்பனவுகள்	891	1,005
ஆரம்ப வருமானம் (தேறிய)	**-376**	**-586**
பெறுகைகள்	164	144
கொடுப்பனவுகள்	540	730
இரண்டாந்தர வருமானம் (தேறிய)	**2,264**	**2,272**
இரண்டாம் தர வருமானம் (கடன்)	2,295	2,311
இரண்டாம் தர வருமானம் (பற்று)	31	39
மூலதன கணக்கு (தேறிய)	**-2**	**0**
மூலதன கணக்கு (கடன்)	2	3
மூலதன கணக்கு (பற்று)	3	3
நடைமுறை, மூலதன கணக்கு (தேறிய)	**702**	**-985**
நிதிக் கணக்கு (தேறிய)	**646**	**-668**
நேரடி முதலீடு - சொத்துக்கள்	**28**	**25**
நேரடி முதலீடு - பொறுப்புக்கள்	**204**	**201**

ஐ.அ.டொ. மில்லியன்

விபரம்	2026	
	கா1(அ)	கா2(அ)
இலாகா முதலீடு - சொத்துக்கள்	**-0.3**	26
கடன் பினையங்கள்	-0.3	26
இலாகா முதலீடு - பொறுப்பு	**-74**	**-351**
பங்கு, முதலீட்டு நிதிப் பங்குகள்	-96	-39
கடன் பினையங்கள்	22	-312
நிதிப் பங்குகள்	**–**	–
ஏனைய முதலீடுகள் : ஆதனங்கள்	**435**	**111**
செலாவணி மற்றும் வைப்புக்கள்	195	-63
வணிகக் கடன்கள் முற்பணங்கள்	-64	-86
ஏனைய கணக்கு பெறுகைகள்	304	259
ஏனைய முதலீடுகள் : பொறுப்புக்கள்	**-98**	**436**
செலாவணி மற்றும் வைப்புக்கள்	21	-62
கடன்கள்	-196	407
வணிகக் கடன்கள் முற்பணங்கள்	77	91
ஏனைய கணக்கு கொடுப்பனவுகள்	–	–
விஷேட எடுப்பனவு உரிமம் (SDRs)	–	–
ஒதுக்கு ஆதனங்கள்	**215**	**-542**
தேறிய தவறுகளும் விடுவிப்புகளும்	**-56**	**318**
முழு மொத்த மீதி	**456**	**136**

மூலம்: இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானது

அட்டவணை 8 : சர்வதேச இருப்புக்கள்

ஐ.அ.டொ.மில்லியன்

விபரம்	இறுதி 2025	மே 2026	ஜூன் 2026	ஜூலை 2026	ஆக 2026
மொத்த வெளிவாரி இருப்புக்கள்	12,306	12,997	12,602	13,247	13,459
இறக்குமதி மாதங்கள்	6.9	6.5	6.3	6.5	6.5
மொத்த உத்தியேக இருப்புக்கள்	6,838	6,881	6,458	6,600	6,929
இறக்குமதி மாதங்கள்	3.8	3.5	3.2	3.2	3.4

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 9 | அரசாங்கத்தின் படுகடன் நிலுவை

அமெரிக்க டொலர் மில்லியனில்

விபரங்கள்	2026 ஆகஸ்ட் இறுதியில் (தற்காலிகம்) *
மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் மற்றும் உள்நாட்டுக் கடன்	**96,948**
மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் (அ) (ஆ)	**37,744**
உள்ளூர் நாணயத்தில் குறிக்கப்பட்ட மத்திய அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன் (இ)(ஈ)	**56,925**
அமெரிக்க டொலரில் குறிக்கப்பட்ட உள்நாட்டுக் கடன்	**2,279**
இலங்கை அபிவிருத்திப் பிணைமுறிகள் (SLDBs) (அ) (ஈ)	-
உள்நாட்டு டொலர் பிணைமுறிகள் (DDBs) (உ)	51
வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுகளிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் (FCBUs)	-
வெளிநாட்டு நாணயத்தில் குறிக்கப்பட்ட உள்நாட்டு காலக்கடன்கள் (உ)	2,184
வெளிநாட்டு நாணயத்தில் குறிக்கப்பட்ட உள்நாட்டுத் திட்டக் கடன்கள் (ஈ) (உ)	44

மூலம்: பொதுக் கடன் முகாமைத்துவ அலுவலகம்

(அ) மத்திய அரசாங்கத்தின் நிலுவையிலுள்ள வெளிநாட்டுக் கடன் மட்டுமே இங்கு காட்டப்பட்டுள்ளது. கடன் செலுத்தலை இடைநிறுத்தும் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து திரண்ட செலுத்தப்படாத அசல் தொகையும் இதில் உள்ளடங்கும். வதிவாளர் அல்லாதவர்களின் திறைசேரி உண்டியல் / திறைசேரிப் பிணைமுறி கையிருப்புகள் இதில் உள்ளடக்கப்படவில்லை. சர்வதேச இறையாண்மைப் பிணைமுறிகளின் (ISBs) நிலுவைத் தொகைகள், அவற்றின் தற்போதைய வதிவாளர் / வதிவாளர் அல்லாதவர் அடிப்படையிலான கையிருப்புகளின்படி வகைப்படுத்தப்படவில்லை.

(ஆ) வெளிநாட்டுத் திட்டக் கடன்கள், காலக்கடன்கள் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட கடன்களின் நிலுவைத் தொகைகள், 16.10.2026 அன்று பதிவிறக்கம் செய்யப்பட்ட Meridian அறிக்கைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன (தரவு நிறுத்தத் திகதி – 2026 ஆகஸ்ட் இறுதி).

(இ) 2026 ஆகஸ்ட் 31ஆம் திகதியன்றுள்ள நிலுவைத் தொகைகளின் அடிப்படையில், 2026 ஒக்டோபர் 6ஆம் திகதியன்று பதிவுசெய்யப்பட்ட கடன் தரவுகளின்படி, திறைசேரிப் பிணைமுறிகள், திறைசேரி உண்டியல்கள்இ சுஹூருபாய கடன்கள் மற்றும் பணிக்கொடை கடன்கள் இதில் உள்ளடங்கும். திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரிப் பிணைமுறிகளின் நிலுவைத் தொகைகள்இ அவற்றின் தற்போதைய வதிவாளர் / வதிவாளர் அல்லாதவர் அடிப்படையிலான கையிருப்புகளின்படி வகைப்படுத்தப்படவில்லை.

(ஈ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, சுகாதார அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியளிப்பிற்காக, 2011 முதல் 2019 வரையான காலப்பகுதியில் உள்நாட்டு வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்கள் இதில் உள்ளடங்கும்.

** பயன்படுத்தப்பட்ட மாற்று விகிதம்: 1 அமெரிக்க டொலர் = 328.0149 (திகதி: 2026 ஆகஸ்ட் 31)*

(உ) உள்நாட்டு டொலர் பிணைமுறிகள் (DDBs), டொலரில் குறிக்கப்பட்ட உள்நாட்டுக் கடனின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. CS-DRMS தரவு: 2026 ஆகஸ்ட் 21 நிலவரப்படி (தரவு நிறுத்தத் திகதி: 2026 ஜூன் 30).

அட்டவணை 10 : தெரிவு செய்யப்பட்ட நாணய மாற்று விகிதங்களின் அசைவுகள் (ஐ.அ.டொ.எதிராக)

நாணயம்	பெறுமதியேற்றம் (+) /பெறுமதியிறக்கம் (-)	
	இறுதி 2024 - இறுதி 2025	இறுதி 2025 - ஆகஸ்ட் இறுதி 2026
இலங்கை ரூபா	-5.6	-5.5
இந்திய ரூபா	-4.7	-5.9
பங்களாதேஷ் டாகா	-2.2	-0.7
பாகிஸ்தான் ரூபா	-0.6	0.9
சிங்கப்பூர் டொலர்	5.8	0.9
தாய்லாந்து பாத்	8.7	-5.2
தாய்வான் டொலர்	4.3	-0.6
இந்தோனேசியா ரூபியா	-3.6	-5.7
பிலிப்பைன்ஸ் பேசா	-1.7	-5.7
கொரியா வொன்	2.1	4.9
ஜப்பானிய யென்	0.0	-2.1

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 11 : அரசாங்க பிணையங்களில் மத்திய வங்கியின் பங்குகள்

ரூபா.பில்

முடிந்த காலம்	மொத்த (முகப் பெறுமதி)	தேறிய றிபோஸ் (புத்தகப் பெறுமதி)
2015	105	79
2016	331	330
2017	10	26
2018	46	274
2019	75	125
2020	725	737
2021	1,417	1,960
2022	2,598	3,187
2023	2,744	1,956
2024	2,516	1,551
2025	2,509	1,601
2026 ஆகஸ்ட் இறுதியில்	2,493	1,274

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 12 : தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளின் முற்பணங்கள் - சனவரி - ஆகஸ்ட் 2026 (அ)(ஆ)

ரூ. மில்

	தொகை	மொத்தத்தின் % ஆக
1. விவசாயம் மற்றும் மீன்பிடி	7,844,224	9
அதில்..		
தேயிலை	1,620,819	1.9
இறப்பர்	507,139	0.6
தெங்கு	503,155	0.6
நெல்	726,172	0.8
மரக்கறி, பழச்செய்கை, சிறு உணவுப் பயிர்கள்	581,951	0.7
கால்நடை, பாற்பண்ணைப் பொருட்கள்	682,867	0.8
மீன்பிடி	470,160	0.5
2. கைத்தொழில்	32,144,568	37
அதில்..		
நிர்மாணம்	15,153,933	17.4
அதில்..		
--- கொள்வனவு/நிர்மாணம்/திருத்தம் உள்ளடங்கிய ஆளுக்குரிய வீடமைப்பு	7,470,981	8.6
--- ஊழியர்களுக்கான வீடமைப்பு	675,557	0.8
உணவும் குடிபானங்களும்	2,120,268	2.4
புடவைகள் மற்றும் தைக்கப்பட்ட ஆடை	3,326,977	3.8
பலகை மற்றும் தளபாடம் உள்ளடங்களான பலகை உற்பத்திகள்	292,031	0.3
காகித மற்றும் காகித உற்பத்திகள்	510,631	0.6

	ரூ. மில் தொகை	மொத்தத்தின் % ஆக
இரசாயனம், பெற்றோலியம், மருந்துப் பொருட்கள் சுகாதார நலன்புரி இறப்பர் பிளாஸ்ரிக் உற்பத்திகள்	2,047,116	2.4
உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள்	137,734	0.2
அடிப்படை உலோக உற்பத்திகள்	640,093	0.7
பொருத்தப்பட்ட உலோகப் பொருட்கள், இயந்திரம் மற்றும் போக்குவரத்து உபகரணம்	2,550,957	2.9
ஏனைய உற்பத்திப் பொருட்கள்	401,935	0.5
3. சேவைகள்	26,549,331	30.5
அதில்..		
மொத்த மற்றும் சில்லறை வியாபாரம்	8,965,716	10.3
சுற்றுலா	2,465,485	2.8
நிதியியல் மற்றும் வர்த்தக சேவைகள்	7,258,760	8.4
போக்குவரத்து	675,490	0.8
தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழிநுட்பம்	1,061,295	1.2
அச்சிடலும் பிரசுரித்தலும்	172,792	0.2
கல்வி	503,042	0.6
சுகாதாரம்	508,177	0.6
கப்பற் தொழில், விமானசேவை, வழங்கல் மற்றும் சரக்குப் பொருள் கையாளல்	372,742	0.4
4. தனிப்பட்ட கடன்களும் முற்பணங்களும் (ஈ)	20,388,932	23.5
அதில்..		
நுகர்வுப்பொருட்கள்	974,226	1.1
அடகுச் சேவை	8,438,093	9.7
கடன் அட்டைகள்	1,623,323	1.9
தனியார் கல்வி	58,809	0.1
தனியாள் சுகாதார பராமரிப்பு	30,005	0
ஏனைய	8,510,634	9.8
மொத்தம் (உ)	86,927,054	100.0

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) கடன்கள், மேலதிகப்பற்றுக்கள் மற்றும் தள்ளுபடி செய்யப்பட்ட பற்றுச்சீட்டுகல் ஆகியவை இதில் அடங்கும், மேலும் வசூலிக்கும் செயல்பாட்டில் காசு விலக்கப்படுகின்றன.

(ஆ) தற்காலிகமானது

(இ)"தொழில்" என்பதன் கீழ் வகைப்படுத்தப்பட்ட "கட்டுமானம்" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ள தனிநபர் வீட்டுக் கடன்கள் இதில் உள்ளடக்கப்பட்டவில்லை. மேலும், பாதுகாப்பு வலைத் திட்டம் தொடர்பான கடன்களும் இதில் அடங்கும்.

(ஈ) கடனட்டை மிதிகள் இலங்கை மத்திய வங்கியின் வாராந்த/மாதாந்த குறிகாட்டிகளில் இருந்து வேறுபடலாம்.

(உ) தனியார் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன், தொகுத்தல் முறைகளில் உள்ள வேறுபாடுகள் காரணமாக மாதாந்த பணவியல் கணக்கெடுப்பில் வழங்கப்பட்டதிலிருந்து வேறுபடுகிறது.

குறிப்பு:

இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் 2025 ஏப்ரல் மாதம் முதல், பொருளாதாரத்தின் முக்கிய துறைகளுக்கு நீடிக்கப்பட்ட கடனின் விரிவான பகுப்பாய்வுடன், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தனியார் துறைக்கு வழங்கிய கடன் மற்றும் முன்பணங்கள் மீதான மாதாந்திர ஆய்வை ஆரம்பித்தது. இதன்படி, தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் மற்றும் முன்பணங்கள் மீதான ஏற்கனவே இருந்த காலாண்டு ஆய்வு நிறுத்தப்பட்டது. புதிய ஆய்வின் நோக்கம், துறைசார்ந்த கடன் தரவுகளை மாதாந்திர அடிப்படையில் சேகரிப்பதாகும், இதன் மூலம் தனியார் துறை கடனில் உள்ள அதிர்வெண் அசைவுகளை கண்காணித்து பகுப்பாய்வு செய்ய முடியும். அதன்படி, புதிய மாதாந்திர ஆய்வுத் தரவுக்கும் முந்தைய காலாண்டுத் தொடருக்கும் இடையிலான நேரடி ஒப்பீடுகள் பொருத்தமற்றவை, ஏனெனில் மாற்றுக் காலப்பகுதியில் துணைத் துறைகள் முழுவதும் வளர்ச்சி வடிவங்களில் உள்ள வேறுபாடுகள், வங்கியின் மட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மறு வகைப்படுத்தல்களை பெரும்பாலும் பிரதிபலிக்கின்றன.

அட்டவணை 13 : வட்டி விகித அசைவுகள் 2025 – 2026

வட்டி வீதம்	2025 டிசெம்பர் இறுதியில்	2026 மே இறுதியில்	2026 ஜூன் இறுதியில்	2026 ஜூலை இறுதியில்	2026 ஆகஸ்ட் இறுதியில்
இலங்கை மத்திய வங்கியின் கொள்கை விகிதங்கள்					
ஓரிரவுக் கொள்கை வீதம் (அ)	7.75	8.75	8.75	8.75	8.75
துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR)(அ)	7.25	8.25	8.25	8.25	8.25
துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் (SLFR)(அ)	8.25	9.25	9.25	9.25	9.25
சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதம் (AWCMR)	8.04	9.10	9.23	9.01	8.85

வட்டி வீதம்	2025 டிசெம்பர் இறுதியில்	2026 மே இறுதியில்	2026 ஜூன் இறுதியில்	2026 ஜூலை இறுதியில்	2026 ஆகஸ்ட் இறுதியில்
ஓரிரவு - சராசரி நிறையேற்றப்பட்ட திறந்த சந்தை ஏல நடவடிக்கை வீதம் (Reverse Repo) (ஆ)	–	8.75	8.75	8.67	8.75
திறைசேரி உண்டியல் வீதம்					
91-நாட்கள்	7.74	9.36	10.14	9.86	9.06
182-நாட்கள்	8.27	9.68	10.21	10.21	9.44
364 -நாட்கள்	8.45	9.83	10.17	10.20	9.89
கடன் வழங்கல் வீதங்கள்					
சராசரி நிறையேற்றப்பட முதன்மை கடன் வழங்கல் வீதம் (AWPR) (வாராந்த)	9.07	9.9	10.62	10.67	10.95
சராசரி நிறையேற்றப்பட முதன்மை கடன் வழங்கல் வீதம் (AWPR) (மாதாந்த)	8.87	9.75	10.34	10.50	10.88
சராசரி நிறையேற்றப்பட கடன் வழங்கல் வீதம் (AWLR)	11.48	11.97	12.16	12.36	12.59
வைப்பு வீதங்கள்					
சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் (AWDR)	6.78	6.95	7.20	7.39	7.52
சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் (AWFDR)	8.41	8.66	8.98	9.2	9.34

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) 27 நவம்பர் 2024 முதல் அமுலுக்கு வரும் வகையில் ஓரிரவுக் கொள்கை வீதம் என்பது மத்திய வங்கியின் கொள்கை விகிதமாக வரையறுக்கப்பட்டுள்ளது. துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் ஆகியவை ஓரிரவுக் கொள்கை வீதத்துடன் ± 50 அடிப்படை புள்ளிகள் என்ற வித்தியாசத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

(ஆ) குறித்த மாதத்தில் இறுதியாக நடாத்தப்பட்ட ஒருநாள் மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலத்தின் நிறையேற்றப்பட்ட சராசரி வீதம்.

வருமான மதிப்பீடுகளுக்கான அனுமானங்கள் - 2027

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் 49 ஆம் பிரிவிற்கிணங்க ஊகங்கள் ஆக்கப்பட்டுள்ளன.

2027 ஆம் ஆண்டுக்கான வருவாய் மதிப்பீடுகள், வளர்ச்சி வீதங்களுக்கான போக்கு அல்லது நீண்ட காலப் போக்கு சராசரிகள், 2025 இல் சேகரிப்பட்ட உண்மையான வருவாய் மற்றும் 2026இன் முதல் 08 மாதங்களின் வருவாய் முன்னேற்றம், புதிய வழிமுறைகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் தாக்கம், பேரண்டப்பொருளாதார மாறிலிகளின் அபிவிருத்தி மற்றும் வருவாய்ச் செயலாற்றம் மீதான அலுவலர்களின் சிறந்த தீர்வுகள் என்பன உள்ளடங்கலாக முக்கிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டது.

பரந்த ஊகங்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன.

- பொருளாதாரமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பக்கங்கள் இரண்டிலிருந்தும் துணையளிக்கப்பட்டு 2027 இல் 4-5 சதவீத வளர்ச்சியுடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.. இவ்வளர்ச்சி அனைத்து மூன்று பொருளாதார துறைகளிலும் அதாவது கைத்தொழில், சேவைகள் மற்றும் வேளாண்மை என்பவற்றில் விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- சராசரி பணவீக்கம் 2027 இல் 2 ஆவது காலாண்டளவில் 5% கொண்ட இலக்கில் நிலையுறுதியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- தொழின்மை 2027 இல் 5.0% இற்கு கீழிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- செலாவணி வீதம் 2027 இல் ஒப்பீட்டளவில் நிலையானதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- 2027இல் வாகனங்களுக்கான கேள்வியில் சாத்தியமான குறைவு காரணமாக 2026 உடன் ஒப்பிடுகையில் மோட்டார் வாகனங்கள் தொடர்புபட்ட இறக்குமதியிலிருந்தான வருவாயில் சிறிதளவு வீழ்ச்சி.

- சிறந்த பேரண்டப்பொருளாதார முகாமைத்துவத்திற்காக அரசிறை ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்கு பகிரங்க நிதிசார் முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தவனூடாக பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தை நடைமுறைப்படுத்தலாம்.

- அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகள் சட்டமூலம் மற்றும் அரசாங்க, தனியார் பங்குடமைகள் சட்டமூலம் என்பவற்றை அறிமுகப்படுத்தல் அதனூடாக அரசாங்க தனியார் பங்குடமைகளை அரசாங்க முதலீட்டு செயன்முறையாக முழுமையாக ஒருங்கிணைப்பதை உறுதிசெய்தல்.

- உள்நாட்டு இறைவரி திணைக்களம், இலங்கைச் சுங்கம் மற்றும் மதுவரித் திணைக்களம் என்பவற்றின் வருவாய் நிருவாகத்தை டிஜிட்டல்மயப்படுத்தல், ஊழல் இடரை குறைத்தல் மற்றும் வருவாய் நிருவாக உபாயங்களின் செயல்திறனை மேம்படுத்துதல் ஊடாக வலுப்படுத்துவதன் மூலம் வருவாய் திரட்டலை அதிகரித்தல்.

- தனிப்பட்டவர்களுக்காக கட்டாய இலத்திரனியல் கோவை சமர்ப்பித்தல், ஏற்றுமதி வழங்குனர்களுக்காக வரி மீளளிப்பு செயன்முறைகளை சீரமைத்தல், விற்பனை மைய இயந்திரங்களை பயன்படுத்துவதை அமுல்படுத்தல் மற்றும் இடர் அடிப்படையிலமைந்த கணக்காய்வுகளின் வினைத்திறனை மேம்படுத்துதல் என்பனவூடாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் வரி இணங்குவித்தலை வலுப்படுத்தல்.

- வருவாய் சேகரிப்பு, வெளிப்படைத்தன்மை., பொறுப்புக்கூறல் மற்றும் சிறந்த ஆளுகை என்பவற்றை மேம்படுத்துவதை மையப்படுத்தி சுதாட்டதுறையினை ஒழுங்குபடுத்துவதிலும் கண்காணிப்பதிலும் சூதாட்ட ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் செயல்திறனை வலுப்படுத்தல்.

- இனங்காணப்பட்ட நடுத்தர கால வருவாய் குறிக்கோள்களுக்கிணங்க நடுத்தர கால வருவாய் உபாயத்தை (2027 -2031) தாபித்தல் மற்றும் இனங்காணப்பட்ட சாத்தியமான வருவாய் ஈட்டல்களை திரட்டுவதற்கு இலக்கிடப்பட்ட வரிக்கொள்கை மற்றும் வருவாய் நிருவாக வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்.

அட்டவணை1 : உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) மோட்டார் வாகனத் தீர்வை கட்டமைப்பு
(2026.10.31 அன்றுள்ளவாறு)

விடயம்/ இயந்திர கொள்ளளவு	வீதம்
(i) **கார்கள் - பெற்றோல்**	
1,000 சி.சி. இற்கு மேற்படாதவை	ரூபா.1,992,000/-அல்லது கன செ.மீ இற்கு ரூபா.2,450/-
1,001 சி.சி -1,300 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.3,850/-
1,301 சி.சி -1,500 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.4,450/-
1,501 சி.சி -1,600 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.5,150/-
1,601 சி.சி -1,800 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.6,400/-
1,801 சி.சி -2,000 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.7,700/-
2,001 சி.சி -2,500 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.8,450/-
2,501 சி.சி -2,750 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.9,650/-
2,751 சி.சி -3,000 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.10,850/-
3,001 சி.சி -4,000 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.12,050/-
4,000 சி.சி இற்கு மேற்பட்டவை	கன செ.மீ. இற்கு ரூபா.13,300/-
(i) **கார்கள் - டீசல்**	
1,500 சி.சி இற்கு மேற்படாதவை	கன செ.மீ. இற்கு ரூபா.5,550/-
1,501 சி.சி -1,600 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.6,950/-
1,601 சி.சி -1,800 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.8,300/-
1,801 சி.சி -2,000 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.9,650/-
2,001 சி.சி -2,500 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.9,650/-
2,501 சி.சி -2,750 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.10,850/-
2,751 சி.சி -3,000 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.12,050/-
3,001 சி.சி -4,000 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.13,300/-
4,000 சி.சி இற்கு மேற்பட்டவை	கன செ.மீ. இற்கு ரூபா.14,500/-
(ii) **கார்கள் - ஹைபிரிட்/ பெற்றோல்**	
1,000 சி.சி இற்கு மேற்படாதவை	அலகொன்றிற்கு ரூபா .1,810,900/-
1,001 சி.சி -1,300 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.2,750/-
1,301 சி.சி -1,500 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.3,450/-
1,501 சி.சி -1,600 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.4,800/-
1,601 சி.சி -1,800 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.6,300/-
1,801 சி.சி -2,000 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.6,900/-
2,001 சி.சி -2,500 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.7,250/-
2,501 சி.சி -2,750 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.8,450/-
2,751 சி.சி -3,000 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.9,650/-
3,001 சி.சி -4,000 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.10,850/-
4 000 சி.சி இற்கு மேற்பட்டவை	கன செ.மீ. இற்கு ரூபா.12,050/-
(iv) **கார்கள் - ஹைபிரிட்/ டீசல்**	
1,000 சி.சி இற்கு மேற்படாதவை	கன செ.மீ. இற்கு ரூபா. 4,150/-
1,001 சி.சி -1,300 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா. 4,150/-
1,301 சி.சி -1,500 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா. 4,150/-
1,501 சி.சி -1,600 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.5,550/-
1,601 சி.சி -1,800 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.6,900/-
1,801 சி.சி -2,000 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.8,350/-
2,001 சி.சி -2,500 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.8,450/-
2,501 சி.சி -2,750 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.9,650/-
2,751 சி.சி -3,000 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.10,850/-
3,001 சி.சி -4,000 சி.சி	கன செ.மீ. இற்கு ரூபா.12,050/-
4,000 சி.சி இற்கு மேற்பட்டவை	கன செ.மீ. இற்கு ரூபா.13,300/-
(v) **மின்சார கார்கள்**	
கார் - மின்சாரம், புறச்சக்தி அல்லது மின்பிறப்பாக்கி கொண்டவை	
50கி.வோ. இற்கு மேற்படாதவை	கி.வோ. இற்கு ரூபா. 18,100/-
51கி.வோ. -100கி.வோ.	கி.வோ. இற்கு ரூபா.24,100/-
101கி.வோ. -200கி.வோ.	கி.வோ. இற்கு ரூபா.36,200/-
200கி.வோ. இற்கு மேற்பட்டவை	கி.வோ. இற்கு ரூபா.96,600/-
50கி.வோ. இற்கு மேற்படாதவை	கி.வோ. இற்கு ரூபா.30,770/-

விடயம்/ இயந்திர கொள்ளளவு	வீதம்
51கி.வோ. -100கி.வோ.	கி.வோ. இற்கு ரூபா.40,970/-
101கி.வோ. -200கி.வோ.	கி.வோ. இற்கு ரூபா.41,630/-
200கி.வோ. இற்கு மேற்பட்டவை	கி.வோ. இற்கு ரூபா.111,090/-
(vi) **வேன்கள்**	
13 -25 நபர்கள்/ டீசல்	அலகொன்றிற்கு ரூபா . 5,432,650/-
13 -25 நபர்கள்/ பெற்றோல்	கன செ.மீ. இற்கு ரூபா.2,100/-
13 நபர்களுக்கு மேற்படாதவர்கள்/ டீசல்	200%
13 நபர்களுக்கு மேற்படாதவர்கள்/ பெற்றோல்	150%

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 2 : உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சிகரெட் உற்பத்தி தீர்வை கட்டமைப்பு (2026.10.31 அன்றுள்ளவாறு)

வகை	1,000 கூறுகளுக்கு ரூபா
60 மி.மீ. நீளத்திற்கு மேற்படாத ஒவ்வொரு சிகரெட்டுக்கும்	19,350
60 மி.மீ. நீளத்திற்கு மேற்பட்ட 67 மி.மீ. மேற்படாத ஒவ்வொரு சிகரெட்டுக்கும்	50,150
67 மி.மீ. நீளத்திற்கு மேற்பட்ட 72 மி.மீ. மேற்படாத ஒவ்வொரு சிகரெட்டுக்கும்	71,450
72 மி.மீ. நீளத்திற்கு மேற்பட்ட 84 மி.மீ. மேற்படாத ஒவ்வொரு சிகரெட்டுக்கும்	81,000
84 மி.மீ. நீளத்திற்கு மேற்பட்ட ஒவ்வொரு சிகரெட்டுக்கும்	90,050

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 3 : உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) பெற்றோலிய உற்பத்தி தீர்வை கட்டமைப்பு (2026.10.31 அன்றுள்ளவாறு)

வகை	லீற்றர் ஒன்றுக்கு ரூபா
பெற்றோல்	72.00
ஒடோ டீசல்	50.00
சுப்பர் டீசல்	57.00

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 4 : மதுவரிக் கட்டளைச் சட்டத்தில் மதுவரிக் கட்டமைப்பு (2026.10.31 அன்றுள்ளவாறு)

வகைப்படுத்தல்கள்	லீற்றர்/ கிலோகிராம் ஒன்றுக்கான தீர்வை விகிதம் (ரூபா.)
மதுபானம் (தூய லீற்றர் ஒன்றுக்கு)	
விசேட சாராயம்	7,244
வெல்லப்பாகு, பனஞ்சாராயம், தென்னை மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயம்	7,752
நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு ஸ்பிரிட்டுக்கள்	7,969
மால்ட் மதுபானம் மழுமையான வலிமையில் 5% இற்கும் குறைவானது	5,735
மால்ட் மதுபானம் மழுமையான வலிமையில் 5% இற்கும் அதிகமானது	6,015
வைன்	5,735
சேக்	1,567
மில்க் பஞ்ச் பானம்	3,982
மதுபானம்	4,347
எதனோல் தயாரிப்பிற்காக பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்கள்	
தென்னங் கள்ளு (தொகை லீற்றருக்கு)	5
மொலேசஸ் (தொகை கி. கிராமுக்கு)	10
வடிகட்டல் மூலம் ஸ்பிரிட்டுக்களைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட அரிசி (தொகை கி.கிராமுக்கு)	10
வடிகட்டல் மூலம் ஸ்பிரிட்டுக்களைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட சோளம் (தொகை கி. கிராமுக்கு)	10
வடிகட்டல் மூலம் ஸ்பிரிட்டுக்களைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட பழங்கள் (தொகை கி. கிராமுக்கு)	10
வெளிநாட்டு மதுபானம்	
இறக்குமதி செய்யப்பட்ட மோல்ட் மதுபானம் (பியர்)	135
இறக்கமதி செய்யப்பட்ட வைன்	230
இறக்குமதி செய்யப்பட்ட ஏனைய வெளிநாட்டு மதுபானங்கள் (மோல்ட் அல்லது வைன் வகையில் உள்ளடங்காதது)	650
குடிபானமல்லாத ஸ்பிரிட்டுக்கள்	6

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 5 : துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (31.10.2026 அன்று)

வகை	விகிதம்
பொதுவான விகிதம்	10.0%
சலுகை விகிதம்	7.5%, 5.0%, 2.5%

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 6 : பெறுமதி சேர் வரி (VAT) (31.10.2026)

வீதம்	விடயம்
பூச்சிய வீதம்	ஏற்றுமதிப் பொருட்கள்/ சேவைகள்
நியம வீதம் (18%)	பொதுவான பொருட்கள்
விலக்களிப்புகள்	பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் முதல் அட்டவணையின் பகுதி III இல் பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள்

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 7 : சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு (SSCL) (2026.10.31 அன்றுள்ளவாறு)

விலக்களிப்புகள்	விடயம்
வீதம் (2.5%)	
விலக்களிப்புகள்	சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சட்டத்தின் பகுதி IA மற்றும் பகுதி II இல் பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள்

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 8 : சுங்க இறக்குமதித் தீர்வை கட்டமைப்பு (2026.10.31 அன்றுள்ளவாறு)

தீர்வை விகிதம்	எச்.எஸ் குறியீடுகளின் எண்ணிக்கை
இலவசம்	3,724
15%	526
20%	2,659
குறிப்பிடப்பட்ட	852
குறிப்பிடப்பட்ட மற்றும் சதவீதம் (கலப்பு)	412

மூலம் : வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 9 : வாடகை வருமானம்

ரூபா. மில்லியன்

விடயம்	2025 (தற்காலிகமானது)	2026 திருத்தப்பட்டது	2027 மதிப்பீடு
அரசாங்க கட்டிடங்கள், வீடுகள் மீதான வாடகை	2,213	2,399	2,645
அரச காடுகள் மீதான வாடகை	2,218	1,500	1,500
காணி மாற்றும் ஏனையவற்றின் வாடகை	272	220	225
பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளிலிருந்து குத்தகை	1,995	2,881	3,000
ஏனையவை	1,146	1,500	1,630
மொத்த வாடகை வருமானம்	**7,843**	**8,500**	**9,000**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 10 : கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்

ரூபா. மில்லியன்

விடயம்	2025 (தற்காலிகமானது)	2026 திருத்தப்பட்டது	2027 மதிப்பீடு
அரசாங்க அச்சகத்தின் சேவை கட்டணங்கள்	1,575	1,100	1,100
கடவுச்சீட்டு கட்டணங்கள், வீசாக்கள், இரட்டை குடியுரிமை	44,882	42,000	45,000
புறப்படுகை அறவீடு	53,477	50,000	65,000
மோட்டார் வாகனச்சட்டத்தின் கீழ் கட்டணங்கள் மற்றும் பிற ரசீதுகள்	20,301	24,000	25,000
ஏனைய மூலங்களிலிருந்தான பெறுகைகள	77,350	88,880	90,324
மொத்தம்	**197,584**	**205,980**	**226,424**

மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

அட்டவணை 11 : விசேட வியாபார பண்ட அறவீடு

கி.கி. ஒன்றிற்கு ரூபா.

	விடயம்	2025 செப்தெம்பர் இறுதியில்	2026 செப்தெம்பர் இறுதியில்
1	நெத்தலி	100	100
2	உருளைக்கிழங்கு	80	80
3	சிறிய வெங்காயம்	50	50
4	பெரிய வெங்காயம்	50	50
5	வெள்ளை பூண்டு	50	50
6	பட்டானி - முழுமையானது	5	5
	பட்டானி - உடைக்கப்பட்டது	10	10
7	கடலைப் பயறு - முழுமையானது	5	5
	கடலைப் பயறு- உடைக்கப்பட்டது	10	10
8	பயறு	300	300
9	பருப்பு - முழுமையானது	25 சதம்	25 சதம்
	பருப்பு - உடைக்கப்பட்டது	25 சதம்	25 சதம்
10	மிளகாய் - அரைக்கப்படாதவை	100	100
	மிளகாய் - அரைக்கப்பட்டவை	125	125
11	தகரத்திலடைத்த மீன்	200	200
12	சீனி	50	50
13	உழுந்து - முழுமையானது	300	300
	உழுந்து உடைக்கப்பட்டது	300	300
14	கௌபீ	300	300
15	குரக்கன்	300	300
	திணை/ ஏனைய	300	300
16	மாசி	302	302
17	கருவாடு	100	100
18	தோடம்பழம் - புதியவை	600	600
19	திராட்சை - புதியவை	600	600
20	அப்பிள் - புதியவை	600	600
21	கொத்தமல்லி - அரைக்கபடாதவை	26	26
	கொத்தமல்லி - அரைக்கப்பட்டது	52	52
22	நற்சீரகம்	162	162
23	பெருஞ் சீரகம்	162	162
24	மஞ்சள் - அரைக்கப்படாதது	102	102
	மஞ்சள் - அரைக்கப்பட்டது	360	360
25	வெந்தயம்	50	50
26	குரக்கன் மா	150	150
27	உழுந்து மா	325	325
28	நிலக்கடலை	220	220
29	கடுகு	62	62
30	பாம் எண்ணெய்/ ஏனைய மரக்கறி எண்ணெய் - சுத்திகரிக்கப்படாதவை	250	250
	பாம் ஒலின்	255	255
	பாம் ஸ்டெரின்	250	250
	பாம் எண்ணெய் - சுத்திகரிக்கப்பட்டவை	275	275
	வேறு மரக்கறி எண்ணெய் - சுத்திகரிக்கப்பட்டவை	275	275
	பாம் கேர்னல் - சுத்திகரிக்கப்படாதவை	250	250
	- சுத்திகரிக்கப்பட்டவை	275	275
	தேங்காய் எண்ணெய் - சுத்திகரிக்கப்படாதவை	125	125
	தேங்காய் எண்ணெய் - சுத்திகரிக்கப்பட்டவை	150	150
31	மீன்	10% அல்லது ரூ 400	10% அல்லது ரூ 400
32	தகரத்திலடைக்கப்பட்ட மீன் (ஜெக்/மெகரல்)	6	6
33	யோகர்ட்	2000	2000
34	பட்டர்	1500 (அல்லது 2000)	1500 (அல்லது 2000)
35	மாஜரீன் (கொழுப்பு 80% அல்லது மேல்)	650	650
	மாஜரீன் (கொழுப்பு 80% அல்லது கீழ்)	650	650
36	உப்பு	40 (சலுகை-30)	40 (சலுகை-30)

கி.கி. ஒன்றிற்கு ரூபா.

	விடயம்	2025 செப்தெம்பர் இறுதியில்	2026 செப்தெம்பர் இறுதியில்
37	பேரித்தம்பழம்	200	200
38	உலர்ந்த திராட்சை	600	600
39	மங்குஸ்தான் பழம்	200	200
40	உலர்த்தப்பட்ட தோடம்பழம்	125	125
41	பியார்ஸ்பழம்	220	220
42	செரிப்பழம்	315	315
43	முந்திரிகை வத்தல்	250	250
44	கிவி பழம்	175	175
45	மாதுளம் பழம் (ஏனைய)	600	600
46	கிராடட்/ கட்டியாக்கப்பட்ட சீஸ்	600	600
47	கிளமென்டைன் - புதியவை	120	120
48	கிளமென்டைன் - உலர்த்தப்பட்ட	250	250
49	ஏனைய (சிட்ரஸ்) பழங்கள் புதியவை	120	2025.11.26 முதல் சாதாரண தீர்வை கட்டமைப்பு விதிக்கப்பட்டது.
50	ஏனைய (சிட்ரஸ்) பழங்கள் - உலர்த்தப்பட்ட	250	250
51	முந்திரிகை பழம் - புதியவை	285	285
52	முந்திரிகை பழம் உலரத்தப்பட்டவை	300	300
53	தேசிக்காய் - புதியவை	350	350
54	தேசிக்காய் - உலர்த்தப்பட்ட	400	400
55	ஏனைய (சிட்ரஸ்) பழங்கள் புதியவை	300	300
56	ஏனைய (சிட்ரஸ்) பழங்கள் - உலர்த்தப்பட்ட	375	375
57	குவின்சஸ்	350	350
58	ஆப்ரிகொட்ஸ்	350	350
59	செரி - புளிப்பான	330	330
60	பீச் மற்றும் சாறு	310	310
61	மரகறி கொழுப்புக்கள் மற்றும் எண்ணெய்	160	160
62	மாஜரீன் - திரவம்	200	200
63	அரிசி	65	65
64	சோளம்	25	50

மூலம் : வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்